சோழர் நாயக்கர்

மராட்டியர்

# தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும்

ஆயிரம் ஆண்டுக் கால வரலாறு

ஆசிரியர்:-

வ. வேணுகோபாலன்

**C. G. RANGABASHYAM,** I. A. S.
Commissioner & Secretary
to
Govt. Education Department.

FORT St. GEORGE
MADRAS-9

*Dated : 6—12—1978*

# FOREWORD

I have gone through the Tamil book "தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும்" published by Thiru V. Venugopalan.

The book is the first attempt of its kind which has tried to narrate the history of a famous Library and present the history of the times in a comprehensive and authentic manner.

The contribution of the various rulers to the Library and cultural development of Thanjavur has been lucidly brought out by the author, whose style is at once simple and fine. The author deserves to be congratulated on the effort he has put in to bring out a very informative account of the nature. His erstwhile contribution to Tamil writing has been enhanced further by this.

My warmest felicitations to the author.

*6—12—78* *C. G. Rangabashyam*

# அணிந்துரை

வித்துவான்
**அ. வடிவேலன்**
மதிப்பியல் செயலர்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

22—12—78.

வரலாற்றுப் புகழ்பெற்ற தஞ்சை சரசுவதி மகால் நூலகம் மராட்டியர் ஆட்சியில் தோன்றிய தென்றும், சரபோசி மன்னர் காலத்தில் அவரால் தோற்றுவிக்கப் பெற்றது என்றும், நாயக்க மன்னர் காலத்திலேயே தோன்றியது என்றும் தமிழ்மொழியிலும் வடமொழியிலும் மராத்தி மொழியிலும் ஓலைச்சுவடிகள் உள்ளனவென்றும் பொதுவாக யாவரும் கருதியிருக்கின்றனர். சில ஆய்வாளர் மட்டும் இது நாயக்கர் காலத்திற்கும் முந்தியது என்று குறித்துள்ளமையை ஒருசிலரே அறிவர்.

இந்நூலகம் இந்திய நாட்டில் தோன்றிய நூலகங்களுக்கெல்லாம் தொன்மையானது என்பதையும் முத்தரையர் காலத்திலேயே காலூன்றிய தஞ்சையில் ஒன்பதாம் நூற்றுண்டினனுன விசயாலயச்சோழன் புதல்வன் ஆதித்த சோழன் காலத்தில் நிலைபெற்று பராந்தக சோழன் காலத்தில் வளர்ந்து பல கிளைகளோடு விளங்கியது என்பதையும் (தேவநாகரி) நந்திநாகரி கிரந்த எழுத்துக்களில் அமைந்து ஆயிரக்கணக்கில் வடமொழி நூல்களையும் தமிழ், தெலுங்கு எழுத்துக்களில் ஆயிரக்கணக்கில் நூல்களும் மலையாளம், கன்னடம் ஒரியா எழுத்துக்களிலும் சில நூல்களும், மராத்தி மொழியில் ஆயிரக்கணக்கில்

காகிதச்சுவடி நூல்களும், மோடி எழுத்து ஏடுகளும் உள்ளன என்பதையும் அவை வேதம், ஆகமம், இதிகாசம், புராணம், இசை, ஓவியம், மருத்துவம், சோதிடம், சிற்பம் முதலிய பல துறைகளில் அமைந்துள்ளவை என்பதையும் அவற்றுள் பல இன்னும் அச்சேருத நிலையில் உள்ளன என்பதையும் பலர் அறிந்திருக்கமாட்டார்கள்.

வரலாற்று ஆசிரியர்கள் ஒருசிலபற்றிக் குறித்து உள்ளார்கள் எனினும் இப்பொழுது ஆசிரியர் திரு. வ. வேணுகோபாலன் அவர்களால் எழுதப்பெற்றுள்ள 'தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும்' என்னும் ஆராய்ச்சி நூலுள் இந்நூலகத்தைப் பற்றிய ஓராயிரம் ஆண்டுக்கால வரலாற்றைத் தெளிவாகக் காணமுடிகின்றது.

சோழர் காலமுதலே அமைந்து வளர்ந்து வந்துள்ள இந்நூலகத்தின் பெயர் சரஸ்வதி பண்டாரகம் என்பதும் எந்த எந்த மன்னர் காலத்தில் எவ்வாறு வளர்ந்து விளங்கியது என்பதையும் கல்வெட்டு, சாசனம் முதலிய சான்றுகளோடு போற்றத்தக்க வகையில் இந்நூலாசிரியர் விளக்குகின்ருர்.

மராட்டியர் காலத்திலும், மன்னர் சரபோசி காலத்திலும் வெள்ளையர் தஞ்சை அரண்மனையைப் பற்றிக் கொண்ட காலத்திலும் இந்நூலகத்திற்கு நேர்ந்த தளர்ச்சி வளர்ச்சிகளை அரசாங்கக் குறிப்பேடுகளின் சான்றுகளோடு விளக்கி இன்றைய நிலையில் மத்திய மாநில அரசுகள் இந்த நூலகத்தைப் போற்றிப் பாதுகாக்கவேண்டும் என்ற விருப்பத்தையும் தெளிவாகக் கூறியுள்ளார் இந்நூலாசிரியர்.

இந்நூலாசிரியராகிய திரு. வ. வேணுகோபாலன் அவர்கள் நாடகம், நவீனம், வரலாறு முதலிய துறைகளில்

கைவந்த ஓர் எழுத்தாளர் என்பதை இவர் எழுதியுள்ள நூல்களால் தெரிந்து கொள்ளலாம்.

இவர் இரண்டாண்டுகளாக இம்மகால் நூலகத்திற்கு வந்து இங்குள்ள பல்வேறு துறை நூல்களை ஆராய்ந்து குறிப்பெடுத்துக் கொண்டிருந்ததையும் அத்துறை அலுவலர்களோடு உசாவிப் பல செய்திகளைத் திரட்டியதையும் என்னிடம் பலமுறை கூறித் தன் நோக்கத்தை தெரியப் படுத்தியுள்ளார்.

இவ்வளவு ஆதாரங்களுடன் இந்நூலைச் சிறப்பாக வெளியிட்டுள்ள இவர் ஊக்கத்தையும் தொண்டு மனப்பான்மையையும் நான் உளமாரப் போற்றி இத்தகைய பல நூல்களை இவர் மேலும் எழுதி வெளியிட இறைவன் நல்லருள் புரியவேண்டுகிறேன்.

இந்நூல் சிறப்பாக ஒவ்வொரு நூலகத்திலும் வரலாற்றுத் துறை ஆசிரியர், மாணவர்களிடத்திலும் பொதுவாக எல்லோரிடத்திலும் இருக்கவேண்டிய தொன்றுகும். இவர் பணிக்கு யாவரும் துணை புரிவார்கள் என நம்புகிறேன், வேண்டுகிறேன்.

வாழ்க தமிழ் வளர்க நூலகம்.

இங்ஙனம்,

**அ. வடிவேலன்.**

# நன்றியுரை

இந்நூல் அச்சிட்ட பிரதியை, பெருமைக்குரிய தமிழ்நாடு அரசு கல்வித்துறை ஆணையரும் செயலாளருமான அறிஞர் உயர்திரு C. G ரங்கபாஷ்யம், ஐ. ஏ. எஸ் அவர்களிடம் அளித்து, கருத்துரை வழங்கும் வண்ணம் கேட்டுக் கொண்டேன். தொன்மைப் பெருமைகொண்ட இந் நூலகத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் அரசு சார்பில் பேரார்வம்கொண்டு செயல்புரிந்துவரும் அன்னார் அன்புடன் என் வேண்டுகோளை ஏற்று, என் பணிக்கு ஊக்கம் அளித்தும், இந்நூலில் உள்ள சான்றுகளின் சிறப்பைத் தக்கவாறு மதிப்பீடுசெய்தும் மாண்புமிக்க கருத்துரை தந்துள்ளார்கள். பெருமைக்குரிய தகுதி சான்ற அன்னாருக்கு என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை சரஸ்வதி நூலகத்தின் இந்நாள் கௌரவ செயலாளரும், இந் நூலக வளர்ச்சிக்குப் பேரார்வம் கொண்டுள்ளவருமான வித்வான் உயர்திரு அ. வடிவேலன் அவர்கள், நான் கேட்டுக்கொண்டதற்கு இசைந்து இந் நூலின் ஆய்வுச் சிறப்புக்களை ஓர்ந்த முறையில் சிறப்பான அணிந்துரை அளித்துள்ளார்கள். புலமைமிக்க அன்னாருக்கு என் உளம் நிறைந்த நன்றியையும் வணக்கத்தையும் கூறிக் கொள்கிறேன்.

தஞ்சை,
24—12—78.

இங்ஙனம்,
**வ. வேணுகோபாலன்.**

# முன்னுரை

இப்புத்தகத்திற்கு முன்னுரை என்ற முறையில் விளக்கம் கொடுப்பது இன்றியமையாதது. எனவே, சிறப்பான செய்திகளை மட்டும் இங்கே குறிப்பிடுகின்றேன்.

பொதுவாக நூலகங்களுக்கெல்லாம் 'வரலாறு' என ஒன்று எழுதமுடியுமா? எழுதவேண்டுமா என்பது கேள்விக்குரியதே. ஆனால் தஞ்சை அரண்மனை நூலகமான சரஸ்வதி பாண்டாரகத்திற்கு வரலாறு எழுதவேண்டிய தகுதிகள் பல உண்டு. இந்த நூலகத்திற்கு வரலாறு எழுதினாலன்றி நாட்டுக்கு உண்மை தெரியாது. இந்நூலக வரலாற்றைப் படித்தால் அந்த உண்மை தெளிவாகத் தெரியும்.

நம் பாரத நாட்டில் தொன்னூலகங்கள் சில உண்டு. தொன்னூலகம் என்பது, இந்நாட்டை ஆங்கிலேயர் ஆக்கிரமிக்கு முன், இருந்த மன்னர் காலத்து நூலகங்களாகும். காகிதமும் அச்செழுத்தும் தோன்றாத காலத்துக்கு முன்—18ம் நூற்றாண்டுக்கு முன் விளங்கிய நூலகங்களைத் தொன்னூலகம் எனலாம்.

ஓலைச்சுவடிகளைக் கொண்ட நூலகம் தொன்னூலகம். ஓலைச்சுவடிகளில் உள்ளவற்றைப் பழமையான, கையால் செய்த காகிதங்களில் எழுதிவைத்தவையும், பின்னர் தொன்னூலகங்களில் இணைக்கப்பட்டுள்ளன; இன்னும் சிறப்பாகக் கூறினால், அச்சிடப்படாத, கைப்பிரதிகள் உள்ள நூலகம் தொன்னூலகமாகும்.

இத்தகைய தொன்னூலகங்களை, கல்விக்குரிய தெய்வமான சரஸ்வதியின் பெயரால், 'சரஸ்வதி பாண்டாரகம்' என்று பெயரிட்டு அழைத்தனர் மன்னர்கள். பாண்டாரகம், பாண்டாரம் என்றால் பொக்கிஷம், கருவூலம் என்பது பொருள்.

# 2

## சோழ நாட்டில் தொன்னூலகங்கள்

தஞ்சையில் கி. பி. 10-ம் நூற்ருண்டு முதல் சரஸ்வதி நூலகம் விளங்கி வருகிறது. கி. பி. 1068-ல் காஞ்சியிலும் ஒரு சரஸ்வதி நூலகம் இருந்ததாகச் சாசனம் குறிப்பிடு கின்றது. காஞ்சிக்கு அடுத்த கடிகாசலத்தில் வேதக் கல்லூரியும், சரஸ்வதி பாண்டாரசமும் விளங்கியது என்றும் மேலேச் சாளுக்கிய ஆகவ மல்லன் ஆட்சியில் அவன் படைத்தலேவன் தண்டநாத திரிநேத்ர மதுசூதனன் நூலகத்திர்கு அறக்கட்டளே வைத்துள்ளான் என்றும் நூலகக் காப்பாளர் (6) அறுவர் சரஸ்வதி பாண்டாரி என்று அழைக்கப் பெற்றனர் என்றும் கூறப்படுகின்றது. ( EP. Coll 139 of 1938-39 )

இந்நூலகம், தஞ்சையில் ஆட்சி புரிந்த மன்னர்களால் பாதுகாக்கப் பெற்ற தனிச்சிறப்புக் கொண்டது என்பதால் ‘மன்னர் வரலாற்ருேடு இணைந்த நூலகவரலாறு’ எழுதுவது படிப்பவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயன் படும் என்று கருதி, ‘தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும்’ என்ற தலேப்பில் எழுதினேன்.

கி. பி. 6ம் நூற்ருண்டின் இறுதிக்காலந் தொட்டு, தஞ்சை நகருக்கு வரலாறு உள்ளது, கல்வெட்டுச்சான்றுகள் கி. பி. 7ம் நூற்ருண்டு முதல் உள்ளனவாகத் தெரிகிறது. இக்காலம் தஞ்சையில் ஆட்சி புரிந்தவர்கள் முத்தரையர் என்று புகழ்பெற்ற தமிழ் மன்னர்கள்.

கி. பி. 846 முதல் பிற்காலச் சோழர்களின் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

கி. பி. 1535 வரையில் சோழர்கள் தஞ்சையில் ஆட்சி புரிந்தனர். பின்னர் ஆந்திர நாயக்க மன்னர் ஆட்சி நடைபெற்றது.

கி. பி. 1675 முதல் ராஷ்டிரகூட இனத்தவரான மகாராஷ்டிரர் என்ற மராட்டியமன்னர் ஆட்சி நடை பெற்றது.

கி. பி. 1799 அக்டோபர் மாதத்துடன் மராட்டிய மன்னர் ஆட்சி—ஆட்சியுரிமை முடிவுற்றது. பின்னர் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி நடை பெற்றது.

ஏறக்குறைய 1250-ஆண்டுகள் தஞ்சைக்கு வரலாற்றுப் புகழ் உள்ளது. தமிழகத்தில்-தஞ்சை வளநாட்டுக்குள்ள இந்தப்பழமைச் சிறப்பு, வேறு எந்தப் பிராந்தியத்துக்கும் இந்தியாவில் காணமுடியாது எனக் கூறமுடியும்.

பண்டித நேருஜி அவர்கள், தாம் எழுதிய உலக வரலாற்றில், 'வடக்கே அசோகப் பேரரசுக்கு ஒப்பாக, பாரதத்தில் தஞ்சைச் சோழப் பேரரசு ஒன்றே புகழ் வாய்ந்தது' என்று பாராட்டியுள்ளார்.

சோழப்பேரரசு ஆட்சி புரிந்த தஞ்சையிலே, சோழர் காலம் தொட்டு, 'சரஸ்வதி நூலகம்' விளங்கி வருகிறது. முதலில் சோழரும், பின்னர் நாயக்கரும், பின்னர் மராட்டியரும் வளர்த்துக் காத்த இந்நூலகத்தைப்பற்றி கிடைக்கும் சான்றுகளையும் நூல்களையும் கொண்டு இந்நூலை எழுதினேன்.

வரலாற்றுப் பின்னணியோடு காணப்படும் சரஸ்வதி நூலகத்தை-வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் படித்தறிந்தால், நம் நாட்டின் கலாசார ஒருமைப்பாட்டைத்தெளிவாக உணரமுடிகின்றது அன்றோ!

ஆயிரம் ஆண்டுக்காலம், இந்த நூலகத்துக்கு வளர்ச்சி உள்ளது; சான்றுகள் பல குறிப்பிட்டுள்ளேன். கலாசார ஒற்றுமைக்கும் கல்வி வளர்ச்சிக்கும் உரிய சிறப்பான

பனடப்புக்கள், ஆயிரம் ஆண்டுக்காலஎல்லேயில் தொடர்ந்து உருவாக்கப்பெற்றுப் பாதுகாக்கப்பெற்றுள்ள தனிப் பெருமையைப் பெற்றுள்ள தொன்னூலகம் இந்நூலகம் ஒன்றேயாகும்.

கி. பி. 1269ல் ஒய்சால போசள வீரராமநாதன் ஆட்சியில் ஸ்ரீரங்கம் கோயிலேச் சார்ந்து சரஸ்வதி பாண்டாரகம் விளங்கியது என்று ஒரு சாசனம் கூறுகின்றது. சரஸ்வதி ஹயக்கிரீவர், வியாசர் மூவர் சிலேகள் நூலகத்தில் விளங்கின என்றும் டி சிலேகள் பாலடள்ளி நீலகண்ட நாயகரால் நிறுவட்பெற்றன என்றும், அந்நூலகத்திற்கும் பக்சத்தில் சிருங்கேரி மடம் விளங்கியது என்றும் குறிப்பிடப் படுகின்றன. ( Madras Ep. Coll. 283, 284 of 1936–37 )

விஜயநகர மன்னன் தேவராயன் II கி. பி. 1354ல் டி நூலகத்து நிர்வாகி கவிசங்கர பட்டருக்கு நிலப்பட்டா வழங் கினன் என்றும், கி. பி. 1400ல் புக்கன் II நூலக நிர்வாகி புராணகவி கிருஷ்ணபட்டருக்கு நிலதானம் அளித்தான் என்றும் சாசனம் கூறுகிறது. ஸ்ரீரங்கம் கோயில் கிழக்கு மதிள் சுவர் மூன்றும் பிராகாரத்தில் சாசனங்கள் உள்ளன.

மைசூர் மேல் கோட்டையில் 1934ல் இந்நூலகத்துச் சுவடி "பௌஷ்கரஸம்ஹிதை" வெளியிடப்பட்டுள்ளது.
( Ins XXV No. 34, Page 318 to 329 )

## தஞ்சை சரஸ்வதி பாண்டாரகம்

நான் எடுத்துக்கொண்ட தலைப்பு, தஞ்சை மன்னரும் சரஸ்வதி நூலகமும் என்பது. இரண்டாண்டுகட்கு முன்பு, நான் இந நூலகத்தில் ஆய்வுசெய்து, தஞ்சைக்கு ஒரு வரலாறு எழுதத் தொடங்கினேன்.

தஞ்சை நகர், சிறப்பாக முத்தரையர், சோழர், நாயக்கர், மராட்டியர் ஆகிய நான்கு அரச பரம்பரை

யினரால் ஆளப்பட்ட பெருமையைக்கொண்டது என்பதால் இந் நூலகத்தில் ஆய்வுக்குரியவை கிடைக்குமென்று துணிந்து, தஞ்சைச்கு முழு வரலாறு எழுத முற்பட்டு, நூல்களையும், சான்றுகளையும் படித்துவந்தேன்.

இந்நூலகத்திற்கு நாள்தோறும நூற்றுக்கணக்கில், அறிஞர், ஆய்வாளர், மாணவர், பொதுமக்கள் வருகை தந்து, இந்நூலகத்தைப்பற்றி இந்நூலகப் பொறுப்பாளர்களிடமும், பண்டிதர்களிடமும் இந்நூலகத்தைப்பற்றி ஆர்வத்துடன் செய்திகளைக்கேட்டுச் செல்வதைக்கண்டேன். இச்சமயங்களில் அவர்கள் கேட்டவையெல்லாம் 'சரபோசி மன்னர் நூலகம்' என்ற நினைவுடன் பல செய்திகளை அறிய விரும்பினர் என்று அறிந்தேன்.

இந்நூலகத்திற்குச் சரபோசி மன்னர் பெயர் சூட்டப் பட்டிருப்பதால், அவ்விதம் கேட்கின்றனர் என்றாலும, இந்நூலகம் பழமையாக உள்ளது என்ற நிலையில் முதலில். இந்நூலகத்தைப்பற்றியே ஒரு வரலாறு எழுதவேண்டும். என்று துணிந்தேன். இந்நூலகத்தைப் பாதுகாத்த மன்னர்களில் சரபோசிமன்னர் இறுதியானவர். இந் நூலகத்துக்குப் பழமைச்சிறப்பு ஆயிரம் ஆண்டுக்காலம் உள்ளதாகத் தெரிகிறது என்பதை அறிந்தவுடனே எனக்கு ஆர்வம் பெருகியது. நான் அறிந்துகொண்டதைத் தமிழகம் அறியவேண்டுமல்லவா? எனவேதான் இந்நூலக வரலாறு எழுதினேன்.

தமிழகம், தாய்மொழியான தமிழுடன், வடமொழி, தெலுங்கு, மராட்டி, ஆகிய மொழிகளையும் உடன்பிறந்த மொழிகளாகக்கொண்டு விளங்கும் மாண்பை, தஞ்சை சரஸ்வதி பண்டாரகத்தில்தான், மன்னர் வரலாற்றோடு இணைந்திருப்பதைக் காணமுடியும். எனவே உலகப்புகழ் பெற்ற தொன்னூலகங்களில் முதலாவதாக இந் நூலகத்தைத் துணிவுடன் கூறலாம்.

சேரீழமன்னர் வரலாற்றுத் தொடர்பாக, கி. பி. 14-15 நூற்றூண்டுகளில், தஞ்சைச் சோழர் வரலாறு, ஆய்வாளர் களால் ஆய்ந்து கூறப்படவில்லை. இக்கால எல்லையில் தஞ்சையில் (கி. பி. 1279-க்குப்பின் கி. பி. 1535) சோழர் வரலாறு எழுதியவர்கள் ஏன் ஆய்வு செய்யவில்லை என்பது கேள்விக்குரியதே. இந் நூலகப் படைப்புக்களைப்பற்றி ஆய்வு செய்த A. C. பர்னல், P. P. S. சாஸ்திரிமுதலிய வர்கள், இந்நூலகத்தில் நாயக்கமன்னர் காலத்துக்கு (கி. பி. 1535) முந்திய பழமைச் சுவடிகள் தொகுப்புக்கள் உள்ளன என்று குறிப்பிட்டவர்கள், அவை, சோழர் காலத்தவை என்று ஏன் குறிப்பிடவில்லை என்பதும் கேள்விக்குரியதே! எனவே, இந்தக்கால எல்லையில் தஞ்சைச் சோழர்களைப்பற்றி முதலில் இங்கே குறிப்பிட வேண்டியது இன்றியமையாதது.

## 14-15 நூற்றூண்டில் தஞ்சைச் சோழர்கள்

கி. பி. 846-ல் விசயாலய சோழன் ஆட்சி தொட்டு, கி. பி. 1279 வரை சோழர் ஆட்சி நடைபெற்றதாக சோழர் வரலாறு எழுதிய அறிஞர் K. A. N. சாஸ்திரி, திரு சதாசிவபண்டாரத்தார் முதலியோர் குறிப்பிட்டனர்.

கி பி. 1256-ல் மூன்ரும் இராசராசசோழன் ஆட்சியில் தான் தஞ்சை நகர், பாண்டியர் படையெடுப்பால் தாக்கப் பட்டது. பின் மூன்ரும் இராசேந்திரன் கி. பி. 1279 வரை ஆட்சி புரிந்தான். இம்மன்னன் ஆந்திரநாட்டில் நெல்லூர் வரையில் ஆட்சி புரிந்தான். (இந்நூல் பக்கம் 44 to 53)

இக்காலத்தில் கர்நாடக (கன்னடம்) மன்னர் ஒய்சாலபோசளர் உறவு தஞ்சைச் சோழருக்கு ஏற்பட்டது. ஒய்சாலரின் உதவியாலேயே சோழர் ஆட்சி நிலைத்தது எனலாம். இக்காலத்துக்குப்பின், தஞ்சைக்கு 'இரண்ட

காலம்' என்று ஆய்வாளர் கூறுகின்றனர். கி. பி. 1279க்குப் பின், கி. பி. 1535 வரை தஞ்சைச் சோழர் வரலாறு ஆய்வாளரால் கூறப்படவில்லை என்றாலும், வரலாறு உள்ளது, சோழ மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர் என்பதை இங்கே குறிப்பிடுகிறேன். (இந்நூல் பக்கம் 51–56)

மூன்றாம் இராசேந்திரனுக்குப்பின்-கி. பி. 1279க்குப் பின் அரசுகண்டராமன் (இந்நூல் பக் 51) தஞ்சையில் ஆட்சி புரிந்தான். இவனுக்குப்பின் கி. பி. 1301ல் வீர சைவவீரப் பிரதாப சோழன் ஆட்சி புரிந்தான். (இந்நூல் பக் 52) கி. பி. 1314ல் வீரசம்பன் ஆட்சிபுரிந்தான். இவை சாசனச் செய்திகள்.

கி. பி. 14ம் நூற்றாண்டில், விசயநகரத்துக் கம்பண்ண உடையார், தஞ்சையில் சோழராட்சி நடைபெற்ற காரணத்தால், தஞ்சைமீது ஆதிக்கம் செலுத்தவில்லை என்றும் தொடர்ந்து 16ம் நூற்றாண்டு துவக்கம் வரையில் (1535 வரை) சோழராட்சி தஞ்சையில் நடைபெற்றதென்றும், இறுதியாக ஆட்சிபுரிந்த சோழன் வீரசேகரன் எனறும் சான்று கூறுவதைக் காணலாம்.

In the Tenth Century Tanjore was the seat of the Chola Kingdom, and continued so till its decadence. In the early part of the Sixteenth Century, Tanjore become a province of Vijayanagar Empire.

(Madras Presidency Manual Administration Vol I P. 5)

"(16th Century) Tanjore Chola King Veerasekaran.

( ,, ,, P 126)

" A. D. 1365 to 1404 it has been supposed that Kampana Odyar did not extend his conquest to Tanjore where the Chola [King were then reigning,

there are several Inscriptions however, and those of his successer or succession at Cinchipuram."

( ,, ,, Vol II P 137)

## தஞ்சையில் ஒய்சால போசளர் ஆதிக்கம்

கி. பி. 1427ல் தஞ்சை வளநாடு, சோழர் ஆட்சிப் பிரிவுக்கிணங்க காவிரிக்கு வடபுறம் ராஜராஜ வளநாடு என்றும் தென்புறம் ராஜகம்பீர வளநாடு என்றும் மாறுதல் இல்லாமல் இருந்தது. (E. P. Ind. XVII 110)

கி. பி. 1429ல் தஞ்சையில் சோழர் ஆட்சியில் கன்னட நாட்டு ஒய்சால போசளர் ஆட்சி யாதிக்கம் கொண்டிருந்தனர். அப்போது மல்லிகார்ச்சுனன் என்ற போசள மன்னன் சோழர் உறவுடன் தஞ்சையில் ஆதிக்கம் புரிந்தவன் என்றும் இக்காலத்தில் விசய நகரத்தில் பிரதாப தேவ ராயர் ஆட்சி புரிந்தார் என்றும் சாசனச் செய்தி கூறுகிறது. இக்காலம் கி. பி. 1427—1451.

(மல்லிகார்ச்சுனன், Ins. 448 of 1922, 1464-65 VR II, Tanjore 1624 489 of 1904. பிரதாப ராயரின் சாசனம் தஞ்சை VR II 1356 35 of 1891. SII II 338 452 of 1922)

போசளர் ஆதிக்கத்தில் சோழ மன்னர் ஆட்சி நடைபெற்றபோது, மக்கள் வணிகவரி, நிலவரி, வீட்டுவரி, யாவும் கோவில் அதிகாரிகளிடம் செலுத்தும் மரபு இருந்ததும் தெரிகிறது.

(திருவைகாவூர் சாசனம் VR II Tanjore 1088 59 of 1914. ER. 1915. PP 106-108. 92 of 1918. 216 of 1917)

ஒய்சால போசளர் ஆட்சிக்காலத்தில் தஞ்சை, சரஸ்வதி நூலகத்தில் கன்னடமொழிச் சுவடிகள் சில இடம் பெற்றன என்றும் தெரிகிறது. அவை இந்நூலகத்தில் உள்ளன.

கி. பி. 1482ல் சோழ நாராயணன் என்ற சோழ மன்னன் தஞ்சையில் ஆட்சி புரிந்தவன் (இந்நூல் பக்கம் 52–53).

கி. பி. 1496ல் கோனேட்டிராசன் என்ற சோழ மன்னன் தஞ்சையில் ஆட்சிபுரிந்தவன் (இந்நூல் பக்கம் 53).

கி பி. 1535ல் முதலில் சோழ பாலமகிபதி என்ற மன்னனும் பின்னர் வீரசேகர சோழனும் தஞ்சையில் ஆட்சி புரிந்தவர்கள். (இந்நூல் பக்கம் 53)

கி. பி. 1474–75ல் தஞ்சைச் சோழனுடன் ஆந்திர நரசிம்மன் போர் புரிந்ததைப்பற்றிச் 'சாளுவாப்யுதயம்' என்னும் தெலுங்குநூல் கூறுகிறது. (Sources of Vijaya Nagar History Page 9)

கி. பி. 1490ல் தஞ்சைச் சோழன், நரசர்நாயக்கருடன் பொருது தோற்றான் என்று 'வரதாம்பிகா பரிணயம்' (தெலுங்கு நூல்) கூறுகிறது. ( ,, ,, P. 171)

கி. பி. 1490ல் நரசா நாயக்கர் படையெடுத்து வந்த போது தஞ்சைச் சோழன் தோற்றோடினான் என்று 'சாளுவாப்புதயம்' கூறுகிறது. (தெலுங்கு நூல்)
( ,, ,, P. 62)

கி. பி. 1490ல் தஞ்சைச் சோழன், நரசா நாயக்கரால் போரில் கொல்லப்பட்டான் என்று கூறுகிறது 'பாரிஜாதாபஹரணம்' என்னும் தெலுங்கு நூல்.
( ,, ,, P. 171)

கி. பி. 1530ல் அச்சுதராயன், தஞ்சைச் சோழனிடம் சமாதானம் செய்துகொண்டு சம்மானம் பெற்றுச்சென்றான் என்று 'அச்சுதராயாப்புதயம்' என்னும் தெலுங்கு நூல் கூறுகிறது. ( ,, ,, P. 159)

கி. பி. 1535ல் வீரசேகர சோழனுடன் தஞ்சையில் நாகமன் போர்புரிந்து ஆட்சியைக் கைப்பற்றினன் என்று 'தஞ்சாவூர் ஆந்திரராஜுலு சரித்திரம்' என்னும் தெலுங்கு நூல் கூறுகிறது. ( ,, ,, P. 313)

நாயக்க மன்னருக்கும் தஞ்சைச் சோழனுக்கும் நடந்த போர் கி. பி. 1510-18ல் என்று சாளுவாப்யுதயம் கூறுகிறது. ( ,, ,, P. 12-13) (A. S. R. 1908-9 & 1845)

எனவே வரலாற்றுய்வாளர் தொல்பொருள்துறையினர் மேலும் ஆய்வு செய்தால் தஞ்சைச் சோழர்கால ஆராய்ச்சியில் இருண்டகாலம் இல்லை. ஒளிவீசிய காலம் அது என்பதை உணரமுடியும்.

முத்தரையர் காலத்தில் வளமாக இருந்த தஞ்சைநகர், கி. பி. 846 முதல் மேலும் மாடமாளிகை கூடகோபுரங்களுடன் அமைக்கப்பெற்றது என்பதும் சரஸ்வதி நூலகம் உள்ள அரண்மனை சோழர் காலத்தைக் கொண்டது என்பதும் அறிய முடிகிறது. திருவாலங்காடு, கன்னியாகுமரி, திருவெள்ளறைச் சாசனங்கள் என் கருத்தை வலியுறுத்துகின்றன; இனி சரஸ்வதி பாண்டாரகத்துச் சுவடிகளில் உள்ள 'லிபி'களைப்பற்றிக் குறிப்பிடுகிறேன்.

## சரஸ்வதி பண்டாரகத்தில் "லிபி" விளக்கம்

### (வடமொழியும், கிரந்தலிபியும்)

இந்நூலகத்தில் தமிழ், கிரந்தம், நந்திநாகரி, தேவநாகரி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒரியா ஆகிய மொழி லிபிகளில் சுவடி நூல்கள் உள்ளன. கன்னடம், மலையாளம், நந்திநாகரி லிபிகளில் உள்ள சுவடிகள் மிகக் குறைவு. ஓரிய லிபிச்சுவடி ஒன்றுள்ளது.

கிரந்தம், தெலுங்கு, தேவநாகரி லிபிச் சுவடிகளே மிகுதியாக உள்ளன. அடுத்தபடியாக தமிழ், தெலுங்கு, மராட்டி மொழிகளுக்குரிய லிபிச்சுவடிகள் உள்ளன.

சுவடிகள் என்று குறிப்பிடுவது ஓலே, காகிதம் இரண்டும் சேர்ந்தவையே. கி. பி. 1430லேயே காகிதச்சுவடி எழுதிய எழுத்தரின் காலக்குறிப்புடன் காணப்படுகின்றது. நெ. 11878 சுவடி ''குண்டலினி சக்தி'' என்ற நூல் மேற் கண்டகாலத்து படி எடுக்கப்பட்டன (சக ஆண்டு 1352) இந்தக் காகிதச்சுவடியும் சோழர் காலத்தொகுப்பு, நாயக்க மன்னர்கள் ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர்தான் தஞ்சையில் ஆட்சி புரிகின்றார்கள். கி. பி. 1535ல் இவ்விவரம் நூலில் விளக்கப்பட்டுள்ளது.

காகிதம் சைனு தேசத்தில் கி. பி. 2ம் நூற்றாண்டிலேயே உள்ளது என்று தென்னிந்திய கோயில் சாசனம் வால். III பகுதி II பக்கம் 349ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே தமிழ் வரிவடிவம், மிகப்பழமையும் முதன்மை யானதுமாகும். ஓலே சாசனம் (கல்வெட்டு) நடுகல் இவற்றில் தமிழ் எழுத்துக்கள் எழுதப்பெற்ற காலம், கி. பி க்கு முன்னரே உள்ளது.

தொல்காப்பியர் 'எகர ஒகர மெய்புள்ளி' என்று தம் நூலில் தமிழ் எழுத்தின் வரிவடிவத்தையே விளக்கியுள்ளார். கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் தமிழ் நடுகற்கள் பல தமிழகத்தில் தென்னாட்டில் உள்ளன என்பது ஆய்வாளர் கண்ட உண்மை.

தமிழ் ஓலேச்சுவடிகள் மிகத்தொன்மையானவையே. தமிழ் நாட்டில் இந்நூலகத்தில் கிரந்தலிபிச் சுவடிகள் சிறப்பாக இடம் பெற்றிருப்பதையும், சாசனங்களில்

(சோழர் காலம்) கிரந்தம் பரவியிருப்பதையும் இதன் சிறப்பையும், காரணத்தையும் இந்நூலில் விளக்கியுள்ளேன்.

கி. பி. 5-6ம் நூற்றாண்டுகளில் தென்னாட்டில் பல்லவர்களால் விரும்பப்பெற்ற லிபி கிரந்தலிபி பல்லவ கிரந்தம் என்று வழங்குவதை அறியலாம். மீண்டும் தஞ்சை சோழர்களால் கி. பி. 9ம் நூற்றாண்டிலிருந்து கிரந்தலிபி சிறப்பாக வரவேற்கப்பட்டது. எனவேதான் கிரந்தலிபிச் சுவடிகள் மிகுதியாக இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

தஞ்சையில் ஆட்சிபுரிந்த நாயக்க மன்னர்கள் சேவப்பன், அச்சுதன், இரகுநாதன், விசயராகவன், செங்கமலதாஸன் ஆகியோர். செங்கமலதாஸன் காலத்தில் தான் தஞ்சையில் மராட்டிய அரசு கி. பி. 1675ல் உதயமாயிற்று.

இந்த நூலகத்து அனைத்து லிபிச்சுவடிகளும் ஓலையில் எழுதப்பெற்றவை. அவ்வப்போது பழுதுற்றபோது மன்னர்களாட்சியில் மீண்டும் படி எடுக்கப்பெற்றுப் பாதுகாக்கப்பெற்றன.

தென்னாட்டுத் தமிழ் கிரந்த லிபிச்சுவடிகள் கி. பி. 4ம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை திபேத்தில் இன்றும் உள்ளன என்றும் இவற்றின் போட்டோ பிரதி, பாட்னா காசி பிரசாத் ஜயஸ்வால் ஆராய்ச்சிக் கழகத்தில் உள்ளன என்றும் (தென்னிந்திய கோயில் சாசனங்கள் வால்யூம் III பகுதி II பக்கம் 346–347) குறிப்பிடுகின்றது நோக்கத் தக்கது.

எனவே, தமிழ், கிரந்த லிபிகளின் சுவடிகள் தஞ்சையில் சிறப்பாகச் சோழர் காலத்துத் தொகுப்புக்களாகும்;

சோழர்காலத் தொகுப்புச்சுவடிகள் சில பழுதுற்றவற்றை பின்னர் (1535க்கு பின்னர்) நாயக்க மன்னர்கள், மராட்டிய மன்னர்கள் ஆட்சியிலும் படி எடுக்கப்பட்டுள்ளன.

## வடமொழியும்-தெலுங்கு லிபியும்

கி. பி. 1535க்குப் பின்னர்தான் ஆந்திர நாயக்கர் ஆட்சி புரிந்தனர் என்றாலும் கி. பி. 1071-1120 வரை ஆட்சிபுரிந்த முதற்குலோத்துங்க சோழன் காலத்திலேயே தெலுங்குமொழி நூல்கள் இந்நூலகத்தில் இடம்பெற்று விட்டன என்று கருதமுடிகிறது. தமிழ், தெலுங்கு, வட மொழி மூன்றிலும் புலமைபெற்ற மன்னன் இவன். தெலுங்குமொழிச் சுவடிகளின் பழமையைப்பற்றி இந் நூலில் விளக்கம கொடுத்துள்ளேன். கிரந்த லிபியில் உள்ள வடமொழி நூல்கள் பல தெலுங்கு லிபியில் எழுதப் பெற்றவையும் ஆதிபரதம் போன்ற வடமொழி நூல்களுக்கு தெலுங்குமொழி லிபியில் 'டீகா' என்ற உரையும் எழுதப் பெற்றச் சுவடிகள் சோழர் காலத்தவை என்று கருதமுடி கிறது. முதற்குலோத்துங்கன், இசை, நாட்டியம் முதலிய கலைகளில் பேரார்வம் கொண்டவன், பெரும் புலமை பெற்றவன். மேலும் ஆந்திர நாயக்க மன்னர் காலத்தில் இந்நூலகத்தில் தெலுங்குமொழி வளம்பெற்றதில் வியப்பில்லை.

தெலுங்கு மொழியில் ஆயிரம் தலைப்புகள் வரையிலுள்ள படைப்புகள் இந்நூலகத்தில் உள்ளன. தஞ்சையில் கலாசார ஒற்றுமைக்கு வழிகாட்டியாக உள்ள வரலாற்று கருவூலங்கள் இவை. சிறப்பான செய்திகள் என்னவென்றால், தமிழ் நூல் களைத் தெலுங்கு லிபியில் எழுதிவைத்திருக்கும் மாண்பும், வடமொழி நூல்களைத் தெலுங்கு லிபியில் எழுதியதுடன், தெலுங்குமொழியில் உரை விளக்கம் கொடுத்துப் படைத்

துள்ள சிறப்பும், தெலுங்குமொழி நூல்களை கிரந்த லிபியில் எழுதிவைத்திருக்கும் மாண்பும், சரஸ்வதி பண்டாரகத்து நூலகத்துக்கே உரிய வரலாற்றுச் சிறப்புகளாகும். நாயக்க மன்னர் காலத்தில், தமிழ், தெலுங்கு, வடமொழிப் படைப்பு நூல்கள் நன்கு பாதுகாக்கப்பெற்றுள்ளன. படி எடுக்கப்பெற்றுள்ளன.

தஞ்சை வளநாட்டில் நாயக்கமன்னர்களின் ஆட்சி யிறுதியில். கி. பி. 1672க்கு பின் திருச்சி நாயக்கமன்னரால் தஞ்சைமீது தாக்குதல் ஏற்பட்டபோது இந் நூலகம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது தெளிவு. 1675-ல் மராட்டிய மன்னராட்சி ஏற்படுவதற்கு முன்னர் 3 ஆண்டு கால எல்லையில் தஞ்சை அரண்மனை அமைதி குலைந்திருந்தது தெளிவு. குறிப்பிடத்தக்கதாக, தமிழ், தெலுங்கு மொழிப் படைப்புக்களும், வடமொழிப் படைப்புக்களும் கைப்பற்றப்பட்டு கொண்டுபோகப்பட்டன எனக் கருத முடிகிறது.

## தேவநாகரி லிபியும் – மராட்டிய மொழியும்

1675-ல் தான் ஏகோசி மன்னரின் ஆட்சி தஞ்சையில் ஏற்பட்டதாக வரலாற்றாய்வாளர் கூறும் முடிவு, இந்நூலில் விளக்கம் கொடுத்துள்ளேன். வடக்கே சத்திரபதி சிவாசி மன்னர் ஹிந்து சாம்ராஜ்யம் நிறுவி வெற்றிக் கொடி நிலைநாட்டிய காலத்தில் அவர் சகோதரரான ஏகோசி தஞ்சையிலே மராட்டிய அரசு நிறுவினார்.

இவர் காலம் தொட்டு தேவநாகரிலிபியும் மராட்டிய மொழியும் தஞ்சை சரஸ்வதி நூலகத்தில் இடம் பெற்றது மராட்டி மொழிப் படைப்புக்கள் இந்நூலகத்தில் பெருகி வளர்ந்தன, மராட்டி மொழிப் படைப்புக்கள் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவை உள்ளன. மராட்டி

மொழி இலக்கியம் இந்தியாவில் தஞ்சையில் தான் வளர்ச்சி பெற்றது. தஞ்சையில் வளர்ச்சியுற்றது போல் வடநாட்டில் மராட்டிமொழி வளர்ச்சி பெறவில்லை எனலாம். தஞ்சை ஆரம்பகால மராட்டிய மொழி இலக்கியங்கள் தெலுங்கு லிபியில் மிகுதியாக உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. தஞ்சை மராட்டியப் படைப்புக்களே இன்றும் வட மாநிலத்தில் உள்ள மராட்டிய இனத்தவருக்கு மிகவும் வழிகாட்டியாக உள்ளன.

மராட்டி மொழிப் படைப்புக்கள், தஞ்சையில் உள்ளவை வரலாற்றுச்சிறப்புடையவை. திராவிட கலாசாரத்தின் மறு மதிபபென்றும் கூறலாம். தமிழ் தெலுங்கு இலக்கிய மரபு-சோழ மரபு- சார்ந்த மராட்டிய இலக்கியப் படைப்புக்கள் பல உள்ளன. தெற்கு வடக்கு இணைப்புக்கு-ஒருமைப் பாட்டுக்கு எடுத்துக் காட்டாக உள்ளவை இவை.

தமிழ் மரபு-தென்னாட்டு கலாசார மரபு-சோழ மரபு-கி. பி. 9-ம் நூற்றாண்டு முதல் 18-ம்நூற்றாண்டு முடிய ஆயிரம் ஆண்டுக் காலங்கள் தழைத்து, தமிழ், வடமொழி தெலுங்கு, மராட்டி ஆகிய மொழிகளில் பல ஆயிரக் கணக்கில் படைக்கப் பெற்று, பாதுகாக்கப் பெற்று, இன்றும் காணக் கிடைக்கும் ஈடு இணையற்ற பெருமையுடையதாக விளங்குகின்றது தஞ்சை சரஸ்வதி பண்டாரகம்.

இந்நூலகம்போன்ற பெருமையுடைய தொன்மை கொண்ட நூலகம் இந்தியத் துணைகண்டத்தில் வேறு இல்லை எனலாம். எனவே இந்நூலகமே முதன்மையானது.

தமிழகத்திற்கு—சோழ நாட்டுக்கு உரிய கலைக்கருவூலம் இது. திராவிட கலாசாரத்தின் ஒருமைப் பாட்டை விளக்கும் நூலகம் இது. கலாசார ஒற்றுமைக்கு வழிகாட்டியாகப் புகழ் பரப்பிய சோழர்காலக் கருவூலம் இது. இன வெறி

மொழிவெறியின்றி திராவிட கலாசாரத்தை வளர்த்த நூலகம் இது. சோழர். சாளுக்கியர், ஒய்சாலபோசளர், தெலுங்குச் சோழர். இராஷ்ட்ரக்கூடர், தெலுங்கு நாயக்கர், மராட்டியர் ஆகியோர் தஞ்சை வளநாட்டில் ஒன்றுபட்ட கலாசாரத்தை வளர்த்தபெருமை இந் நூலகத்துக்குரிய பெருமை என்பது வரலாற்றுச் சிறப்பாகும்

தஞ்சை மன்னர் ஆட்சியில் சுவடிகளைப் படி எடுக்க நூற்றுக்கணக்கிலான எழுத்தர்கள் நியமிக்கப்பட்டு இருந்தார்கள். ஓரளவுக்கு அவர்களைப்பற்றிக் குறிப்புக் களும் கிடைக்கின்றன.

## இந்நூலகத்தில் சோழர் காலத்துத் தொகுப்பு

கி. பி. 871–907 வரை ஆட்சிபுரிந்த தஞ்சைச் சோழன் ஆதித்த சோழன். இம்மன்னன் காலத்தில் மீமாம்சை முதலிய துறைகளுக்கு அறக்கட்டளை ஏற்படுத்தியிருந்ததை இந்நூலில் (பக். 19.) குறிப்பிட்டுள்ளேன். முதல் பராந்தக சோழன் (907-952) காலத்தில் மீமாம்சை, வேதாந்தம், வியாகரணம், ரூபாவதாரம் முதலியவற் றுக்கு அறக்கட்டளை வைத்ததையும் குறிப்பிட்டுள்ளேன். (இந்நூல் பக். 19–20)

மேற்கண்டவாறு 9, 10-வது நூற்றுண்டுகளில் சோழர்கள் மேலேகண்ட வடமொழி நூல்களின் தொகுப்பு களை இந்நூலகத்தில் இடம்பெறச்செய்துள்ளனர். ஆயிரக் கணக்கில் உள்ள சுவடிகளைப்பற்றி முற்றும் கூறுவது இயலாது எனினும் மிகச்சிலவற்றை மட்டும் குறிப்பிடு கின்றேன்.

ருக்வேதம் 8972, 9074, 9075, 9080, 9079. யசுர்வேதம் 8982, 83, 8485, 90, 94, 96, 97, 9003,

9993, 9078, 9159. சாமம் 9083A to 88A, 89A, 9107, 9099, 9098E, 9099G. அதர்வணம் 9118, 9120. ஸம்ஹிதை 9035, 9044, 9073, 9051. பிராஹ்மணம் 9013, 14, 19, 21, 9057, 9023, 24, 25. ஆரண்யகம் 9027, 28. ருக்சூத்திரம் 9130, 131. புல்லசூத்திரம் 9105. நிதானசூத்திரம் 9101B. ஆபஸ்தம்பம் 9185. போதாயனம் 9147, 9136, 9169. பாரத்வாசம் 9359. பிரயோகம் 9133, 9148, 49. பிராயச்சித்தம் 9159B, 9145B,. மந்திரப்பிரச்னம் 9031, 32, 35, 55. பிதிரு மேதம் 9361. ரகஸ்யம் 9193, 94, 9026. பிரகீர்த்தி கரனம் 909. இவை யாவும் A. C. பர்னல் இலக்கங்கள்.

பலவதி D9594, 95. மீமாம்சாகௌஸ்துபம் 6812D. ஜைமினிசூத்திரம் 6755D. தந்திரவார்த்திகம் 6785D. ரூபாவதாரம் 5817D. குமாரதந்திரம் 9119. பிரபஞ்ச சாரம் 12008D. ராமர்யணம் 11, 774D. ஐந்திரநிகண்டு 4738D. நியாயஸுதர6780D, மதுடாகமம் 11428D, காமிகாகமம் 15240D, காரணாகமம் 15245, விஜய தந்திரம் 15275.

மேற்கண்டவை சோழர் காலத்து தொகுப்புக்கள் என்பதால் திரு. பர்னல் போன்றவர்கள், ஆயிரம் ஆண்டு காலப் பழமை கொண்டது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

அறிஞர் சோமலெ, இந்நூலகம் கி. பி. 10-ம் நூற்றுண்டில் விளங்கியது என்று குறிப்பிட்டதில் வியப்பில்லை.

திரு. J. M. S. பிள்ளையவர்கள் 'சோழர் திருப்பணி' என்ற நூலில் இந்நூலகம் கி. பி. 1122ல் விளங்கியது என்றுர். இக்காலம் விக்கிரம சோழன் காலம்; Ins. 61. 227 of 1913.

iii.

சரித்திரப் பேராசிரியர் K. A. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் தம் 'இந்திய சரித்திரம்' என்ற நூலில் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

"Vedic Studies Rigveda deepika, a commentary on the Rigveda composed by Venkata Madavan in the Region of Paranthaka Chola I takes the first place—Commentaries on the Brahmanas, Suthras and other work Vedic Literature were composed throught the period—"

"Among the puranas, the Bagavatha which summend up the tents of the Neo Bhakthi Cult and Advaita under them was composed somewere in the South India about the 10th century".

(History of India K. A. N. Sastry p. 273)

## பராந்தகசோழன் காலத்து ருக்வேத பாஷ்யம்

பராந்தகசோழன் தஞ்சையில் ஆட்சி புரிந்த காலமான கி. பி. 907—952ல், தஞ்சை மாவட்டம் குத்தாலத்தை அடுத்த கோமல் கிராமத்தில் வேங்கடார்யரின் புதல்வர் மாதவர் என்ற அந்தணர் ருக்வேத பாஷ்யம் எழுதியவர். இந்நூல் சுவடி தஞ்சை சரஸ்வதி பாண்டாரகம் D. நீ 1700, 1701. கோமலில் சோமதீசுவரர் கோயில் கல்வெட்டு பராந்தகனுக்குரியது. 'ஜகதேகவீரன்' என்று பாராட்டி ருக்வேத பாஷ்யத்தில் மாதவர் குறிப்பிடுகின்றார். இந்த ஓலைச்சுவடி கிரந்தலிபியில் நல்லமுறையில் உள்ளது.

[திரு குன்ஹன்ராஜா. ருக்வேத பாஷ்யம் வெளியீடு Madras University Page XVIII and XIX, XVI, XII] (See Cholas, K. A. N Sastry. Part II Page 34)

## பராந்தகன் காலத்து ரூபாவதாரம்

கி. பி. 10ம் நூற்றுண்டில் பராந்தகன் வேத சாஸ்திரங்களுக்கு வைத்துள்ள அறக்கட்டளைகள் பற்றி நூலில் குறிப்பிட்டுள்ளேன். குறிப்பிடத்தக்கதான ரூபாவதாரம், அவற்றில் ஒன்று. கி.பி. 7ம் நூற்ருண்டில் தர்மகீர்த்தி என்பவரால் எழுதப்பெற்றது. இந்நூல் வடமொழி இலக்கணம் பற்றிய நூல். இந்நூல் சுவடி இந்நூலகத்தில் படி எடுக்கப்பெற்று இடம் பெற்றுள்ளது. நீ B. 9987 நீ D. 5817. இதுவும் சோழர் காலத்துத் தொகுப்பு. 10ம நூற்ருண்டின் இறுதியில் இயற்றப்பெற்ற தமிழ் யாப்பு நூலான யாப்பருங்கலக் காரிகையில், அதன் ஆசிரியர், ரூபாவதாரத்திற்கு நீதகச் சுலோகமே போலவும் ' என்று குறிப்பிட்டுள்ளார்; இந்நூல் சுவடி மிகப் பழமையானது. வேறு நூலகங்களில் இல்லை.

## முதலாம் இராசராசசோழன் காலத்து மகுடாகமம்

கி. பி. 985—1014ல் வாழ்ந்த தஞ்சை மன்னன் முதலாம் இராசராசன், தஞ்சையில் பெருங்கோயிலை எழுப்புவதற்கு தனிச் சிறப்புடன் கோயில் அமைக்க, மகுடாகமம் என்ற ஆகம நூலின்படி கட்டிமுடித்தான். இந்நூல் சுவடி, கிரந்தலிபியில் மிகப் பழமையான நிலையில் இந்நூலகத்தில் உள்ளது. நீ 11428 சோழர் காலத்தின் பழமையை இந்நூலகத்துக்குக் கூற இதைவிடச் சிறந்த சான்று வேறு உண்டா? வரலாற்றுப் பின்னணியில் சரஸ்வதி பாண்டாரகம் ஒளி வீசுவதை அறிய முடிகின்றது.

## சோழர்காலத்துச் சைவசமயப் படைப்புக்கள்

சைவசமயம் பற்றின சோழர்காலத்துப் படைப்புகள் கி. பி. 14-ம் நூற்றுண்டில் படி எடுக்கப்பெற்றவை பல.

அகோரசிவாசாரியாரின் நூல்கள், நீ 8191, 8188, 8189, 8190, 8180, 8183, 4, 5, 7.

கி. பி. 1350ல் படி எடுக்கப்பெற்றவையாகக் கருதப் படும் நூல்கள், சோழர் தொகுப்புக்கள் கிரந்தம்-தமிழ் இரண்டு லிபிகளும் கலந்தவை, சிதம்பரம் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் எழுதியவை–17 படைப்புக்களுக்கு மேல் இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. நூலக அட்ட வணைப்பட்டியலில் காணலாம்.

இந்நூலகத்தில் இப்போது பிற்காலத் தொகுப்புக்கள் உள்பட வடமொழிப் படைப்புக்கள் சுவடிகளில் உள்ளவை 15,000க்கு மேற்பட்டவை. காகிதச் சுவடிகளில் 20,000க்கு மேல் உள்ளன. மராட்டி மொழிப் படைப்புக்கள் 2,500 க்கு மேற்பட்டவை காகிதச் சுவடிகள் உள்ளன. தெலுங்கு மொழிப் படைப்புக்கள் 1,000க்கு மேல் உள்ளன. தெலுங்கு லிபிச் சுவடிகள் 2,000க்கு மேற்பட்டவை உள்ளன. தமிழ் மொழியில் சுவடிகள் 2,000க்கு மேற்பட்டவை உள்ளன.

ஐநூறுக்கு மேற்பட்ட எழுத்தர்கள் படி எடுப்பதற்காக சரஸ்வதி பாண்டாரகத்தில் மன்னர் காலத்தில் சோழர் காலம் தொட்டு அவ்வப்போது படி எடுத்துள்ளார்கள் என்று சுவடிகளிலிருந்து தெரிகிறது.

சுவடிகளின் எழுத்தமைதி, ஏடுகளின் பழமை, அகலம்–நீளம், அளவு, எழுத்துமுறை, வரிகளின் அமைப்பு-இவற்றைக் கண்ணோட்டமிட்டு ஆய்வு புரிந்ததில், 700 ஆண்டுகட்கு முற்பட்ட சுவடிகள் தஞ்சை சரஸ்வதி பாண்டாரகத்தில் சோழ மன்னர்களால் தொகுக்கப்பெற் றுள்ளன என்பதை உறுதியாகக் கூறலாம்.

படைப்புக்களை உருவாக்கிய கவிஞர்கள், அக்கவிஞர் களை ஆதரித்த சோழ மன்னர்கள், அம்மன்னர்களால் படி எடுக்கப்பெற்ற படைப்புக்கள் இந்நூலகத்தில் இடம்

பெற்றதையும், சோழர்களின் அரண்மனையில்தான் சரஸ்வதி பாண்டாரகம் விளங்கிவருகின்றது என்பதையும் வலியுறுத்திக் கூறுகிறேன். பாரத சமுதாயத்தின் அடிப்படைக் கருவூலம் உள்ள இடம் தஞ்சை சரஸ்வதி பாண்டாரகம். இவற்றைப் பாதுகாத்த தனிப் பெரும் மன்னர் சோழர்கள். பரந்த கண்ணோட்டத்துடன் ஆய்வு செய்தால், சோழர் பணியை இந்தப் பாரிடம் எங்கும் எடுத்துச் சொல்லி பரணி பாடவேண்டுமன்றோ!

முதற்பராந்தக சோழன் காலம் சைவ நாயன்மார்களின் காலத்துக்குப் பின்னர் என்பதுடன், இக்காலம் தமிழ் மறையான தேவாரப்பாக்கள் நாட்டில் பரவியிருந்த காலம் என்பதும் தெரிந்த உண்மை. ஆனால் ஜைன, பௌத்த மத வளர்ச்சியால் சைவ-வைதிக சமயங்கள் தாக்குண்ட காரணத்தாலேயே நாயன்மார்கள் எழுச்சி பெற்றனர். என்பதும் உண்மையாகும். தமிழ் கிரந்தவளர்ச்சி, முதலில் பல்லவர் காலத்தில், தமிழ் நாட்டில் பரவியது என்பது மறுக்க முடியாதது. ஆனால் வைதிக சமய வளர்ச்சி பல்லவர் காலத்தில், வளம்பெற முடியவில்லை. எனவேதான் நாயன்மார்கள் பரப்பிய சமயபிரசாரத்துக்குப் பின்னர் சைவ சமய வைதிக சமய வளர்ச்சிக்காக ஆதித்த சோழன், பராந்தக சோழன் ஆகியோர் வடமொழியில் உள்ள வேத சாஸ்திர புராண இதிகாச நூல்களைச் சேகரித்தும் கிரந்த லிபியில் புதிய படைப்புக்களை உருவாக்கியும், இந்நாட்டில் பயில்வித்தும் பல அறக்கட்டளைகளை வைத்தனர் என்றே தெரிகிறது. சோழ மன்னர்களின் இந்தப் புதிய எழுச்சி மிக்க டணி, வளர்ச்சிபெற்ற பின்னரே, ஜைன, பௌத்த மதங்கள் வீழ்ச்சியுற்றன எனலாம். முதலாம் இராசேந்திர சோழன் சைவ சமய வளர்ச்சிக்காக வட நாட்டிலிருந்து சிவாசாரியார்களை அழைத்துவந்தான் என்பதும் சரித்திர உண்மையாகும்.

சமய எழுச்சிக்காக வடமொழிப் படைப்புக்களை சேகரித்து வளர்ச்சி பெறச் செய்த சோழர்கள் தமிழ்மொழி மீது தாய் மொழிப்பற்றுடன் போற்றினார்கள் என்பது மிக மிக உண்மை.

இந்நூலகத்தில் தமிழ்ச் சுவடிகள் மிகுதியாக இருந்தன என்பதில் ஐயமில்லை. அனைத்தும் இப்போது காணமுடியவில்லை என்றாலும் ஓரளவுக்கு தமிழ்ச் சுவடிகள் சோழர் காலத்துத் தொகுப்புக்கள் இந் நூலகத்தில் உள்ளன. தமிழ் நூல்கள் எப்போது யாரால் கைப்பற்றப்பட்டன என்பது அறிய முடியவில்லை. உள்ளவை பெரும்பான்மை சோழர் காலத்துக்கு உரியவை.

தொல்காப்பியம் 55, 629, திருக்குறள் 68 A. திருக்கோவையார் 417, நாலடியார் 82A, சேந்தன் திவாகரம் 477, 479, இறையனார் அகப்பொருள் 73B. பராந்தக சோழன் காலத்தில் தேவாரங்கள் தொகுக்கப் பெற்றிருத்தல் வேண்டும். அவை இப்போது காணமுடியவில்லை. பராந்தக சோழன் காலத்தில் திருவொற்றியூரில் திருஞான சம்பந்தர் மடம் விளங்கியது தெரிகிறது. தேவாரம் திருவெம்பாவை அக்காலத்தில் கோயிலில் புகழ் பெறப் பாடப் பெற்றன என்று சான்று கூறுகிறது. (96 of 2-8-1913) (இந்நூல் பக். 22-23)

முதல் இராசேந்திர சோழன் காலத்தில் அவைப் புலவர் திரிலோசன சிவாசாரியார், மன்னன் விருப்பப்படி "சித்தாந்தசாராவளி" என்னும் வடமொழி நூல் இயற்றினார். அந்நூல் நெ. 15308 இந்நூலகத்தில் சோழர் காலத்துப் படைப்பாகும். மற்றும் பிங்கலந்தை 520, யாப்பருங்கலக்காரிகை 790, வீரசோழியம் 113, தஞ்சை வாணன்கோவை 423, 24 குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் 454, கம்பராமாயணம் 26 to 19 பல சுவடிகள்

கலிங்கத்துப்பரணி 209, தண்டியலங்காரம் 79 A. சீவக சிந்தாமணி 144, 46 நேமிநாதம் 631, சூடாமணி நிகண்டு 489, நன்னூல் 631, 632, அம்பிகாபதிக்கோவை 205, சிலப்பதிகாரம் 212, 417 B, என்பவை குறிப்பிடத்தக்கவை.

மற்றும் 12-ம் நூற்றாண்டில் சோழர் காலத்துத் தமிழ் (கிரந்தம்) வடமொழிக் கலப்பான 'கிரியாகிரமோத்தித' என்ற 15288 நூலை அகோரசிவாசாரியார் இயற்றியது பழமைத் தொகுப்பு. இவர் எழுதிய 15 படைப்புக்கள் இந்நூலகத்தில் உள்ளன.

மூன்றாம் ராசேந்திர சோழன் காலத்துப் படைப்பான 'நிர்வசனோத்தர ராமாயணம்' 170, 171. இந்நூலகத்தில் உள்ளது. இரண்டாம் ராசராசன் காலத்து நானார்த்தார்ணவ ஸம்க்ஷேபம் குறிப்பிடத்தக்கது. (இந்நூல் பக். 39)

சோழ மன்னர் காலத்தில் வடமொழி, தமிழுடன், தெலுங்குமொழி நூல்களும் இந்நூலகத்தில் முதற் குலோத்துங்க சோழன் காலத்திலிருந்து தொகுக்கப் பெற்றன.

அவை, நன்னசோழ குமாரசம்பவம் 152, கஜவைத்யம் 1024, கஜசாஸ்திரம் 1034, மகாபாரதம் 58, ஹரி வம்சம் 287, நிருக்தரத்னவளி 10672, ஆதிபரதம் 10651, மதங்கபரதம் 10668, பாகவதம் 8454, மகாபாரதம் 3375, நன்னசோழ மகாபாரதம் 58, 129, ஆந்திர பாகவதம் 3-57, பாஸ்கர ராமாயணம் 198-201, பீமண்ணபத்யம் 877, அபிநயதர்ப்பணம் 948, 959, பேஷஸம்ஹிதை 10773B.—

நான், இந்நூலகம் சோழர்காலப் பழமைகொண்டது என்பதைச் சுட்டிக்காட்டவே, மிகச்சில சுவடிகளையே குறிப்பிட்டேன். முற்றும் ஆய்ந்து விளக்கம் கொடுப்பதற்குத்

குறுகிய காலம் போதாது என்பதுடன், ஆயிரக்கணக்கி லான பக்கங்களில் எழுதவேண்டிய அரிய ஆய்வாகும் என்றும் கூறிக்கொள்கிறேன்.

## A. C. பர்னல் P. P. S. சாஸ்திரி கருத்துக்கள்.

இந்த நூலகத்து நூல் அட்டவணைப்பட்டியல் தொகுத்த வர்கள் வடமொழித் தொகுப்பில், ஓலைச் சுவடிகளையும், காகிதச் சுவடிகளையும் பார்வையிட்டு, நூல்சுவடியில் காலக் குறியீடு எழுதப்பட்டிருப்பதிலும் சோழர் காலத்து படைப் புக்கள் உள்ளவற்றை தெரிவித்துள்ளதைக் கீழ் வருமாறு காணலாம். இவற்றை ஆய்வாளர்கள் நாயக்கர் காலத்துக்கு கி. பி. 1535-க்கு முன் முந்திய தொகுப்புக்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

சுவடி எண் 11878-குண்டலினி சக்தி-சுவடி படி எடுக்கப் பெற்ற காலம் கி. பி. 1430 சு. எண். 12000, 12010, சிரத்தரபத்ததி-கி. பி. 1444; சு. எ. 7081 பிரம்ம சூத்திர பாஷ்யம்-கி. பி. 1468; சு. எண். 18509-ஸ்மிருதி ஸாரேத தாரம்-கி. பி. 1472; சு. எண். 5964 ஸாரஸ்வத பிரக்கிரியா-கி. பி. 1508; சு. எண். 2140. புவனேசுவரிதுதி—கி. பி. 1482; சு. எண். 748-ருக்வேதப் பிராஹ்மணம்—கி. பி. 1518; சு. எண். 11831 — உத்ஸர்ஜனோபாகரணபிர யோகம் கி. பி. 1524.

தெலுங்கு மொழியில் சோழர் காலத்துப் படைப்புக்கள் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள காலக்குறிப்பு :—

சு, எண். 149–151—காளஹஸ்திமகாத்மியம்—கி. பி. 1449; சு. எண். 3–57—ஆந்திரபாகவதம்—கி. பி. 1455; சு. எண். 58–129—ஆந்திரபாரதம்—கி. பி. 1458; சு. எண். 1039–41—ஹயலக்ஷணவிலாசம்—கி. பி. 1465; சு. எண். 572—கிரீடாபிராமம்—கி. பி. 1450; சு. எண். 120—பாரதம்—கி. பி. 1513; மற்றும் பால்குறிகி

ஸோமநாத கவியின் அனுபவசாரம் (வீரசைவம்) சு. எண். 2D. இரங்கநாத ராமாயணம், எர்ராபிரக்கடா மகாபாரதம், சு. எண். 58, முதலியன சோழர் காலத்துத் தொகுப்புக்கள் என்பது சான்றுகளால் தெரிகின்றது.

திரு. A. C. பர்னல் அவர்கள் தமது இந்நூலகப் பட்டியலில் பக். 3-ல் 12, 376 சுவடிகளைப் பரிசீலனை செய்தார் காலம் 1878-79. அவர் குறிப்பிடுவதாவது :

முதலில் நாயக்கரும் பின்னர் மராட்டியரும் தொகுத்தவை 300 ஆண்டுகள் பழமை உள்ளவை உள்ளன. ஆனால் (நாயக்கருக்கு) முந்திய பழமைச் சுவடிகளும் உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார் :—

In the South India in the development of Sanskrit literature — more has been done in this way during the past Thousand years in South than in North". என்று குறிப்பிட்டிருப்பது பராந்தக சோழன் காலம் தொட்டு வளர்ச்சிபெற்ற வரலாற்றைக் குறிப்பதாகும்.

எனவேதான் அறிஞர் திரு. விருத்தகிரீசன் எம். ஏ, பி. எச்டி. அவர்கள் தஞ்சை நாயக்கர் வரலாற்று நூலில் (இந்நூல் பக். 6.) கி. பி. 14-ம் நூற்றாண்டில் விளங்கியது எனவிளக்கியுள்ளார்.

திரு. K R. சுப்ரமணியம் அவர்கள், தம் மராட்டிய மன்னர் வரலாற்று நூலில் பக். 74ல், "There are many palm leaf manuscripts belonging to a period anterior to the Nayks" என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சோழர் காலத்திலிருந்து தென்னாட்டில் வழங்கிவந்த கிரந்தலிபி மராட்டியர் காலத்தில் வீழ்ச்சியுற்று தேவநாகரிலிபி வளர்க்கப்பட்டது என்றும் கூறுகிறார்.

"The modern Nagari character became familiar in the South (India) after the Maratha conquest and gradually superceeded the Grantha script." (p. 74)

இதனை ஒட்டியே இந்நூல் வடமொழி அட்டவணைப் பட்டியல் தொகுத்த திரு. P. P. S. சாஸ்திரியவர்கள் Vol. 19-வது பகுதி பக். 4ல் "சரஸ்வதி நூலகத்தில் தொகுப்பு (கி. பி. 1450) 15-ம் நூற்றாண்டின் இடைக் காலத்திலேயே உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

எனவே இந்நூலகம் "சரஸ்வதி பாண்டாரகம்" சோழர் காலப் பழமை—ஆயிரம் ஆண்டுக் கால சிறப்புக் கொண்டது எனத் தீர்மானிக்க முடிகிறது.

புகழ்பெற்ற அரிய கலைக் கருவூலமான சரஸ்வதி பாண்டாரகம் மராட்டியர் ஆட்சியில் பிற்காலத்தில் (1800க்குப்பின்) நன்கு போற்றப்படவில்லை என்பதால் தஞ்சையிலிருந்த புலவர்கள் வெளியிடங்களுக்குச் சென்று விட்டனர் என்றும் சுவடிகளையும் கொண்டு சென்றனர் என்றும் Indian Antiquity Vol. I 1872. pp. 193–194 குறிப்பிடுகின்றது.

"Marathi Princes of Tanjore were no mean patrons of learning and the work which each of the Pandits living on royal bounty, had collected for his own use could not seen to exist as soon as the principality of Tanjore come to an end." (18—9—1899) Ins. No. 922–923 para 8 to 15 Dr. Hulte)

கி. பி. 1795-ல் திருவாங்கூரில் ஆங்கிலேயராதிக்கம் ஏற்பட்டது. சதாராவில் 1795ல் பேஷ்வா கொலை—ஆங்கிலேய ஆதிக்கம், 1799ல் மைசூரில் ஆங்கிலேய ஆதிக்கமும்—திப்பு கொலையும், கிருஷ்ணதேவராயர் பட்டம்

சூட்டப்பட்டார். 1798-ல் தஞ்சையில் அமரசிம்மன் பதவி நீக்கமும்—சரபோசி மன்னர் பட்டமும். 1799ல் தஞ்சையில் ஆங்கிலேய ஆதிக்கம் ஏற்பட்டது.

"Raja Serfoji of Tanjore ceded to the English the whole of his territory for the sake of peace and Triangulity on condition of receiving equivalent to, 4,000 and one fifth of annual revenue of State and having the fort for his residence.

மேற்கண்ட சூழ்நிலையில் சரஸ்வதி பாண்டாரகம் எந்த நிலையில் இருந்தது என்பதை அடுத்த பக்கங்களில் காணலாம்.

## கி. பி. 1800-க்குப் பின்

கி. பி. 1805-ல் சரபோசி மன்னர் ஜெர்மனி ஸ்வார்ட்ஸ் பாதிரியாரின் கனவை நினைவாக்க அரண்மனையில் அச்சகம் ஒன்றைத் துவக்கினார், தென்னிந்தியாவில் முதன் முதலாக இந்தத் தேவநாகரி அச்சகம் துவக்கப்பட்டது. வடமொழி, மராத்தி மொழிப் புத்தகங்கள் சிலவற்றை அச்சிடச் செய்தார். அச்சகத்திற்கு நவவித்யா கலாநிதி சாலா என்று பெயர் வைத்தார். அச்சிடப்பெற்ற நூல்கள் இரகுவம்சம், தர்க்க சங்கிரகம், பாஷா பரிச்சேதம், சிசுபாலவதம், ஏகநாத ராமாயணம் யுத்த காண்டம் (மராத்தி மொழி) என்பவை. இவை சரஸ்வதி நூலகத்தில் உள்ளன. இவ்விவரம் Indian Antiquity Vol II 1873, pp. 193–194ல் உள்ளது.

## சர்வ வித்யாசாலேயும் நவவித்யா காலநிதிசாலேயும்

சரபோசி மன்னர் 1798ல் மன்னராகப் பதவி பெறுவதற்கு முன் தஞ்சை அரண்மனையில் பழமையான கல்லூரி, சர்வவித்யா கலாசாலை என்ற பெயரில் விளங்கியது

தெரிகிறது. அந்தக் கல்லூரியில் வேதங்கள், காவியம், தர்க்கம், மீமாம்சை, தர்ம சாஸ்திரம், ஜோதிஷம், சிற்பம், அலங்காரம், சைவ வைணவ சித்தாந்தம் கற்றுக் கொடுக்கப்பட்டன. இந்தச் சர்வ வித்யாசாலை சர்வகலா சாலையாக விளங்கியது. (மோடிச் செய்தி பண்டில் 101-C 4, 16 ஏடுகள்) இந்தக் கலாசாலையை சரபோசி மன்னர் கி. பி. 1807ல் நவவித்யா கலாநிதிசாலை என்ற பெயரைச் சூட்டிப் பழமைப் பெயரை மாற்றுவதற்கு ஆணையிட்டார். இவ்விவரத்தை அரண்மனை மோடிச்செய்தி 1807 A. D. Bundle 31 C 2-47 தெரிவிக்கிறது. 1807 கி. பி. வரையில் சர்வ வித்யாசாலை என்று வழங்கிய கல்லூரி, சோழர் காலம் தொட்டு விளங்கியது எனத்தெரிகிறது. இவ்வுண்மையைப் பின்வரும் சான்று குறிப்பிடுகின்றது. முதல் இராசராசனால் கட்டப் பெற்ற பெரிய கோயிலுக்குத் தொடர்புள்ளதாகச் சோழர் காலத்திலிருந்து இந்தக் கல்லூரி விளங்கியது எனத் தெளிவாகக் கூறலாம்.

"The city of Tanjore may be considered as the native capital of Southern India, and the rival of Benaras in herming splendour and Antiquity. Its pagoda is greatly celebrated rising from the ground by Twelve successive stages and considered the finest speeimen of that species of structure existing in India.

## சோழர் காலக் கல்லூரி

## The usual Brahmins college is attached to it.

The place is six miles in circumference, and contained Two large and strong forts. The smallest of which is about a mile in circumference surrounded with a broad and deep ditch, cut in the soiled rock, In one of these

forts is the pagoda, and in the other the place of the Raja. (Madras Presidency Mannual of Administration. History taken from the Vol. I 1885 page 21-22. தென்னிந்திய சாசனம் பகுதி 3-ல் 'உக்கல்' கல்வெட்டில் இராசராசன் காலத்துக் கல்லூரி பெரிய அரண்மனையில் விளங்கியதைக் குறிப்பிடுகின்றது. தஞ்சாவூர் அரண்மனைச் செண்டு வெளிவாயிலில் உள்ள சித்திர கூடத்துக் கல்லூரி.

சர்வவித்யாசாலையை நவவித்யாகலாநிதிசாலை என்று பெயர் மாற்றி அதனுடன் அச்சுக்கூடத்தையும் இணைத்து அந்தக் கல்லூரியில், ஆங்கிலம், பார்சி, உருது, அரபி, முதலிய மொழிகளுடன், தமிழ், கிரந்தம், தெலுங்கு, மராட்டி ஆகிய மொழிகளையும் பயில்வதற்கு சரபோசி வழிசெய்தார். பழமையான ஹிந்துமதக் கோட்பாடுடன் விளங்கிய வேதக்கல்லூரியில் மேலை நாட்டு மொழிகளையும் பயில்விக்கச் செய்த காரணத்ததால் நவவித்யாகலாநிதிசாலா என்று பெயரையும் சூட்டினர் போலும்! இதன் காரணமாக, பழமையான ஸர்வவித்யாசாலையின் பெயர் மறைக்கப் பட்டது தெளிவாகிறது. இதன் விவரம் (மோடிச்செய்தி பண்டில் 101 C. 4, 16, 60, 61 ஏடுகளில் குறிப்பிடப் பட்டுள்ளது.)

சரபோசி மன்னர் அந்தக் கல்லூரியில் அச்சுக் கூடத்துடன் சொந்த முறையில் ஒரு நூலகத்தையும் வைத்திருந்தார். அந்த நூலகத்தில் ஆங்கிலம், லட்டீன், கிரீக், ஜெர்மனி, பிரெஞ்சு, ஆகிய மேலை நாட்டு மொழிகளில் அச்சிட்ட நூல்களையும் தாம் சேகரித்த மராத்தி வடமொழி நூல்களையும் வைத்திருந்தார்.

சரபோசி மன்னர், தம் இருப்பிடத்தில் அரண்மனையின் ஒரு பகுதியில் நவவித்யா கலாநிதிசாலையை மேலும் விரிவாகக் கட்டியிருந்தார் என்றும், இதில் மாணவர்கள்

பயின்றுர்கள் என்றும் மோடிச் செய்திகளால் தெரிகின்றது. 'சரஸ்வதி பாண்டாரகம்' என்ற பெயருடன் சோழர்கால நூலகம் தனியே இயங்கியபோதே நவ வித்யா கலாநிதி சாலை என்ற கல்லூரியும் நவீன நூலகமும் சரபோசி மன்னர் ஏற்படுத்தியிருந்தார். கி. பி. 1829 Bundle 160–2–79 ஏடுகள், நவவித்யா கலாநிதிசாலைக்குக் கட்டிடம் கட்டியதைக் குறிப்பிடுகிறது. இக்காலத்தில் சரஸ்வதி பாண்டாருக்குத் தமிழ்ப் புத்தகம் ஆறுமுகப்பிள்ளையிடமிருந்து வாங்கியது பற்றி மோடி Bundle 160–2–11 ஏடுகள் குறிப்பிடுகின்றன. கி. பி. 1809ல் Bundle 169. C. 16-1 ஏடுகள் நவவித்யா கலாநிதிசாலையில் அச்சக வேலை நடந்ததையும் குறிப்பிடுகின்றன.

டை ஆண்டில் Bundle 169-C. 41–1 ஏடுகள் நவவித்யா கலாநிதிசாலை மாடிக்கு கீழே, ஆசிரியர் கேசவபட்டருக்குத் தங்குவதற்கு வசதியாக வீடு கொடுக்கப்பட்டது குறிப்பிடப் படுகிறது.

18—1—1829ல் கமிஷனர் கிண்டர்ஸ்லீயிடமிருந்து, சீன தேசத்துத் தண்டனைப் படங்களை சரபோசி பெற்றதாக மோடிச் செய்தி Bundle 97–24 ஏடுகள் குறிப்பிடுகின்றன.

ஆங்கிலேய வழக்கறிஞர் வில்லியம் ஹிக்கி அவர்கள் எழுதிய நூலில் பக். 116ல் குறிப்பிடுவதாவது: 1826 மார்ச் 30ம் தேதி தஞ்சை அரண்மனைக்கு ராபின்ஸன் என்ற ஆங்கிலேயரும் பிஷப்ஹீபர் என்ற பாதிரியாரும் வருகை தந்தபோது சரபோசி மன்னர் அவர்களை வரவேற்றுர். அப்போது பிஷப்ஹீபர் தொன்மையான சரஸ்வதி பாண்டாரரைப் பற்றிக் கேட்டவுடன், அந்நூலகத்தைப் பாதிரியாருக்குக்காட்டினர். பழமை தொகுப்பான வடமொழி மராட்டி நூல்களின் பட்டியல் ஒன்றையும் அவருக்குக் கொடுத்தார் என்பது—

"(Robinson says,) The Bishop having heard as the fame of the ancient Sanskrit & Maratha library of the Kings Tanjore; I requested His Highness would present a catalouge of its Volumes to the College of Fort William, which he was pleased to do it. Volumes written in the Marathi characters. (Tanjore Maratha principality in South India, By William Hicky. Book Vol. I p 116)

ஷை நூல் பக். 123-ல் ஷை தேதியில் சரபோசி மன்னர் பிஷப்ஹீபரையும் ராபின்ஸனையும் அழைத்துக்கொண்டு தம்மிருப்பிடமான அரண்மனையில் தனிப்பட்ட நூலகம் வைத்திருந்ததையும் காட்டி விவரம் கூறினர். அந்த நூலகம் ஆங்கிலேயர் பாணியில் கட்டப்பட்ட அறையில் 3 வரிசைத் தூண்கள் உவள இடத்தில், மராட்டிய முதல்வரான ஷாஹஜி படம், சிவாஜி படம் இருந்தன. பத்துப் பெட்டிகளில் ஆங்கிலப், பிரெஞ்சு, ஜெர்மன், கிரீக், இலட்டீன் புத்தகங்களும், இரண்டு வரிசைகளில் மராத்தி, வடமொழி கைப்பிரதிகளும் இருந்தன. விஞ்ஞான ஆராய்ச்சிக் கருவிகள் சில இருந்தன. மற்றும் வைத்தியம் சம்பந்தமான பலவரிசைப் புத்தகங்கள் மன்னரின் ஆராய்ச்சிக்காக வைக்கப்பட்டிருந்தன.

"The private visit of the Bishop to his place. The Raja says Mr. Robinson received us in his library a, noble room with three rows of pillars and handsomely furnished in the English style on one side there are portraites of the Maratha dynasty from Shaji and Sivaji Ten Book cases containing a very fair collection of French, English, German, Greek, and Latin Books and two others of Marathi and Sanskrit Manuscripts In the adjoining room in an air pump, an electrifing

machine an ivary skeletone, astronomical instruments and several other cases of Books may of which are in the subject of Medicine which was for some years in his private study" ( William Hicky-page 123. )

மேற்கண்ட இரு வேறு நூலகங்களைச் சரபோசி மன்னர் நிர்வாகம் செய்தார் என்ற விவரம் தெளிவாகத் தெரிகின்றது. ராபின்ஸன் எழுதிய ஆங்கிலப் புத்தகம் "பிஷப்ஹீபர்" பக். 166 இந்த விவரம் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

மேற்கண்ட விளக்கமான சான்றுகளைக் கொண்டு தஞ்சை அரண்மனையில், சரஸ்வதி பாண்டாரகமும் இயங்கிவந்தமை தெளிவாகின்றது. நவவித்யாகலாநிதி சாலையும் அரண்மனையில் ஒரு பகுதியில் மாடியில் இருந்த தாகத் தெரிகிறது. இவ்விவரத்தை முன்பே குறிப் பிட்டுள்ளேன்.

சரஸ்வதி பாண்டாரகம் தனியே இப்போதுள்ள இடத்திலும் அதனை ஒட்டிய ரிகார்டுகள் சேமிப்புக் குரிய பக்கத்து அறைகளிலும் இருந்தன என்பது தெளி வாகின்றது.

மோடிச்செய்திகளின் சான்றுகளால், சரஸ்வதி பாண்டாரகத்தில் பண்டிதர்கள் நூலாராய்ச்சியும் மாணவர்கள் பயிற்சியும் நடத்தப்பெற்றன என்று தெரிகிறது.

சரஸ்வதி பாண்டாரகத்தில், அஷ்டலக்ஷ்மி சிலைகளை வைத்து வழிபட்டனர் என்றும் கூறப்படுகிறது. சரபோசி மன்னர் காலத்தில் கி. பி. 1825ல் அவை இருந்தன என்பது மோடிச்செய்தி Bundle 61-23-2 ஏட்டால் தெரிகிறது. இப்போது அச்சிலைகள் இல்லை.

கி. பி. 1776ல் துளஜா மன்னர் காலத்தில் சரஸ்வதி பாண்டாரகம் நன்கு காப்பாற்றப்பட்டதென்று மோடிச் செய்தி கூறுகிறது. (மோடி Bundle—177-23- ஏடு.)

சரபோசி மன்னர் காலத்தில் நவவித்யா கலாநிதி சாலையும் சரஸ்வதி பாண்டாரகமும் தனித்தனியே இயங்கிய விதத்தை மோடிக் கட்டுகளில் நூற்றுக் கணக்கிலான செய்தித்தாள்கள் குறிப்பிடுகின்றன.

## ஸ்வார்ட்சும் சரபோசி மன்னரும்

சரபோசி மன்னரை, தஞ்சையில் பதவியில் அமர்த்த ஸ்வார்ட்ஸ் பாதிரியார் பெரும் முயற்சி செய்தவர். சரபோசி மன்னரை 12ம் வயதிலேயே தம்முடன் அழைத்து சென்று சென்னையில் வைத்துக் கொண்டார். சரபோசி மன்னரின் 'கார்டியன்' என்ற முறையில் முழுப்பொறுப்பை யும் மேற்கொண்டவர். 24 வயது வரையில் ஸ்வார்ட்ஸ் பாதிரியார் சரபோசி மன்னருக்கு உற்ற துணையாக இருந் தார். ஆனால் 13—2—1798ல் ஸ்வார்ட்ஸ் பாதிரியார் காலமாகிவிட்டார். சரபோசி மன்னர் அக்டோபர் 1798ல் தஞ்சை மன்னராக ஆங்கிலக் கம்பெனியாரால் நியமிக்கப் பட்டார். ஸ்வார்ட்ஸ் பாதிரியாரின் இறுதி நாளில் அதற் கான முழு ஏற்பாட்டையும் செய்துவிட்டார். இந்த விவரங்களை மோடிச் செய்திகளிலும் காணமுடிகின்றது. மற்றும் பிஷப்ஹீபரைப் பற்றி ராபின்ஸன் எழுதிய நூல் 1829-ல் அச்சிடப்பட்டதில் விவரம் வருமாறு:-

He was his pupil from the time he was Twelve years old till he was Twenty four, and succeeded to the Musned the year after Swartz died. (Bishop Heber by Robinson. Page 150) Still regard his friend and guardian. Swartz died in 13th Feb. 1798 aged 71 years 4 months. (B. H; P. 150 & 155)

சரபோசி மன்னரவர்கள் ஸ்வார்ட்ஸ் பாதிரியாரின் பாதுகாப்பிலிருந்தபோது ஆங்கிலம் கற்றுக்கொண்டார் என்பதில் ஐயமில்லை. அதன் காரணமாக ஆங்கிலம் முதலிய மேலை நாட்டு மொழிகளில் அச்சிடப்பெற்ற புத்தகங்களை வாங்கிச் சேகரித்துவைத்தார். இவற்றை அம்மன்னர் சரஸ்வதி பாண்டாரகத்தில் வைக்கவில்லை. நவவித்யா கலாசாலையில் வைத்திருந்தார் என்பதை ராபின்ஸன் நூலிலும் வில்லியம் ஹிக்கி நூலிலும் தெளிவாகக் காண்கிறோம்.

சரபோசி மன்னர் 1832 மார்ச் 7ம் தேதி காலமாகி விட்டார். அவர் புதல்வர் சிவாஜி மன்னர் காலத்திலும் நவவித்யாகலாநிதிசாலையும் சரஸ்வதி பாண்டாரகம் என்ற நூலகமும் தனித்தனியே இயங்கின என்பது சான்றுகளால் தெரிகிறது.

சிவாஜி மன்னர் கி. பி. 1842ல் ஜான்ஸன் டிக்ஷனரி 3 புத்தகங்களை ஆங்கிலேயரிடமிருந்து ரூ. 7 அணா 8க்கு வாங்கியதாக மோடிச்சான்று பகர்கிறது. (மோடி Bundle *114*C 84 ஏடு கி. பி. *1834* நவவித்யா கலாநிதிசாலை நடந்ததைப் பற்றியும் மோடிச்செய்தி கூறுகிறது. இது சிவாஜி மன்னர் காலம். (மோடி *1834* Bundle *177*-8 ஏடு.) கி. பி. *1841*ல் சிவாஜி மன்னருக்கு சென்னையி லிருந்து காப்டன் ஹாரிஸ் துரை தயாரித்த ஆப்பிரிக்க மிருகங்கள் படப்புத்தகம் 4 அனுப்பப்பட்டன. இவற்றுக்கு விலை ரூ. 4 அணா 6 தரப்பட்டது. (மோடிச்செய்தி Bundle 75 3-*1* ஏடு.)

சீனதேசத்துத் தண்டனைப் படங்கள், ஆப்பிரிக்க மிருகங்களின் படங்கள், ஜான்ஸன் டிக்ஷனரி ஆகியவை இப்போது சரஸ்வதி நூலகத்தில் இடம்பெற்றுள்ளன. சிவாஜி மன்னர் *1855*ல் காலமானார். இவருக்குப் புதல்வர் இல்லை.

# 1855க்குப்பின் சரஸ்வதி நூலகம்

சிவாஜி மன்னருக்குப்பின் அவர் மனைவியரில் மூத்த ராணியான ஸ்ரீ காமாக்ஷிபாய் சாகிப் அரண்மனை நிர்வாகத்தில் நவவித்யாகலாநிதி சாலையும் சரஸ்வதி நூலகமும் தனித்தனியே இயங்கியது. கி. பி. 1853ல் நவவித்யாசாலா திம்மதி ராஜாராம் சஹாஜி பற்றி குறிப்புள்ளது. (மோடி Bundle 943-7-38 ஏடு.)

கி. பி 1856ல் ஆங்கிலக் கம்பெனி நிர்வாகம், தஞ்சை ராஜ்யத்துக்கு அரசர் என்ற தகுதிக்கு யாரும் வாரிசு இல்லை என்று அறிவித்து அரண்மனை நிர்வாகம் முழுவதையும் கைப்பற்றி ஆதிக்கம் கொண்டது,

"We agree in the unanimous opinion of your Government and the agreement of Madras Govt., that the dignity of Raja of Tanjore is extinct.' (W. Hicky Vol. II page XIVII record No. 6 No. 17 of 1856 para 4. From Governer-General IndiaCounsel)

தஞ்சை அரண்மனை ஆங்கிலக் கம்பெனி ஆக்கிரமித்துக்கொண்டதாகத் தெரிவித்தது.

"The Jurisdiction of the British Courts should however extend over all the fort" (22—11—1855. W. Hicky Vol II. P. XIIV. 10—7—1856ல் வெளியிடப்பட்ட அறிவிப்பில் தஞ்சை அரண்மனை சமஸ்தான அரசு நகைகள் மதிப்புமிக்க கைப்பிரதி நூலகம் ஆகிய அனைத்தும் ஆங்கிலக்கம்பெனி அரசுக்குச் சேர்ந்துவிட்டது என்று குறிப்பிடப்பட்டது.

"There are in the palace, State Jewels of great value. A valuable library of oriental works and are

many which fallen into Government with Raj". W. Hicky. page II vol. II. Record No. 8. No. 200—10—7—1856.

25—9—1856ல் சரஸ்வதி பாண்டாரகம் அரசுக்குச் சொந்தமானது என்று அறிவிக்கப்பட்டது.

'The state property VIZ. Jewels, Library etc" (W, Hicky page lXII Record 10-13-311, 25-9-1856.)

18—10—1856ல் தஞ்சை அரண்மனை, கமிஷனர் H. பார்பஸ் சென்னை அரசுத் தலைமை காரியதரிசிக்கு எழுதிய கடிதத்தில் "நூலகம் மற்றும் அரசுடைமைச் சொத்துக்களை தன், பாதுகாப்பில் வைத்துக்கொள்வதாகவும், அவற்றுக்குதகுந்த பாதுகாப்பில்லை என்றும் தாமே "சீல்" வைத்து பாதுகாப்பதாகவும் எழுதினார். (W. Hicky P. lXIV para 5. Record 11, 18—10—1856). அதே சமயத்தில் ஸ்ரீகாமாக்ஷிபாய் சாகிப் அவர்களுக்கும் இந்த விவரத்தை கமிஷனர் பார்பஸ் தெரிவித்தார். (W. Hicky Record No. 13 Page lXIX).

அரண்மனை கமிஷனர் பார்பஸ் அரண்மனை சர்கிலுக்கு எழுதிய அறிவிப்பில், தம்மை அரண்மனை கீழ்வாசலில் 18—10—1856ல் சந்தித்து நூலகம் முதலியவற்றின் பொறுப்பையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு தெரிவித்தார். (W. Hicky P. lXXIII Para 7 Record 14 No. 21.)

கமிஷனர் பார்பஸ் அரண்மனையில் நேரிடையாக ஆதிக்கம் கொண்டபோது, ஸ்ரீகாமாக்ஷி பாய்சாகிப் அவர்கள் பிரிவீ கௌன்ஸிலுக்கு மனு செய்துகொண்டார் 27-8-1859ல், அதன் பின்னரும் நியாயம் கிடைக்கவில்லை. ஆங்கிலக்கம்பெனியின் 25வது ரெஜிமெண்ட் அரண்மனையை ஆக்கிரமித்துச் சுவாதீனம் எடுத்துக் கொண்டது.

"The 25th Regiment of infantry. He goes to the palace and takes possession of the property which is found in it". (W. Hicky page )XXXI Record 15 No. 13, 27—7—1859).

## ஆங்கிலேயருக்கு நூலகத்தின்மீது ஆசை

மேற்கண்டவாறு ஆங்கிலேயர் கமிஷனர் பார்பஸ், C. டிரிவெலன் இருவரும் அரண்மனையின் மதிப்பு மிக்க பொருட்களை அரசுடைமை என்று கூறிவிட்டு "ஸ்ரீகாமாக்ஷி பாய்சாகிபிடம்" நீங்கள் விரும்பினால் நூலகம்போன்ற சிலவற்றை அரண்மனையிலேயே வைத்திருக்கலாம். விருப்பமில்லையானால் சென்னைக்குப் புத்தகங்களைக்கொண்டு சென்று, மதிப்பீடுசெய்து கிரயம் செய்து கிடைக்கும் தொகையை உங்களுக்குக் கொடுக்கிறோம்" என்று அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. (W. Hicky XC III Record 17. Proceedings 21-8-1862 Do.-XIV Record 18 Para 4)

"The wisher of the family through their representative the senior widow in regard to the Library—Government No. of objections to the Library being retained at Tanjore. If the family desire it, if not the purpose of being valid and these value in money paid to the family".

சோழர்காலப் பொக்கிஷமான சரஸ்வதி நூலகத்தை விலைபேசத்துணிந்த ஆங்கிலக் கம்பெனி நிர்வாகத்தைப் பற்றி அறிவதற்கு இது ஒன்றே போதுமானதன்றோ? பின்னர் இம்முடிவு மாற்றிக்கொள்ளப்பட்டது. நூலகத்தை பொதுக் கட்டிடத்தில் வைத்துக்கொள்வது என்றும், அதற்குப் பொறுப்பாளருக்கு ரூ. 28 மாதச் சம்பளம் அரசே கொடுப்பதென்றும் சென்னை அரசு உத்தரவிட்டது. (W. Hicky Record 19, 19—2—1863 and 21, 31—1—1863 Page XCIX CV)

They have been already sanctioned temporarily by the Madras Government at the cost for the Library of Rupees 28 per month.

It is proposed that the Books shall be retained for the Public Building at Tanjore.

Madras Government May, 17—1862 for the maintenance of the Library, Hospital Building and Palace establishments are sanctioned.

மேற்கண்ட தகவல்களைப் படிக்கும்போது சரஸ்வதி நூலகத்துக்கு ஏற்பட்ட சோதனை, கால வெள்ளத்தில் எவ்வாறோ, நீங்கிவிட்டதென்றே சொல்லலாம். ஆங்கிலேயர் கிரயம் செய்துவிடலாம் என்று எண்ணியது. சரஸ்வதி நூலகச் சுவடிகளைக் குறிப்பதா? அல்லது சரபோசி மன்னரின் சொந்த நூலகமான நவவித்யா கலாநிதி சாலையிலிருந்த புத்தகங்களைக் குறிப்பதா? என்பது ஆய்வாளர்கள் சிந்திக்கவேண்டியதொன்று.

தனித்து இயங்கிய நவ கலாநிதி சாலை நூலகத்தில் இருந்த ஆங்கிலம் முதலிய நூல்கள் கி. பி, 1857ல் சரஸ்வதி நூலகத்திற்குள் சேர்க்கப்பட்டதாகத் தெரிகிறது. 25-1-1857ல் கமிஷனர் கிண்டர்ஸிலி சரஸ்வதி நூலகத்தில் ஆங்கிலம், பிரெஞ்சு, முதலிய நூல்களைப் பார்வை இட்டு முத்திரை வைத்ததாகக் குறிப்பிடுகிறது மோடிச் செய்தி (மோடி Bundle 45-c),

பின்னர் 24-5-1862ல் அரண்மனை சர்க்கில் கிருஷ்ணராவ் என்பவர் "சரஸ்வதி நூலகத்தின் ஹெட் குமாஸ்தா கொடுத்த அரண்மனை, புத்தக வாசகசாலையின் ஆங்கிலம், பிரெஞ்சு, மராட்டி புத்தகங்களுக்குரிய ஜாபிதாவை தாங்கள் விரும்பியபடி அனுப்பியுள்ளேனென்று காமாக்ஷி

பாய் சாகிபுக்கு கடிதமும் ஜாபிதாவும் அனுப்பியதாக மோடிச்செய்தி கூறுகிறது. (Modi Bundle 106—C 50).

மேற்கண்ட விவரங்களை அறியும்போது ஆங்கிலக் கம்பெனி நிர்வாகம் சரபோசி மன்னரின் தனிப்பட்ட நூலகத்து மேல்நாட்டு நூல்களையே சென்னைக்கு கொண்டு சென்று விலைக்குவிட துணிந்திருக்க வேண்டுமென கருதுகிறேன்.

சோழர் காலச்சுவடிகளை மராட்டிய மன்னர் குடும்பச் சொத்தாக ஆங்கிலக் கம்பெனி நிர்வாகம் கருதியிருக்க முடியாது. அப்படிக் கருதியிருந்தால் இந்நாட்டுக்குத் துரோகம் புரியத்துணிந்த செயலே அது.

ஆங்கிலேயக் கம்பெனி அரசு அநீதி புரிந்தது என்று வில்லியம் ஹிக்கியே குறிப்பிடுகின்றார், A short History of British Injustice in Tanjore' என்று அவர் நூலைக் குறிப்பிட்டிருப்பது உண்மையாகும். (W. Hicky Vol. II P. C XXX).

ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்புக்குப் பலியான தஞ்சை நகர் எத்தனை கொடுமைக்குட்பட்டது என்பதை எண்ணிப் பார்த்தால் நூலகமும் என்னவாயிற்றோ? என்றுதான் கருத வேண்டியுள்ளது. இந்த நாட்டின் புராதன சின்னங்களை ஆங்கிலேயர் தகர்த்தெறிந்தார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும், சரித்திரக் கண்ணோட்டத்துடன் ஆய்வாளர் ஆய்வு செய்யாதது பெருங்குறையாகும்.

P.P.S. Sastri Vol IV & X VIIல் தம்முன்னுரையில் இந்த இடைக்காலத்தில் நூலகம் பாதிக்கப்பட்ட காலமென்றும், என்ன நடந்திருக்கும் என்று கருதமுடியவில்லை என்றும், Bells கடிதங்களில் நூலகம் இக்காலத்தில் பெரும் பாதகநிலை அடைந்தது என்றும் குறிப்பிட்டிருப்பதாகவும்

தெரிவித்துள்ளார். தெலுங்கு அட்டவணைப் பட்டியல் நூலில் பேராசிரியர் N. வெங்கட்ராவ் அவர்களும் "இக்கால எல்லையில் பல அரிய நூல்கள் நூலகத்திலிருந்து கைப்பற்றப் பட்டன" என்று குறிப்பிட்டுள்ளார். (தெலுங்கு Vol. II P. 18.)

The town walls will be thrown down and the ditch filled up under order which be issued on the subject in the department of public works. (Record 22. Political department No. 343 and 389 16—1—1863. No. 16).

தஞ்சைக் கோட்டையைச் சுற்றியிருந்த மதில்சுவர்களை இடித்து அகழில் தள்ளி தூர்த்துவிடக் கட்டளையிட்ட ஆங்கிலேயரின் அநீதியை என்னென்பது ?

இத்தகைய ஆங்கிலேயக் கம்பெனி நிர்வாகத்துக்கு அப்பாற்பட்ட நல்லவர்கள் அறிஞர்கள் ஆங்கிலேய இனத்தில் இருந்ததை நாம் குறிப்பிடவேண்டும்.

கி. பி. 1868ல் சரஸ்வதி நூலகத்தின் சுவடிகளை சென்னை அரசு கட்டளையின்பேரில் பரிசீலனை செய்து பட்டியல் தயாரிக்க முற்பட்ட அறிஞர் பிக்வேர்டு என்ற வடமொழிப் பேராசிரியர் இந்த நூலகத்தைப் போன்றதொரு நூலகம் வேறு இந்தியாவில் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

Tanjore Library is probably to none amoung oriental Library in India. (Pickword December 1868 & P. P. S. Sastri Vol I p. 1 to 3)

ஆங்கிலக் கம்பெனி நிர்வாகம் தஞ்சையை முழுவதும் ஆக்கிரமித்துக்கொண்ட நிலையில் சென்னையிலிருந்து கம்பெனி நிர்வாகக் கௌன்ஸிலின் கவர்னர் உத்தரவுப்படி தஞ்சையில் செஷன்ஸ் நீதிபதியாக இருந்த திரு.

A. C. பர்னல் என்ற பேரறிஞர் தஞ்சை சரஸ்வதி நூலக நூல் அட்டவணை தயாரித்து இங்கிலாந்தில் அச்சிட்டு வெளியிட்டார். இந்நூலகச்சிறப்பை நன்கு உணர்ந்து சோழர்கால நூலகம் என்பதை அறிந்து, எவ்விதத்திலும் இந்நூலகத்தைப் பிறர் கைப்பற்றும் நிலையோ, கிரயம் பேசும் நிலையோ ஏற்படக்கூடாது என்றும், உடனடியாகவோ பின்னரோ அரசு இந்நூலகத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும், இந்திய ஒருமைப்பாட்டின் கருவூலம் இந்நூலகம் என்றும், அரிய படைப்புக்கள் தொன்மையானவை என்றும் அரசுக்குப் பரிந்துரைத்தார். இந்நூலகத்தை அரசுடைமை ஆக்கவேண்டுமென்று இந்தப் பரிந்துரை 6—8—1873ல் திரு. A. C. பர்னல் அவர்களால் பங்களூரிலிருந்து சென்னை அரசு தலைமைக் காரியதரிசிக்கு எழுப்பட்டதாகும்.

It may perhaps be asked if the Library is worth the labour spent on it. I can answer unhesitatingly that it is. It is now a recognised fact that nearly all Sanskrit works of importance exist in different recensions. The Tanjore Library is unrivalled in this respect; it contains several good manuscripts of all the most important ones known as yet, including a few that are new ...... The Tanjore Library. however, contains additional manuscripts of most of the works which I had discovered elsewhere, and this is a matter of great importance. I belive that this Library must, sooner or later, escheat to the Government. The preparation of this catalougue will therefore protect property of enormous value. Sanskrit Manuscripts have long been very dear and the cost of making proper transcripts is now very heavy. As far as I can Judge, it

would not be possible to form a collection like that at Tanjore at a less cost than £ 50,000 but many manuscripts are unquestionably unique" A. C. Burnell 6—8—1873 Bangalore-11. P. P. S. Sastry Vol. I, p. IV 15—2—1928).

## அரண்மனை - குடும்ப வழக்கும் நூலகமும்

இந்நிலையில் அரண்மனை மராட்டிய மன்னர் குடும்ப வழக்கு சில, தஞ்சை கோர்ட்டில் நடைபெற்றன. O. S. 26. of 1912, 16 of 1899. என்டன. இந்த வழக்குகள் சென்னை உயர்நீதிமன்றத்துக்கும் சென்றன. இறுதியில் தஞ்சையில் செஷன்ஸ் நீதிமன்றத்தில் நடைபெற்றது

இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால் சோழர்கால சரஸ்வதி நூலகம் அரண்மனை குடும்ப பாகப்பிரிவினைச் சொத்தில் ஒன்றாக இடம் பெற்றதாகும்; கமிஷனர் பார்பஸ் போன்றவர்களின் கொடிய சிந்தனையால் செயல் பட்ட ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி, சரஸ்வதி பாண்டாரக நூலகத்தை அரண்மனைக் குடும்பச்சொத்தில் ஒன்றாக மதிப்பிட்ட அவலநிலை மன்னிக்கமுடியாத தொன்றாகும்.

மன்னர் குடுமபச்சொத்துப் பட்டியலில் நூலகம் இருந்தது. வழக்கு நடைபெற்றபோது இதைக்கைப்பற்ற பலரும் முயற்சித்தனர் என P. P. S. சாஸ்திரி தமது நூலக அட்டவணைப்பட்டியல் முன்னுரையில் கூறியுள்ளார். இந்த நூலின் பக்கம் 153ல் விவரம் உவளது.

சோழப்பேரரசு கண்ட தஞ்சையில் சோழ மன்னர்களின் இதயச்சுரங்கமான சரஸ்வதி பாண்டாரகத்தை காப்பாற்ற

வும் ஆங்கிலேயக் கம்பெனி இந்த நூலகத்துக்குச் செய்த அநீதியை அகற்றவும் தஞ்சை செஷன்ஸ் நீதிமன்ற நீதிபதி திரு R. நாராயணன் I. C. S. அவர்கள் உறுதி கொண்டு "இந்நூலகம் பொது நூலகம்" அரசு பொறுப் பேற்று நடத்தவேண்டும், இந்நூலக மேம்பாட்டுக்கு அறக் கட்டளையாக ஒரு லக்ஷம் ரூபாய் ஏற்படுத்தி வைக்க வேண்டும் என்று ஆணையிட்டார்-நூலகம் காப்பாற்றப் பட்டது,

The Library should be preserved and maintained as a Public Library in Trust for the Public and removed the Library and one lakh of rupees to provide for its up keep, from the subject-matter of the suit. (P. P. S. Sastry Vol I p. V).

நீதிபதியின் பரிந்துரையின் மீது சென்னை அரசு, உடனடியாகச் செயல்பட்டது, நூலகத்தை அரசு மேற் கொண்டது. பொது நூலகமாக அறக்கட்டளை நிறுவன மாக அறிவித்தது. நிர்வாகக்குழு அமைக்க திட்டமிட்டு ஆணையிட்டது.

The Government of Madras in G.O. 1306. Home Dept. Education dt. 5—10—1918 occordingly took possesion of the same under the Charitable Endowment Act and have framed a scheme for the management of the same.

P. P. S. சாஸ்திரி தம் நூலட்டவணைப் பட்டியலில் மேலும் கூறுவது :—

The Library is now a public Library in the full sence of that term the Government of Madras though the

**Treasurer of charitable Endowments being responsible for its Administration (P. P. S. Vol. I p IV)**

சரஸ்வதி நூலகத்தில் உள்ள தொகுப்புக்களைப்பற்றி ஆய்வு செய்து வடமொழிப் பேராசிரியர் மாக்டொனல்டு என்ற ஆங்கிலேயர் இந்நூலகத்தில் கி. பி. 1000க்கு முற்பட்ட கால எல்லை கொண்ட படைப்புச் சுவடிகள் உள்ளன என்றும், பேராசிரியர் கெய்த் என்ற ஆங்கிலேயர் கி. பி. 1200க்கு முற்பட்ட காலத்துப்படைப்புச் சுவடிகள் உள்ளன என்றும் கூறியுள்ளார்கள். (P. P. S. Sastry அட்டவணைத் தொகுப்பு பகுதி 19). இவை யாவும் சோழர் காலத்துத் தொகுப்பு நூல்களே என்பதில் ஐயமில்லை. திரு A. C. பர்னல், டாக்டர் திரு. பூலர் ஆகியோரின் கருத்தும் இதுவே.

1855க்குப் பின்னர், 1918வரை தஞ்சை சரஸ்வதி நூலகம் ஆங்கிலேயக் கம்பெனியின் ரெஸிடெண்ட் மேற்பார்வையில் இயங்கியது.

இந்த 63 ஆண்டுகால எல்லையில் நூலகத்தின் நிலை என்னவாகியிருக்கும் என்று சிந்திக்கும் நிலை உண்டாகின்றது, சென்னை அரசின் G. O. No. 1306 கட்டளையின் படி 1918ல் இந்த நூலகத்தை நிர்வாகம் செய்ய அரசின் சார்பில் நிர்வாகக்குழு நியமிக்கப்பட்டது. நூலகம் நிர்வாகக்குழுவால் இயங்கத்தொடங்கியது.

சோழர், ஆந்திர நாயக்கர், மராட்டியர் ஆகிய மன்னர் பரம்பரையினரால் போற்றிப் பாதுகாக்கப்பெற்ற சரஸ்வதி பாண்டாரகமாகிற இந்நூலகத்திற்கு நிர்வாகக்குழு அரசின் ஆணைப்படி நியமிக்கப்பட்டபோது 1918ல் சரபோசி மன்னர்

பெயரால் இந்நூலகத்தைப் பெயர் சூட்டி வைத்தது. பழமைக்கு ஒரு மாற்றம் என்பது குறிப்பிடத்தக்கது.

சரபோசி மன்னர் சேகரித்த ஆங்கிலப், பிரெஞ்சு முதலிய மொழிகளில் அச்சிடப்பெற்ற நூல்களும், பின்னர் தருவிக்கப்பெற்ற சீன நாட்டுப்படங்கள், ஆப்பிரிக்கப் படங்கள் ஆகியவையும் சிறப்புக்குரியவை என்று மதிப்பிட்டு கருதினாலும் அவற்றைத் தனியே "சரபோசி மன்னர் நூலகம்" என்ற பெயரில் வைத்திருக்கலாம்.

சோழர் காலம், நாயக்கர் காலம், மராட்டியர் காலம் மூன்றிலும் தொகுக்கப்பட்ட கருவூலமான சரஸ்வதி பாண்டாரகத்திற்கு சரபோசி மன்னர் காலம் வரையிலும் அவர் புதல்வர் சிவாசி மன்னர் காலம் வரையிலும் எந்த மன்னர் பெயராலும் வழங்கப்படாத சரஸ்வதி பாண்டாரகத்திற்கு 1918ல் நிர்வாகக்குழு சரபோசி மன்னர் பெயரைச் சூட்டியது பொருத்தமற்றதாகும்.

கி. பி, 1782ல் இந்தியாவுக்கு வந்த மெக்கன்ஸி என்ற அறிஞர், இந்திய நாட்டின் பல பகுதிகளிலும் இருந்த தொன்னூல் சுவடிகளைச் சேகரித்த முதல் அறிஞர் ஆவார். பாரத நாட்டின் அரிய தொன்னூல் சுவடிகளையும், அரிய புராதனப் பொருட்களையும சேகரித்தார். இவருடைய தொகுப்புக்களே சென்னையில் ஓரியண்டல் கைப்பிரதி நூலகமாக 1800ல் நிறுவப்பட்டது என்றும், அதே ஆண்டில் கல்கத்தாவில் இம்பீரியல் நூலகமாகவும் (National Library) அதே ஆண்டில் இங்கிலாந்தில் இந்தியா ஹவுஸ் லைப்ரரியாகவும் பெயர் சூட்டப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த மெக்கன்ஸியின் பெயரை அந்நூலகங்களுக்கு சூட்டவில்லை. காரணம் பழமையின் பெருமையைப் பாதுகாக்கவே என்பது தெளிவு. எனவே உலகப்புகழ்

பெற்ற தஞ்சை சரஸ்வதிபாண்டாரகத்துக்கு பெயர்மாற்றம் செய்தது வரலாற்றுக்குப் பொருத்தமற்றதாகும்.

சரித்திரக்கண்ணோட்டத்துடன் மதிப்பீடு செய்யும்போது சரபோசி மன்னர் பெயரால் நூலகத்தை அழைப்பதில் பொருத்தமில்லை. நமக்குச் சரபோசி மன்னரைக் குறை கூறும் கருத்தில்லை. வரலாற்று மரபுக்குரியவாறு கருதப் படவேண்டுமென்பதே குறிக்கோள்.

நிர்வாகக்குழு இயங்கத்தொடங்கியபின் திரு P. P. S. சாஸ்திரி அவர்கள் பெருமுயற்சியால் 9–4–1927ல் (G. O. No. Mis. 563) இந்திய அரசு நூலக மேம்பாட்டுக்காக ரூ. 21,345ம் உதவியளித்தது.

11—12—1929ல் இந்திய வைசிராய் திரு. லார்டு இர்வின் அவர்கள் தஞ்சை சரஸ்வதி நூலகத்திற்கு வருகை தந்து 1930ல் மீண்டும் ரூ. 21,960ம் இந்திய அரசு உதவிக்கு ஆணையிட்டு உதவினர். இந்த விபரங்களை இந்நூலில் பக்கம் 157ல் குறிப்பிட்டுள்ளேன்.

முறையே திரு A. C. பர்னல், திரு P. P. S. சாஸ்திரி, இருவரும் வடமொழிப் பகுதிக்கும், ஆந்திர பல்கலை கழகம் தெலுங்குப் பகுதிக்கும், திரு உலகநாதபிள்ளை அவர்கள் தமிழ்ப்பகுதிக்கும், திரு இராமசந்திர கோஸ்வாமி அவர்கள் மராட்டிப்பகுதிக்கும் இந்நூலக அட்டவணைப்பட்டியல் தொகுப்புக்களை வெளியிட்டுள்ள அரும்பணி பாராட்டுக்கு உரியது.

இந்திய நாட்டில் இப்போதுள்ள கைப்பிரதி சுவடி காப்பு நூலகங்களில் முதன்மையானது, பழமையானது தஞ்சை சரஸ்வதி நூலகமே என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன். இக்கருத்தை மாநில அரசும் மத்திய அரசும் கருத்தில் கொள்ளவேண்டுமென்றும் கூறிக்கொள்கிறேன்.

திராவிட கலாசாரத்தின் ஒருமைப்பாட்டை விரும்பும் இன்றைய மாநில அரசு இந்நூலகம்பற்றி சிறப்பான கொள்கையை மேற்கொள்ளவேண்டும் என்பது என் பணிவான இறுதியான வேண்டுகோள்.

மேற்கண்ட விளக்கங்களை இந்நாட்டுப் பெரியவர்களும் ஆய்வாளர்களும், மாணவர்களும் நன்கு உணரவேண்டுமென்றும் மாநில அரசும், மத்திய அரசும் முறையான பாதுகாப்பு அளித்து இந்நூலகத்தை அரசுடைமையாக்கும் முயற்சியை விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்றும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்நூலைப்பற்றி முன்னுரை என்ற முறையில் வலியுறுத்திச் சொல்லபபட்ட செய்திகள் என் உள்ளத்தில் எழுந்த கிளர்ச்சியும் ஆர்வமுமேயாகும். சான்றுகளை ஓரளவு தெரிவித்துள்ளேன்.

இந்நூலை என் ஆசான் அமரர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நினைவு மலராக வெளியிடுகின்றேன். இந்நூலை வெளியிட என் முயற்சிக்கு ஊக்கம் தந்த அன்பர்கள் பலர் இந்நூலை வெளிக்கொணரும் நிலையில் உற்றுழி உதவிய தஞ்சை ஐ. ஒ. பி. நிறுவனத்துக்கு, அந்நிறுவன மேலாளர் உயர்திரு A. L. சிதம்பரம் அவர்களுக்கு என் நன்றியைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலை நான் எழுதும்போதும் அச்சிடும் காலத்தும் எனக்கு ஊக்கம் தந்து வந்துள்ள நண்பர் இளம் புலவர் எஸ். மகாதேவன் அவர்களுக்கு என் நன்றியையும் ஆசியையும் கூறிக்கொள்கிறேன்.

இந்நூலை எழுத நான், சென்ற இரண்டாண்டுகளாக சரஸ்வதி நூலகத்தில் புத்தகங்களைப் படிக்கவும் குறிப்புக்கள்

தொகுக்கவும் எனக்கு ஆதரவு அளித்த நிர்வாகக் குழுவுக்கும் கௌரவச் செயலாளர் உயர்திரு A. வடிவேலன் அவர்களுக்கும், நூலகருக்கும், நூலகப்புலவர்களுக்கும் பணியாளர்களுக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் கூறிக்கொள்கிறேன்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீ வாணீ விலாஸ் அச்சகத்தார், நல்ல முறையில் அச்சிட்டுத் தந்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்

இந்நூலில் எழுத்துப்பிழை சொற்பிழைகள் காணப் படுவதைப் பொறுத்து, கருத்துக்களின் உயர்வை மட்டும் மதிப்பீடு செய்துகொள்ள, பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன.

தஞ்சை,
24—11—78.

அன்பன்,
வ. வேணுகோபாலன்.

# இந்நூல் எழுதச் சான்றுகளாக உதவிய நூல்கள்

—o—

1. சரஸ்வதி மகால் நூலகம் வடமொழி நூல் சுவடிகளின் அட்டவணைப்பட்டியல் புத்தகங்கள்.-தொகுதி 1 முதல் 20 வரையில்

2. சரஸ்வதி மகால் தமிழ்ச் சுவடிகள் அட்டவணைப் பட்டியல் புத்தகங்கள் தொகுதி 1, 2, 3.

3. சரஸ்வதி மகால் தெலுங்கு மொழி அட்டவணைப் பட்டியல் புத்தகங்கள் தொகுதி 1, 2.

4. சரஸ்வதி மகால் மராத்தி மொழி அட்டவணைப்பட்டியல் புத்தகங்கள் தொகுதி 1, 2, 3, 4.

5. South Indian Inscriptions Vol I to XII.

6. Epicraphy of Indica— Vol XXIV, III, XI.

7. History of Kanarees Literature by P. Rice

8. Sources of South Indian History by K. A. N. Sastrigal

9. Public Works Department Inscription 1913, 1892.

10. Rigvedam VIII Trivandrum Publication.

11. Annual Report of S. I. E. 1930—3—1892.

12. Inscriptions (SII) 1891, 1892, Vol II 1909 to 1927.

13. *Ibid* 190—200, Vol VIII 1904 Vol II.

14. M. E. R. 1923.. Part II

15. EP. Carnatica Vol IX

16. History of Tirunelveli–by Caldwell.

17. Tailor Historical Report Vol II

18. Kumbakonam Inscription 1927.

19. Tanjore Maratha principality in South India
-by William Hicky Vol I, II.

20. List of Antiqurry Remaines–by R. Swell.

21. Madura Manual–by Nelson.

22. Tanjore Manual–by T. Venguswamy Row.

23. Tiruchy Manual.

24. Tanjore Gazetteer I, II

25. Nayaks of Madura–by R. Sathyanatha Iyer.

26. Madras Presidency Administration Manual I, II

27. Historical Inscription–by Swell Vol V. & S. K. Iyengar

28. A. C. Burnel Vol I to III.

29. Early Dynasty of Andra Pradesh
-by B. V. Krishna Row.

30. Sources of Vijayanagara History.

31. History of Madura–by K. Rajayyan.

32. தஞ்சாவூர் ஆந்திர நாயக்கர் சரித்திரம் (தெலுங்கு)
K. சீதாராமையா.

33. வடமொழி இலக்கிய வரலாறு M. கிருஷ்ணமாச்சாரி.

34. ஷஹாராஜ விலாஸம் (வடமொழி) டாக்டர் V. ராகவன்.

35. மோடிச் செய்திகள்— தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம் புத்தகம் 1 to 32.

36. சோழர் கோயில் திருப்பணி— திரு J. M. S. பிள்ளை.

37. ‘ தஞ்சை மாவட்டம் ’ — சோமலெ.

38. History of Tanjore Maratha Rajas -by K. R. Subramanyan.

39. Nayaks of Tanjore-by Vriddagireesan.

40. History of South India-by K. A. N. Sastrigal.

41. Rising the Marathas-by M. G. Ranaday.

42. History of Cholas-by K. A. N. Sastrigal.

43. Oriental Research Journal, Madras Vol. XI.

44. சோழர் கலைப்பணி - by S. R. பாலசுப்ரமணியம்.

45. கலிங்கத்துப்பரணி-by A. கோபாலையர்.

46. சோழர் வரலாறு— T. V. சதாசிவபண்டாரத்தார்.

47. செந்தமிழ்த் தொகுதி 41.

48. தென்னிந்திய ஆர்க்கியலாஜிகல் சர்வே புத்தகங்கள் 1917—18, 22, 24, 30, 34.

49. தென்னிந்திய கோயில் சாசனங்கள்.

50 Bishop Heber-by Rabinson

51. Serfojee Maharaja-Catalogue 1830 = No. 603.

# தமிழக அரசுக்கு வேண்டுகோள்!

கி. பி. 10–ம் நூற்றாண்டிலிருந்து தஞ்சை மாநகரில்

சோழர் நிறுவிய — **கல்லூரி**

சோழர் நிறுவிய — **மருத்துவமனை**

சோழர் நிறுவிய — **நூலகம்**

சோழர் நிறுவிய — **பேரங்காடிகள்**

சோழர் நிறுவிய — **அரண்மனை**

சோழர் நிறுவிய — **பெருங்கோயில்**

இவற்றின் பழமைச் சிறப்பை உணர்ந்து மக்கள் நினைவு கூறும் வகையில் தமிழக அரசு உரிய பணிகளைப் புரிய வேண்டும்.

# தஞ்சை மன்னரும் சரஸ்வதிமகால் நூலகமும்

வ. வேணுகோபாலன், தஞ்சை

## வரலாறு

தமிழகத்தில் சோழநாட்டின் தலைநகரான தஞ்சையில் உள்ள சரஸ்வதி மகால் நூலகம், உலகப்புகழ் பெற்றது என்பது நாடறிந்த உண்மையாகும்; பழமையானவையும் அரியவையுமான படைப்பு நூல்களை ஏட்டுச்சுவடிகளில், இந்த நூலகத்தில் பல ஆயிரக்கணக்கில் பார்க்க முடிகின்றது. பொதுவாகப் படிப்பதற்கென்றே உள்ளவையும், அச்சிட்ட புதிய பழைய நூல்களைக் கொண்டதுமான நிறுவனத்தை நூலகம் என்று அழைக்கின்ற மரபு உள்ளது; சரஸ்வதிமகால் நூலகத்திலும் அச்சிட்ட தொன்னூல்கள் உள்ளன. எனினும், மற்றைய நூலகம் போன்றதன்று இந் நூலகம். 'சரஸ்வதிமகால் சுவடிகள் நூலகம்' என்றே இந்நூலகம் அழைக்கப்பெறவேண்டும்.

ஆயிரம் ஆண்டுக்கால வரலாற்றைக் கொண்டுள்ள சரஸ்வதி நூலகத்தின் பெருமை தனிச்சிறப்பு வாய்ந்தது. பாரத நாட்டின் பெருமையையும் நாகரிகத்தையும் அறிவாற்றலையும், பல்கலைச் சிறப்பையும் ஆயிரம் ஆண்டுக் காலத்துத் தொன்மையையும் அறிவதற்கு ஏற்ற கருவூலம் – பொக்கிஷம் சரஸ்வதி நூலகமாகும்.

தமிழ், வடமொழி, தெலுங்கு, மராட்டி ஆகிய மொழிகளில் சுவடிகள் நிறைந்துள்ளன; இந்த நூலகத்தை உலக நூலகங்களில் இரண்டாவதாக மதிப்பிடுகின்றனர்கள். தஞ்சையில் ஆட்சி புரிந்த மன்னர் காலத்தில் அம்மன்னர்களால் ஆதரிக்கப் பெற்றும் அவையில் வீற்றிருந்தும், உள்ள பல புலவர்களும், அறிஞர்களும் இயற்றிய அரிய படைப்புகள் இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. சோழ நாட்டின் தலைநகரான தஞ்சையில் இந் நூலகம் இடம் பெற்றிருப்பது, வரலாற்றுச் சிறப்புடையதாகும்.

சங்ககாலத் தமிழகத்தில் கி. பி. மூன்றும் நூற்றுண்டு வரையில் உறையூரே சோழர் தலைநகராக இருந்தது. புகார் நகரும் அந்நாளில் கடற்கரை நகராக இருந்தது. கி. பி. மூன்றும் நூற்றுண்டு முதல் கி. பி. 550 வரையில் களப்பிரர் என்ற (வடுகக் கருநாடர்) தெலுங்கு மன்னர்கள் (களபரு) தமிழகம் முழுவதும் ஆண்டார்கள். கி. பி. ஆறும் நூற்றுண்டு முதல் கி. பி. 850 வரையில் முத்தரையர் என்ற இனத்தவர்கள், தஞ்சை வல்லம் இரண்டையும் தலைநகர்களாகக் கொண்டு சோழநாட்டை ஆண்டனர்.

கி. பி. ஆறும் நூற்றுண்டிலிருந்தே தஞ்சை நகரம் வரலாற்றுப் புகழ்பெற்றது. கி. பி. 850 முதல் கி. பி. 1535 வரையில் பிற்காலச் சோழர்கள்

தஞ்சையைத் தலைநகராகக்கொண்டு தொடர்ந்து ஆட்சி புரிந்தார்கள். கி. பி. 1535 முதல் கி. பி. 1674 வரையில், விஜய நகர நாயக்கர்கள் தஞ்சையில், ஆட்சி புரிந்தனர். கி. பி. 1675 முதல் 1800 வரையில் மராட்டிய மன்னர்கள் தஞ்சையில் ஆட்சி புரிந்தனர். 1799ல் இரண்டாம் சரபோஜி மன்னர் பட்டத்துக்கு, வந்தவுடன், கி. பி. 1800ல் கிழக்கிந்தியக் கம்பெனியார், மன்னரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றினுர்கள். சரபோஜி மன்னர் உதவித்தொகை பெற்றுக்கொண்டு வாழ்ந்தார்.

கிழக்கிந்தியக் கம்பெனி நிர்வாகம் ஏற்றுக் கொண்டதுவரையில் — தஞ்சைக்குச் சரித்திரகாலச் சிறப்பு, ஆயிரம் ஆண்டுக் காலத்துக்கும் மேற்பட்டதாக இருந்து வந்துள்ளது என்பதும், மன்னர்களின் அரண்மனை நூலகமான சரஸ்வதிமகால் நூலகத்துக்கும் இந்தப் பெருமை உள்ளதென்பதும் வரலாறு கூறும் செய்திகளாகும்.

முத்தரையர், சோழர், நாயக்கர், மராட்டியர் ஆகியோர் ஆட்சியில், தஞ்சை தொடர்ந்து சோழ நாட்டின் தலைநகராக இருந்த காலத்தில், இலக்கியம், இலக்கணம், இசை, நாடகம், நாட்டியம் ஆகிய துறைகளும், வேதம், அங்கம், சமய நூல்கள், வைத்தியம், ஜோதிஷம் இதிஹாஸம், புராணம் முதலிய அறிவுத்துறை நூல்கள் பலவும் படைக்கப் பெற்றன.

தமிழ், வடமொழி, தெலுங்கு, மராட்டி ஆகிய நான்கு மொழிகளும், தஞ்சையில் வளம் பெற்றன; மன்னர் ஆட்சி தொடர்ந்து நடைபெற்ற தஞ்சையில், சோழ மன்னர்களால் தமிழும் வடமொழியும் வளம்பெற்றன; தெலுங்கு மொழியும் வளம்பெற்றது என்று சான்று கொண்டு கூறலாம். நாயக்க மன்னர் காலத்தில், தமிழ் வடமொழி, தெலுங்கு முரணில்லாமல் வளம்பெற்றன. மராட்டிய மன்னர் காலத்தில், மிகப் பெருமையுடன் மராட்டியும் சேர்ந்து நான்கு மொழிகளும் வளர்ச்சியுற்றன.

மொழி, இனம் இருவகையிலும், சோழநாட்டில் உருவாகி வளர்ந்த ஒருமைப்பாடான கலாசாரம் தனித் தன்மை கொண்டது. இதற்குச் சான்று பகர்கின்றது சரஸ்வதி நூலகம்; அனைத்திந்திய ஒருமைப்பாட்டின் முன்னுதாரணமாக, மன்னராட்சியில் மலர்ந்த கலாசாரமே, இந்நாளில் வேண்டப்படுகின்றது, எனவேதான், தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம், உலகில் வேறு எந்த நூலகத்திற்கும் இல்லாத தனிப்பெருமை கொண்டுள்ளது.

பாரத நாட்டின் கலாசாரத்தை வளர்த்த இந்திய பாரம்பர்யமான மன்னர் ஆட்சிக்குப்பின், ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்துக்கு உட்பட்டபின், இந்த நூலகம், ஓரளவு களங்கமுற்றதென்றே கருதமுடிகிறது.

# 5

## சரஸ்வதி நூலகம் பெயர் விளக்கம்

இன்று சரஸ்வதிமகால் நூலகம் என்று புகழ் பெற்றுள்ள நூலகத்தின், பெயர்ச்சிறப்பை, பழமை யானது என்ற உண்மையை நாம் அறியமுடிகிறது.

'சோழர் கோயில் திருப்பணிகள்,' என்ற வரலாற்று நூல் எழுதிய அறிஞர் J. S. சோம சுந்தரம் பிள்ளையவர்கள் அந்நூலில் பக் 127ல் "கி. பி. 1122ல் **சரஸ்வதி பண்டாரகம்** விளங் கியது" எனக்குறிப்பிடுகின்ருர். Ins. 61. 277 of 1913.

பண்டாரகம் என்பதற்குப் பொக்கிஷம், கரு வூலம் என்று பொருள். சுவடிகளின் பொக்கிஷம் என்ற பொருளைக்கொண்டதே சரஸ்வதி பண்டாரகம்!

வடமொழி-தெலுங்கு நூல்கள் இந்நூலகத்தில் உள்ளவற்றில், மற்றொரு பெயரும் காணப்படுகிறது. '**ஸத் பாரதி ஸத்மம்**' என்று இந்நூலகத்திற்குப் பெயர் வழங்கியுள்ளது.

சோழர் காலத்தில், தமிழ் நாட்டுக் கோயில்களை அநுசரித்து, ஆங்காங்கே '**சரஸ்வதி பண்டாரகம்**' என்ற நூலகங்கள் விளங்கியமை, கல்வெட்டுச் சான்றுகளால் புலனுகின்றது.

'தஞ்சை மாவட்டம்' என்ற நூல் எழுதிய அறிஞர் சோம-லெ அவர்கள், அந்நூல் பக்கம்

139–ல் “தஞ்சை சரஸ்வதி நூலகம் கி. பி. 10ம் நூற்றுண்டில் விளங்கியது” என்று குறிப்பிடுகின்றார்.

சோழ மன்னர் காலத்திலிருந்து, தஞ்சை அரண்மனை நூலகமாக விளங்கியதைச் சரஸ்வதி பண்டாரகம் என்று பெயரிட்டு அழைத்து வந்துள்ளனர், என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

‘தஞ்சை நாயக்கர் வரலாறு’ என்னும் நூல் எழுதிய அறிஞர் விருத்தகிரீசன் எம். ஏ., பி. எச். டி. அவர்கள், தஞ்சை அரண்மனை நூலகம், ‘சரஸ்வதி பண்டாரகம்’ என்று 14–ம் நூற்றுண்டில் விளங்கியது” என்று தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். [அண்ணுமலை சர்வகலாசாலை வெளியீடு ஜர்னல் வால்யூம் 9 பக்கம் 235]

‘தஞ்சை மராட்டியர் வரலாறு’ எழுதிய திரு. K. R. சுப்ரமண்யம் அவர்கள், அந்த நூலில் பக் 73-ல் “நாயக்கமன்னர் ஆட்சி துவக்கு முன்பே- [கி. பி. 1535க்குமுன்] “தஞ்சை அரண் மனையில் சரஸ்வதி நூலகம் இருந்தது” என்று குறிப்பிட்டுள்ளார். நாயக்கர் ஆட்சிக்குமுன், சோழர் ஆட்சி என்பது குறிப்பிடத்தக்கது.

ஷை K. R. சுப்ரமண்யம் அவர்கள், மேலும் விவரம் கூறுவது: “நாயக்கமன்னர், மராட்டிய

மன்னர் ஆட்சிக் காலங்களிலும், தமிழ், வடமொழி, தெலுங்கு, மராட்டிமொழி நூல்கள் படைக்கப் பெற்றன; பல இடங்களிலிருந்து நூல்கள் சேகரிக்கப் பெற்றன. வைத்தியமுறை நூல்கள், தமிழிலும் வடமொழியிலும் எழுதப்பட்டவை சேகரிக்கப் பெற்றன"

அறிஞர் P. P. S. சாஸ்திரியவர்கள், சரஸ்வதி மகால் நூலக அட்டவணைப் புத்தகத்தொகுப்பு 19-வது வால்யூம் 4-ம் பக்கத்தில், "சரஸ்வதி நூலகத்தொகுப்பு **15-ம் நூற்றுண்டின் இடைக் காலத்திலேயே கி.பி. 1450-க்கு முன்பே** உள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேற்கண்ட சான்றுகளைக் கொண்டு, தஞ்சை சரஸ்வதி நூலகம், சோழர்காலப் பழமை கொண்டது என்பது தெளிவாகின்றது.

கி. பி. 1918ல், நூலகத்தை, அறக்கட்டளை நிறுவனமாக்கிய பின்னர் நூலகப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நிர்வாகக்குழு, இரண்டாம் சரபோஜி மன்னரின் பெயருடன் இணைத்து, நூலகத்தின் பெயரை, "தஞ்சை மகாராஜா சரபோஜி சரஸ்வதி நூலகம்" என்று அழைக்கும் மரபை ஏற்படுத்தியது. 'மகால்' என்று அழைக்கும் வழக்கம் மராட்டிய மன்னர் காலத்தில் ஏற்பட்டதேயாகும்.

# 8

# சோழநாட்டில் களப்பிரர் காலம்

கி. பி. இரண்டாம் நூற்ருண்டுவரையில் கடைச் சங்க காலம். கடைச் சங்க காலத்தில் கரிகாலன் என்ற புகழ்பெற்ற மன்னவன் வடநாட்டிலும் வெற்றிகண்டவன்; இம்மன்னனுக்குப் பின்னர், பெருவிறற்கிள்ளி, நெடுமுடிக்கிள்ளி, நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, செங்கணன், அவன் மகன் நல்லடிக் கோன் ஆட்சி புரிந்தவர்கள். கடைச்சங்ககாலச் சோழர்கள் கி பி. 300க்குப்பின் இருந்தனர் என்று சரித்திர ஆசிரியர்கள் கூறவில்லை. இதற்குப்பின், சேர, சோழ, பாண்டிய நாடுகளைக் 'களப்பிரர்' என்பார் ஆண்டனர் என்பதும் கி. பி. 550 வரை இருநூற்றைம்பது ஆண்டுகள் இவர்கள் ஆட்சி புரிந்தனர் என்பதும் வரலாற்ருல் அறியமுடிகிறது. பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் முதலான அறிஞர்களின் கருத்தும் இதுவே (தென்னிந்திய சரித்திரம்) K. A. N. சாஸ்திரி (பக். 144)

தஞ்சையைச்சார்ந்த 'வல்லம்', சங்ககாலத்தில் சோழர் அரண்மனையாக, அரண் சூழ்ந்த நகராக இருந்தது தெரிகிறது. 'சோழர் மருகன் வல்லம் கிழவோன் நல்லடி' 'வல்லத்துப்புறமிளை' என்ற அகநானூற்றுப்பகுதிகள், வல்லம் நகரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. உறையூரை அடுத்துச் சோழர் நகராக வல்லம் விளங்கியதைச் சான்று தெரிவிக்கின்றது.

களப்பிரர் ஆட்சியில், வல்லம் அவர்கள் வசம் இருந்தது என்பதில் வியப்பில்லை. களப்பிரரைப் பற்றி, பழந்தமிழ்ப் பாடல்கள் உள்ளன. இவர்களை இன்ன இனத்தவர் என்று, வரலாற்றாசிரியர்கள் துணிந்து கூறவில்லை. எனினும் தமிழகம் ஏற்றுக் கொண்ட அரசர்கள் இவர்கள்; வைதிக மதத்தினர்க்குப் பகைவர்களாகவும் இவ்வினத்தவர்கள் செயல்பட்டவர் என்று வேள்விக் குடிச் செப்பேடுகளால் அறியமுடிகின்றது; இவ்வினத்தவர்கள், கி. பி. முந்நூறுக்குப்பின், இருநூற்றைம்பது ஆண்டுகளுக்குக் குறையாமல், தமிழகம் முற்றும் ஆட்சி புரிந்தவர்கள்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டு - அல்லது மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னர், ஆட்சி புரிந்தவனாகக்கருதப்படும், கரிகால் சோழன், இமயம்வரை சென்று வடநாட்டில் வெற்றிவாகை கொண்டவன், ஆந்திர நாட்டிலே அரசு நிறுவியவன்; கொங்கணப் பிராந்தியத்து வேளிருடனும், ஆந்திருடனும் உறவு கொண்டவன்; கரிகாலன் காலத்தில், வேளிர்கள் சோழநாட்டில் புகழ் பெற்று விளங்கினர்.

ஆந்திர நாட்டில், கரிகாலன் மரபினர் என்று கூறிக்கொள்ளும் தெலுங்கச்சோழர்கள், தொடர்ந்து ஆட்சி புரிந்தனர் என்பதை, ஆந்திர நாட்டில், நூற்றுக்கணக்கிலான கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன; கருநாடகப் பிராந்தியத்திலும் சோழ

மரபினர் இருந்தமை, சாஸனங்களால் தெரிய வருகிறது.

ஆந்திர நாட்டில், காவிரிப் புகழ்கொண்ட கரிகாலன் மரபினர் என்று புகழ்ந்து கூறிக் கொள்ளும், வெலநாண்டுச் சோழர், பொத்தப்பிச் சோழர், ரேநாண்டுச் சோழர் என்போர் சோழ மரபு விளக்கும் அரச பரம்பரையினர் என்பதைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

களப்பிரரை, 'வடுகக் கருநாடக மன்னர்' என்று வரலாற்றுசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். களப்பிரர், களபரு, களவர், கள்வர் என்று கூறப் படும் இவ்வினத்தவர் யாவர்? சங்க காலத்துக்குப் பின்னர், கரிகால் சோழனின் ஆந்திர சம்பந்தத் துக்குப்பின், கி. பி. மூன்ரும் நூற்ருண்டுக்குப்பின், இருநூற்றைம்பது ஆண்டுகளுக்குக் குறையாமல், தமிழக ஆட்சி பெற்ற இவர்கள், கரிகாலன் மரபின ராகக் கூறப்பெறும் தெலுங்கச் சோழர் என்று கருத முடிகிறது. இல்லையேல் தமிழகத்தில், சங்க காலத்தை அடுத்து இரண்டரை நூற்ருண்டுகள் நிலைத்து ஆட்சி புரிந்திருக்க முடியாது! களப் பிரரின் கல்வெட்டுக்கள் ஆந்திரப் பகுதியிலும் உள்ளன.

சங்ககாலத்தில், வைதிக மதம் செழிப்புற்று விளங்கியது. களப்பிரர் ஆட்சியில் ஜைன மதமும் பௌத்த மதமும், தமிழகத்தில் வளர்ச்சி பெற்றன.

சங்க காலத்தில், சோழ நாட்டின் துறைமுகப் பட்டினமான, புகார் நகரமே, களப்பிரர் காலத்திலும், நகராக விளங்கியதாகச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

தஞ்சையை அடுத்த வல்லம் சங்ககாலப் புகழ் கொண்ட நகராகும். வல்லம் சோழநாட்டு நகர்; களப்பிரர் காலத்தில் தஞ்சையும், வல்லமும் புகழ் பெற்றிருத்தல் வேண்டும் என்பது கருதமுடிகிறது; வைதிக மதம், தாழ்வுற்று, பௌத்த-ஜைன மதங்கள் சிறப்புற்ற காலமான, களப்பிரர், காலத்தை, வரலாற்ருசிரியர்கள், சமய அடிப்படையில் 'இருண்ட காலம்' என்று கூறுகின்றனர்.

களப்பிரர் காலத்தில், தமிழ் வளர்ச்சி பெற வில்லையா? ஆராய்ந்து முடிவு காணவேண்டிய தொன்ருகும். களப்பிரர் காலத்துத் தமிழ் வளர்ச்சி பற்றி விரிவாகக் கூறச் சான்றுகள், இப்போது கிடைக்கவில்லை; எனினும், களப்பிரரைப்பற்றி, பழந்தமிழ்ப் பாடல்கள் பல உள்ளன; அச்சுதக் களப்பாளன், அச்சுத விக்கிராந்தன் என்ற களப்பிர மன்னனைப்பற்றி, சிறிதே வரலாறு உள்ளது.

களப்பிரர் முதலில் ஜைன, பௌத்தமத ஆதரவு பெற்றவர்களாகவும், பின்னர் வைதிக மதத்தைப் பின்பற்றியவர்கள் என்றும் கூறமுடிகிறது; பெரிய புராணத்தில் கூறப்பெறும் கூற்றுவ நாயனர் களப்பிரர் இனத்தவர்; களப்பிரர் ஆட்சி வீழ்ச்சி

பெற்றபின், தமிழகத்தில் சோழநாட்டில் வாழ்ந்தவர்கள் களப்பிரர் என்றே துணிந்து கூறலாம்.

திருவெண்காட்டிலிருந்த, மெய்கண்ட தேவர், சைவ சித்தாந்த சாஸ்திரத்துக்கு வித்திட்டவர், களப்பிர வம்சத்தவர் என்றே சான்று பகர்கின்றது. [History of Kanarees Litrature Page 181, by p. Rice B A ].

களபரு, களவர் என்று கூறப்பெற்ற, பழந் தமிழ்க்குடியினரான கள்வர் இனமே, களப்பிரர் என்றும், ஆந்திர, கருநாடக பிராந்தியங்களிலும் ஆதிக்கம் பெற்றவர் என்றும், மொழி காரணமாக, இவர்களை வேற்றினத்தவர் என்று கூறுவது பொருத்தமில்லாத, கூற்று என்றும், கரிகாலச் சோழன் காலத்துக்கு அடுத்தபடியாக, அவன் மரபினராக ஆந்திர கருநாடகப் பிராந்தியங் களிலிருந்து, பின்னர் தமிழகத்தில் ஆட்சி நிறுவியவர் என்றும், இக்களப்பிரரைத் தொடர்ந்து, கள்வர் இனமான முத்தரையர், சோழநாட்டில் அரசு புரிந்தவர் என்றும், இம்முத்தரையர் கல்வெட்டுக்களும் ஆந்திர கருநாடகப் பிராந்தியங் களில் உள்ளன என்றும், சான்றுகள் கொண்டு கருதமுடிகிறது.

முத்தரையர் காலத்தில் தஞ்சையும் வல்லமும், சிறப்புற்ற சோழநாட்டுத் தலைநகராக விளங்கியதை அறிய முடிகின்றது.

களப்பிரரின் ஆட்சியை அகற்றியவர்கள், கி. பி. 550ல் பாண்டியன் கடுங்கோன், மற்றும், சாளுக்கியர், பல்லவர் ஆகியோர் என்றும் வரலாறு கூறுகிறது; சோழர் இனம், களப்பிரரை வென்றதாகச் சான்றில்லை. எனவே, சோழ மரபினராக களப்பிரரைக் கருதுவது முரணுகாதென்றே கூறமுடிகிறது.

சோழநாட்டில், களப்பிரர் வீழ்ச்சிக்குப்பின், தலையெடுத்த அரசு, முத்தரையர் அரசு என்பதில் ஐயமில்லை. முத்தரையர் புகழ் பெற்றவர்கள். தமிழ் வளர்த்தவர்கள்.

## சோழநாட்டில் முத்தரையர் காலம்

கி. பி. 846 வரையில், ஏறக்குறைய முன்னூறு ஆண்டுகள் முத்தரையர் சோழநாட்டில் ஆட்சி புரிந்தவர்கள். முத்தரையரில், இறுதி மன்னவனாகக் கூறப்பெறும் இளங்கோ முத்தரையனிடமிருந்து, தஞ்சை ஆட்சியைக் கைப்பற்றியவன் விஜயாலயச் சோழனாவான். "புகழ்பெற்ற அரண்கொண்ட தஞ்சை, வல்லம் நகர்களை இளங்கோ முத்தரையனிடமிருந்து, விஜயாலயச் சோழன் கைப்பற்ற பெரும்போர் புரிந்தான்" என்ற செய்தியை, சோழன் முதலாம் இராசேந்திரனுடைய **திருவாலங்காட்டுச் செப்பேடும்** வீரராஜேந்திர சோழனுடைய **கன்யாகுமரிக் கல்வெட்டும்** கூறுகின்றன.

இளங்கோ முத்தரையனுடைய கோவிலடி, செந்தலைக் கல்வெட்டுக்களும் கூறுகின்றன.

சோழர் கலைப்பணி என்ற நூலை எழுதிய பேரறிஞர் திரு S. R. பாலசுப்ரமணியம், எம். ஏ., பி. எச்டி. அவர்கள், அந்நூலில் கூறியுள்ள விளக்கம் அறியற்பாலது; "இளங்கோ முத்தரையனிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றிய விஜயாலயச் சோழன் தஞ்சைப் பழைய கோட்டையின் பழைய வாயிலான கீழை வாயிலில், 'நிசும்ப சூதனி' என்னும் உக்கிர மாகாளித் தெய்வத்திற்குச் சிலை எடுத்துக் கோயில் நிறுவினான்".

[சோழர் கலைப்பணி S. R. B. பக். 44]

எனவே, விஜயாலயச் சோழன் கி. பி. 846ல், முத்தரையனிடமிருந்து, தஞ்சையைக் கைப்பற்றிய போதே, இந்நகர், பழைய கோட்டை, அரண்மனை கொண்டதாக விளங்கியதை அறிய முடிகிறது.

கோட்டை அரண்களையுடைய அரண்மனை கொண்டதும், மாடமாளிகைகளை உடையதுமான தஞ்சையையும், வல்லத்தையும் விஜயாலயன், போர் புரிந்தே கைப்பற்றினான் என்பதைக் கல்வெட்டுச்சான்றுகள் செப்புகின்றன; கைப்பற்றிய பின்னர், விஜயாலயச் சோழன், மேலும் பலவாறு நகரைப் புதுப்பித்தான்.

கோயிலடி, திருக்கோடிக்கா, நியமம், செந்தலைக் கல்வெட்டுக்களும், வல்லம், தஞ்சை

நகர்களை இளங்கோ முத்தரையன், வளமாக வைத்திருந்தான் என்பதைக் கூறுகின்றன. இளங்கோ முத்தரையனுக்கு முன்னர், ஏறக்குறைய முன்னூறு ஆண்டுகள் அவன் முன்னோர் ஆட்சி புரிந்துள்ளனர். அவர்களைப்பற்றி விரிவான செய்திகள், கல்வெட்டுக்களில் உள்ளன. எனவே, முத்தரையர் ஆட்சியில் புகழுடன் விளங்கிய தஞ்சை, வல்லம் இரண்டும், கோட்டை, அகழி, அரண், அரண்மனை, மாடமாளிகைகளுடன் விளங்கியதை எவ்வாறு மறுக்க முடியும் ?

சங்க காலத்தில், வல்லம், சோழர் நகராக விளங்கியதை முன்பே குறிப்பிட்டேன். செங்கணான் மகன் நல்லடி என்பவன் ஆட்சி புரிந்தமர்ந்திருந்த நகர் வல்லம். "சோழர் மருகன் வல்லம் கிழவோன் நல்லடி" என்பது அகநானூறு. வல்லத்தைச் சூழ்ந்த தஞ்சை புகழ் பெற்றது போன்றே, குடந்தையை அடுத்த பழையாறையும் புகழ் பெற்றது.

வரலாற்றாசிரியர்கள், உறையூரையும் பழையாறையையும், புகாரையும் கருத்தில் கொண்டு, ஆய்வு செய்தவர்கள், வல்லம்-தஞ்சையை அவற்றின் பழமையை ஆய்ந்துகூற முன்வரவில்லை.

# முத்தரையரும் தமிழ் வளர்ச்சியும்

"தஞ்சை நற்புகழாளன்" என்று பாராட்டப் பெற்ற முத்தரையன் தமிழ் வளர்த்தவன்; தஞ்சையில் ஆட்சி புரிந்த முத்தரையர், தமிழ் வளர்த்த நற்புகழாளர்கள்; சோழ நாட்டின் பெரும் பகுதியை முத்தரையர் ஆட்சி புரிந்தபோது, தஞ்சையே அவர்களுக்குத் தலைநகர் என்பது தெளிவு.

முத்தரையர் காலத்திலும், களப்பிரர் காலம் போன்றே ஜைன மதம் வளர்ச்சி பெற்றது தெளிவு.

முத்தரையர் காலத்தில்தான், சங்க இலக்கியங் களை அடுத்த இலக்கியங்கள் படைக்கப்பெற்றன; பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்ருன, நாலடியார், முத்தரையர் காலத்துப் படைக்கப் பெற்றதாகும்; நாலடியார் பாடல்களில், முத்தரையர் தமிழ் வளர்த்த சிறப்புப்பற்றி, தமிழ்ப் புலவர்களை அவர்கள் ஆதரித்த பண்புபற்றிக் கூறப்பெறு கின்றன. [நாலடியார் 200]. புகழ்பெற்ற முத்தரையர்கள், தமிழுக்குத் தொண்டு புரிந்த வள்ளல்களாக விளங்கினர். தமிழ்ப் புலவர்களை ஆதரித்தமையால், பாக்களில் இடம் பெற்றனர். சோழநாட்டில் முத்தரையர் இனம் இன்றும் மிகுதி யாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

முத்தரையரைப்பற்றி ஆந்திர நாட்டிலும் கருநாடகத்திலும் கல்வெட்டுக்கள் உள்ளன

என்பது குறிப்பிடத்தக்கது. போர் வலிமிக்கவர்கள், பெருவீரம் படைத்தவர்கள், கள்வர் குலத்தவர், தமிழ் வளர்த்தவர், தஞ்சை நற்புகழாளர் முத்தரையர்கள்.

முத்தரையர் கோவை என்ற நூல் ஒன்று இருந்ததாக, காலம் சென்ற மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் கூறியுள்ளார், அந்நூல் இப்போது கிடைக்கவில்லை. முத்தரையர் காலத்துக் கல்வெட்டுக்கள், தூய தமிழ்ப் பாக்களால் உருவானமை குறிப்பிடத்தக்கது. இம்மன்னர் காலத்துப் புலவர்கள் பலரில், குறிப்பிடத் தக்கவர்கள், கோட்டாற்று இளம் பெருமானார், பாச்சில் வேள் நம்பன், குவாவன் காஞ்சன், ஆசாரியர் அநிருத்தர் ஆகியோர்.

முத்தரையர் ஆட்சிக்காலத்துக் கல்வெட்டுக்கள், தூய தமிழப்பாக்களில் பொறிக்கப் பெற்றவை. இக்கல்வெட்டுப் பாடல்களைப் பார்த்த பின்பே, முதலாம் இராசராசன், மெய்க்கீர்த்தியை, தூய தமிழ்ப்பாவடிவில் அமைக்கச்செய்தான் என்று தெரிகிறது.

முத்தரையர் காலத்து, படைக்கப்பெற்ற பெருமைகொண்ட நாலடியார், உரைவளத்துடன் கூடிய ஓலைச்சுவடி சரஸ்வதி நூலகத்தில் இடம் பெற்றுள்ளது.

## தஞ்சைச்சோழர் காலமும் சரஸ்வதி நூலகமும்

கி. பி. 846ல் **விஜயாலயச் சோழன்** தஞ்சையில் முடிசூடினன். பரகேசரி என்ற பட்டம் கொண்டவன். கல்வெட்டுச் சான்றுகளின்படி, தஞ்சையை, விஜயாலயன் புதுப்பித்தான் என்று அறியமுடிகிறது; இவன் காலத்திற்கு முன்னதாக, உலகப்பெருமானர் சோழன் என்ற சோழ மன்னன், மணிமுடிச் சோழன், குமாராங்குசன், புண்ய குமாரன் ஆகிய மன்னர்கள் சோழ மரபினர் தமிழகத்திலும் ஆந்திர நாட்டிலும் இருந்தவராவர்.

விஜயாலயச் சோழன், சிறந்த சிவபக்தன்; தஞ்சையில் கொற்றவைக்குக் கோயில் எடுப்பித்தவன். முத்தரையரைப் பின்பற்றி இம்மன்னன் கோயில்கள் பல எடுப்பித்தவன். இம்மன்னன் காலத்தில்தான், சோழமரபு, மீண்டும் தலையெடுத்தது. இம் மன்னன் கி. பி. 888 வரை, தஞ்சையில் ஆட்சி புரிந்தவன்; தஞ்சைக்கு விஜயபுரி என்ற பெயரும் இம்மன்னனுல் அழைக்கப் பெற்றதாக, 'தஞ்சபுரி' இதிகாசச் செய்தி கொண்டு அறியமுடிகிறது.

கி. பி. 871 முதல் 907 வரை, விஜயாலயன் மகன் ஆதித்த சோழன் ஆட்சி புரிந்தான். இவன் ஆட்சிக் காலத்தில்தான் குடகிலிருந்து புகார் சங்கமம் வரையில் காவிரியின் இருகரைப் பகுதி

களிலும், சிவபெருமானுக்குக் கோயில்களைக் கட்டி, சைவ நெறி வளர்த்தான்.

இவ்வாதித்த சோழன், தஞ்சையில் ஆட்சி புரிந்த காலம் வேத நெறி தழைத்தோங்கிய காலமாகும். இம்மன்னன், **பிரபாகரருடைய மீமாம்சா** நூல்கள் ஆய்வுக்காக அறக்கட்டளை வைத்தவன். இவ்வறக்கட்டளையைப்பற்றி விளக்கம், **சோழர் கலைப்பணி** நூலில் பக். 133ல் திரு S. R. பாலசுப்ரமணியம் அவர்களால் கூறப்பெற்றுள்ளது.

சோழர் காலத்தில் குறிப்பாக **ஆதித்த சோழன்** காலத்தில் மீமாம்சா நூல்களின் தொகுப்புக்கள், சரஸ்வதி நூலகத்தில் மிகுதியாக இடம்பெற்றன என்று தெரிகிறது.

ஆதித்த சோழனுக்குப் பின்னர், இவன் மகன் **பராந்தக சோழன்** கி. பி. 907–953ல் தஞ்சையில் ஆட்சி புரிந்தவன். இம்மன்னன் தஞ்சையில் ஆட்சி புரிந்தகாலத்தில் புகழ் பெற்றதொன்றான அறக்கட்டளை வைத்துள்ளான். '350 மாணவர்களுக்கு, வியாகரணம், வேதாந்தம், பிரபாகர மீமாம்சை, ரூபாவதாரம், ஆகியவை பயில்வதற்கும் ஆய்வு செய்வதற்கும் அறக்கட்டளை வைத்தவன். மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உணவும், தங்குவதற்கு இருக்கை வசதியும் தந்துள்ளான்' இவற்றிற்கான விளக்கத்தை, குத்தாலம், உதயேந்திரம் செப்பேடுகளும், தென்னாற்காடு எண்ணாயிரம்

கல்வெட்டும் கூறுகின்றன. **தென்னிந்திய ஆர்க்கியலாஜிகல் சர்வே புத்தகம் 1917–18. பகுதி 1. பக். 34ல்** விளக்கம் காணமுடிகிறது.

இதனைத் தொடர்ந்து, மற்றொரு சிறப்பான சான்று, சரித்திரப் பேராசிரியர் K. A. நீலகண்ட சாஸ்திரியார் எழுதிய, '**தென்னிந்திய வரலாற்றுச் சான்றுகள்**' ஆங்கில நூலில் **பக் 68ல்** காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

'தஞ்சைச் சோழன் முதற்பராந்தகன் காலத்தில் வேங்கட மாதவன் என்ற அந்தண அறிஞர் ருக்வேதத்துக்கு வியாக்யானம் எழுதினார்' என்பது, 'இக்காலத்தில் அரிய வேத நூல்கள் தொகுக்கப்பெற்றன' என்பதும் குறிப்பிடத்தக்கது.

**ஷை நூலில் பக் 70ல்**, 'தஞ்சைப் பராந்தக சோழ மன்னர் ஆட்சியில், தஞ்சை நகர் கல்வி வளர்ச்சிக்குரிய கேந்திரமான தகுதியைப் பெற்று இருந்தது' என்ற விவரமும் குறிப்பிடுகின்றார்.

மேற்கண்ட சான்றுகளால், முதற்பராந்தக சோழன் வேத நெறி பரப்பியவன் என்பதும், வேத நூல்களை ஆய்வு செய்யவும், அறிஞர்களை ஆதரித்தும், நூல்களைச் சேகரித்தும் பெரும்பணி புரிந்திருக்கிறான் என்பது தெளிவாகின்றது.

திருவனந்தபுரம் பிரசுரம் **ருக்வேதம் VIII முன்னுரையில்**, காணப்படும் குறிப்பு: 'ருக்வேத

வியாக்யானம் எழுதிய வேங்கடமாதவரின் தந்தை வேங்கடர் என்றும் அவர் வாழ்ந்த இடம் தஞ்சை மாவட்டம் காவிரிக் கரையில் உள்ளதான **கோமல்** (கோமடி), கௌசிக கோத்ரத்தை உடையவர், சேதுலூர் குடும்பத்தைச் சேர்ந்தவர்'.

இக்குறிப்புக்களால், முதற்பராந்தக சோழன் காலத்தில், வேங்கடமாதவர் விளங்கியதும், ருக் வேத வியாக்யானம் எழுதிய விவரமும் தெரிகிறது.

சரஸ்வதி நூலகத்தில், ஆயிரக்கணக்கில் வேதநூல் சுவடிகள் உள்ளன. பராந்தகசோழன் காலத்தில், தஞ்சையில் சரஸ்வதி நூலகத்தில் வேதநூல் சுவடிகள் சேகரிக்கப்பெற்றன என்று உறுதியாகக் கூறமுடிகிறது.

முதற்பராந்தக சோழன் வேதநெறி, சைவ நெறி வளர்த்தவன். இம்மன்னன் காலத்தில் தென்னகத்தில் வேதநெறி – சைவநெறி தழைத்தோங்கியிருந்தமை தெளிவாகின்றது. பாசுபதம், காளாமுகம் போன்ற சமயங்களும் வளர்ச்சி பெற்றன. இம்மன்னன் காலத்தில் 'சதுரானன பண்டிதர்' என்பார் விளங்கியதாகவும் தெரிகிறது. இம்மன்னரின் மகனுக்கு—இராசாதித்தனுக்கு, ஆசாரியராக விளங்கியவர் என்றும் சாஸனக் குறிப்புக்களால் தெரிகிறது; சான்று.

**திருவொற்றியூர் கோயில் சாசனம்**
(Public Department 96 of 2/8/1913)

இம்மன்னன் காலத்தில் திருவொற்றியூர்க் கோயிலில், சதுரானன பண்டிதரின் மடம் ஒன்றும், இருந்தது. திருஞானசம்பந்தர் மடம், (No 238 of App B) நந்திகேச மடம் (239 of App B) என்ற மடங்கள் இருந்தன.

கோயிலில் பாணினீய வியாகரணம் படிக்கப் பட்டதென்றும் கோயில் சிவபெருமானுக்கு வியாகரண தானப்பெருமான் என்று பெயர் வழங்கிய தென்றும், வியாகரணம் படித்த மண்டபத்திற்கு வியாகரணதான வியாக்யான மண்டபம் என்று பெயர் வழங்கியது என்றும், சாஸனக் குறிப்புக்கள் பல செய்திகளைக் கூறுகின்றன. (Do. 96 of 2/8/1913)

'பலவதி' என்ற மீமாம்சா நூல் பராந்தக சோழன் காலத்தில் எழுதப்பெற்றதென்று தெரிகிறது. இந்நூல் சுவடி சரஸ்வதி நூலகத்தில் இடம் பெற்றுள்ளது. முதற்பராந்தக சோழன் காலத்தில் சரஸ்வதி நூலகம் மிகு சிறப்பினை அடைந்திருந்தது. எனவேதான், அம்மன்னன் ஆதரவுடன், வேத நூற்சுவடிகள், சரஸ்வதி நூலகத்தில் மிகுதியாகத் தொகுக்கப்பெற்றன எனத் தெரிகிறது.

கி. பி. 1800ல், தஞ்சை அரண்மனையிலிருந்து பல அரிய நூல்கள், திருவனந்தபுரம், மைசூர் ஆகிய இடங்களுக்குக் கொண்டுபோகப்பட்டன என்று, அறிஞர் M. G. ரானடே அவர்கள்,

'மராட்டியர் எழுச்சி வரலாறு' என்ற நூலில் (பக். 241) குறிப்பிடுகின்றார். எனவே, இந்நூலகத்திலிருந்து, அரிய பல சுவடிகள் பிறரால் கைப்பற்றப் பட்டவற்றில் எந்த நூல்கள் இடம்பெற்றன என்று அறியமுடியவில்லை.

முதற்பராந்தக சோழன் காலம், சரஸ்வதி நூலகத்தின் பொற்காலமாகக் கூறமுடிகிறது. எனவே, அறிஞர் K. A. நீலகண்ட சாஸ்திரிகள், முதற்பராந்தக சோழன் காலத்தில் தஞ்சை, கல்விக்குக் கேந்திர பீடமாக இருந்ததென்று சிறப்பித்துக் கூறுகின்றார்.

திருவொற்றியூர்க் கோயில் கல்வெட்டிலிருந்து, முதற்பராந்தகன் காலத்தில், தேவாரப்பாக்களும், திருவெம்பாவை போன்ற நூல்களும் போற்றிப் பாதுகாக்கப்பெற்றன என்றும் அறியலாம்; இம் மன்னன் காலத்தில் தேவாரமும் திருவெம்பாவையும் கோயில்களில் பாடப்பெறுவதற்கு அறக் கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முதற்பராந்தக சோழனுக்குப் பின்னர் இவன் மகன் கண்டராதித்த சோழன் கி. பி. 950–957ல் தஞ்சையில் ஆட்சி புரிந்தவன். இம்மன்னன் சிறந்த சிவபக்தன். தமிழ்ப் புலமை சான்றவன். இம் மன்னன் இயற்றிய 'திருவிசைப்பா', திருமுறைத் தொகுப்பில் சேர்க்கப்பெற்றுள்ளது.

இம்மன்னனை அடுத்து, பராந்தகனின் மற்ருெரு புதல்வனுன அரிஞ்சயன், ஆட்சி புரிந்தான். கி. பி. 956-957ல் இவ்வரிஞ்சயன் புதல்வன் சுந்தர சோழன் கி. பி. 957-970லும், உத்தமசோழன் கி பி. 970-985 வரையிலும் ஆட்சி புரிந்தனர்.

உத்தமசோழன் காலத்தில்தான், மகாகவி கம்பர், இராமாயணம் இயற்றினுர் என்று அறிஞுர்கள் கூறுகிருர்கள். பழமையான இராமாயணச் சுவடிகள் இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

இம்மன்னனை அடுத்து, புகழ்பெற்ற முதலாம் இராசராசசோழன் தஞ்சையில் ஆட்சி புரிந்தவன். இம்மன்னன் எழுப்பிய கோயில் கலைக்கோயில். இராசராசேச்வரம் என்று புகழ் பரப்பி விளங்கு கின்றதை, உலகறியும். இம்மன்னன் தஞ்சையில் ஆட்சி புரிந்தகாலம் கி. பி. 985-1014.

தஞ்சைக்கு உலகப்புகழ் தேடிக்கொடுத்த மன்னன் இராசராசன். இவன் காலம் பொற்காலம். தமிழ், வடமொழி இரண்டும் வளமுற்றகாலம். இவன் காலத்தில் சரஸ்வதி பண்டாரகம் புகழ் பெற்றிருந்தது என்பதில் ஐயமில்லை. சைவநெறியும் வேதநெறியும் வளர்த்த பேரரசன் இவன். இம் மன்னன் காலத்தில் இசை, நாட்டியம், நாடகம் உயர்ந்த நிலையில் வளர்ந்தது.

இம்மன்னன் ஆட்சியில்தான் முதன் முதலாக "மெய்க்கீர்த்தி' செய்யுள் வடிவத்தில் எழுதத் துவக்கப்பட்டது; சோழ மன்னர்களில், முதலாவதாக, செய்யுள் வடிவத்தில் கல்வெட்டில், மெய்க்கீர்த்தி பொறிக்கச் செய்தவன் இராசராசன்; முத்தரையர் காலத்தில் கி. பி. 8ம் நூற்றாண்டிலேயே செய்யுள் வடிவத்தில் கல்வெட்டு பொறிக்கப் பட்டது; இதனைப் பின்பற்றியே இராசராசன், மெய்க்கீர்த்தி எழுதச்செய்தனன் ஆதல் வேண்டும்.

சங்ககாலத்து நூலான, பதிற்றுப்பத்து நூலில் பதிகக் கட்டுரை, கல்வெட்டுப் பாடல்களுக்கு, முன் உதாரணமாகக் கொள்ளலாம். தமிழ் மொழி மீது, முத்தரையருக்கும் சோழருக்கும் இருந்த பற்று இதிலிருந்து புலனாகின்றது,

முதல் இராசராசன் காலத்துப் புலவர், கருவூர்த் தேவர்; இவர் பாடிய பாக்கள், இசைப்பாக்கள்; சைவத் திருமுறையில் சேர்க்கப்பெற்றுள்ளன. இப் புலவருடைய பாடல்களில் தஞ்சைநகர், மாட மாளிகைகளுடன் விளங்கியதையும், அகழ், மதிள் கோட்டைகளுடன் இருந்ததையும் குறிப்பிடுகின்றார்.

இம்மன்னனின் அவையில் இருந்த மற்றொரு புலவர், வடமொழிப் புலவர் சவர்ணன் நாரண பட்டாதித்தன்; இப்புலவர், 'இராஜராஜ விஜயம்' என்ற நாடக நூலை வடமொழியில் எழுதினார். இந்நூல் வரலாற்றுச் சிறப்புடையதாகும். இந்நூல்

இப்போது கிடைக்கவில்லை. [Annual Report SIE 1930-3 Para 12. SII. VOL II No 67.]

இந்நூலையன்றி 'இராஜராஜேஸ்வரம்' என்ற பெயருள்ள நாடகம் தமிழ் மொழியில் எழுதப் பெற்று, தஞ்சையில் மன்னர் அரண்மனையில் நடிக்கப்பெற்றதென்று தெரிகிறது. [Sii. Vol II Part 3.]

இம்மன்னனின் 9ம் யாண்டுச் சாசனத்தில் (கி. பி. 991–1012) காணப்படும் விவரம் வருமாறு; 'திருவாடுதுறையை அடுத்த சாத்தனூரில் (கல்வெட்டில்) ஏழு அங்கங்கள் கொண்ட ஆரியக் கூத்து நாடகம், நடத்த முற்றூட்டு அளித்தான்' என்பது. இக்கூத்துப்பற்றி ஆய்வு செய்ய வேண்டும். [**தென்னிந்திய ஆர்க்யலாஜிகல் சர்வே**, 1922—1924. பக். 120].

இச்செய்தியிலிருந்து, இராசராச சோழன், நாடகக் கலையில் எவ்வளவு ஈடுபாடு கொண்டவன் என்பது புலனாகின்றது.

இம்மன்னனை அடுத்து ஆட்சிபுரிந்தவன் முதலாம் இராசேந்திர சோழன்; இராசராசனின் புதல்வன். கி. பி. 1012–1044 வரையில் ஆட்சி புரிந்தவன்; இம்மன்னன், கங்கைகொண்ட சோழ புரம் என்னும் புதிய நகரை உருவாக்கி, தஞ்சைக்கு அடுத்த இரண்டாம் தலைநகராக அமைத்தான். ஆங்கே, தஞ்சைப் பெரிய கோயிலைப்போல், ஒரு

கோயிலையும், ஓர் அரண்மனையையும் நிருமித்தான். இம்மன்னன் ஆட்சி புரிந்து தங்கிய நகர் தஞ்சையே தான் என்பது, கல்வெட்டுக்கள் கூறும் உண்மைகள்.

இராசேந்திரசோழன், தமிழ், வடமொழி இரண்டிலும் புலமைபெற்றவன். இவன் ஆசிரியர், வடமொழிப்புலவர் சர்வசிவ பண்டிதர். இப் புலவரிடம் ராசேந்திரன் கல்வி பயின்றவன்; இப் பண்டிதருக்கு. இராசேந்திரசோழன், 'ஆண்டு ஒன்றுக்கு 2000 கலம் நெல் வருவாயுள்ள நிலத்தை **ஆசார்யபோகமாக**' அளித்துள்ளான் என்ற செய்தி குறிப்பிடத்தக்கது. [Sii. VOL II No. 26]

இவர்காலத்து, மற்றொரு புலவர், லகுலீச பண்டிதர்; வடமொழிப் பண்டிதர். காளாமுக சமயத்தவர். [Sii. 27 of 1927]

இராசேந்திரசோழன், வடமொழிக்கும், வேத நெறி வளர்ச்சிக்கும் புரிந்த பணிகள் சிறப் புடையவையாகும். இராசேந்திர சோழன் தஞ்சை யில் ஆட்சி புரிந்தகாலம், கல்வி வளர்ச்சி சிறப் புற்றிருந்ததுடன், சரஸ்வதி நூலகம் மிகு சிறப் புடன் பாதுகாக்கப்பெற்றதென்று கருதமுடிகிறது.

இம்மன்னன், அறக்கட்டளை பற்றி செங்கல் பட்டு மாவட்டம், ஆனூர் கிராமம் மகாசபா சிலா சாசனம் தெரிவிக்கும் செய்தி அறிபத்தக்கது:

"மீமாம்சை வேதத்துக்கு 20 பகுதிகளையும், சாஸ்திரம், விருத்தி, பாணிணீய வியாகரணம், அலங்காரம், முதலிய நூல்களை ஆய்வு செய்யவும், அவற்றைத்தொகுக்கவும், பயில்விக்கவும், தேர்ந்த அறிஞர்களுக்கு அறக்கட்டளை வைத்துள்ளான்" **[தென்னிந்திய ஆர்க்யலாஜிகல் ஸர்வே, 1930–1934 பக் 235]**

மேற்குறிப்பிட்ட, பிரிவுகளில், வடமொழிச் சுவடி நூல்கள் பெரும்பாலானவை இராசேந்திர சோழன் ஆட்சியில், சரஸ்வதி நூலகத்தில் தொகுக்கப்பெற்றவை என்று உறுதியாகக் கருத முடிகிறது; இன்றும் அவற்றைக் காண முடிகின்றது.

இராசேந்திர சோழனின், கல்விப்பணி, சோழ மரபினரால் சரஸ்வதி நூலகம், அரண்மனையில் போற்றிப் பாதுகாக்கப் பெற்ற உண்மை நன்கு அறியமுடிகின்றது.

தஞ்சை நகரில் இம்மன்னன் புரிந்த பணிகள் பற்றி மேலும் சிறப்பான செய்திகள் வருமாறு.

"தஞ்சையில், வைத்தியசாலை ஏற்படுத்தியும், வைத்திய நூல்கள் பற்றி ஆய்வுக்கும் அறக்கட்டளை வைத்துள்ளான்".

"கல்வெட்டுக்களைப் புதுப்பிக்க, படிஎடுத்தலையும் பனை ஓலையில் எழுதுவித்து மீண்டும் கல்லில் பொறித்தலையும் பற்றி சாஸனங்களால் அறிய முடிகிறது."

சான்று. [**சோழர் கலைப்பணி** S. R. B. பக் 25-27]

இராசராச சோழனின் சகோதரியான பெரிய குந்தவை, தஞ்சையில் ‘சுந்தரசோழ ஆதுரசாலை என்ற பெயரில் வைத்தியசாலை வைத்து அறக் கட்டளை ஏற்படுத்தியிருப்பதும் இங்கே குறிப்பிடத் தக்கது.

இராசேந்திர சோழனின் படைத் தலைவரில் ஒருவனான இராசேந்திர சோழமழவராயன், புதுச்சேரிக்கு அடுத்த திருபுவனியில், மன்னன் ஆணைப்படி, ஓர் அறக்கட்டளை வைத்துள்ளான்; “வேதக் கல்லூரி நடததுவதற்கு, 12,000 கலம் நெல் வருவாயுள்ள 72-வேலி நிலத்தை அறக் கட்டளையாக வைத்துள்ளான் என்பது”

[Sii. 176 of 19.9]

“தென்னார்க்காடு மாவட்டத்தில் எண்ணாயிரம் என்ற இராசராசச் சதுர்வேதி மங்கலத்தில் வேதாந்தக் கல்லூரி நிறுவியவன்” என்று சான்று பகர்கின்றது. [சோழர் கலைப்பணி S.R.B. பக். 133]

கி. பி. 1063–1070ல் தஞ்சையில் ஆட்சிபுரிந்த மன்னன் **வீரராசேந்திரசோழன்**. இராசேந்திரனின் புதல்வன், இம்மன்னன் காலத்திலும் கல்வி வளர்ச்சிக்கு பல அறக்கட்டளைகள் ஏற்படுத்தப் பட்டன.

## திருக்கூடல் கல்வெட்டு கூறும் செய்தி :

“தஞ்சைச் சோழர்கள் கல்விக்கும், வேத, காவ்யங்களுக்கும், வைத்யத்துக்கும், வேதக்

கல்லூரி நடத்துவதற்கும் அறக்கட்டளைகள் பல வைத்துள்ளனர் ”

[சோழர்கலைப்பணி S R B பக் 25-27]

தஞ்சையில் வீரராசேந்திரன் ஆட்சி புரிந்த காலத்தில், புத்தமித்திரன் என்ற சிற்றரசன், தமிழ்ப்புலமை பெற்றவன். சோழன் வேண்டு கோட்கு இணங்கி, ‘வீரசோழியம்’ என்ற இலக்கண நூலை இயற்றினான். அந்நூல்சுவடி சரஸ்வதி நூலகத்தில் உள்ளது.

[E P. Rep 1899 Page 18-19]

சோழ மன்னன்கள், சைவ சமய வளர்ச்சிக்குச் சோழ நாட்டில், தஞ்சையில்தான் வித்து விதைத் தார்கள் என்பதையும் கி. பி. 800க்கு முன் ஜைன மதமும் பௌத்தமதமும் சிறப்பான இடம் பெற்றிருந்ததாலும், வைதிக நெறி தடம் புரண்டிருந்ததாலும், சோழமன்னர்கள், வேதநெறி தழைத்தோங்கவும், சைவத்துறை வளரவும், தம்மை அர்ப்பணித்துக்கொண்டார்கள் என்பதை யும் கல்வெட்டுச் சான்றுகள் பறைசாற்றுகின்றன.

இராசேந்திர சோழன் புரிந்த மற்றொரு பெரும் தொண்டு குறிப்பிடத்தக்கது; இம்மன்னன் அவைப் புலவராக விளங்கியவர் **திரிலோசன சிவாசாரியார்.** இவர் இயற்றியதுதான் **சித்தாந்த சாராவளி உரை.** இந்நூலில் காணப்படும் செய்தி குறிப்பிடத்தக்கது. “ இராசேந்திரன் கங்கைவரையில் படையுடன்

சென்று, வெற்றியுடன் மீண்டபோது, அங்கே புகழுடன் இருந்த சைவாசாரியர்கள் பலரை, சைவ சமய வளர்ச்சிக்காகச் சோழநாட்டிற்குத் தஞ்சைக்கு அழைத்து வந்தான்" என்பது.

[சதாசிவ பண்டாரத்தார், சோழர் வரலாறு
பகுதி 1. பக். 161]

இச் செய்தியால், தஞ்சைச் சோழர்கள் சைவ சமய வளர்ச்சிக்கு — தெய்வநெறி வளர்ச்சிக்கு எத்துணை தொண்டு புரிந்துள்ளார்கள் என்பது தெளிவாகும்.

இம்மன்னனுக்குப் பின்னரும், வீரராசேந்திர சோழனுக்கு முன்னரும் தஞ்சையில் ஆட்சி புரிந்தவர்கள், முதல் ராசாதிராசன் இரண்டாம் இராசேந்திரன் ஆகியோர். வீரராசேந்திர சோழனுக்குப் பின்னர் கி.பி. 1070-71ல் அதிராசேந்திரன் ஆட்சிபுரிந்தான். இம்மன்னன் காலத்தில்தான் நாடு பெருங்குழப்பம் அடைந்திருந்தது.

இம்மன்னனுக்குப் பின்னர், கி. பி. 1071-1120 வரை, தஞ்சையில் ஆட்சி புரிந்தவன் **முதல் குலோத்துங்க சோழன்**; இம்மன்னன் தந்தை வழியில் கீழைச்சாளுக்கிய மன்னன். தாய்வழியில் சோழ மரபினன். இரண்டாம் ராசேந்திரனின் மகள் மதுராந்தகியை மணந்தவன். முதல்ராசேந்திரனின் மகள் அம்மங்கை தேவிக்கும், கீழைச்சாளுக்கு ராசராசநரேந்திரனுக்கும் பிறந்தவன்.

இம்மன்னன் சோழசாளுக்கிய குலத்துதித்த பெருமையால் உபயகுலோத்துங்கன் என்று சிறப்பிக்கப் பெற்ருன்.

இம் மன்னனை, முதற் குலோத்துங்கன் என்று சரித்திராசிரியர்கள் கூறுவர். இம் மன்னவன் காலத்தில் சோழநாட்டில், தஞ்சையில் கல்வித் துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டதென்பதில் ஐயமில்லை. இம் மன்னன், தமிழ், தெலுங்கு, வட மொழி ஆகிய மும்மொழிகளிலும் புலமை பெற்றவன். இவன் ஆட்சியில், தஞ்சையில் சரஸ்வதி நூலகத்தில், தமிழ், வடமொழியுடன், தெலுங்கு மொழி நூல்களும் இடம் பெற்றதாக, திண்ணமாக அறியமுடிகிறது.

ஆந்திர நாட்டில் பொத்தப்பிச்சோழ மரபினனான **நன்னசோழன் தெலுங்கு** மொழியில் இயற்றிய **குமாரசம்பவம்** என்னும் காவியம் முதற் குலோத்துங்க சோழன் ஆட்சியில்தான் தஞ்சை சரஸ்வதி நூலகத்தில் இடம் பெற்றதாகும். இந் நூல்சுவடி, நூலகத்தில் உள்ளது.

**நன்னையபட்டர்** என்ற தெலுங்கு மொழிக் கவிஞர் இயற்றிய **மகாபாரதம்** என்ற தெலுங்கு மொழிக் காவியம், முதற் குலோத்துங்க சோழன் ஆட்சியில்தான், சரஸ்வதி நூலகத்தில் இடம் பெற்றது என்பதும் தெளிவு. இக்காவியச் சுவடி, இந்நூலகத்தில் உள்ளது.

முதற் குலோத்துங்க சோழன், தஞ்சையில் ஆட்சி புரிந்தகாலம், மறுமலர்ச்சிக்காலம். தமிழகமும் ஆந்திரமும், சிறப்பாகச் சோழநாடும் ஆந்திரமும் ஒன்றிணைந்து கலை வளர்த்த பெருமைக்கு உரிய காலமாகும், ஆந்திர மொழியான தெலுங்கு மொழி, தஞ்சையில் வளம்பெற்ற காலம் இம்மன்னனுடைய ஆட்சியில்தான் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஆந்திர நாட்டிலிருந்த கலைஞர்களும், கவிஞர்களும் அரசியல் தொடர்புடையவர்களும், சோழ நாட்டில் வந்து தங்கி, தெலுங்கு மொழி வளம்பெற்ற காலம் இம்மன்னனுடைய காலம் என்பதை, மறுக்க வொண்ணாது.

இம்மன்னன், நாடகம், இசை இரண்டிலும் மிகுந்த புலமை பெற்றவன்; கலை வளர்த்த மாபெருங் கலைஞன்.

சாளுக்கிய மன்னன் ஜயசேனாபதி என்ற இரண்டாம் ஜயசிம்மன் எழுதிய நாட்டிய நூலான நிருத்திய ரத்னாவளி என்னும் அரிய நூல், முதற் குலோத்துங்கன் ஆட்சியில்தான், இந்நூலகத்தில் இடம் பெற்றதாகக் கூறமுடிகிறது; தெலுங்கு மொழிச் சுவடிகள் சரஸ்வதி நூலகத்தில் இடம்பெற்ற சிறப்புக்கு உரியவன் முதற்குலோத்துங்கனே யாவன். பழமையானதும், சமகாலத்தவையுமான ஆந்திர மொழி, தெலுங்கு மொழி நூல் சுவடிகள்,

இம்மன்னன் காலத்தில் சரஸ்வதி நூலகத்தில் இடம் பெற்றது என்பதற்கு, எவ்வகையில் முரண்பாடு இருக்க முடியும்? கலையார்வம் கொண்டவனும், மும்மொழிப் புலமை மிக்கவனுமான குலோத்துங்கன், நாட்டியம், இசை, நாடகம் ஆகிய துறைகளில் மிக ஈடுபாடு கொண்ட குலோத்துங்கன், ஆந்திர நாட்டிலிருந்து, தமிழகம் வந்து தஞ்சையில் முடிசூடிப் புகழ் பரப்பியவன் அன்றோ!

மேலே குறிப்பிட்ட, '**நிருத்திய ரத்னாவளி**' என்னும் நாட்டிய நூலில், 108-கரணங்களைப்பற்றி விவரிக்கும் சிறப்பு, காணப்பெறுகின்றது; நாட்டிய நூல் ஆய்வாளர் புகழும் நூல் இது. சரஸ்வதி நூலகத்தில் சிறப்பான இடம் பெற்ற சுவடிகளில் ஒன்று இது.

முதற் குலோத்துங்கசோழன், ஆட்சிக் காலத்தில் தஞ்சை அரண்மனையில், நாட்டியம், நாடகம், இசை வளர்ச்சிக்காக, '**நவவித நடசாலை**' என்ற பெயரில் அரங்கம் ஒன்றை நிருமித்து, ஆங்கே, கலை நிகழ்ச்சிகளை நடத்தச் செய்தான் என்ற குறிப்பிடத்தக்க செய்தி பாராட்டுக்குரியதாகும். [தென்னிந்திய ஆர்க்யலாஜிகல் சர்வே 1922-1924. பக். 121.]

இந்த **நவவித நடசாலை** தான், இன்று தஞ்சை அரண்மனையில் காட்சிதரும் 'சங்கீதமகால்' என்ற

அரங்கமாகும் என்பது கருதமுடிகின்றது; நாயக்க மன்னர் ஆட்சியில்தான், 'சங்கீதமகால்' என்ற பெயர் சூட்டப்பட்டிருத்தல்வேண்டும்.

'நவவித நடசாலை' அரங்கத்தின் பல பகுதிகள் இடிந்து, அழிந்து விட்ட பின்பு, நாயக்க மன்னர்களால், புதுப்பிக்கப் பெற்றதென்றே தெரிகிறது. இசை, தாளம் ஆராய்ச்சியில் வல்லுநனாக இருந்த குலோத்துங்கன், தன் அறிவுத்திறமை கொண்டு நிருமிக்கச் செய்த அரங்கம் 'சங்கீத மகால்' என்று கருத முடிகின்றது. மேலும் ஆய்வு செய்வதற்குரியதொன்றுகும் இது.

இம்மன்னன் தமிழ் மொழியில் இசையாராய்ச்சி நூல் ஒன்று இயற்றியதாகவும், அந்நூலைப்பற்றி, தன் அவையில் இசைப் புலவர்களுடன் ஆய்வு செய்தான் என்றும் கலிங்கத்துப் பரணி நூல் செப்புகின்றது. [கலிங். தாழிசை. 10–54]

இம்மன்னனின் மனைவி ஏழிசைவல்லபி என்பவள். இசைப் புலமைமிக்க காரணத்தால் சிறப்புப் பெயர் பெற்றுள்.

இம்மன்னனின் வாழ்க்கை வரலாற்றை, '**குலோத்துங்க சோழசரிதை** என்ற பெயரில், ஒரு காவியமாக மன்னனின் அவைக்களப் புலவரில் ஒருவரான நாரணபட்டாதித்தன் எழுதினுர் என்று தெரிகிறது. அந்நூல் இப்போது கிடைக்கவில்லை. (Ins. 198 of 1919)

இம்மன்னனின் வேண்டுகோட்படி, சிற்றரசன் கண்டன் மாதவன் என்பவன், அமுதசாகரர் என்ற புலவரைக்கொண்டு தமிழுக்கு இன்றியமை யாததான, யாப்புநூல் — யாப்பருங்கலக் காரிகை என்ற நூலை இயற்றச் செய்தான் என்பதை நீடூர்ச் சாசனம கூறுகிறது.

இம்மன்னனின் அவையில் வீற்றிருந்த தமிழ்ப் புலவர்கள் பலர்; இம்மன்னனின் கலிங்கவெற்றியை **'கலிங்கத்துப் பரணி'** என்ற காவியமாகப் பாடியவர் ஜயங்கொண்டார் குலோத்துங்க சோழ சரிதை என்ற காவியம் எழுதியவர் கவிகுமுத சந்திர நாரணபட்டாதித்தன் என்பவர். திருப் புகலூர் அந்தாதி பாடியவர், நெற்குன்றம் கிழார் களப்பாளராயர்; கன்னி வனப்புராணம், பெரும் புலியூர் நாடகம் என்ற இரு நூல்களை எழுதியவர் வீரைப் பரசமய கோளரி என்ற கவிஞர்.

மேற்குறிப்பிட்ட நூல்களில் கலிங்கத்துப்பரணி ஒன்றே இப்போது கிடைக்கின்றது. இந்நூல் இந் நூலகத்தில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது,

இம்மன்னவனின் அரசியல் அதிகாரிகளில் ஒருவனான அரும்பாக்கிழான் மணவில் கூத்தன் காலிங்கராயன் என்பவன் குலோத்துங்கன் கட்டளைப்படி, மூவர் தேவாரப் பதிகங்களைச் செப் பேட்டில் எழுதுவித்து தில்லைக் கோயிலில் பாது காப்பாகவைத்தவன் என்ற அரிய செய்தியும் புலனா

கின்றது; இதுபற்றிய செய்திகளை வெண்பா வடிவில் கல்வெட்டுக்களாக, 36 வெண்பாக்கள் தில்லைக் கோயிலிலும் 25 வெண்பாக்கள் திருவதிகைக் கோயிலிலும் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கவை. (சதாசிவ. சோழ. வர பாகம் 2 பக். 62)

இக்காலிங்கராயனுக்கு நரலோகவீரன் என்றும் பெயர்; இவன் தில்லையில் செய்த திருப்பணிகளை, சிதம்பரம், கீழைக்கோபுரம், மேலைக்கோபுரம் வாயிலில் கல்வெட்டில் பொறித்துள்ளான். பரத முனிவரின் 108 கரணங்களின் நாட்டிய அம்சங் களுக்குரிய வடமொழிச் சுலோகங்களை, சாசனங் களில் எழுதச் செய்துள்ளான்.

இம்மன்னனை அடுத்துத் தஞ்சையில் ஆட்சி புரிந்தவன் **விக்கிரமசோழன்.** கி. பி. 1118-1135 வரை ஆண்டவன். குலோத்துங்கனின் புதல்வன் இவன். இம் மன்னன் காலத்துப் புலவர் ஒட்டக்கூத்தர். விக்கிரமசோழன்மீது உலா ஒன்றும் பரணி ஒன்றும் பாடியவர். பரணி கிடைக்கவில்லை. இவ்விக்கிரம சோழன் துவக்கத்தில் ஆந்திர நாட்டிலும், பின்னர் தஞ்சையிலும் ஆட்சி புரிந்தான்.

இம்மன்னனுக்குப் பின்னர், தஞ்சையில் ஆட்சி புரிந்தவன், இம்மன்னன் மகன் **இரண்டாம் குலோத்துங்க சோழன்**. இம்மன்னன் அவையிலும் புலவராக விளங்கியவர் ஒட்டக்கூத்தர். இம்

மன்னன் மீது பிள்ளைத் தமிழ், உலா இரண்டும் அப்புலவர் பாடினூர். இரண்டும் சரஸ்வதி நூலகத்தில் உள்ளன.

இம் மன்னன் காலத்தில்தான் 'தண்டி' என்ற புலவர் தண்டியலங்காரம் என்னும் அலங்கார நூலை இயற்றினூராவர். இம் மன்னன் கி. பி. 1133-1150 வரை ஆட்சி புரிந்தவன். இம் மன்னன், அசுவ சாஸ்திரம், தனுஸ் சாஸ் திரம், நாட்டிய சாஸ்திரத்தில் வல்லவன்.

இம் மன்னனை, இசை நூல்களும், அசுவ சாஸ்திரமும் இயற்றிய மன்னன் என்று ஒட்டக்கூத்தர், தம் நூல்களான உலா, பிள்ளைத் தமிழ் இரண்டிலும் குறிப்பிடுகின்றூர். துரக வித்யா விநோதன், நிருத்தியகீதப் பிரமோகன் என்ற பட்டப் பெயர்கள் இம்மன்னனுக்கு உரியவை.

இம் மன்னனுக்குப் பின்னர், இவன் மகன் **இரண்டாம் இராசராசன்** தஞ்சையில் ஆட்சி புரிந்தவன். கி. பி. 1146-1163 வரை ஆட்சி புரிந்தவன். இம் மன்னன் சிலகாலம், குடந்தை-பழையாறையிலும் தங்கி ஆட்சி புரிந்தான்; இம் மன்னன், தமிழ், வடமொழி இரண்டிலும் பெரும் புலவன். ஒட்டக்கூத்தரைத் தன் ஆசிரியராகக் கொண்டவன். கவிஞர் கூத்தரும், தமிழ், வடமொழி இரண்டிலும் புலமை மிக்கவர். இம் மன்னன்மீதும் கூத்தர் 'உலா' பாடியுள்ளார்.

இம் மன்னனை 'ராஜபண்டிதன்', 'பண்டித சோழன்' என்று மெய்க்கீர்த்தி கூறுகிறது. இம் மன்னனின் அவைக்களத்தில்தான், ஒட்டக்கூத்தர், 'தக்கயாகப்பரணி' என்னும் அரிய பிரபந்தத்தை இயற்றி அரங்கேற்றினுர் ஆவர்.

இரண்டாம் இராசராசன் அவைக்களத்தில் விளங்கிய மற்ருெரு வடமொழிப் புலவர் **கேசவ ஸ்வாமி** என்பவர். இப் புலவர், காவிரிக்கரையில் இருக்கும் இராசேந்திரசோழச் சதுர்வேதி மங்கலத்தில் இருந்தவர்; இம் மன்னனின் வேண்டுகோளின்படி, '**நாஞர்த்தார்ணவ சம்க்ஷேபம்**' என்ற நிகண்டு நூலை வடமொழியில் இயற்றினுர். இந் நூல் சுவடி, சரஸ்வதி நூலகத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

**[சான்று: ஓரியண்டல் ரீஸர்ச் ஜர்னல் வால்யூம் XI பக். 27]**

இவ் விவரத்தை, சோழர் வரலாற்றில் திரு சதாசிவ பண்டாரத்தார் விளக்கியுள்ளார்.

இம் மன்னனுக்குப் பின்னர், கி. பி. 1163-1178 வரை **இரண்டாம் இராசாதிராச சோழன்** ஆட்சி புரிந்தான்; இம் மன்னன், விக்கிரம சோழனின் பெண் வயிற்றுப் பேரன். ஆந்திர நாட்டில் திராக்ஷாராமத்தில் சிலகாலம் தங்கியிருந்தவன்.

இம் மன்னனுக்குப் பின்னர் **மூன்ரும் குலோத்துங்க சோழன்** ஆட்சி புரிந்தான். கி. பி.

1178-1218 வரை ஆட்சி புரிந்தான். இம் மன்னன் ஆட்சியில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் பல உண்டு. சிறப்புமிக்க கோயில்களை எழுப்பியவன்.

திருவையாற்று கோயிலில் ஆவணி மாதம் சதயத் திருநாளில் நாட்டியம ஆடுவதற்கு, '**தலைக் கோலி**' பட்டம் பெற்ற நாட்டிய மங்கை ஒருத்திக்கு மானியம கொடுத்துள்ளான், மூன்ரும் குலோத்துங்க சோழன். [**தென்னிந்திய ஆர்க்யலாஜிகல் சர்வே 1922, 23, 24 பக். 117**] இம்மன்னன் நாட்டியக் கலையில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தவன்.

இம்மன்னன் காலத்தில் சைவ நெறி, வேத நெறி வளப்பமுற்றிருந்தன. இம்மன்னன் சைவ நெறியில் மிகவும் ஈடுபாடுகொண்டிருந்தான் புகழ் பெற்ற சைவாசாரியராகிய சீகண்ட சம்பு என்பவரின் புதல்வர் ஈசுவரசிவனுர், இம்மன்னன் விருப்பத்துக்கு உட்பட்டு, **சித்தாந்த ரத்னுகரம்** என்னும் நூலை இயற்றினுர்.

## தமிழுக்கு வளமான காலம்

இம்மன்னன் காலத்தில் தமிழ் மொழி வளம் பெற்றது என்பது சிறப்புமிக்கச் செய்தி. இம் மன்னன் அவைக்களப் புலவர் பலர் புகழ் பெற்றிருந்தனர். **குணவீர பண்டிதர்** என்ற கவிஞர் நேமிநாதம் வச்சணந்தி மாலை, வெண்பாப் பாட்டியல் என்ற நூல்களை இயற்றினுர். இந்நூல் சுவடிகள் சரஸ்வதி நூலகத்தில் இடம்பெற்றுள்ளன

இம்மன்னன் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அரும்பாக்கிழான் **அறநிலை விசாகன்** என்ற புலவர் **மகாபாரதத்தைத்** தமிழில் செய்யுள் வடிவில் இயற்றினர். [Ins 482 of 1905]

இம்மன்னன் காலத்தில்தான் கங்க நாட்டு மன்னன் சீயகங்கன் உதவியுடன் **பவணந்தி** முனிவர் என்ற ஜைனப் புலவர் '**நன்னூல்**' என்ற புகழ்பெற்ற இலக்கண நூலை இயற்றினர். தமிழ் மொழிக்கு ஆக்கம் கொடுத்த இலக்கண நூல் நன்னூல். [Sii. Vol. III No. 62]

புகழ் பெற்ற சேக்கிழார் பெருமான் சைவ நாயன்மார்களின் வரலாருன பெரிய புராணத்தை இம்மன்னன் அவையில் இயற்றி அரங்கேற்றினர். இந்நூல்களின் சுவடிகள், சரஸ்வதி நூலகத்தில் உள்ளன. இம்மன்னன் காலத்தில் இவன் அவையில் வீற்றிருந்த புலவரே வீராந்தப் பல்லவரையர் என்ற கவிஞர். இம்மன்னன் காலத்தில் படைக்கப் பெற்ற தமிழ் நூல்கள் பல.

இம் மன்னன், நாட்டியக் கலையிலும் ஈடுபாடு கொண்டவன். சோழ மரபில் இவன் தனிச் சிறப்புப் பெற்றவன்; திருக்கடவூர் சிவன்கோயிலில் காலவிநோத நிருத்தப் பேரரையனுன பாரசவன் பொன்னன் என்பவனுக்கு, '**நட்டுவ நிலை**' என்ற பெயரில், நிருத்தத்திற்காக, அறக்கட்டளை வைத்துள்ளான். [Ins 255 of 1925]

இச்செய்திகளைச் சோழர் வரலாற்றில், **சதாசிவ பண்டாரத்தார்** விளக்கியுள்ளார்.

## தஞ்சைக்கு ஏற்பட்ட அழிவு

இம்மன்னனுக்குப் பின்னர் **மூன்றும் இராச ராச சோழன்** கி. பி. 1216—1256ல் ஆட்சி புரிந்தவன்; இம்மன்னன் காலத்தில் சரஸ்வதி நூலகம், நன்கு போற்றப்பட்டது எனலாம். சைவநெறி வளர்ப்பதில் மிக ஈடுபாடு கொண்டவன் இவ்வரசன். திருவெண்ணைநல்லூர் **மெய்கண்ட தேவர்,** இம்மன்னவன் ஆட்சியில்தான், இம் மன்னன் ஆதரவில் '**சிவஞான போதம்**' என்ற சைவ சித்தாந்த நூலை இயற்றினர்.

இம்மன்னன் அவையில் இருந்த **ருத்திர பட்டர்** என்ற வடமொழிப் புலவர், இம்மன்னன் கேட்டுக் கொண்டவாறு, '**சகநாத விஜயம்**' என்ற சம்பு காவியத்தை வரலாற்றுத் தொடர்புடையதாக இயற்றினர்; சோழ நாட்டின் வரலாற்றுச் சூழ்நிலை இக்காவியத்தில் இடம் பெற்றிருக்கிறது. [Ibid பக். 199-200].

நாட்டியக் கலையில் அகமார்க்கம் என்ற பிரிவில், திருவொற்றியூர்க் கோயிலில் நாட்டியம் நடத்த இம்மன்னன் அறக்கட்டளை வைத்துள்ளான். [தென்னிந்திய ஆர்க்யலாஜிகல் சர்வே 1922–24– பக். 117]

தஞ்சையில் கி. பி. 846ல் பிற்காலச் சோழர் தலையெடுத்து, புகழ்பரப்பி ஆட்சி புரிந்த நிலையில், மூன்றும் இராசராசன் காலத்தில் 13ம் நூற்றுண்டில், சோழர் ஆட்சிக்கு, தஞ்சையில் வீழ்ச்சி ஏற்படும் அவலநிலை ஏற்பட்டது. மூன்றும் இராசராசன், தன் ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாட்டுடன் பெரும்போர் புரியும் சூழ் நிலை உருவானதே இதற்குக் காரணமாகும்.

தஞ்சையில் ஆட்சி புரிந்த இராசராசன், பாண்டியனுடன் போர் புரிவது தவிர்க்க முடியாத தாயிற்று. பழமைப்பகை காரணமாகப் பாண்டியன், தஞ்சைமீது பெரும்படை கொண்டு தாக்கினுன். இப்போரில், தஞ்சை பேரழிவுக்கு உள்ளானது. மதுரை மன்னன் சுந்தரபாண்டியன், தஞ்சை மீது தாக்கிப் பொருது, பேரழிவை ஏற்படுத்தினுன்; தஞ்சை நிலைகுலைந்தது. பாண்டியனுல் ஏற்பட்ட அழிவுச் செயல்களை, சுந்தரபாண்டியன் மெய்க் கீர்த்தி கூறுவதைக் காணலாம்:

“தஞ்சையும் உறந்தையும் செந்தழல் கொளுத்தி” என்று மெய்க்கீர்த்தி கூறுகிறது.

மூன்றும் இராசராசன், தஞ்சையில் அரண் மனையில் சிறப்பாக இருக்கைகொண்டு, தஞ்சை நகரை வளமாகக் காத்து வாழ்ந்த காலத்தில்தான், சுந்தரபாண்டியன் தஞ்சையைத் தாக்கினுன் என்று கல்வெட்டுச் சான்று பகர்கின்றது.

" சுந்தரபாண்டியனின் படைகள், தஞ்சையில் பல மாட மாளிகைகளையும் கூடகோபுரங்களையும் ஆடலரங்குகளையும் மணிமண்டபங்களையும் இடித்துத் தகர்த்தன. பாண்டிய நாட்டு வீரர்களால் தஞ்சை தீக்கொளுத்தப்பட்டது, நீர்நிலைகள் அழிக்கப்பட்டன " என்று திருவெள்ளறைக் கல்வெட்டுச் செப்புகின்றது.

[செந்தமிழ்த்தொகுதி 41. பக் 215 சதா, சோழர்வர. பகுதி 2. பக் 185]

இக்கல்வெட்டுக் கூறும் செய்தியிலிருந்து, தஞ்சை மூன்றும் இராசராசன் ஆட்சியில் கி. பி. 1256ல், மாடமாளிகை, கூட கோபுரங்களுடன் விளங்கியமை தெளிவு, ஆடலரங்கும் மணிமண்டபங்களும் விளங்கின என்பதும் தெளிவு நீர்நிலைகள், அகழி, ஆறு, தடாகங்கள் இருந்தமை தெளிவு;

'ஆடலரங்கு' என்று கூறப்பெறுவதிலிருந்து, முதற் குலோத்துங்கன் நிருமித்த 'நவவித நடசாலை' பற்றி நினைவு கூர்தற்குரியதாகும். எனவே, சோழர்கால அரண்மனையின் சிறப்புக்களெல்லாம் கூறப்பெறுகின்றன; 'பாண்டியனால் அழிக்கப்பட்டன' என்பதனால், பெரிதும் பழுதுற்றன என்றே கூறமுடியும்.

இத்தகைய சூழ்நிலையில்தான், கன்னட நாட்டு மன்னன் போசள இரண்டாம் வீர

வல்லாளன் சோழனுக்கு உதவி புரிய முன் வந்தான்.

## சோழருக்குக் கன்னட மன்னன் உதவி

கன்னட மொழிக் காவியமான கத்திய கர்ணு மிருதம் என்னும் நூல், சோழ, பாண்டியர் போரை விளக்குகிறது. பாண்டியனால் தஞ்சைக்கு ஏற்பட்ட அழிவுச் செயல்கள் கூறப்பட்டுள்ளன. போசள மன்னனாகிய இரண்டாம் வல்லாளனும் அவன் மகன் இரண்டாம நரஸிம்மனும், மூன்றும் ராசராச சோழனுக்குத் துணைநின்று பாண்டியனை முறியடித்தனர். இந்நிகழ்ச்சியிலிருந்து, சோழர் களுக்கு ஆந்திர சாளுக்கியர் உறவுடன் கன்னட நாட்டுப் போசளர் உறவும் ஏற்பட்டது குறிப்பிடத் தக்கது. மூன்றும் இராசராசன், போசள வீர நரசிம்மனின் புதல்வியையும் மணந்து கொண்டவன். [Sii Vol V No. 448, E. P. Ind. Vol. XXIV No. 22]. [சோழர் வராலாறு (சதாசிவ) பகுதி 2. பக். 196].

**திருவெள்ளறைக் கல்வெட்டு** ஒன்றே கி. பி. 1256ல் தஞ்சையின் சிறப்புப் பற்றியும், பாண்டி யரால் தஞ்சை நகருக்கு அழிவு ஏற்பட்டது பற்றியும் அறியப் பேர்துமான சான்றாகும். பாண்டியன் தஞ்சையை அழித்த கொடுமையைப் பற்றிக் கூறுவதே திருவெள்ளறைக் கல்வெட்டாகும்.

எனவே, இக்காலம் சரஸ்வதி நூலகத்தின் நிலை பற்றி என்னவென்று அறிய முடியவில்லை.

மாறவர்மன் சுந்தரபாண்டியனின் மெய்க் கீர்த்தியில் உள்ள பகுதிகள் வருமாறு :

"தஞ்சையும் உறந்தையும் செந்தழல் கொளுத்திக்
காவியும் நீலமும் நின்று கவின் இழப்ப
வாவியும் ஆறும் அணிநீர் நலன் அழித்துக்
கூடமும் மாமதிலும் கோபுரமும் ஆடரங்கும்
மாடமும் மாளிகையும் மண்டபமும் பல இடித்து
... ... ... ... ... ... .... ... ... ...
கழுதை கொண்டுழுது கவடி வித்திச்
செம்பியனைச் சினமிரியப் பொருது சுரம்புக
வோட்டிப்
பைம்பொன் முடிபறித்துப் பாணனுக்குக்
கொடுத்தருளி
ஆயிரத்தளியில் ... ... ....
சோழவளவன் அபிஷேக மண்டபத்து
வீராபிஷேகம் செய்து".

இவ்வாறு தஞ்சை, உறையூர் இரண்டும் பாண்டியனால் அழிக்கப்பெற்றன.

பாண்டியன், தன்னால் அழிக்கப்பெற்ற தஞ்சையிலிருந்து பழையாறை சென்று, அங்குள்ள, சோழன் அரண்மனையில் வீராபிஷேகம் செய்து கொண்டான் என்று குறிப்பிடுகிறது மெய்க் கீர்த்தி

பாழ்படுத்திய தஞ்சையில், பாண்டியன் வீராபிஷேகம் செய்துகொள்ள மனம் இல்லாமல், பழையாறைக்குச் சென்று செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

எனவே, தஞ்சை பேரழிவுக்கு உள்ளானதை நன்கு அறிய முடிகிறது; இந்தச் சமயத்தில் சரஸ்வதி நூலகம் சோதனைக்கு உள்ளானதென்றே கருதமுடிகிறது.

போசள மன்னர்களால் மீண்டும் மூன்றும் இராசராசன் தஞ்சையில் ஆட்சி புரிந்தான்.

இம்மன்னனுக்குப் பின்னர், இம்மன்னன் புதல்வன் **மூன்றும் இராசேந்திரன்** தஞ்சையில் முடிசூட்டிக்கொண்டான். இவன் ஆட்சிபுரிந்த காலம் கி. பி. 1246–1279. இம்மன்னன், சோழ மரபு காத்தவன். அழிவுற்ற தஞ்சையை இம் மன்னன், புதுப்பித்தவன்; சோழமரபு காத்துப் பெரும் வீரனாக விளங்கிய இம்மன்னன், பாண்டியனால் அழிவுற்ற நகரை, வெறிதே விட்டுவானா? தஞ்சையின் அழகை மீண்டும் உயிர்ப்புறச் செய்தவன் அன்றோ?.

இராசேந்திரன், தஞ்சையில் ஆட்சி புரியத் துவக்கியபின்னர், காஞ்சி முதல் நெல்லூர்வரையில் உள்ள பகுதிகளையும் ஆட்சி புரிந்தான் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

சோழருக்கு உறவினராகவும், ஆட்சிக்கு அடங்கியவராகவும் சிற்றரசராகவும் விளங்கியவர்களில், நெல்லூரிலிருந்து ஆட்சி புரிந்த திக்கன் விசயகண்டகோபாலன் [Ins. 514 of, 1919 410 of 1923] சித்தூரில் ஆட்சி புரிந்த புடோலி அரசன் [Sii VOL IV No. 317], வீரநரசிங்க திருக்காளத்திதேவ யாதவ அரசன் [*Ibid* Vol. VIII No. 469 Ins. 271 of 1904] ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் [சதா சோழ. வர. பகுதி 2. பக் 203]. இவர்களில், நெல்லூரில் ஆட்சிபுரிந்த, திக்க நிருபதி என்னும் விசய கண்ட கோபாலன், மூன்றும் இராசேந்திரனுக்கு உற்ற நண்பன், உறவு கொண்டவன்; கண்ட கோபாலன் ஆட்சியில், '**திக்கண்ண சோமயாஜி**' என்ற தெலுங்கு மொழிப்புலவர், **நிர்வசனோத்தர ராமாயணம்** என்ற காவியத்தை இயற்றினார், தெலுங்கு மொழிக் காவியமான இந்நூல் சுவடி (S. No. 170, 171) சரஸ்வதி நூலகத்தில் உள்ளது. இக்காவியம் படைக்கப்பெற்ற காலம், கி. பி. 1260.

மூன்றும் இராசேந்திரன், தன் தந்தை காலத்தில் தஞ்சைக்கு நேர்ந்த அழிவை நன்கு கண்டவன். எனவே, பழிதீர்க்கும் நினைப்புடன், பாண்டிய நாட்டைச் சூறையாடினான்; இவனுடன் போர் புரிந்தவன் இரண்டாம் சுந்தரபாண்டியன் ஆவான்.

பாண்டியன் முதலாம் சுந்தரபாண்டியனுக்கு ஒரு பெண்ணையும் மூன்றும் இராசராசனுக்கு ஒரு

பெண்ணையும் மணம்செய்து கொடுத்தவன் போசள வீரநரசிம்மன். எனவே, இவ்வீர நரசிம்மனின் புதல்வனுன வீரசோமேசுவரன், பாண்டிய, சோழ சம்பந்தம் காரணமாக மூன்ரும் இராசேந்திரனிடம் முதலில் மனவேறுபாடு கொண்டான் எனினும், பின்னர், சோழமரபு காப்பதில் முன்நின்று இராசேந்திரனுக்கு உதவியாக இருந்தான் என்பது தெரிகின்றது.

சோழ, பாண்டியப் போரில், தெலுங்கச் சோழனுகிய விசயகண்ட கோபாலன், சோழனுக்கு உதவிபுரிந்த செய்திகளை, நிர்வசனேத்தர ராமாயணம் முன்னுரையில் திக்கண்ண சோமயாஜி விளக்குகின்ருர்.

ஆந்திர நாட்டில் அரசு புரிந்தவர்களும், கரிகாலன் வம்சத்தவர்களாகச் சாசனங்களில் கூறிக்கொள்பவர்களுமான தெலுங்கச் சோழர்களின் உறவால், தஞ்சையில் சோழராட்சி காக்கப்பட்ட உண்மை புலனுகின்றது. ஆந்திரமும், கர்நாடகமும் சோழநாட்டுடன் ஒன்றுபட்டு ஒருங்கு இணைந்த ஒரு கலாசாரத்தை உருவாக்கிய உண்மை, கத்திய கர்ணமிருதத்தாலும், நிர்வசனேத்தர ராமாயணத் தாலும் சாசனச் செய்திகளாலும் தெரிகின்றது.

நிர்வசனேத்தர ராமாயணம் கி. பி. 13-ம் நூற்ருண்டில் இயற்றப்பெற்ற சோழர் வரலாற்றுச் சார்புடைய காவியம், சரஸ்வதி நூலகத்தில் இடம்

பெற்றுள்ளது. இதைப்போன்ற சான்றுகளைக் கொண்டு, சோழர்காலப் பழமையும் ஆந்திரமொழியான தெலுங்கு மொழியின் வளர்ச்சி தஞ்சையில் சிறப்பாக இடம் பெற்றிருந்ததையும் தெளிவாகக் காணலாம். [திரு K. A. நீலகண்ட சாஸ்திரிகள் சோழர் வரலாறு பாகம் II பக் 200, 201 சதாசிவ. சோழர் வரலாறு பாகம் 2, பக் 209, 210]

கி. பி. 1279ல் மூன்றும் இராசேந்திரன் ஆட்சி முடிவுற்றதாக, வரலாற்ருசிரியர் கூறுகிருர்கள். மூன்ரும் இராசேந்திரனும் தன் தந்தையைப் போன்றே ஆந்திர உறவுடன், கர்நாடக போசள வீரசோமேசுவரன் மகளேயும் மணந்து கொண்டு கன்னட நாட்டு உறவையும் தேடிக்கொண்டவன்.

இராசேந்திரசோழன் காலத்தில்தான், தமிழில் தஞ்சைவாணன் கோவை, நளவெண்பா என்ற நூல்கள் படைக்கப்பெற்றன. **தஞ்சைவாணன் கோவை** எழுதியவர், **பொய்யாமொழிப்புலவர்.** இப்புலவனை ஆதரித்த வள்ளல் சீனக்கன் என்பவன், தஞ்சையை அடுத்த கண்டியூரில் சிற்றரசனுக விளங்கியவன்.

**நளவெண்பா** என்ற புகழ்பெற்ற நூலை இயற்றியவர் புகழேந்திப்புலவர். இப் புலவரை ஆதரித்த வள்ளல் முரணை நகர் சந்திரன் சுவர்க்கி என்பான். இவனும் இராசேந்திரசோழன் காலத்தவன்.

(சதா. சோ. வரலா. பகுதி 2. பக் 214)

இராசேந்திரன், கி. பி. 1279ல் காலமான பின்னர், இவன் புதல்வன் என்று கூறப்பெறும் 'அரசுகண்டராமன்' என்ற சேமப்பிள்ளை தஞ்சையை ஆட்சிபுரிந்தான். (Ins. 515 of 1922 M. E. R. 1923 Part II Para 45) இராசேந்திர சோழன் 'சேமப்பிள்ளை'யை 'நம் மகன்' என்று குறிப்பிடுவதை, ஆராய்ச்சி அறிஞர் சதாசிவ பண்டாரத்தார், உடன்பட்டுக் கூருமல், இவன் இராசேந்திரனின் மகனில்லை என்று கூறுகிருர். திரு பண்டாரத்தார் கூற்று ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று.

இவ்வரசு கண்டராமன் என்ற சேமப் பிள்ளையைப்பற்றி சிறந்த சான்றுகள் உள்ளன. திருவரன்குளம், பெருங்களூர் சாசனங்கள் குறிப்பிடத்தக்கவை. அரசு கண்டராமன், நோய்வாய்ப் பட்டு இருந்தவன் என்றும் இவனுடைய அதிகாரிகள், வழித்துணைப் பெருமாள், புவனசிங்க தேவன் என்போர் என்றும் இச்சோழ மன்னன் பெயரால் அரசுகண்டராமன் நந்தனவனம் (திருத் தோப்பு) ஏற்பட்டிருந்ததையும், இம்மன்னன் அறக் கட்டளை பற்றியும் பலசாசனக் குறிப்புகள் உள்ளன. [Madras Presidency Ins: 1260 of 1915. பாரா 37] [Ins. 264, 267, 268, 270, 291, 301, 302 305, 307 of 1914] Ins. 297-ல் இவ்வரசு கண்டராமன், 'பெருநற்கிள்ளி சோழநாடு' எனக்குறிப்பிடுவது கொண்டு, சங்ககாலச் சோழர் வழியில் வந்தவன் இம்மன்னன் என்பது தெளிவு.

(Ins. 302 of 1914. 667 of 1909, 67 of 1914)

இம்மன்னனுக்குப்பின், தஞ்சையில் ஆட்சி புரிந்தவன், வீரசைவ வீரப்பிரதாப சோழன் என்பவன், (கி. பி. 1280 to 1301) சோழர்களுக்கு ஏற்பட்ட கன்னட நாட்டு உறவு காரணமாக இம் மன்னன் கன்னட நாட்டிலும் ஆதிக்கம் கொண்டவன் என்று தெரிகிறது. இவனைப்பற்றின கல்வெட்டு மைசூர்ப் பிராந்தியத்தில் பங்களூர் ஜில்லாவில் காணப்படுகிறது. [EP. Car. Vol IX BN 96 சோழ. வர. பகுதி 2. பக் 214]

தஞ்சையை ஆண்ட கண்டராதித்த சோழனின் கல்வெடடு மைசூர் பிராந்தியத்தில் உள்ளது. கண்டராதித்தன் கன்னட பிராந்தியத்தின் பகுதியான கங்கநாட்டில்தான் காலமானுன் என்று சான்று பகர்கின்றது. கண்டராதித்தனின் படிமம் ஒன்று அந்நாட்டில் இருப்பதும் உணர்தற்குரியது. எனவே கன்னட நாட்டு உறவு சோழருக்குப் பழமையானது என்று தெளிவாகின்றது.

இம்மன்னனுக்குப்பின், தஞ்சையில் ஆட்சி புரிந்த சோழன், வீரசோழன் மகன் **வீரசம்பன்** என்பவன். இம்மன்னன் கி. பி. 1314ல் காஞ்சியைச் சார்ந்த திருஅத்தியூர் அருளாளப் பெருமாளுக்கு 'தேர்' ஒன்று அளித்தவன். காஞ்சி (Ins) EP. Ind. Vol. III No. 12 B] Ins 3 of 1890.

கி. பி. 1482ல் ஆட்சி புரிந்த சோழ மன்னன், சோழ நாராயணன் என்பவன். இவனுக்கு, வாலக

காமய அக்கலராசன், உறையூர் புரவராதீசுவரன் என்ற வேறு பெயர்களும் உள்ளனவாகத் தெரிகிறது. இச்சோழ மன்னன் திருஆனைக்கா கோயில் அகிலாண்டநாயகிக்கு அறக்கட்டளையாக ஒரு வேலிநிலம் அளித்தவன் [EP. Ind. Vol. III 12 C] [Ins. 30 of 1891]

இம்மன்னனுக்குப்பின் ஆட்சி புரிந்த சோழ மன்னன் கி. பி. 1496 கோனேரின்மை கொண்டான் என்னும் **கோனேட்டிராஜசோழன்** [K. A. நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்திய வரலாறு பக் 275]

இம்மன்னனுக்குப்பின், தஞ்சையில் ஆட்சி புரிந்தவன் சோழபால **மகிபதி** என்னும் சோழன். பாலயதேவ சோழமகாராசன் என்றும் இவனுக்குப் பெயர் உள்ளது. இச்சோழன் ஸ்ரீரங்கம் ரங்கநாதருக்கும் உறையூர் வல்லி நாச்சியாருக்கும் மானியம் அளித்துள்ளான் [SII. Vol. IV No. 503] [Ins 56 of 1892]

இம்மன்னன் காலத்தில்தான், விஜயநகர மன்னன் அச்சுதராயன் பாண்டிநாடு வந்து, பாண்டியனுக்கும் சேரனுக்கும் ஏற்பட்ட போரில், பாண்டியனுக்கு உதவினான். பாண்டியன் மகளையும் மணந்தான். இதன் பின்னர், தஞ்சையில் ஆட்சிபுரிந்த சோழபாலமகிபதிக்கும் பாண்டியனுக்கும் ஏற்பட்ட போரில், பாண்டியனுக்காக உதவிபுரிந்து, தஞ்சையை, திறைகட்டுமாறு

ஒப்பந்தம் செய்து சென்றான், விஜயநகர மன்னன் அச்சுதராயன் காலத்தில் தஞ்சையில் ஆட்சிபுரிந்த சோழன் சோழபாலமகிபதி என்பது சான்றுகளால் தெளிவாகின்றது. [Annual Report for 1892. P. 7] [கால்டுவெல் எழுதிய History of Tirunelveli Page 55] Government of Madras Public Department 544, 555 of 1892ல் இந்தவிவரங்களைக் காணமுடிகிறது. (Sii. Vol IV No. 503)

இம்மன்னனை அடுத்து இம்மன்னனின் புதல் வனைக் கருதப்படும் வீரசேகரன் என்னும் சோழன் கி. பி. 1535ல் தஞ்சையில் ஆட்சிபுரிந்தவன் இவனுக்கும், (பாண்டியன்) சந்திரசேகர பாண்டியனுக்கும் ஏற்பட்ட பகை காரணமாக, விஜயநகர மன்னரால், தஞ்சை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றப்பட்டவன் என்று, 'டெய்லர்' சரித்திரக் குறிப்பில் காணப்படுகிறது. (டெய்லர் ரிபோர்ட் வால்யூம் II பக் 10–11)

இம்மன்னன் காலத்தைத் தொடர்ந்து, குடந்தையில், உருத்திர சோழதேவன் என்பான் இருந்தவன் என்று தெரிகிறது. இவன் குடந்தை கோயிலுக்கு அறக்கட்டளை ஏற்படுத்தியுள்ளமை தெரிகிறது. [Kumbakonam. Ins. 291 of 1927, ARE For 1927 Part II Para 34]

(சதா. சோழர் வரலாறு. பகுதி 2. பக் 216)

தஞ்சையில் சோழமன்னர் ஆட்சி கி. பி. 1535ல் வீரசேகர சோழமன்னனுடன் முடிவுற்றது.

தஞ்சையில் சோழமன்னர் ஆட்சி கி. பி. 1535 வரையில் நடைபெற்றது என்று சான்றுகள் கொண்டு கூறமுடிகிறது.

'கி. பி. 1496ல் விஜய நகர நாயக்க மன்னன் நரசாநாயக்கன் என்பவன் மதுரை, திருச்சி, தஞ்சையை வென்று, விஜய நகரத்துக்குத் திறை கட்டுமாறு செய்தான்' என்று அறிஞர் K. A. நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார்.

(ஆங்கிலம்-தென்னிந்திய சரித்திரம் பக். 275)

'கி. பி. 1442ல் தஞ்சையில் சோழர் அரண்மனை, புதுப்பிக்கப்பட்டதாக' கூறுகிறார்; வில்லியம் ஹிக்கி; (**Tanjore Marathas Principality in South India 1872. Page 32.**)

கி. பி. 16ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தஞ்சையில் சோழராட்சி அகற்றப்பட்டு, விஜய நகர நாயக்கர் ஆட்சி ஏற்பட்டது என்பதை பல சான்றுகள் வரையறுத்துக் கூறுகின்றன.

வீரசேகர சோழனிடமிருந்தே, நாயக்கர் ஆட்சியைக் கைப்பற்றியதாகக் கூறப்படுகிறது; விஜயநகர மன்னர் அச்சுததேவராயர் காலத்தில் நிகழ்ந்ததாகவும், நாகம நாயக்கனே முதலில் சோழ அரசை கைப்பற்றினன் என்றும் பின்னரே, விசுவநாதனும், பின்னர் சேவப்பனும் தஞ்சை ஆட்சி உரிமை பெற்றவர் என்றும் சான்றுகள் பல கூறுகின்றன.

— [ராபர்ட் ஸ்வெல் List of Antiguarian Remaines Madras Presidency. Vol II Page 201

— Nelsons, Madura Manual page 224. Part III page 88 Vol. II page 201

— Trichy Manual page 125

— Vriddagireesan, Tanjore Nayaks. Page: Journal IX page 230, 231, 257, 259

— Tanjore Manual, T. Venkuswamy Row 1883

— Tanjore Gazetteer of Heming way 1906

— Nayaks of Madura. R. Sathyanatha Iyer page. 52

— தஞ்சாவூர் ஆந்திர நாயக்க சரித்திரம் by K· சீதாராமையா page 95

— Political History of the Nayak dynasty. Chapter III Mackencies Collection-Venkuswamy Row, Manual of Tanjore part V page 750]

— Tailar, Historical Report, Vol. II; Page 109.

— The Madras Presidency Administration Manual (Tanjore) Vol. II; Page 137ல் குறிப்பிட்டுள்ளதும் கவனிக்கத்தக்கது.

"கி. பி. 1365-1404ல் தென்னாட்டின்மீது ஆதிக்கம் செலுத்திய முகம்மதியரை, மதுரையி லிருந்து அகற்றிய விஜயநகர கம்பண்ண உடை யார், தஞ்சை வந்தபோது, தஞ்சையில் சோழ அரசு அமைதியாக நடைபெற்றதையும், சோழ மரபினர் ஆட்சி வழிவழியே தொடர்ந்து நடைபெறு வதையும் காஞ்சிபுரம் வரையில் சோழர் ஆட்சி

நடைபெற்றதையும் கண்டு திரும்பினன்'' என்ற குறிப்பு, சிறப்புடையதொன்ருகும்.

எனவே, தஞ்சையில் சோழமன்னராட்சி கி. பி. 1535-வரை தொடர்ந்து நடைபெற்றது என்பது வரலாற்று உண்மையாகும். இக்காலம் வரையில், சரஸ்வதி நூலகம் சோழமரபினரால் பாதுக்காக்கப் பெற்றது என்பதை, தெளிவாக உணரலாம்.

## சோழர் காலத்தில் சரஸ்வதி நூலக வளர்ச்சி.

தஞ்சையில், சோழர் காலத்தில் சரஸ்வதி நூலகம் விளங்கிய சிறப்பைக் கூறுவதற்கு, சோழர் காலம்பற்றி அறிந்துகொள்வது இன்றியமையாதது என்ற முறையில் இதுகாறும், சோழர் வரலாறு பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டேன்.

முத்தரையர் காலம் தொட்டே, தஞ்சைக்குப் பெருமையும் சோழநாட்டின் தலைநகர் என்ற தகுதியும் ஏற்பட்டன என்பது தெளிவு. கடைச்சங்க காலத்தின் இறுதிக்காலமான கி. பி. மூன்ரும் நூற்ருண்டிற்கு முற்பட்ட காலம் வரையில், சங்க காலச் சோழர் வரலாறு கூற முடிகிறது. கோச் செங்கட் சோழன் என்ற செங்கணன் என்னும் சோழனின் மகன் 'நல்லடி' (நல்லடிக்கோன்) என்பவன் சோழ நாட்டில் அரசு ஓச்சிய சோழ மன்னன். இவன், தஞ்சையை அடுத்த 'வல்லம்' என்ற நகரைத் தலைநகராகக் கொண்டவன்

என்பது சங்க இலக்கியமான அகநானூற்றுச் சான்று கொண்டு, முன்னதாகவே குறிப்பிட்டுள்ளேன்.

'வல்லம்' சோழர் தலைநகராக விளங்கிய போது, உறையூரும் இருத்தல்வேண்டும் எனினும், உறையூருக்கு அடுத்த நகராக 'வல்லம்' இருந்தது எனல் பொருத்தமே. இந்த 'வல்லம்' நகரை, சோழ மரபின்படி, நகராகக் கொண்டவர்கள் முத்தரையர்கள் என்பதைக் கல்வெட்டுச் சான்றுகள் பகர்கின்றன. எனவே, 'வல்லம்' சங்க காலம் தொட்டு சோழர் நகராக விளங்கியது தெளிவு; பின்னரும் முத்தரையர் ஆட்சி புரிந்த நகர் வல்லம் ஆயிற்று; முத்தரையர் காலத்தே தான், தஞ்சை சோழர் நகராயிற்று என்பதும் கல்வெட்டுக்கள் கூறும் உண்மை. திருவாலங்காட்டுச் செப்பேடும், கன்யாகுமரிக் கல்வெட்டும், தஞ்சையை, முத்தரையனிடமிருந்து கைப்பற்றியவன் சோழன் விஜயாலயன் என்று செப்புகின்றன. இது நிகழ்ந்தது, வரலாற்றின்படி கி. பி. 845.

"கி. பி.639ல் கடப்பை, கர்நூல் மாவட்டங்களை ஆட்சிபுரிந்தவர்கள், கரிகாலன் மரபினரான ரேநாண்டுச் சோழர்கள்; ரேநாண்டு 7000-என்ற எண்ணிக்கை கொண்டது. [See General Tables V. Chola] புலிக்கொடி தாங்கியவர்கள். இவர்கள் வமிசத்தில் மூன்றுவது சோழன் மகேந்திரசோழன்

என்று அறிஞர் V.வெங்கையா கூறுகிருர். Chu-li-ye-described in A. D. 639. by the Chinese Traveller-யுவான் சுவாங் குறிப்பு. EP. Rep. *1904-5* P. *48.*

சான்று [ Historical Inscription of Southern India Vol. V. Robert Swell S. K. Iyangar Page 21 ]

கி. பி. *8*-ம் நூற்ருண்டில், நெல்லூர், கடப்பை மாவட்டங்களை ஆட்சி புரிந்த சோழன் **புண்ணிய குமாரன்,** தன்னைக் 'காவிரிக்குக் கரை எழுப்பி சோழநாடு காத்த கரிகாலன் வழியினன் நான்' என்று சாஸனத்தில் கூறிக்கொள்கிருன். [ EI. XI *337-446*; IB *339.* ] இம்மன்னனும் ஆந்திரநாட்டில் ஆட்சிபுரிந்த சோழன்.

கி.பி *831*-ல், **குமாராங்குசன்** என்றசோழனைப் பற்றி, வடமொழிச் செப்பேடு வடவார்க்காடு மாவட்டத்தில் காணப்படுகிறது.

[வேலூர்பாளையச்செப்பேடு: *Ibid* Vol II. No.*98*]

கி. பி. *830*-என்று கருதப்படும், திருவேங்கடம், திருச்சானூர்க் கோயில் கல்வெட்டு, '**சோழ நாட்டுச் சோழனூர் உலகப்பெருமானூர்**' என்ற பெயருடைய சோழனைப்பற்றி உள்ளது.

[SII. Vol. XII No.*43*] (சோழர் வரலாறு பகுதி I பக். *11*)

முத்தரையரிடமிருந்த தஞ்சையைக் கைப் பற்றின சோழன் விஜயாலயனின் காலம் கி. பி.

846-881. என்று வரலாற்றுசிரியர் திரு K. A. நீலகண்ட சாஸ்திரியாரும், திரு சதாசிவ பண்டாரத்தாரும் தீர்மானித்து எழுதியுள்ளனர். (திருவாலங்காட்டுச்செப்பேடு. SII Vol. III No. 205)

மேற்கண்ட சான்றுகளால், தஞ்சையைக் கைப்பற்றி, ஆட்சி புரிந்த விஜயாலயச் சோழனுக்கு முன்பே, ஆந்திர நாட்டில் 'கரிகாலன் மரபினர் என்று சாஸனம் செப்பும்' சோழ மன்னர்கள் இருந்தனர் என்று தெளிவாகின்றது.

எனினும் பிற்காலச் சோழர்களில் முதல் மன்னன் என்று புகழப்பெறும் விஜயாலயனே, சரித்திர ஆராய்ச்சியாளர்களின் நூல்களில், சிறப்பிக்கப்படுகின்ருன் !

சங்க காலத்தை அடுத்து, ஆந்திர நாட்டில் சோழ மன்னர் ஆட்சி புரிந்த சிறப்பை, மறுக்க முடியாது. சோழர்களுக்கு ஆந்திரநாட்டு தொடர்பு உறவு, விஜயாலய சோழனுக்கு முன்பே இருந்த நிலையை சாஸனங்கள் வலியுறுத்துகின்றன.

சோழர்கள், தமிழ் வளர்த்த பெருமைக்குரியவர்கள் என்பதோடு வடமொழியும், தெலுங்கு மொழியும் வளர்த்த பெருமைக்கும் உரியவர்கள் என்பதை உணரமுடிகிறது.

சுருக்கமாகக்கூறினுல், புண்யகுமாரன், குமாராங்குசன், விஜயாலயன், ஆதித்தன், பராந்தகன், கண்டராதித்தன், அரிஞ்சயன், சுந்தரன், மதுராந்தகன், ராஜராஜன், ராஜாதிராஜன், ராஜேந்திரன், வீரராஜேந்திரன், இதிராஜேந்திரன் குலோத்துங்கன், விக்கிரமன், வீரசம்பன், வீரசேகரன் என்ற பெயர்களெல்லாம், கருத்துச் செறிவுள்ள வடசொற்கள் என்பதை உணரலாம்.

இம்மன்னர்களுடைய சாஸனங்களில் பல, வடமொழியில் மிகுதியாக உள்ளன. வடமொழி நூல்களும் பல இம்மன்னர் காலங்களில் படைக்கப் பெற்றுள்ளன.

இச் சோழ மன்னர்கள், தமிழ்மொழிக்கு நிகராக வடமொழியில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்கள் என்பதை நன்கு உணரமுடிகின்றது. **சரஸ்வதி நூலகம்** இதற்குச் சான்று பகர்கின்றது.

எடுத்துக்காட்டாக முதலாம் இராசராச சோழனின் சாஸனமுறை ஒன்றைக் காணலாம்:

"ஏதத் விஸ்வ ந்ருபச்ரேணீ
மௌளி மாலோப லாளிதம்
சாசனம் ராஜ ராஜஸ்ய
ராஜகேஸரி வர்மண:

முதலாம் இராசேந்திரசோழனுடைய சாஸனம் காண்க:

ராஜத் ராஜன்ய மகுட
ஸ்ரேணீரத்நேஷு சாஸனம்
ஏதத் ராஜேந்த்ர சோளஸ்ய
பரகேஸரி வர்மண:

இந்தச் சாஸன அமைப்பை, குறிப்பிட்டதற்குக் காரணம் பிற்காலச் சோழர்கள், வடமொழி வளர்ச்சியிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதைக் குறிப்பிடுவதற்கே என்று அறிய வேண்டுகிறேன்.

சோழர்கள் தமிழுடன் வடமொழியைப் பெரிதும் ஆதரித்து வளர்த்தார்கள் என்பதை முன்பே, சான்றுகளுடன் குறிப்பிட்டுள்ளேன். எனவே சரஸ்வதி நூலகத்தின் பெருமை, சோழர் காலத்தில் மிகுசிறப்புற்றிருந்தது, உய்த்துணரத் தக்கதாகும்.

சோழர் காலம், ஆந்திர நாட்டு உறவு கொண்டது முதல், அந்நாட்டு மொழியும், சோழர்களால் போற்றப்பட்டிருத்தல் இயற்கையே. அவ்வுண்மையை நாம், மேலும் சில சான்றுகளால் அறியலாம்.

கி. பி. 871-907ல் தஞ்சையில் ஆட்சிபுரிந்த முதலாம் ஆதித்த சோழன் (விஜயாலயனின் புதல்வன்) வடபுலமான ராஷ்டிர கூட நாட்டின் மன்னன் **இரண்டாம் கிருஷ்ணதேவன்** மகளான

**இளங்கோப்பிச்சியை** மணந்து கொண்டான். ராஷ்டிரகூட நாடு எங்கே உள்ளது? தஞ்சை எங்கே உள்ளது? சேய்மைக்கண் உள்ள ராஷ்டிர கூட உறவைத் தேடிக் கொண்டவன் ஆதித்த கரிகாலன்.

இம்மன்னனுக்கு, ராஷ்டிரகூட அரசிளங்குமரியிடம் பிறந்தவனே, முதல் பராந்தக சோழன். இம்மன்னன் வடமொழி வளர்ச்சிக்கு பேரார்வம் காட்டியவன் என்பது உணர்தற்குரியது.

இப்பராந்தகன் கி. பி. 907-953ல் ஆட்சி புரிந்தவன்; இம்மன்னன் தன் மகள் **வீரமாதேவி** என்னும் அரசிளங்குமரியை, ராஷ்டிரகூட மன்னன் **நான்காம் கோவிந்தனுக்கு** மணம் புரிவித்தான்.

கி. பி. 956-957ல் ஆட்சிபுரிந்த தஞ்சை மன்னன் அரிஞ்சய சோழன், ஆந்திர நாட்டு, கீழைச் சாளுக்கிய இரண்டாம் **வீமன்** என்னும் அரசனின் மகள் **குந்தவை** என்பாளை மணந்தான்.

இம்மன்னன் (அரிஞ்சயன்) ஆந்திர நாட்டு, தெலுங்கச் சோழர் மரபில் வந்தவனும், வைதும்பராயர் என்ற பட்டம் பெற்றவனுமான, சோழ மன்னனின் மகள் 'கல்யாணி'யையும் மணந்தான்.

வைதும்பராயன் மகள் கல்யாணியிடம் அரிஞ்சயனுக்குப் பிறந்தவனே, **சுந்தரசோழன்**.

கி. பி. 957-970ல் தஞ்சையில் ஆட்சிபுரிந்த மன்னன் சுந்தரசோழன். இம்மன்னன் பழையாறை அரண்மனையையும் புதுப்பித்தவன். இம்மன்னன், தன்மகள் **குந்தவை** என்பாளை வல்லவரையன் வந்தியத்தேவன் என்ற ராஷ்டிரகூடனுக்கு மணம் புரிவித்தான். இவ்வந்தியத் தேவனை, சாளுக்கியன் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

கி. பி. 985-1014ல் ஆட்சிபுரிந்த புகழ்பெற்ற தஞ்சை மன்னன் முதலாம் இராசராசன். இம் மன்னன் தன் மகள் குந்தவை என்பாளை கீழைச்சாளுக்கிய விமலாதித்தனுக்கு மணம் புரிவித்தான்.

கி. பி. 1012-1044ல் முதலாம் இராசேந்திரன் ஆட்சிபுரிந்த தஞ்சைச் சோழன். இராசராசனின் புதல்வன், இராசேந்திரன் புகழ்பெற்ற மன்னன். கங்கை-கடாரம்-கலிங்கம் அனைத்தும் வென்ற பேரரசன். இம்மன்னன், தன்மகள் **அம்மங்கைதேவி** என்ற அரசிளங்குமரியை, ஆந்திரநாட்டு கீழைச் சாளுக்கிய மன்னனை **இராசராச நரேந்திரனுக்கு** மணம் புரிவித்தான். கீழைச்சாளுக்கிய விமலாதித்தனுக்கும் இராசராசனின் மகள் குந்தவைக்கும் பிறந்த புதல்வனே இராசராச நரேந்திரன். இவன் மகனே புகழ்பெற்ற முதலாம் குலோத்துங்கனுவான்.

கி. பி. 1051-1063ல் தஞ்சையில் ஆட்சிபுரிந்த மன்னன் இரண்டாம் இராசேந்திர சோழன் இம்

மன்னன் தன்மகள் **மதுராந்தகி** என்ற அரசிளங் குமரியைக் கீழைச்சாளுக்கிய முதல் குலோத்துங்க னுக்கு மணம் புரிவித்தான்.

*1063–1070*ல் தஞ்சையில் ஆட்சிபுரிந்த மன்னன், வீர ராசேந்திர சோழன். இம்மன்னன், **தன்மகளை**, மேலைச்சாளுக்கிய **ஆறும் விக்கிரமாதித் தனுக்கு** மணம் புரிவித்தான்.

முதல் குலோத்துங்கன் காலம் கி. பி. 1070-1120, இம்மன்னன் தந்தை வழியில் ஆந்திர சாளுக்கியன். தாய்வழியில் சோழமரபினன்.

முதல் குலோத்துங்கன், தன் மகள் **ராஜசுந்தரி** என்பாளை, **கன்னடநாட்டு, கீழைக்கங்க** மன்ன னாகிய **இராசராச தேவேந்திரனுக்கு** மணம் புரிவித் தான்; மற்றொரு மகள் **'சுத்தமல்லி'** என்பாளை, இலங்கை மன்னன் **வீரபாகுவுக்கு** மணம் புரிவித் தான்.

முதல் குலோத்துங்கசோழன், தனக்குப்பின், தஞ்சைச் சோழராட்சியை, கீழைச்சாளுக்கிய நாடாண்ட, தன் மகன் விக்கிரம சோழனுக்கு அளித்தான். விக்கிரமன் ஆட்சி. கி. பி. 1118–1136 வரை.

மூன்றும் குலோத்துங்கசோழன், தஞ்சையில் ஆட்சி புரிந்த மன்னன். இவன் மகளை, கன்னட நாட்டு போசள இரண்டாம் வல்லாள தேவன்

மணம் புரிந்ததாகத்தெரிகிறது. இது ஆய்வுக் குரியது. (Annual Report Si. EP: For 1912 Part II Para 30.)

சோழநாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் நேர்ந்தபோரில், போசள வீரவல்லாளன், இராசராசனுக்குப் பேருதவி புரிந்தவன். போசள இரண்டாம் வீர நரசிம்மனின் மகளை, மூன்றும் இராசராசன் மணம் செய்துகொண்டான்.

மூன்றும் ராசேந்திரன், தஞ்சையில் ஆட்சி புரிந்த புகழ் பெற்ற சோழன். கி. பி. 1246–1279 வரை ஆட்சி புரிந்தவன்; இம்மன்னனுக்கும் பாண்டியனுக்கும் நேர்ந்த போரில், இரண்டாம் வீரநரசிம்மனின் மகன், போசள வீர சோமேசுவரன் சோழனுக்குப் பேருதவிபுரிந்து சோழநாடு பாதுகாத்தவன்.

போசள வீர சோமேசுவரனின் மகன் வீர ராமநாதனும் சோழநாடு பாதுகாத்த பெருமைக் குரியவன்.

மேற்கண்ட சான்றுகளைக் கண்டறிந்தவர்கள், பிற்காலச் சோழர்களின், ஆந்திர, ராஷ்டிரகூட, கன்னட நாட்டு உறவும் தொடர்பும் பற்றி நன்கு உண்மை உணரமுடியும்.

கி. பி. 14–ம் நூற்ருண்டில் விஜயநகர மன்னர் களின் ஆதிக்கம் தென்னுட்டில் ஏற்படுவதற்கு

முன்னதாகவே, சோழர்–ஆந்திரர் உறவு, சிறப்பாகவும், மிக நெருக்கமாகவும் இருந்ததை, வரலாற்றுண்மைகள் செப்புகின்றன.

ஏறக்குறைய கி. பி. 870லிருந்து, கி. பி. 1280 வரையில், மூன்ரும் இராசேந்திரன் ஆட்சிக்காலம் வரையில், வரலாற்ருசிரியர்கள் கூற்றின்படி நானூறு ஆண்டுகாலத்திற்கு மேலாக, தஞ்சைச் சோழர் ஆட்சி நடைபெற்ற பொற்காலத்தில், ஆந்திரமும் சோழநாடும் குறிப்பாகச் சிறப்பாகக் கலந்து உறவாடிய வரலாற்றை புறக்கணிக்க முடியுமா?

ஆந்திர மன்னர்களுடன் மணவுறவு வைத்துக் கொண்ட சோழர்கள் அற்பமானவர்களா? சோழ நாட்டில், தமிழகத்தில் மணவுறவு வைத்துக் கொள்ள முடியாதவர்களா? ஆந்திர நாட்டுடன் நெருங்கிய உறவு கொண்டதற்குக் காரணம் என்ன? ஆந்திரர்களும் சோழர்களும் மனம் ஒன்று பட்டு விட்டதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? ஆந்திரரும் சோழரும் மணவுறவுகொண்டு, ஒருங்கிணைந்த ஆட்சி புரிந்த சமயங்களிலே, ஆந்திர சோழநாட்டு மக்களிடையே சூழ் நிலே என்னவாக இருக்க முடியும்? ஆந்திர மக்கள் தமிழகத்திலும், தமிழக மக்கள் ஆந்திரத்திலும் பரவியிருப்பது தானே இயற்கை? ஆந்திரமொழி, தமிழகத்திலும் தமிழ்மொழி ஆந்திரத்திலும் பரவியிருப்பதுதானே

இயற்கை? இல்லையேல், கரிகாலன் மரபினர் என்று கூறிக்கொள்ளும் சோழர்கள் ஆந்திரத்தில் ஆட்சி புரிய முடியுமா?

எனவே, தமிழ் மொழிபோல், வடமொழி வளர்ச்சிபெற்றதுபோல, ஆந்திரமொழியும் தஞ்சையில் வளம்பெற்றது, சோழநாட்டிலே, தமிழகத்திலே வளம்பெற்றது என்பதுதான் உண்மை வரலாறு! இதற்குச் சான்று பகர்கின்றது தஞ்சை சரஸ்வதி நூலகம்.

இந்த உண்மையின் அடிப்படையில்தான், தஞ்சையில் சோழராட்சிக்குப்பின் ஆந்திரநாயக்கர் ஆட்சி ஆந்திர சோழ உறவு காரணமாக ஏற்பட்டது. சோழருக்கும் ராஷ்டிரகூடருக்கும், கன்னட போசளர்க்கும் ஏற்பட்ட உறவுகாரணமாகவே, பிற்காலத்தில் மகாராஷ்டிரர் ஆட்சியும் தஞ்சையில் ஏற்பட்டது என்பதே, உய்த்துணரத் தக்கதாகும்.

தஞ்சை சரஸ்வதி நூலகத்தில், தமிழ், வடமொழி, தெலுங்கு, மராட்டி மொழி இலக்கியங்கள் படைக்கப்பெற்று தொகுக்கப் பெற்றதற்கு, மேற்கண்ட சான்றுகளைவிடச் சிறந்த சான்று தேடவேண்டுமா? சிந்தனை செய்து உண்மை அறியவேண்டுமன்றோ!

எனவேதான், தஞ்சையில் ஆந்திர சாளுக்கிய கலாசாரமும், மகாராஷ்டிர கலாசாரமும் நன்கு பரவியிருக்கின்ற உண்மையை அறிய முடிகின்றது.

கி. பி. 1070–1120 வரை ஆட்சிபுரிந்த முதல் குலோத்துங்கன் காலத்தில் தெலுங்குமொழி தஞ்சையில் நன்கு வளர்ச்சி பெற்றது என உறுதியாகக் கூறமுடியும். ஆந்திர நாட்டுக்கலைஞர்களும், கவிஞர்களும் சோழ நாட்டிற்கு வருகை தந்த பொற்காலம் அது எனில் ஐயமில்லை.

தஞ்சை, சரஸ்வதி நூலகத்தில் சோழர்காலத் தொகுப்புக்கள், பல இன்று காணக்கிடைக்கவில்லை என்பதை கூறவேண்டியிருக்கிறது; தமிழ், வட மொழி, தெலுங்கு மும்மொழிகளிலும் இருந்த பல தொன்னூல்கள், போர்க்காலங்களில், அழிவுற்றோ, பிறர் வசம் கொண்டு செல்லப்பட்டோ இருக்க முடியும் என்பதும் உண்மையாகும்.

தமிழ், ஆந்திரம், கருநடம், கூர்ச்சரம், மகாராஷ்டிரம் ஆகிய ஐந்து மொழிகளும் திராவிட மொழிகள் என்றும், இவ்வைந்து பிராந்தியத்தில் உள்ளவர்களை பஞ்சத்திராவிடர்கள என்றும், சரித்திர வல்லுனர்கள் கூறுகிறார்கள். [மு. ரா. ஐயங்கார்: வேளிர் வரலாறு பக். 17]

முதலாம் **இராசேந்திர** சோழன், தன்னை '**பஞ்சத்திரமிடாதிபதி**' என்று சாஸனத்தில் குறிப்பிட்டுக்கொண்டவன். எனவே அம்மன்னன் காலத்திலேயே, 'பஞ்சத்திராவிடம்' என்ற ஒருங்கிணைந்த அரசியல் கூட்டுறவும், ஒருங்கிணைந்த கலாசாரமும் இருந்ததை, தஞ்சையில் சிறப்பாகக் காணமுடிகின்றதன்றோ? [பஞ்சத்திரமிடாதிபதி

இராசேந்திரன் கல்வெட்டு காஞ்சிபுரம் கைலாச நாதர் கோயில் Sii. Vol. I Page 111-112. VI Page 82 ]

சோழமன்னர்கள் காலத்து, படைக்கப்பெற்ற தமிழ் நூல்கள் வடமொழி நூல்கள் பற்றி முன்பே ஓரளவு குறிப்பிட்டிருக்கிறேன். தஞ்சைச் சரஸ்வதி பண்டாரகம் என்று புகழ் பெற்ற இந்நூலகத்தி லிருந்த, பல சுவடிகள், தமிழில் பழமையானவை, பிறரால் கொண்டு செல்லப்பட்டன எனக் கருத முடிகிறது; சைவமடாலயங்களிலும், தமிழ்ப் புலவர் கள் சிலருடைய இல்லங்களிலும், திருநெல்வேலி, திருவனந்தபுரம், ஆந்திரம் ஆகிய இடங்களிலும், வெளிநாடுகளிலும் சரஸ்வதி நூலகச் சுவடிகள் இருப்பனவாகக் கருதமுடிகின்றது.

## இந்நூலகத்தில் தமிழ்ச் சுவடிகள் : சோழர்காலம் முதல்

சரஸ்வதி பண்டாரகமான இந்நூலகத்தில் உள்ள தமிழ்ச் சுவடிகளைப் பற்றி ஆய்வு செய்து 3-பகுதி புத்தகத்தொகுப்புக்களை, பண்டித உலகநாதபிள்ளையவர்கள் வெளியிட்டுள்ளார்கள். சுவடிகளைப்பற்றி, கிடைக்கும் குறிப்புக்களைக் கொண்டு, பல செய்திகளை ஆய்ந்து, தொகுப்பில் வெளியிட்டு உள்ளார்கள்.

தமிழ்ச்சுவடிகளில், சங்க காலத்து எட்டுத் தொகை பத்துப்பாட்டு நூல்கள் இடம் பெறவில்லை. இப்போது கிடைக்கவில்லை. ஆயினும், திரு முருகாற்றுப்படைச் சுவடி உள்ளது; **தொல்காப் பியம்** உள்ளது. இந்நூல் தமிழ் மொழியில் பழமை யான முதன்மையான நூல் என்பது தெளிவு.

பிற்காலச் சோழர்காலத்துக்கும் முந்தியதான, **நாலடியார்,** கி. பி. 7. 8ம நூற்றுண்டுக்கால எல்லை கொண்டது. தஞ்சையில் முத்தரையர் ஆட்சி புரிந்தபோது அம்மன்னர்களின் ஆதரவில் இயற்றப் பெற்ற நூல்; **திருக்குறள்** உரைச் சிறப்புள்ள நூல் இந்நூலகத்தில் குறிப்பிடத்தக்க நூல், இவ்வுரை பேராசிரியர் எழுதியது என்று ஆய்வாளர் கருது கின்றனர்.

**சேந்தன் திவாகரம், ஆசிரியர் நிகண்டு, பிங்கலந்தை** நூல்கள் பழமைச் சிறப்புடையவை கி. பி. 11ம் நூற்றுண்டுக்கு முற்பட்டவை உள்ளன. **வீரசோழியம்,** கி. பி. 12ம் நூற்றுண்டுக்கு முந்தியது. இவை யனைத்தும் சோழர் காலத்து நூல்கள்.

இந்நூலகத்தில் புகழ் பெற்ற சுவடி **கம்ப ராமாயணம்** உள்ளது. இது சோழர்காலப் பழமை கொண்டது.

**சிலப்பதிகாரம் சீவகசிந்தாமணி**-தமிழிலக்கியப் பெருமை சாற்றும் சுவடிகள். கி. பி. 12ம்

நூற்றாண்டில் படைக்கப்பெற்ற நேமிநாதம், வச்சணந்திமாலை, நன்னூல் ஆகிய சுவடிகளும் குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ், கலிங்கத்துப் பரணி, விக்கிரம சோழன் உலா, பெருந்தேவனார் பாரதம், தண்டியலங்காரம், யாப்பருங்கலக் காரிகை, பழமொழி, நம்பியகப் பொருள், நளவெண்பா, தஞ்சைவாணன் கோவை, திருக் கோவையார், திருவாசகம், திருமந்திரம் ஆகிய நூற் சுவடிகளும், சோழர்காலப் பழமையை எடுத்துக்காட்டுபவை.

கி. பி. 13ம் நூற்றாண்டில் வாழ்ந்த மெய்கண்ட தேவர் இயற்றிய சிவஞானபோதம் இந்நூலகத்தில் உள்ளது. சோழர்காலத்துச் சைவசமய எழுச்சிக்கு உரியவர் மெய்கண்டதேவர். களப்பிர குலத்தில் வந்தவர்.

இவையன்றி, சைவசாஸ்திர நூல்கள் பல உள்ளன. பெரியபுராணம், திருவாய்மொழி, வில்லி பாரதம், பாகவதம் முதலிய சிறப்பான நூல்கள் உள்ளன. தேவாரப்பதிகங்கள் உள்ளன.

நாடகம், பரதம் ஆகிய துறைகளில் பல தமிழ்ச் சுவடிகள் உள்ளன.

அகத்தியர் வெண்பா, அகத்திய சூத்திரம் என்பவை குறிப்பிடத்தக்கவை; மருத்துவக்கலை பற்றி உள்ள செய்யுள் நூல் சுவடிகள் பல உள்ளன.

புராணவகைகளில், குறிப்பிடத்தக்கவை, கும்ப கோணப் புராணம், திருவையாற்றுப் புராணம், திருவெண்காட்டுப் புராணம், கூர்ம புராணம், சரப புராணம், கந்த புராணம், சேது புராணம், தேரூர்ந்த சோழ புராணம், நல்லூர்ப் புராணம், காவேரிப்புராணம், வசிட்டபுராணம், அவிநாசிப் புராணம், முதலியன

திருவையாற்றுப்புராணமும், கும்பகோணப் புராணமும் தஞ்சை நாயக்கமன்னர் காலத்து இயற்றப்பட்டவை.

பிரபந்தங்களில் இராசைக் கோவை, செழிய தரையன் கோவை, வீரகுமார விலாஸம், சாரங் கதரன் கதை, இராஜ சரித்திர வம்சாவளி, புல்லையந்தாதி, செழுவை அந்தாதி, குடந்தை அந்தாதி போன்ற பல சுவடிகள் உள்ளன.

பிள்ளைத் தமிழ், உலா, அம்மானை, வண்ணம், குறவஞ்சி, மாலை, சதகம், ஆகிய பிரிவுகளில் பல சுவடி நூல்கள் உள்ளன.

காஞ்சி மன்னன் அம்மானை, வீரமாறன் கதை, கஞ்சனம்மானை என்பவை குறிப்பிடத்தக்கவை. நாயக்கமன்னர் காலத்துப் படைப்பு நூல் பாரதம், மாவிந்தம் என்பதாகும். சில்லறைப் பிரபந்தங் களும் நாயக்கமன்னர் காலத்தவை உள்ளன. விஜயராகவன் முளைப்பாட்டு முதலியன.

மராட்டியமன்னர் காலத்திலும், பல தமிழ் நூல்கள் உள்ளன. செண்டலங்காரன் வண்ணம், ஷாஜிமன்னன் மீது குறவஞ்சி, காவேரி நாடகம் முதலியன. மராட்டியர் காலத்து நாடக நூல்கள் தமிழில் இயற்றப்பட்டவை, தெலுங்கு லிபியில் உள்ளவை அறியத்தக்கன.

குறவஞ்சி நூல்களில், காலத்தால் முற்பட்ட நூல், ஷாஜி குறவஞ்சி எனத்தெரிகிறது. வெள்ளைப் பிள்ளையான் குறவஞ்சி, பொய்யா மொழியீசர் குறவஞ்சி, ஞானக்குறவஞ்சி, நொண்டி நாடகம் ஆகியவையும் இந்நூலகத்தில் உள்ளன.

பழமையான சுவடிகள் வழிவழியே, மன்னர்கள் காலத்தில் பிரதி எடுக்கப்பெற்று புதுப்பிக்கப்பெற்று வந்துள்ளமை தெளிவாகின்றது. இன்ன சகஆண்டு இன்னரால் படியெடுத்தது என்ற குறிப்புகள் சுவடியில் எழுதுபவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்; சுவடிகளைப் பிரதிசெய்வதற்கு உரியவர்களை மன்னர்கள் நியமித்திருந்தார்கள். இம்முறை, கல் வெட்டுக்கள் பழமையானவற்றைப் புதுப்பிக்கும் முறை போன்றதேயாகும். சோழர் காலத்தில், திருமழபாடிக்கோயில் கல்வெட்டில் இம்முறை மேற்கொள்ளப்பட்டதை அறியலாம்.

சரஸ்வதி நூலகத்தில், தமிழில் இருந்த பல சுவடிகள் சோழர்காலத்தவை, பிறர் வசம்கொண்டு செல்லப்பட்டவற்றைத் தவிர உள்ளவை இவை.

அகத்தியர் பெயராலும் வேறுபலர் பெயராலும், மருத்துவக்கலைப்பற்றின நூல்சுவடிகள் மிகுதியாக உள்ளன. இவை ஆய்வுக்குரியவையாகும்.

சரஸ்வதி நூலகத்தில் தமிழ்ச்சுவடிகளில் பழமையானவை பல சோழர்காலத்துச் சுவடிகள் தொகுக்கப்பெற்றவை உள்ளன. நூலகத்திலுள்ள நெ. 82 நாலடியார் ஓலைச்சுவடி 550 ஆண்டுகட்கு முற்பட்டது. தொல்காப்பியம், கம்பராமாயணம் போன்ற சுவடிகளும் சோழர்காலத்தவை.

பின்னர் நாயக்கர், மராட்டியர்காலத்தும் தமிழ்ச் சுவடிகள் படி எடுக்கப்பெற்றுள்ளன.

## சோழர் காலத்திலிருந்து வடமொழி நூல்கள்

### கிரந்தலிபி

இந்நூலகத்தில் உள்ள மற்ற மொழி லிபிச் சுவடிகள், நூல்கள் நாகரி, கிரந்தம், தெலுங்கு, மராட்டி ஆகிய நான்கு லிபிகளில் உள்ளன; மராட்டி லிபி நூல்கள் காகிதத்தில் உள்ளன.

வடமொழிச் சுவடிகள், கிரந்த லிபியிலும் நாகரி லிபியிலும் உள்ளவை 10,000க்கும் மேற்பட்டவை. இவையனைத்தும் அரிய படைப்புக்கள் என்பதை ஆய்வு செய்தோர் கருதுகின்றனர். நாகரி லிபிச் சுவடிகள் மிகக் குறைவு. ஆனால் வடமொழி நூல்கள் கிரந்த லிபியில் உள்ளவையே இந் நூலகத்தில் பல ஆயிரக்கணக்கில் உள்ளன.

கிரந்த லிபி, தென்னாட்டுக்குரிய லிபி. இதைப் பல்லவ கிரந்தம் என்றும் சொல்வர். கி. பி. 5-ம் நூற்றாண்டிலிருந்து இந்த லிபி காணப்படுகின்றது. வடமொழி எழுத்துக்களின் உச்சரிப்புக்கு ஏற்ற மறு வடிவமும் தமிழ் எழுத்துக்களின் சார்பும் கொண்ட லிபி கிரந்தலிபி. இந்த லிபியை, தென்னாட்டில் சோழநாட்டில்தான் மிகுதியாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளதைத் தெளிவாக உணரலாம்.

இந்த க்கிரந்த லிபி சோழர் காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். அதனால் தான் இந் நூலகத்தில் வடமொழிச்சுவடிகளில் இந்த லிபி இடம் பெற்றது தெளிவு. தமிழ் பயின்றவர்கள் எளிதில் வடமொழியை எழுதவும் உச்சரிக்கவும், வடமொழி நூல்களைப் பயில்வதற்கும் ஏற்படுத்திக் கொண்ட லிபி கிரந்தலிபி.

இந்த லிபியில் சோழர், பாண்டியர் சாஸனங் களும் உள்ளன. சோழ மன்னர் சாஸனங்கள் பல கிரந்த லிபியில் இருப்பதற்கு காரணம். தமிழ் எழுத்து வடிவத்தை தழுவி கிரந்தலிபி தோற்றுவிக்கப் பட்டதனாலேயேயாகும்.

தமிழ் மன்னர்கள், வடநாட்டு மன்னர்கள் சாளுக்கியர், ராஷ்டிரகூடர், கலிங்கர் ஆகியோருடன் உறவுகொண்டு, தமிழரும் வடவரும் கலந்து உறவாடிய காலத்தில் தோன்றிய லிபியே கிரந்தலிபி.

இந்தக் கிரந்தலிபியைத் தென்னாட்டில்தான் காணலாம். வடநாட்டில் இதற்குச் சமமாக உள்ள லிபி நாகரிலிபியாகும். வடநாட்டுச் சாசனங்கள் அனைத்தும் நாகரிலிபியில் உள்ளன. சுவடிகள் நாகரிலிபியிலேயே உள்ளன.

எனவே, தமிழர் சிறப்பாகச் சோழர், வடமொழியை உச்சரிக்கவும், எழுதவும் கிரந்தலிபியைச் சிறப்பாகக்கொண்டனர். இதுமட்டும் காரணமன்று. வடக்கையும், தெற்கையும் இணைத்த லிபி கிரந்தலிபி. வடமொழியாளர், தமிழ் வளம் அறிவதற்கும் இந்த லிபியே வழிகாட்டி. வடமொழியாளர் தமிழ் கிரந்தத்தை உச்சரிக்கும்போது, வடமொழி மரபு பிறழாமல் இந்த லிபியைப் பயில்வதற்கும், நாகரி எழுத்துப் பயிலாத தமிழர், வடமொழியைக் கிரந்த லிபி மூலம் எளிதில் உச்சரிக்கவும் எழுதவும் அறியவும் கிரந்த லிபி சிறந்து துணையாயிற்று.

இந்தக் கிரந்த லிபியில் வடமொழிச் சுவடிகள் தஞ்சை சரஸ்வதி நூலகத்தில் இவ்வளவு மிகுதியாக இருப்பதற்குக் காரணம் என்ன? ஆய்வுக்குரிய தன்றோ?

கிரந்த லிபியையே சோழர்கள் சாஸனங்களில் கைக்கொண்டதற்குக் காரணம் என்ன?

ஆந்திர சாளுக்கியருடனும் ராஷ்டிர கூடருடனும் உறவுகொண்ட சோழர்கள், வட மொழிச்சார்பான பேச்சும் இலக்கியமும் கொண்ட

அவ்வினத்தவரின் உறவையும் நேயத்தையும் பெறுவதற்கும் அந்நாட்டு மக்களுடன் பழகவும், அந்நாட்டில் தங்கிப்பழகவும் நேர்ந்தபின் ஏற்படுத்திக் கொண்ட லிபியாகவே கிரந்தலிபி, வரலாற்று லிபியாகக் கருதப்படுகிறது என்று கூறலாம்.

எனவே வடமொழி வாணர்களின் படைப்புக்களை முற்றும் அறியவும் அப்படைப்புக்களைத் தென்நாட்டில் பரவச்செய்யவும் கிரந்த லிபியே பயன்படுத்தப்பட்டது. தமிழ் வரிவடிவத்தைப்பெரிதும் தழுவிய கிரந்தலிபி எளிதில், புரிந்துகொள்ள முடிந்த காரணத்தாலும், தேவநாகரிலிபியை எளிதில், பயில்வதற்கு முடியாத நிலையில், இந்தக் கிரந்தலிபியை விரும்பி, வேதம், சாஸ்திரம், அலங்காரம், நாடகம், நாட்டியம், புராணம், இதிகாஸங்களைக் கிரந்த லிபியில் எழுதச்செய்து சரஸ்வதி நூலகத்தில் சோழர்கள் தொகுத்து வைத்தார்கள்

இத்துணை வடமொழி ஈடுபாடு, சோழர்களுக்கு ஏற்பட்டது ஏன் என்பதை, சோழ மன்னர்கள், ராஷ்டிரகூடர்களுடனும் சாளுக்கியருடனும் போசலருடனும் மணவுறவு கொண்டதிலிருந்தே எளிதில் அறியலாம், அதுமட்டுமன்று; தேசிய அரசியல் முற்போக்குக் கொள்கைக்கு முன்னோடியாக வரலாற்றில் இடம் பெற்றவர்கள் சோழர்கள் என்பதையும் இதனால் உணரமுடிகின்றது. ஒருமைப்பாட்டுக்குரிய ஆன்மீக வளர்ச்சிக்கும், வழிபாட்டுக்கும்

கலாசார ஒற்றுமைக்கும், வடக்கு தெற்கு இணைப்புக்கும் சோழர்கள் சிறந்த வழிகாட்டியாவார். தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஊறு ஏற்படாமல், வடமொழிப்படைப்புக்களையும் பாதுகாத்துத் தமிழகத்தில் கலாசார ஒற்றுமைக்குப் புத்துயிரளித்தவர்கள் சோழர்கள் என்றும் கூறலாம். ஆந்திர சாளுக்கியருடனும் ராஷ்டிரகூடருடனும் சமாதானமும் உறவும் கொண்டு தமிழ் நாட்டில் சோழராட்சியை நிலைநிறுத்திப் புகழ் பரப்பி, தமிழ் வளர்ச்சிக்கு ஊறு ஏற்படாமல் மறுமலர்ச்சி ஏற்படுத்திய பெருமை சோழருக்கே உரியது; அதற்கு இந்நூலகமே சிறந்த எடுத்துக்காட்டு. இந்நூலகக் காப்பகத்தை சோழர் ஏற்படுத்தியிரா விட்டால், தமிழக வரலாற்று மரபே வேறுபட்டதாகக் கருதப்படும் என்றால் வியப்பில்லை.

சோழர்கள், தொகுப்பே கிரந்தலிபிச் சுவடி நூல்கள் என்று கூறினேன். சோழ மன்னர்கள் ஆட்சியில் வழிவழியே படியெடுக்கப்பெற்றவை இவை.

பின்னர் நாயக்கர், மராட்டியர்கள் ஆட்சி தஞ்சையில் நடைபெற்றது தெளிவு. ஆனால் இந்தக் கிரந்தலிபியை நாயக்க மன்னர்களோ, மராட்டிய மன்னர்களோ, அறிமுகப்படுத்தவில்லை என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இந்தக் கிரந்தலிபிச் சுவடிகள், ஆந்திர நாட்டிலோ, வடநாட்டில் வேறு பகுதியிலோ,

கன்னடப்பகுதியிலோ உள்ளன என்று கூறமுடிய வில்லை. சான்றில்லை. அவர்கள், தெலுங்குலிபி, கன்னடலிபி, நாகரிலிபியையே, சாஸனங்களிலும், சுவடிகளிலும் மேற்கொண்டனர்.

கி பி. இரண்டாம் நூற்றண்டுக்குப்பின்னல், பல்லவர்கள் காஞ்சியில் தங்கி ஆட்சிபுரிந்தார்கள். காஞ்சியில் மிகப்பெரிய வடமொழிக்கல்லூரி விளங் கியது. இதன் கால எல்லை கி. பி. 4, 5ம் நூற்ருண்டு எனக்கூறுவர் சரித்திர ஆசிரியர். தமிழகத்திலும் சோழநாட்டில் சோழர் காலத்தில் திருபுவனி எண்ணுயிரம், ஒற்றியூர், குடந்தை எறும்பூர் ஆகிய இடங்களில் சோழர்களால் வடமொழிக்கல்லூரி நடத்தப்பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. முதலில் நாகரிலிபி பயன்படுத்தப் பெற்றது. பின்னரே பல்லவர், தென்னுட்டில் ஆதிக்கம் கொண்ட காலத்தில் கிரந்தலிபி பெருகியதாகும். ஜைன, பௌத்தமதம் தென்னுட்டில் பரவிய காலத்தில், இந்தக் கிரந்தலிபியும் வளர்ச்சியுறும் நிலையில் இருந்ததை மறுக்கமுடியாது. தமிழில் வடமொழிக்கலப்பு ஏற்படுத்தியவர்களில் ஜைன பௌத்த மதத்தவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் என்பதையும் மறுக்கமுடியாது. தமிழ் வளர்ச்சிக்கு அம்மதத்தவர்கள் பணிபுரிந்து உள்ளமையையும் மறுக்கமுடியாது. எனவேதான், வடமொழி, தென்னுட்டில் பரவிய காலத்தில் இந்தக்கிரந்தலிபி இன்றியமையாத லிபியாகக் கருதப்பட்டதென்பதில் ஐயமில்லை.

வடமொழியிடம் சோழமன்னர்களுக்கு ஈடுபாடு மிக்கிருந்த உண்மையை முன்பே குறிப்பிட்டு உள்ளேன்; சிறப்பாகச் சொல்லவேண்டுமானுல், பாரத நாட்டிலேயே, **தஞ்சையிலேதான்** தஞ்சைச் சோழர்கள், வடமொழி நூல்சுவடிகளைத் தொகுத்துச் சரஸ்வதி பண்டாரகத்தில் வைத்தனர் என்றே குறிப்பிடலாம். வடமொழியில் படைப்புக்களைப் புதியனவாக உருவாக்கவும், ஆய்வுசெய்யவும், பயிற்சிபெறவும், பெரும் முயற்சி எடுத்துக்கொண்ட சோழமன்னர்கள், அவற்றுக்கான அறக்கட்டளைகளை வைத்துக் காப்பாற்றிய சோழமன்னர்கள், வட மொழிப் படைப்புக்களையும் பாதுகாத்தனர் என்பதில் என்ன வியப்பு இருக்கமுடியும்?

தஞ்சை நாயக்கமன்னர் காலத்துக்கு முற்பட்டவை யாவும், சோழர் காலத்தவை என்பதில் ஐயமில்லை. அறிஞர்கள் ஆய்வு செய்து, சரஸ்வதி நூலகம், நாயக்கர் காலத்துக்கும் முற்பட்டது என்பதை உறுதிசெய்திருக்கிருர்கள். சான்றுகளை, முன்பே குறிப்பிட்டுள்ளேன்.

இந்நூலகத்தில் ஆயிரம் ஆண்டுக்காலப் பெருமைக்குரிய படைப்புக்களின் சுவடிகள் வடமொழிச் சுவடிகள் உள்ளன. இவற்றை ஆய்வு செய்ய, திறமைமிக்க ஆய்வாளர்கள் செயல்பட வேண்டும்.

வடமொழிச் சுவடிகள் பற்றி இங்கே ஓரளவு சுருக்கமாக விளக்கம் தரப்படுகிறது. ஆய்வாளருக்கு, இது மிகவும் பயன்தரும் என்றெண்ணுகிறேன்.

1. வேதம், ஸம்ஹிதை, உபநிஷதங்கள், வேதாங்கம், பிராம்மணம் ஆகியவை பற்றி 697-சுவடிகளுக்குமேல் உள்ளன. இவை திரு. PPS சாஸ்திரியவர்களால் தொகுத்து வெளியிடப்பெற்ற வடமொழி அட்டவணைப் பட்டியல் பகுதி 1-ல் உள்ளவை.

2. வேதம், பிராஹ்மணம், ஆரண்யகம் பற்றி 729-சுவடிகளுக்கு மேல் உள்ளன. இவை வடமொழி அட்டவணைப்பட்டியல் 2-வது பகுதியாகும்.

3. உபநிஷதம், பாஷ்யம், வேதாங்கம் பற்றி 516-சுவடிகளுக்கு மேல் உள்ளன. இவை நூலக அட்டவணைப்பட்டியல் பகுதி 3-ல் உள்ளன.

4. வேதாங்கம், சிரௌதசூத்ரம், பாஷ்யம், சிரௌதப் பிரயோகம் பற்றி 414-நூல்களுக்கு மேல் உள்ளன. இவை அட்டவணைப்பட்டியல் 4-ம் பகுதியில் உள்ளவை.

5. கல்பசிரௌதப் பிரயோகம் பற்றி 420 நூல்கள் உள்ளன. இவை 5-வது அட்டவணைப் பட்டியல் பகுதியில் உள்ளன.

6. காவ்யங்கள் பற்றி, 1470-க்குமேல் நூல்கள் உள்ளன. இவை நூலக அட்டவணைப்பட்டியல் 6, 7-வது தொகுதிகளில் உள்ளன.

7. நாடகங்கள் பற்றி 465-நூல்களுக்கு மேல் உள்ளன. இவை அட்டவணைப்பட்டியல் 8-வது பகுதியில் உள்ளன.

8 சோகம், சந்தஸ், அலங்காரம் பற்றி 614-நூல்கள் உள்ளன. இவை அட்டவணைப்பட்டியல் 9-வது பகுதியில் உள்ளன.

9. வியாகரணம் பற்றி 646 நூல்களுக்கு மேல் உள்ளன இவை அட்டவணைப்பட்டியல் 10-வது பகுதியில் உள்ளன.

10. தர்சனம், நியாயம், வைசேஷிகம், சாங்கியம் யோகம்பற்றி 783-பிரதிகள் உள்ளன. இவை அட்டவணைப்பட்டியல் 11-வது பகுதியில் உள்ளன.

11. தர்சனம், பூர்வமீமாம்சா, உத்தர மீமாம்சா, (அத்வைதம்) பற்றி 658 பிரதிகள் உள்ளன. இவை அட்டவணைப் பட்டியல் 12-வது பகுதியில் உள்ளன.

12. அத்வைதம்பற்றி 360 பிரதிகள் உள்ளன. இவை அட்டவணைத் தொகுப்பில் 13-வது பகுதியில் உள்ளன.

13. விசிஷ்டாத்வைதம், துவைதம், சைவம், பக்தி, அவைதிகம்பற்றி 472-பிரதிகள் உள்ளன. இவை அட்டவணைப்பட்டியல் 14-வது பகுதியில் இடம் பெற்றுள்ளன.

14. மகாபாரதம், கீதை, ராமாயணம், மகா புராணம், உபபுராணம் பற்றி 2405-பிரதிகள் உள்ளன. இவை அட்டவணைத் தொகுப்பில் 15-வது பகுதியில் உள்ளன.

15. நாட்டியம், சங்கீதம், காமசாஸ்திரம், வைத்யம், ஜோதிடம்பற்றி, 1088-பிரதிகள் உள்ளன. இவை அட்டவணைப்பட்டியல் 16-வது குதியில் உள்ளன.

16. கிருஹ்ய சூத்திரம், பாஷ்யம், பிரயோகம் பற்றி 2442-பிரதிகள் உள்ளன. இவை அட்டவணைத் தொகுப்பில் 17-வது பகுதியில் குறிப்பிடப் படுகின்றன.

17. விரதம், ஆகமம், தந்திரம், தர்மசூத்ரம், பாஷ்யம் பிரயோகம் பற்றி 2682 பிரதிகள் உள்ளன. இவை நூலக அட்டவணைப்பட்டியலில் 18-வது பகுதியில் கூறப்பெறுகின்றன.

18. மந்திரம், ஸ்தோத்திரம் (அகரவரிசைப் பட்டியல் சேர்ந்து உள்ளவை) பற்றி 7621-பிரதிகள் உள்ளன. இவை அகரவரிசைப்பட்டியலுடன் அட்டவணைப்பட்டியல் 19-வது பகுதியில் கூறப் பெறுகின்றன.

19. மந்திர சாஸ்திரங்கள்பற்றி 1320க்குமேல் பிரதிகள் உள்ளன. இவை அட்டவணைப்பட்டியல் 20-வது பகுதியில் விளக்கப்பெறுகின்றன.

20. ஸ்தோத்திரங்கள்பற்றி 1575-பிரதிகளுக்கு மேல் உள்ளன. இவை அட்டவணைப்பட்டியல் 21-வது பகுதியில் விளக்கம் கூறப்பெறுகின்றன.

ஷெ அட்டவணைத்தொகுப்பில் சேர்க்கப்பெருத ை ப்பிரதிகள் ஏறக்குறைய 5000க்குமேல் உள்ளன என்று தெரிகிறது.

இங்கே சிறப்பாகக் குறிப்பிடுவதற்குரிய தொன்று சவனத்திற்குரியது. மந்திர சாஸ்திரங் களில் அரிய பல நூல்கள் வேறு **எங்கும்** காண முடியாதவை உள்ளன. உபவேதமான **யாமள தந்திரங்கள் 32** உள்ளவை **கி. பி. 7-8ம்** நூற்றுண் டிற்கும் முற்பட்டவை இந்நூலகத்தில் உள்ளன என்று வடமொழிப்பேரறிஞர் M. கிருஷ்ணமாச் சாரியார் கூறுகிறுர்.

[வடமொழி இலக்கிய வரலாறு பக். 78]

'**சங்கர விஜயம்**' ஒன்று, வேறு எங்கும் காண முடியாத பிரதி ஒன்று இந்நூலகத்தில் உள்ளது.

**தந்திரவார்த்திகம்** - குமாரிலப்பட்டரின் கி. பி. 7-ம் நூற்றுண்டைச்சார்ந்த படைப்பாகும் (A. C. பர்னல்-கியாட்லாக் வால் II பக்கம் 81)

'**பலவதி**' என்ற ஜைமினி சூத்திரவிருத்தி மீமாம்ஸா நூல் கி. பி. 9-ம் நூற்றுண்டைச்சார்ந்த நூலென்று கருதமுடிகிறது. [A. C. பர்னல் கியா. வால். II பக்கம் 82]

**ஆனந்ததீர்த்த மத்வாசாரியரின் துவைத நூல்கள்** கி. பி. 1118-1197 ஆண்டுகளுக்கு உட் பட்டவை. (பர்னல் வால் II பக்கம் 98)

**பிரயோகபாரிஜாதம்** கோத்ர பிரவர நிர்ணயம் கி. பி. 12 ம் நூற்றுண்டுக் காலத்திற்குரியது. (பர்னல் வால் II பக்கம் 131)

**பூலோகமல்லகோமேசுவரன்** என்ற சாளுக்கிய மன்னன் காலத்துக்குரியது **அபிலாஷிதார்த்த சிந்தாமணி,** கி. பி. 1127-1138 காலத்துக்குரியது; (பர்னல் வால் II பக்கம் 141)

**சதுர்வர்க்க சிந்தாமணி,** தேவகிரி ஹேமாத்ரியின் படைப்பு கி. பி. 1250க்குரியது; (பர்னல் வால் II பக்கம் 128)

**தார்க்கீகரணம்** ஸர்வதர்சன சங்கிரகம், கி. பி. 14-ம் நூற்றுண்டுக்குரியது; (பர்னல் வால் II பக் 119)

**சிவரகஸ்யம்** கி. பி. 1300க்கும் முற்பட்ட தொகுப்பு (பர்னல் வால் III பக்கம் 206)

**மகாபாரதம்** சங்கர வியாக்யானம், வடமொழி, தெலுங்கு லிபியில் உள்ளவை. கி. பி. 7-ம் நூற்றுண்டிற்கு முற்பட்டவை; (பர்னல் வால் III பக்கம் 180)

**நளோபாக்யானம்** கி பி. 7-ம் நூற்றுண்டுக்கு முந்தியது (பர்னல் வால் III பக்கம் 180.)

திரு P. P. S. சாஸ்திரியவர்கள் அட்டவணைப் பட்டியல் தொகுப்புக்களை, நூலகத்தின் சார்பில் வெளியிட்டார். இவற்றில் பிற்காலத்துத் தொகுப்புக் களும் உள்ளன. நாயக்கர், மராட்டியர் காலத்துத் தொகுப்புகள் இவற்றில் சேர்ந்தவையே.

ஷை தொகுப்புக்களில் 1934ம் ஆண்டுவரையில், உள்ளனவாகக் கூறப்பெறும் பிரதிகள் 24,432

என்று திரு. P P S. சாஸ்திரியவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

நாயக்கர் காலத்துக்கு முந்தியதான கால எல்லையில் கி. பி. 1535க்கு முற்பட்டகாலத்து நூல்களை, ஆய்வுசெய்தால், பல அரிய செய்திகளை அறியலாம்.

குறிப்பாக, இந்நூலகத்தில் உள்ள வடமொழி நூல்களை வடமொழிப் பேரறிஞர்களைக் கொண்ட ஆய்வுக்குழுவினர் ஆய்வு செய்தால் பெரும் பயன் உண்டு, இந்நாட்டுக்கும் ஆற்றிய பெருந் தொண்டாகும் அது என்பதில் ஐயமில்லை.

## தஞ்சை ஆந்திர நாயக்கமன்னர் காலமும் சரஸ்வதி நூலகமும்

கரிகால் சோழமன்னன் காலத்திலேயே, ஆந்திர உறவு ஏற்பட்டுவிட்டது. பிற்காலச் சோழர்களும் கி. பி. 8-ம் நூற்றுண்டுமுதல் ஆந்திர உறவு ஏற்படுத்திக்கொண்டனர் என்ற உண்மையை முன்பே குறிப்பிட்டுள்ளேன். கி. பி. 1535-ல் வீரசேகர சோழன் ஆட்சி தஞ்சையில் இருந்தது என்ற உண்மையையும் முன்னர் குறிப்பிட்டு உள்ளேன்.

சிறப்பான செய்தி என்னவென்றுல், ஆந்திரர்–சோழர் இருவகையினருக்கும், சூரிய வம்சமான இக்ஷ்வாகுவம்சமே என்று கூறப்படுகிற உண்மையை உணரவேண்டும். [Sii III Part III

**P. 383 F Verse. 5 See also Ei III P. 79] [Early dynastys of Andrapradesh by B. V. Krishnarow Page 284]**

பிற்காலச்சோழர்கள், தஞ்சையில் ஆட்சி புரிந்த காலத்தில் கீழைச்சாளுக்கிய சம்பந்தம் தொடர்ந்து ஏற்படுத்திக் கொண்டனர். முதற் குலோத்துங்க சோழன்முதல், ஆந்திர சாளுக்கியர் கள் தமிழ் பயின்றவர்களாகவும் சோழமன்னர்கள் தெலுங்கு பயின்றவர்களாகவும் விளங்கினர் என்பதில் முரணில்லை. ஆந்திர நாட்டுத் தெலுங்க மக்கள் தமிழகத்தில் சோழ நாட்டிலும், சோழ நாட்டு மக்கள் ஆந்திர நாட்டிலும் பரவினர் என்பதும் முரணில்லையன்றோ ?

எனவே தஞ்சையில் தெலுங்கு மொழி பேசும் மக்களும் ஆந்திரகலாசாரமும் கலப்புற்றன என் பதில் ஐயமில்லை. இது காரணமாக, விஜய நகர அரசு ஏற்பட்டபின்பு, தஞ்சையில் நாயக்க அரசு ஏற்படப் போதுமான வாய்ப்பு ஏற்பட்டது என்றே கருதமுடிகின்றது. தெலுங்கு மொழியும் வளர்ச்சி பெற்றது. எனவே தெலுங்குமொழியும், தெலுங்கு மொழி நூல்களும் முதற் குலோத்துங்கன் காலத்தி லேயே தஞ்சை சரஸ்வதி நூலகத்தில் இடம் பெற்று விட்டன என்று கூறலாம்.

**நன்னசோழன்** இயற்றிய தெலுங்கு மொழிக் காவியம் **குமாரசம்பவம், நன்னையபட்டர்** எழுதிய

தெலுங்கு மொழி **மகாபாரதம், ஜயசேனாபதி** என்ற பட்டம் பெற்ற சாளுக்கிய மன்னன் இரண்டாம் ஜயசிம்மன் எழுதிய **நிருத்தரத்னவளி** ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

ஆந்திர நாட்டில் வாழ்ந்த அறிஞர் **'எர்ரபட்டா'** என்பவர் எழுதியதும், சிறந்த மருத்துவ நுட்பம் பற்றிக்கூறுவதுமான **வைத்திய சிந்தாமணி** (765) என்னும் தெலுங்கு மொழி நூல் கி. பி. 1300 கால எல்லை கொண்டது சரஸ்வதி நூலகத்தில் உள்ளது.

கி. பி. 1455ல் எழுதப்பட்டதாகக் கருதப்படும் ஆந்திர பாகவதம் தெலுங்கு மொழி நூல் (No. 23) கி. பி. 1449ல் எழுதப்பட்டதாகக் கருதப்படும் காளஹஸ்தி மாகாத்மியம், (No. 149, 151) கி. பி. 1458ல் எழுதப்பட்டதான ஆந்திர மகாபாரதம் (No. 77) ஆகிய தெலுங்கு மொழி நூல்கள் சோழர் காலத்துத் தொகுப்புக்கள்.

கி. பி. 1465ல் எழுதப்பட்டதாகக் குறிப்பிடப் படும் **கஜ சாஸ்திரம், அசுவசாஸ்திரம** தெலுங்கு மொழியில் உள்ளன. இரண்டாம் குலோத்துங்க சோழனை 'துரகவித்யா விநோதன்' என்று பாராட்டிக்கூறப் பெறுவதை இங்கே ஒப்புநோக்க வேண்டும். அசுவ வைத்யநூலான **'ஹயலக்ஷண விலாஸம்'** தெலுங்கு மொழியில் உள்ளது. இந்நூலை எழுதியவர் ஆந்திர நாட்டு பைரவாசாரியரின் புதல்வரான **மனுமஞ்சி பட்டர்** என்பவர்

(No. 1039 1041) பாலகாப்பியர் என்ற அறிஞர் எழுதிய **கஜ சாஸ்திரம், வைசம்பாயனர்** என்ற அறிஞர் எழுதிய **கஜசாஸ்திரம்**-புகழ்பெற்ற பழமையான நூல்கள்—தெலுங்கு மொழியில் உள்ளவை.

இந்நூல்கள் சரஸ்வதி நூலகத்தில் இடம் பெற்றிருக்கும் சிறப்பை, நோக்கும்போது, சோழர்களும் ஆந்திர நாயக்கமன்னர்களும், யானைப்படை, குதிரைப்படைகளே, சிறப்பாகக் கொண்டவர்கள் என்பதனுல் அன்ருே, இவை, தொகுக்கப் பெற்றுள்ளன என்று நன்கு அறியலாம். (No 1027, 1037, 1025, 1026)

இவையன்றி, பழமைச்சிறப்புடைய நிகண்டு நூல்கள், அபிதான ரத்னமாலா, அஷ்டாங்க நிகண்டு, குணபதம், தன்வந்திரி நிகண்டு முதலியன தெலுங்கு மொழிப் படைப்புக்கள் இந் நூலகத்தில் சிறப்புக்குரியவை.

மதுரையில் 14ம் நூற்ருண்டில் முகம்மதியர்கள் ஏறக்குறைய 75-ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர். அந்நிலையிலும் தஞ்சையில் சோழர் ஆட்சி மாறவில்லை. முகம்மதியரின் ஆட்சியைத்துரத்திய கம்பண்ண உடையார், இந்து மன்னராட்சியைக் காக்கவே, தென்னுட்டுக்குப் படையுடன் வந்தவர். அவர் வருகை தந்தபோதும், தஞ்சையில் சோழ மன்னன் ஆட்சி, நிலை குலையாமல் இருந்ததைக் கண்ணுற்ருர். அமைதியான முறையில் சோழ

மன்னர் ஆட்சி நடைபெறுவது கண்டு, திரும்பிச் சென்றுர் கம்பண்ணர். எனவே, நாடுபிடிக்கும் ஆசை விஜயநகரத்து மன்னருக்கு இல்லை என்பது தெளிவு.

மதுரைப்பாண்டியன் சந்திரசேகரனுக்கும், தஞ்சைச்சோழன் வீரசேகரனுக்கும் ஏற்பட்ட போரில், பாண்டியனின் முறையீட்டின் பேரில்தான், விஜயநகரமன்னர், அமைதி காக்க நாகமநாயக்கரின் தலைமையில் படையனுப்பியதாக வரலாறு செப்புகின்றது.

'தஞ்சை மான்யுவல் எழுதிய திருவெங்குசாமி ராவ் அவர்கள்,' விளக்கம் தருகிறுர்; தஞ்சை மான்யுவல் பகுதி V அத் IIIல் தஞ்சாவூரிவாரு சரித்திரம் என்னும் நூலை அடிப்படையாகக் கொண்டு எழுதியுள்ளார்: பக். 747 to 750.

தஞ்சைநாயக்கர் வரலாறு எழுதிய குருகண்டி சீதாராமையா அவர்கள், அந்நூல் பக். 74ல் விளக்கம் தருகிறுர்.

'டெய்லர் ஹிஸ்டாரிகல் ரிபோர்ட்' இதே உண்மையை, பக். 10-11ல் கூறுகின்றது.

அச்சுதராயரால் அனுப்பப் பெற்ற, நாகம நாயக்கன், பாண்டியன் சோழன் இருவருடைய பகையைத்தணித்து, தானே தஞ்சை ஆட்சியையும் மதுரை ஆட்சியையும் பெற்று ஆதிக்கம் நிலை

நாட்டத் துணிந்தான். இதன் பின்னர் 'செய்தி யறிந்த விஜயநகரமன்னர், நாகமன் மகன் விசுவநாத நாயக்கனை அனுப்பி அமைதி நிலை நாட்டச்செய்தார்.

சோழநாடு, பாண்டியநாடு இரண்டும் அச்சுத ராயரின் கீழ், அரசுகளாகவே இருந்தன என்றும், வீரசேகரசோழனை மீண்டும் பட்டத்தில் அமர்த்தினர் என்றும், விசுவநாத நாயக்கன் பாதுகாப்பாகத் தஞ்சையில் இருந்தானென்றும், பின்னர் விசுவநாதனை மதுரைக்கு அனுப்பிவிட்டு, சேவப்பநாயக்கர் என்பவரை தஞ்சைக்குப் பாது காவலனாக அனுப்பினர் என்றும், திருமலை-தேவஸ்தானம் 157 of 1924 எபிக்ராபி ரிபோர்ட், பக். 221ல் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

சேவப்பநாயக்கருக்கு, தஞ்சை ஆட்சியில் உரிமைகிடைத்தது கி. பி. 1549ல் தான் என்றும், அதுவரை விசுவநாதனே ஆட்சிப் பொறுப்பைக் கவனித்தான் என்றும், பெயரளவில் வீரசேகர சோழன் மன்னனாக இருந்தானென்றும், திரு. விருத்த கிரீசன், 'தஞ்சை நாயக்கர் வரலாறு' நூலில் குறிப்பிட்டுள்ளார். [அண்ணாமலை சர்வகலாசாலை, ஜர்னல் வால்யூம் )X 251 ]

சேவப்ப நாயக்கரின் ஆட்சி கி. பி. 1535ல் ஏற்பட்டது என்று, தஞ்சை ஆந்திர நாயக்கர் சரித்திரம் எழுதிய K. சீதாராமையா கூறுகிறார்.

அதற்குச் சான்றாக, எபிக்ராபி 271 of 1907 திருவிடைமருதூர் கல்வெட்டைக் குறிப்பிடுகின்றார். (விருத்தகிரீசன்–அண். ஜர். வால். IX பக். 252)

சான்று கூறுகின்றவாறு, **சேவப்பநாயக்கர்** தஞ்சையில் ஆட்சி புரிந்தகாலம் கி. பி. 1535-லிருந்து 1561-வரையில் என்று அறியமுடிகிறது.

இம்மன்னர் சிறந்த சிவபக்தர், நாயக்கமன்னர்களில் அனைவரும் வைணவக்கொள்கை கொண்டிருந்தவர்களே எனினும் சைவசமயத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தனர் என்றே தெரிகிறது. சேவப்பநாயக்கர், சிவவழிபாட்டிலும் ஈடுபட்டவர். திருவண்ணாமலை, விருத்தாசலம் ஆகிய தலங்களில் கோயில்களில் திருப்பணி புரிந்து, அறக்கட்டளைகள் ஏற்படுத்தியவர் என்று சாஸனச் சான்றுகள் கூறுகின்றன; குடந்தையைச் சார்ந்த **சுவாமிமலை**-முருகன் கோயிலிலும் இம்மன்னர் அறக்கட்டளை ஏற்படுத்தியதாகச் சான்று உள்ளது.

தகுதிவாய்ந்தவராக, சேவப்பநாயக்கரை, அச்சுதராயர் தஞ்சைக்கு அனுப்பியதோடு, இம்மன்னருக்கு, உற்றதுணையாக, புகழ் பெற்ற **கோவிந்ததீக்ஷிதர்** என்ற அந்தணரையும் உடன் அனுப்பிவைத்தார் விஜயநகர மன்னர் அவையில் விளங்கிய கோவிந்த தீக்ஷிதர்–ஜோதிஷம், கணிதம், வியாகரணம், வேதாந்தம் ஆகியவற்றில் நிபுணராக விளங்கிய அந்தணச்சிறுவர். பதினெட்டு வயதுள்ள

அந்தணச்சிறுவரை தஞ்சைக்கு, சேவப்பருக்கு உற்றதுணையாக அனுப்பினர் அச்சுதராயர்.

சேவப்பர், தஞ்சையில் மன்னராக ஆட்சி புரிந்தகாலத்தில் கோவிந்த தீக்ஷிதர், ராஜகுருவாகவும், அமைச்சராகவும் விளங்கினர், கோவிந்த தீக்ஷிதர், கன்னடப் பிராந்தியத்திலிருந்து, விஜய நகரம் சென்றவர் என்று அறிய முடிகிறது.

கோவிந்த தீக்ஷிதர், பன்மொழிப் புலமையும் பெற்றவராக விளங்கினர். கன்னடம், தெலுங்கு, வடமொழி, தமிழ்-ஆகியமொழிகளில் புலமை பெற்றவர். சிறந்த சிவநெறிச் செல்வர். அத்வைதக் கொள்கையில் புகழ் பெற்றவர். தேர்ந்த மதிநுட்பம் கொண்டவர்; சேவப்ப நாயக்கரின் அவையில் கோவிந்த தீக்ஷிதர் மிகுபுகழ் பெற்று விளங்கினர். சோழநாட்டில் சைவநெறி-வைதிகசமயம் செழிப்புற்றிருந்தகாலம் இக்காலமே யாகும்; சமயவளர்ச்சியிலும், கல்வித்துறை வளர்ச்சியிலும் தஞ்சை புகழ் பெறுவதற்கு பணிபுரிந்தவர்களில் நாயக்கர் கால ஆட்சியில் கோவிந்த தீக்ஷிதர் பெரும்பங்கு பெற்றவராவார்.

சேவப்ப நாயக்கர் ஆட்சிக்காலத்தில் தஞ்சைச் சரஸ்வதி நூலகம், நன்கு வளர்ச்சியுற்றதெனலாம்; பல்கலைப்புலமை சான்ற தீக்ஷிதரை அமைச்சராகக் கொண்ட நாயக்கர் ஆட்சியில், நூலகம் வளர்ச்சியுற்றதில் வியப்பில்லை.

வடமொழி, தெலுங்கு, தமிழ் - ஆகிய மொழிகளில் உள்ள கருவூலங்களை, நூலகத்தில் தொகுக்கவும் பாதுகாக்கவும் பெருமுயற்சி மேற்கொண்டவர்களில் தீக்ஷிதருக்குச்சிறந்த பெருமை உண்டு. வடமொழி யில் ஆயிரக்கணக்கிலான வேத சாஸ்திர புராண காவ்ய வைத்ய நூல்களைக் கண்ணுற்ற தீக்ஷிதர், தாம் வாழ்நாளில் செய்த தவப்பயனைக் கருதி அவற்றைப் பாதுகாத்தவர் என்பதில் ஐயமில்லை.

சோழமரபு பின்பற்றியே நாயக்கமன்னர்கள் ஆட்சி புரிந்தார்கள்; தமிழ், வடமொழி, தெலுங்கு ஆகிய மும்மொழிகளிலும் உள்ள சுவடிகளை, பழமை யான சுவடிகளைப் படி எடுத்து எழுதச்செய்து பாது காத்த பெருமை நாயக்கமன்னர்களுக்குரியதே. இந்தப் பணிக்காக, தேர்ந்த எழுத்தர்களை நியமித் திருந்தார்கள்.

கி. பி. 1508ல் படி எடுக்கப்பட்டதான 'பிரபுலிங்க லீலை' என்னும் நூல், இந்நூலகத்தில் தெலுங்கு மொழியில் உள்ளது. 14ம் நூற்றுண்டில் பீடுபர்த்தி சோமண்ணு என்ற தெலுங்குக் கவிஞரால் எழுதப் பெற்ற வீரசைவப்புகழ் பரப்பும் நூல் பிரபுலிங்கலீலை. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தமிழில் இந்நூலை இயற்றியுள்ளார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

சரஸ்வதி நூலகத்தில் இப்போதுள்ளவை, தெலுங்கு மொழிச்சுவடி நூல்கள் 1000 க்கு மேற்

பட்டவை உள்ளன; இவையாவும் சிறந்த படைப்புக்கள் என்று கருதப்படுகின்றன.

பத்யகாவ்யம், துவிபதகாவ்யம், சதகங்கள், தண்டகங்கள், கானம், யக்ஷகானம், நாடகம், வசனகாவ்யம், பரதம், ஜோஸ்யம், வைத்யம், வேதாந்தம் ஆகிய பல துறைகளிலும் சுவடிகள் தெலுங்கு மொழியில் உள்ளன; சில்லறைப் பிரபந்தங்கள், பதம், வர்ணம், கீர்த்தனம் ஆகியவையும் உள்ளன.

தெலுங்கு மொழிப் படைப்புக்கள் பெரும்பாலும் பாமர இலக்கியமாகவே உள்ளன. ஜனரஞ்சகமான அமைப்பில் தெலுங்கு மொழியில் படைப்புக்கள் உருவாகியிருப்பதை இந்நூலகத்தில் காணலாம்.

இவையன்றி, வடமொழி நூல்களும் தமிழ்மொழி நூல்களும், தெலுங்கு லிபியில் எழுதப்பட்டிருக்கும் முறையும் இந்நூலகச் சுவடிகளில் காண முடிகின்றது.

சேவப்பநாயக்கருக்குப்பின் அவர் புதல்வர் அச்சுதப்பநாயக்கர் கி. பி. 1561–1614 வரை ஆட்சி புரிந்தவர். இவ்விருமன்னர் காலங்களிலும், சோழர்காலக்கோயில், கோட்டை, மதில் அரண்மனை, மாடமாளிகைகள், அகழிகள், பழுது பார்த்துக் கட்டப்பெற்றன என்று வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

அச்சுதப்பநாயக்கருக்குப் பின் அவர் புதல்வர் ரகுநாத நாயக்கர் கி. பி. 1614-1638 வரையிலும் அவர்புதல்வர் விஜயராகவ நாயக்கர் கி. பி. 1638-1673 வரையிலும் தஞ்சையில் ஆட்சி புரிந்த நாயக்க மன்னர்கள்.

சேவப்பர், அச்சுதப்பர், ரகுநாதர் ஆகிய மூவேந்தர் காலத்தும், கோவிந்த தீக்ஷிதர், தஞ்சையில் அமைச்சராக விளங்கியவராவார். ரகுநாத நாயக்கரின் ஆட்சியில் முற்பகுதியில் சில ஆண்டுகளே தீக்ஷிதர் அவர்கள் இருந்தார் என்றும் தொண்ணூறு வயது கடந்த நிலையில் ஓய்வு பெற்றாரென்றும் தெரிகிறது.

தீக்ஷிதர் அவர்கள், பதினெட்டு வயது முதல் தஞ்சை நாயக்கமன்னர் ஆட்சியில் அமைச்சராக விளங்கிய காலத்தில் சரஸ்வதி நூலகம் எத்துணை பெருமை பெற்றிருக்கும் என்பதில் வியப்பில்லை. ராஜநீதி, தண்டநீதி முற்றக் கற்றவராகவும், அக்னிஹோத்ரியாகவும், மந்திர சித்தி பெற்றவராகவும் வேதசாஸ்திர விற்பன்னராகவும் விளங்கியவர். இவர் வரலாறு விரிப்பின் பெருகும். நூலகம் தொடர்பான செய்திகளையே இங்கே குறிப்பிடுவது இன்றியமையாததாகும்.

**'சங்கீத சுதா'** என்ற இசை நூலை ரகுநாத நாயக்கர் எழுதியதாகவும் அந்நூலுக்கு முன்னுரையாக அரிய பல இசைச் செய்திகளையும் வரலாற்றுச் செய்திகளையும் கோவிந்த தீக்ஷிதர் எழுதியுள்ள

தாகவும் தெரிகிறது. இந்நூல், இந்நூலகத்தில் காணப்படவில்லை; சென்னை ஓரியண்டல் கைப்பிரதி நூலகத்தில் உள்ளதாகத் தெரிகிறது. இந்நூலகத்தில் இருக்கவேண்டிய இதுபோன்ற நூல்கள், வேறிடங்களில் காணப்படுவதற்குக் காரணம் என்ன? இந்நூலகத்திலிருந்து இந்நூல் போன்ற பல அரிய ஏடுகள், வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன என்பதில் ஐயமில்லை.

அச்சுதப்ப நாயக்கர், ரகுநாத நாயக்கர் இருவர் காலத்திலும் கோவிந்த தீக்ஷிதரின் புதல்வர் **யக்ஞநாராயணதீக்ஷிதர்** என்பவர் விளங்கியவர். அவைப் பண்டிதராக விளங்கியவர். இவர் எழுதிய நூல் **சாகித்யரத்னாகரம்** என்னும் நூல். இந்நூலில் பல வரலாற்றுக் குறிப்புக்கள் உள்ளன; இந்நூல், இந்நூலகத்தில் உள்ளது.

**ராஜசூடாமணி தீக்ஷிதர்** எழுதிய **ருக்மணி பரிணயம்** என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. அரசவைப் பண்டிதராக இவரியற்றிய நூல் இந்நூலகத்தில் உள்ளது.

யக்ஞநாராயண தீக்ஷிதர் எழுதிய மற்றொரு காவ்யம், **ரகுநாத விலாஸம்.**

அச்சுதப்ப நாயக்கரின் மனைவி **திருமலாம்பா** அரசி எழுதியது, '**வரதாம்பிகா பரிணயம்**' என்னும் நாடகம்.

அவைப்புலவரில் ஒருவரான, **ராஜநாத டிண்டிமகவி** எழுதிய வரலாற்றுக் காப்பியம் **'அச்சுதராயாப்யுதயம்'**. நாயக்கமன்னர் காலத்தவையும் வடமொழி, தெலுங்கு மொழி படைப்புக்களுமான நூற்சுவடிகள் இந்நூலகத்தில் முறையே இடம் பெற்றுள்ளன.

ரகுநாத நாயக்கமன்னர், பெரும்புலமை பெற்றிருந்தார். இம்மன்னருடைய அவை, வித்யா பீடமாக விளங்கியது. நாடகம், இசை, நாட்டியம், யக்ஷகானம் ஆகியவை சிறப்பாக இடம் பெற்றன இம்மன்னர் அவையில்.

இம்மன்னர் இயற்றியவை **பாரிஜாதாபஹரணம் கஜேந்திரமோக்ஷம், ஜானகி பரிணயம், ருக்மணி கிருஷ்ண விவாஹம், அச்சுதாப்யுதயம், யக்ஷகானம்** ஆகியவை குறிப்பிடத்தக்கவை; இம்மன்னர் இயற்றிய மற்றும் சில நூல்களாவன; **வான்மீகி சரிதம், ரகுநாதராமாயணம், நளசரித்திரம், சிருங்காரசாவித்திரி**, ஆகியவை.

இம்மன்னர் படைப்பான பல நூற்சுவடிகள் இந்நூலகத்தில் உள்ளன. ஆனால், 'யக்ஷகானம்' காணப்பெறவில்லை; இசை பற்றின நூலானதால், அது பிறர் கைப்பற்றி இருக்கக்கூடும் எனக்கருதப்படுகிறது. வருங்காலத்தில் இந்த 'யக்ஷகானம்' கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

ரகுநாத நாயக்கமன்னர் தனிப்புகழ் பெற்றவர். இன்னும் சிறப்பாகக் குறிப்பிட்டால், தெலுங்கு

மொழிக் கவிஞர்களாக விளங்கிய தெலுங்க மன்னர்கள் மூவரில் ரகுநாத நாயக்கர் நடுநாயகம் வகிப்பவராவார்; மூவராகக் குறிப்பிடப்படுபவர்கள், கிருஷ்ணதேவராயர், ரகுநாதர், நன்ன சோழன் ஆகிய மூவரேயாவர்.

ரகுநாத நாயக்கமன்னரின் மனைவி, **ராமபத்திராம்பா**, புலமைமிக்க அரசியாவாள். இவ்வரசி எழுதிய காவ்யமே, **'ரகுநாத நாயகாப்யுதயம்'** என்ற நூலாகும். இவ்வரசி, **செங்கல்வகாளகவி** என்ற புலவரின் மாணவியாகும்; வடமொழி, தெலுங்கு இருமொழிகளிலும் புலமை மிக்கவள்.

ரகுநாத நாயக்க மன்னரின் அவை, கல்விக் களஞ்சியமாகக் காட்சியளித்தது. எம்மன்னரும் புகழும் கவி மன்னராகத் திகழ்ந்தவர் ரகுநாதர்.

விஜய நகரத்தில் கிருஷ்ணதேவராயர் அவையில், **'அஷ்டதிக் கஜங்கள்'** என்று புலவர்கள் எவ்வாறு பெருமை பெற்றிருந்தார்களோ, அவ்விதச் சிறப்புடனேயே ரகுநாத மன்னன் அவையில் புலவர்கள் புகழ்கொண்டிருந்தார்கள்.

ரகுநாத மன்னன் அவையில், பெண் புலவர்கள் பலர் இருந்தனர். **சுகவாணி** என்று பட்டம்பெற்ற **மதுரவாணி** என்னும் பெண் கவிஞர் அவையில் இருந்தார். இப்பெண் கவிஞர் வடமொழியில், இராமாயணம், குமாரஸம்பவம், நைஷதம் ஆகியவை இயற்றியுள்ளார்.

ரகுநாத நாயக்க மன்னரின் அவைப்புலவரில் சேமகூரி வேங்கடகவி என்ற புலவர் இருந்தார்; இப்புலவர், ரகுநாத மன்னனைப்பற்றி **விஜய விலாஸம்** என்ற பெயரில் காவியம் புனைந்துள்ளார். வரலாற்றுச் சிறப்புடையது இக்காவியம். ரகுநாத மன்னனின் தஞ்சை அரண்மனைக்கு 'விஜய விலாஸம்' என்று பெயர் இருந்ததால், அப்பெயரைக் காவியத்துக்குச் சூட்டினுர் புலவர். ரகுநாத நாயகர் புரிந்த பெரும் போர், தோகூர்ப்போர், தேவி பட்டணம் சோழகனுடன் போர், யாழ்ப்பாணத்தின் மீது போர் ஆகியவற்றை விரித்துரைப்பதே இக்காவியச் சிறப்புக்கள்.

விஜய விலாஸ அரண்மனையில் ஓவியங்கள் பல இருந்த செய்திகளையும் இக்காவியம் விரித்துரைக்கின்றது. இந்நூல் சரஸ்வதி நூலகத்தில் உள்ளது.

'**சாரங்கதரா**' என்ற காவியத்தையும் இப்புலவர் இயற்றினுர்; குலோத்துங்க சோழன் காலம் முதல் தஞ்சையில் பரவிய கதை சாரங்கதரா என்ற சரித்திரம்; சோழமரபுக்குத் தொடர்புள்ளகதை. இக்காவியம் — சரஸ்வதி நூலகத்தில் உள்ளது.

இம்மன்னர் காலத்து மற்ருெரு பெரும் புலவர், '**கிருஷ்ணுத்வரி**' கவி. இவர் தெலுங்கு மொழியில் நைஷத பாரிஜாதீயம், என்ற சிலேடைக் காவியம் எழுதியுள்ளார். இவர் ரகுநாத பூபாலியம் முதலிய வேறுசில வடமொழி இலக்கியங்களும் படைத்துள்ளார்.

ரகுநாத நாயக்கர், சைவம், வைணவம் இரண்டிலும் ஈடுபாடு கொண்டவர். மாத்வாசாரிய ரான விஜயீந்திரரையும் சுமதீந்திரரையும் தன் அவையில் வரவேற்று உபசரித்தவர். விருப்பு வெறுப்பின்றி எல்லா மதங்களையும் ஆதரித்த மன்னர்.

புகழ் பெற்ற ஸ்ரீ நாராயண தீர்த்தகுரு என்ற பெரியார். இம்மன்னர் காலத்தவர். கிருஷ்ணலீலா தரங்கிணி என்னும் அரிய படைப்பை, இம்மன்னர் காலத்தில் தான் இயற்றினர். வடமொழி, தெலுங்கு இருமொழிகளிலும் ஆற்றல் பெற்ற பெரியார் இவர்.

இப்பெரியார் ஆந்திர நாட்டில் கிருஷ்ணு மாவட்டத்தில் முக்தியாலா கிராமத்தில் பிறந்தவர். இவர் தந்தை கங்காதரர்; தாயின் நாமம் பார்வதி. இவருடைய ஆசாரியர் சிவராமானந்ததீர்த்தர் என்பவர்.

வடமொழியில், ராகரஸம் பற்றின லக்ஷ்யக் கிரந்தமாக நாட்டிய அமைப்பும் சேர்த்து, வசனம்-கவிதை கொண்ட தரங்கிணி இயற்றினர். 'பாரிஜாதாபஹரணம்' என்ற நாடகமும் இப்புலவர் இயற்றியதே. ரகுநாத மன்னர் அவையில் இப்பெரியார் சில ஆண்டுகள் விளங்கியவர். பின்னர், தஞ்சைக்கு அருகில் உள்ள மெரட்டூருக்குச் சென்றுர். அங்கே, இருந்த பல தெலுங்குப் புலவர் களுடன் தொடர்பு கொண்டார்.

புதிய அமைப்பில் இசைப் படைப்புக்களை உருவாக்கினர். சிறப்பாக '**பாகவதமேளா**' அமைப்புக்கு வழிகாட்டிய பெரியார் நாராயணதீர்த்தரே யாவர்; இதன் தொடர்பாகவே ரகுநாத நாயக்கர், மெரட்டூர் பாகவதமேளா நாட்டிய நிகழ்ச்சிக்கு அறக்கட்டளையும் ஏற்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மெரட்டூரில் சில ஆண்டுகள் வாழ்ந்து, பின்னர், செந்தலைக்குப் பக்கத்தில் உள்ள வரகூரில், ஸ்ரீ வேங்கடேசப் பெருமானை வழிபட்டு, பின்னர் காவிரிக்கரையில் உள்ள திருப்பூந்துருத்தியில் தங்கி ஜீவ சமாதியுற்றார். இவர் நூல்கள் நூலகத்தில் உள்ளன; அச்சுதப்பநாயக்கர் அவையிலும் ரகுநாதர் அவையிலும் இப்பெரியார் விளங்கியவராதல் வேண்டும்.

ரகுநாத நாயக்க மன்னருக்குப்பின், தஞ்சையில் ஆட்சி புரிந்தவர் **விஜயராகவ நாயக்கர்** – கி. பி. 1638–1673. இம்மன்னர் காலத்தில் தஞ்சை பெரும் புகழ்பெற்றது. இசை, நாட்டியம், நாடகம் வளர்ச்சி பெற்றன. இசைப்புலவர் பலர், இம்மன்னரின் அவையில் குழுமியிருந்தனர். ரகுநாத நாயக்கரைப் போன்றே, இம்மன்னரும் வடமொழி, தெலுங்கு இரண்டிலும் புலமை பெற்றவர். இம்மன்னர் அவையை அலங்கரித்த புலவர்களில் முதன்மையானவர் **செங்கல்வகாளகவி** என்பவர். இப்புலவர், விஜயராகவ நாயக்கர்மீது இயற்றிய நூல் 'ராஜ

கோபால விலாஸம்'. இந்நூலில் நாயக்கமன்னர் காலத்து வரலாற்றுக் குறிப்புக்கள் மிகுதியாக உள்ளன. இம்மன்னர் காலத்துப் படைப்புக்கள், தெலுங்கு, வடமொழி இரண்டிலும் இயற்றப் பெற்றவை இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

விஜயராகவ நாயக்கர், தீவிர வைணவபக்தராக விளங்கினார். இம்மன்னருக்கு அமைச்சராக விளங்கியவர் குமாரதாத்தாசாரியார் என்பவர். இவர், மன்னனின் ராஜகுருவாகவும் அமைச்சராகவும் விளங்கியவர்; விஜயராகவ நாயக்கர், இப்புலவரிடம் பெருமதிப்பும் பக்தியும் கொண்டிருந்தார்; ஆசாரியராக விளங்கிய இவரைத் தெய்வாம்சமாகக் கருதிப் போற்றினார் மன்னர்.

இம்மன்னர் காலத்தில், **விஜயவிலாஸம்** என்ற அரண்மனை **விஜயராக விலாஸம்** என்று அழைக்கப் பெற்றது. இம்மன்னர் காலத்தில் சரஸ்வதி நூலகம், பல்கலைக்கழகமாக விளங்கிய தென்றால் மிகையாகாது.

இம்மன்னர் அவையில் அங்கம் வகித்த, பெண் கலைஞர் சந்திரரேகை — நாட்டியக்கலையரசி எனப் புகழ்பெற்றவர்; இம்மன்னரே, பெரும் புலமை பெற்றவர்; இம்மன்னர் இயற்றிய நூல்கள் இசைச் சிறப்புடையன.

விஜயராகவ மன்னர் இயற்றியவை, 30 படைப்புக்களுக்குமேல் இருந்தனவாகக் கருத முடிகிறது. கிடைப்பவை சில நூல்களே.

விஜயராகவ மன்னர் இயற்றிய நூல்கள் கிடைப்பவை: 1. ரகுநாதநாயகாப்யுதயம், ரகுநாதாப்யுதயம், 2. பிரஹ்லாதசரிதம், 3. பூதனை ஹரணமு, 4. காளியமர்தனமு, 5. விப்ரநாராயண சரித்திரம், 6. கிருஷ்ணவிலாஸம் என்பனவாகும்.

இம்மன்னர் அவைப்புலவர்களில் செங்கல்வ காளகவி இயற்றியது ராஜகோபால விலாஸம். கோனேட்டிராஜ தீக்ஷிதர் என்பவர் எழுதியது விஜயராகவகல்யாணம். புருஷோத்தம தீக்ஷிதர் என்பவர் எழுதியது தஞ்சபுரான்னதான மகா நாடகம். காமரசு வேங்கடபதி ஸோமயாஜி எழுதியது விஜயராகவ சந்திரிகா விகாரம் என்பன வாகும். இவையாவும் இசை நூல்கள், ஆனால் காவியப்படைப்பான நூல்கள்; இம்மன்னர் காலத்தில் வெளிவந்தனவாகத் தெரியவில்லை.

இம்மன்னர் அவையை அலங்கரித்தவர்களில் பெண் கவிஞர்கள், ரங்கஜம்மா, கிருஷ்ணஜி, லீலாவதி ஆகியோர்.

**ரங்கஜம்மா,** தெலுங்கு, பிராகிருத மொழிகளில் பல நூல்கள் எழுதியுள்ளார். கிடைப்பவை சில. அவை உஷாபரிணயம், (காவியம்) மன்னருதாஸ விலாஸம் (காவிய-நாடகம்) ராமாயண ஸங்கிரக வசனம் ஆகியவையாகும். இவையாவும், சரஸ்வதி நூலகத்தில் உள்ளன. ராமாயண சங்கிரகம் கிடைக்கவில்லை.

இப்பெண் புலவருக்கு, விஜயராகவமன்னர், '**கனகாபிஷேகம்**' செய்து சிறப்பித்தார் என்று சான்று பகர்கின்றது.

மற்ெருரு பெண் புலவர், கிருஷ்ணுஜி என்பவர், ஆயிரக்கணக்கிலான இசை, விருத்தங்களை வடமொழி, தெலுங்கு மொழிகளில் இயற்றியுள்ளார்.

இம்மன்னர் அவையில் புகழுடன் விளங்கிய பெரும் புலவர், **வேங்கடமகி** என்பவர். இவர் **கோவிந்த** தீக்ஷிதரின் புதல்வர். இவர் இயற்றிய புகழ்பெற்றநூல் '**சதுர்த்தண்டிப்பிரகாசிகா**' என்ற இசை இலக்கண நூல்; 72. மேளகர்த்தா என்பவை. இவ்வரிய நூல்கள் இந்நூலகத்தில் உள்ளன; இன்றும் இசைமரபில், பிரமாண நூல்களாக, இப்புலவரின் நூல்கள், மேற்கொள்ளப் பெற்றுள்ளன.

புகழ்பெற்ற க்ஷேத்ரக்ஞர் விஜயராகவமன்னர் மீது, சிருங்கார பதங்கள் பல பாடியவை இந்நூலகத்தில் உள்ளன. இம்மன்னர் காலத்தவரான 'பிடதாசரி' என்ற பெரியார் நரசிம்ம உபாசகர்; இவர் இயற்றியவை ஆயிரத்துக்கும் மேற்பட்ட பதஸாஹித்யங்கள் உள்ளன; விஜயராகவ மன்னர் எவ்விதமேனும் தம்மீது இப்பெரியாரைப் பாடச் செய்ய வேண்டுமென்று விரும்பினர்; ஆனல் 'நரஸ்துதி' செய்ய மறுத்துவிட்ட மகான் இவர். இவருடைய பெருமையைக்கண்டு மன்னர் பெரிதும் இவரை ஆதரித்து வழிபட்டார்.

விஜயராகவ மன்னரின் புதல்வன் மன்னுருதாச நாயக்கன், பெரும்புலவன்; ஆனால், வாழ்நாள் முற்றும் சிறையில் இருந்தவன். தந்தையின் கடுஞ் சினம் காரணமாக, மன்னரு சிறைவாசம் புரிந்தான் என்று தெரிகிறது; மன்னுருதாசன் பெரும் புலவன். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? மன்னுருதாசன் இயற்றியவை, இரு நாடகங்கள்: ஒன்று- விஜய ராகவாப்யுதயம், இரண்டு-ஹேமாப்ஜ நாயிகா சுயம் வரம்; இவற்றில் முதல்நூல் கிடைக்கவில்லை.

## விஜயராகவனின் வீழ்ச்சி

கி. பி. 1535-ல் தஞ்சையில் விஜயநகர நாயக்க மன்னர்களின் அரசு துவக்கப்பெற்றது. விஜய ராகவ மன்னரின் ஆட்சியுடன் (கி. பி. 1673) நாயக்க மன்னராட்சி முடிவுற்றது என வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

விஜயராகவ மன்னருக்கு உடன்பிறந்த நாயக்க மன்னன் ஒருவனும் இருந்ததாகத் தெரிகிறது; அம்மன்னனும் மன்னுருவைப் போலவே சிறையில் இருந்தான் என்பது தெரிகிறது. மன்னுருதாசனுக்குச் செங்கமலதாசன் என்ற புதல்வன் இருந்தான். செங்கமலத்தாசன் 12 வயதுக்குட்பட்ட சிறுவனாக இருந்தபோதுதான் தஞ்சை நாயக்கராட்சி முடிவுற்றதாகச்சரித்திரம் கூறுகிறது. சிலர், செங்கமலதாசனை, விஜயராகவநாயக்கரின் மகன் என்று கூறுவர். அது ஒப்புக்கொள்ளும் படித்தாக இல்லை. பேரன் என்றே கூறமுடிகிறது

விஜயராகவ நாயக்கரின் ஆட்சி, தஞ்சையில் அவலமாக முடிவுற்றது ஏன் என்பது வேதனைக்குரிய தொன்றாகும். விஜயராகவ மன்னரின் பெண் மிகவும் அழகுவாய்ந்த அரசிளங்குமரியாவாள். அவளை மணம் புரிய விரும்பினான் மதுரைச் சொக்க நாத நாயக்கன். மறுத்துவிட்டான் விஜயராகவன். சொக்கநாதன் சமாதானம் பேசினான், தகுந்தவர் களைக் கொண்டு. இறுதியில் போர் தொடுத்தான் தஞ்சைமீது. காரணம், விஜயராகவன் மகள் மறுத்ததுதான்.

"ஆட்சியிழந்து, ஆருயிர் இழந்தாலும் சரி, சொக்கனுக்கு என்மகளைக் கொடுக்கமாட்டேன்" என்று வஞ்சினம் கூறினான் விஜயராகவன். இறுதி யில் போர் நிகழ்ந்தது. சிறையிலிருந்த மன்னனுருவும் போர்க்களம்புகுந்தான். போரில் தோல்வியே என்று உணர்ந்த விஜயராகவன், தன்மகள், மனைவி, மகன்—உறவினர் யாவருடனும் உயிரிழக்கத் துணிந்து, விஷ மருந்துப்பொடிகளை, தீக்கொளுத்தி திட்டமிட்டு உயிரை மாய்த்துக்கொண்டனர்.

வம்சத்துக்கு ஒருவனாக, சிறுவனாக இருந்த செங்கமலதாசனை, ஒரு பணிப்பெண் காப்பாற்றி, நாகபட்டினம் சென்றாள் என்பது வரலாறு.

விஜயராகவனை வீழ்த்திய பெருமையில், சொக்கநாதன், தஞ்சையின் ஆட்சியை, தன் உறவினனான '**அழகிரி**' நாயக்கன் என்பவனிடம் ஒப்படைத்துச் சென்றான்.

பீஜப்பூர் சுல்தானின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு இருந்த அரசுகளே, மதுரை, தஞ்சை நாயக்க அரசுகள். எனவே, தஞ்சை நாயக்க வம்சத்து வாரிசான செங்கமலதாசன், நாகபட்டினத்தில் 'சுப்பாசெட்டி' என்ற வணிகரின் ஆதரவிலும், நியோகி, ராயசம் வெங்கண்ணு என்பவரின் ஆதரவிலும், எனுசென்னவை என்ற தெலுங்க மங்கையின் பாதுகாப்பில் காப்பாற்றப்பட்டிருந்தான்.

## தஞ்சை நாயக்க மன்னராட்சியின் முடிவு

விஜயராகவ நாயக்கர் ஆட்சியில் ராயசம் பொறுப்பில் இருந்த நியோகி வெங்கண்ணு, செல்வாக்கு மிக்கவர். அவருடைய, செல்வாக்கைப் பயன்படுத்தி, செங்கமலதாசனுக்கு தஞ்சை அரசுரிமையை வாங்கிக்கொடுக்க, செயல் பட்டார். அதன்பயனாக, பீஜப்பூர் சுல்தான், தன்பிரதிநிதியாக மைசூர் பிராந்தியத்தை ஆட்சிபுரிந்த மராட்டியமன்னர் ஏகோஜி என்ற வெங்காஜியை. தஞ்சை அரசுரிமையைச் செங்கமலதாசனுக்கு வாங்கிக் கொடுக்க அனுமதியளித்தார்.

ஏகோஜி மன்னர், ஷஹாஜி என்ற மராட்டிய மன்னரின் புதல்வர்; சத்திரபதி சிவாஜியின் சகோதரர். எனவே, பீஜப்பூர் சுல்தானின் அனுமதியுடன், பெரும்படைகொண்டு தஞ்சை வந்து சேர்ந்தார். மதுரை சொக்கநாத நாயக்கரின் உறவினனான அழகிரியை, தஞ்சை ஆட்சி பீடத்திலிருந்து துரத்தி, செங்கமலதாசனுக்கு அரசுரிமை

நிலை நாட்டினார். ஏகோஜி, இந்து சாம்ராஜ்யம் நிலை நிறுத்துவதில் ஈடில்லாப் பற்றுடையவர்.

செங்கமலதாசன் தஞ்சையில் அரசனாக முடி சூடிக்கொண்டான்; தன்னை வளர்த்துப் பாதுகாத்த, மங்கை என்னு சென்னவையின் அறிவுரையைப் புறக்கணிக்கமுடியாமல் தன்னை ஆதரித்த வணிகப் பிரபு சுப்பாசெட்டியை, அமைச்சராக நியமித்துக் கொண்டான். செல்வாக்குப் பெற்றவரும், மதியூகியுமான நியோகி வெங்கண்ணாவுக்கு, இதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது; தஞ்சை அரசை மீண்டும் உயிர்ப்பித்துத் தந்தவர் வெங்கண்ணா என்றறிந்தும், அவரை, ஆட்சி நிர்வாகத்தில் பங்கு ஏற்றுக் கொள்ளுமாறு கூறுவதற்குச் செங்கமலதாசனுக்கு வாய்ப்பு இல்லை. காரணம், என்னு சென்னவை என்ற மங்கையும், சுப்பாசெட்டி என்ற வணிகரும் வெங்கண்ணாவின், செல்வாக்கைப் புறக்கணித்தனர். இது காரணமாக, கிடைத்த ஆட்சியும், தஞ்சையில் நிலையற்றதாக இருந்தது; நிர்வாகத்தில் வெங்கண்ணாவுக்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால், தஞ்சை அரண்மனையில் அதிகாரிகளுக்கிடையேயும், படைவீரர்களுக்கு இடையேயும் பூசல் ஏற்பட்டது.

தஞ்சை அரசு நிலை நிறுவிய ஏகோஜி. நிலைமையை ஆராய்ந்து, திருவையாற்றிலே படைகளுடன் தங்கியிருந்தான். அழகிரியுடன் போர் புரிந்து அரசு மீட்டுக்கொடுத்ததற்காக, முறைப்படி,

போர்ப்படைச் செலவுகளை, தஞ்சைப் பொக்கிஷத்தி லிருந்து, செங்கமலதாசன் ஏகோஜிக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தான். எனினும் நிலைமை அமைதியாக இல்லை. பீஜப்பூர் சுல்தானுக்கு மீண்டும் செய்தி எட்டியது.

நிலைமையை நன்கு உணர்ந்த, ஏகோஜி, செங்கமலதாசன், நேரிடையாக பீஜப்பூர் சுல்தா னுடன் தொடர்பு கொண்டதையும் அறிந்து கொண்டான். நியோகி வெங்கண்ணு ஏகோஜியை அணுகினர். 'தஞ்சை அரசு பாதுகாக்கப்பட வேண்டும் செங்கமலதாசனுல் ஆட்சி புரிய முடிய வில்லை' என்று தெரிவித்தான்.

எனவே, ஏகோஜி, மீண்டும் தன் படை வீரர்களை, திருவையாற்றிலும், குடந்தையிலும் தங்கியிருந்தவர்களைத் தஞ்சை நோக்கி அழைத்து, கோட்டைக்குள் புகுந்தான். செங்கமலதாசன், தன் படைத்தலைவனை ராஜசூரியன் என்ற மறவன் தலைமையில் படைகளுடன் ஏகோஜியை எதிர்க்கத் துணிந்தான். ஏகோஜியின் படைகளுக்குமுன் எதிர்க்கமுடியாத, செங்கமலதாசன், தோல்வியுற்று கோட்டையிலிருந்து வெளியேறினுன். ஏகோஜியை சந்திக்காமலேயே, செங்கமலதாசன், தன் பரிவாரங்களுடன், தஞ்சையைவிட்டு, விரைந்து அரியலூர் நோக்கிச் சென்றுவிட்டான். ஏகோஜியை, தஞ்சை நகர மக்களும், படை

வீரரும் வரவேற்றனர். ஏகோஜி, தஞ்சையில் மராட்டியமன்னனுக முடிசூட்டிக்கொண்டான்.

ஓராண்டுக்காலம் கி. பி. 1673-லிருந்து 1674 வரையில்-விஜயராகவ நாயக்கமன்னர் ஆட்சி வீழ்ச்சிக்குப்பின் செங்கமலதாசன் ஆட்சிப் பொறுப்பேற்று தஞ்சையில் இருந்தான் என்று தெரிகிறது. செங்கமலதாசனுக்கு ஆட்சி உரிமை வாங்கிக் கொடுத்த ஏகோஜி, இந்த ஓராண்டுக்காலம், தஞ்சைப் பிராந்தியத்திலேயே பாதுகாவலனுகப் படைகளுடன் இருந்தான் என்றும் சான்று பகர்கின்றது.

கி.பி. 1675-ஏகோஜி தஞ்சையில் முடிசூட்டிக் கொண்டான் என்றே வரலாறு தெரிவிக்கின்றது. இவ்வுண்மைகளை (தஞ்சைமான்யுவல் பக். 760-ல்) திரு. வெங்காசாமிராவ் அவர்கள் கூறியுள்ளார்கள்.

தஞ்சைப் பிராந்தியத்தில் முகம்மதியரின் ஆதிக்கம் ஏற்பட இருந்ததைத் தடுத்து நிறுத்தி, நாட்டில் அமைதிகாக்கவே, ஆற்றல்மிக்க ஏகோஜி அரசனுக முடிசூடிக் கொண்டான் என்பதை, தஞ்சை நகரமக்களும் படைவீரரும் வரவேற்றனர் என்பதையும், 'தஞ்சை மராட்டியர் வரலாறு' எழுதிய திரு. K. R. சுப்ரமணியம் அவர்களும் கூறுகிறுர்.

## தஞ்சையில் மராட்டிய அரசும் சரஸ்வதி நூலகமும்

கி. பி. 1535 முதல் கி. பி. 1673 வரையில் நூற்று முப்பத்தெட்டு ஆண்டுகள், விஜயநகர நாயக்க மன்னர்கள் தஞ்சையில் ஆட்சிபுரிந்தார்கள்.

தஞ்சையில், முதல் மராட்டியமன்னர் ஏகோஜி கி. பி. 1675 முதல் கி. பி. 1683 வரையில் ஆட்சி புரிந்தவர்.

தஞ்சைக்கும் மராட்டியருக்கும், பழமைத் தொடர்பு இருந்ததை வரலாற்றுச் சான்று கொண்டு அறியலாம்.

முன்னரே சோழர்காலம் பற்றிக் குறிப்பிட்டுள்ள வாறு, கி. பி. 871-907ல் முதலாம் ஆதித்த சோழன் ராஷ்டிரகூட அரசி இளங்கோப் பிச்சியை மணந்தவன். ராஷ்டிரகூட இரண்டாம் கிருஷ்ணனின் மகள் அவள். கி. பி. 907-953ல் ஆட்சி புரிந்த முதலாம் பராந்தகசோழன், தன்மகள் வீரமாதேவியை ராஷ்டிரகூட நான்காம் கோவிந்தனுக்கு மணம்புரிவித்தான். நான்காம் கோவிந்தன் தன் பரிவாரங்களுடன் தஞ்சையில் தங்கியவன். ஆந்திர சாளுக்கியரின் உறவு கொண்ட தஞ்சைச் சோழர்களுக்குப் பின் நாயக்கமன்னர்கள் தஞ்சையில் ஆட்சி புரிந்ததைப் போன்றே, ராஷ்டிரகூடர்களின் உறவு பெற்றிருந்ததனுலேயே, மராட்டியமன்னர் ஆட்சியும் தஞ்சையில் ஏற்பட்டது எனக்கூறுவதில் தவறில்லை.

ராஷ்டிரகூடர்களின் மரபினர்தான் 'மராட்டியர்' எனப்படும மகாராஷ்டிரர் ஆவர். இம்மராட்டியர் களுக்கு 'போசல' வம்சம் என்று மரபு கூறப் படுகிறது.

கி. பி. 1216-1256ல் கர்நாடக போசல இரண் டாம் வீர வல்லாளன், சோழர்குல அரசியை மணந் தவன். கி. பி. 1222ல் போசல வீர நரசிம்மனின் மகளை மூன்றும் இராசராசன் மணந்தவன். எனவே இந்தப் போசல வம்சத்து உறவும் சோழர்க்கு ஏற்பட்டிருப்பது உணரத்தக்கது.

மூன்றும் இராசராசன், மூன்றும் இராசேந்திரன் இருவருக்கும் சோழ நாடு பாதுகாத்து அரசுநிலை நிறுத்தியவர்கள் போசல வீர நரசிம்மன், போசல வீரராமனுதன் ஆகியோர் என்பதும் கல்வெட்டுச் சான்றுகள் பகரும் உண்மையை முன்பே விளக்கி யுள்ளேன். எனவே போசல வம்சத்து மராட்டியர், தஞ்சையில் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதில் வியப் பில்லை.

'போசலர்' என்ற பட்டம், கர்நாடக மன்னர் களுக்கும் மகாராஷ்டிரராகிய தஞ்சை மராட்டிய ருக்கும் இருப்பதைக் காணும்போது ஒருவகை ஒற்றுமை தெரிகிறது.

கர்நாடகப் பிராந்தியமான மைசூரிலும், பங்களூர், கனககிரியிலும் கி. பி. 17-ம் நூற்றுண்டின் துவக்கத்திலிருந்து ஆட்சி புரிந்தவன் போசல

வம்சத்து மராட்டிய மன்னன் முதல் ஷஹாஜி யாவன். 13, 14, 15 நூற்றாண்டுகளில் கர்நாடகத்தில் ஆட்சி புரிந்தவர்களும் போசல மரபினர். இம்மரபினருக்கும் சோழ நாட்டுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததை மறுக்க முடியாது.

முதலில் ராஷ்டிரகூடரும், பின்னர் கர்நாடக போசலரும், சோழ சம்பந்தம் பெற்றவர்கள் இதற்குப்பின், போசல மராட்டியரும், சோழ நாட்டில் ஆதிக்கம் பெற்றனர் என்பதே வரலாற்றுத் தொடர்பு தெரிவிக்கின்ற செய்தியாகும்.

கர்நாடகப் பிராந்தியத்தில் ஆட்சி புரிந்த மராட்டிய மன்னன் முதலாம் ஷஹாஜியின் புதல்வனை வெங்காஜி என்ற ஏகோஜியும், மைசூர் பிராந்தியத்திலிருந்தே, தஞ்சைக்கு வருகை தந்தவன் என்பதும் உணரத்தக்கது.

ஏகோஜி தஞ்சையில் மராட்டிய அரசு நிறுவியவன்; ஹிந்துராஜ்யம், தென்னாட்டில் சிதைவுறுமல் பாதுகாத்த பெருமை, சிவாஜிக்கும், அவன் சகோதரனை ஏகோஜிக்கும் உரியதாகும்.

சிவாஜியின் ராஜகுருவாக விளங்கிய சமர்த்த ராமதாஸர், தஞ்சைக்கு வருகைதந்து, ஏகோஜிக்கு அறிவுரைகூறி, வழிவகுத்துக் கொடுத்த பெரியாராவர். பாரதத்தில், ஹிந்து மதம் வீழ்ச்சி யுறுமல் பாதுகாக்கத் தோன்றிய பெரியார் சமர்த்த ராமதாஸர்.

ஏகோஜி மன்னர் ஆட்சியில் தஞ்சை வளம் பெற்றது என்று சான்றுகள் பகர்கின்றன. சோழ நாட்டின் பாதுகாவலர் என்ற முறையில் பல சீர் திருத்தங்களை தஞ்சைப் பிராந்தியத்தில் செய்தவர்; சோழநாட்டில், சோழர்காலமரபு பாதுகாக்கவே பணிபுரிந்த மன்னவர் இவர்.

இம்மன்னர் காலத்தில், 'சரஸ்வதி நூலகம்' தனிச்சிறப்புற்றது. பல சுவடிகள் பழுதாக இருந்த வற்றைப் புதிய சுவடிகளில் எழுதச் செய்தார்.

இம்மன்னர் காலந்தொட்டு தமிழ், வடமொழி, தெலுங்கு மொழியுடன், மராட்டிய மொழியும், இணைந்து வளம்பெற்றன. இம்மன்னர் ஆட்சியில் வடமொழி நூல் தெலுங்கு லிபியிலும் மராட்டிலிபி யிலும் எழுதப்பெற்றன. பின்னர், நூற்றைம்பது காலத்துப்பழமையான காகிதங்களிலும் நூல்கள் எழுதப்பட்டுள்ளவை நூலகத்தில் ஆயிரக்கணக்கில் உள்ளன. இம்மன்னர் ஆட்சியில் பல நூல்கள் நூலகத்தில் தொகுக்கப் பெற்றன.

ஏகோஜி மன்னர் தமிழ், தெலுங்கு, வடமொழி மராட்டி ஆகிய மொழிகளில் ஆற்றல் பெற்றவர்; வடநாட்டில் சத்திரபதி சிவாஜி மன்னர் புகழ் பெற்றதுபோல, ஏகோஜி மன்னரும் அதே சமயத்தில் தஞ்சையில் அரசு நிலைபெறச்செய்தார்.

இம்மன்னரின் அமைச்சராக விளங்கியவர் புகழ்பெற்ற ரகுநாத பண்டிதர் என்பவர். இவர்

சத்திரபதி சிவாஜியிடம் அமைச்சராக இருந்து பின்னர் அம்மன்னரால் தஞ்சைக்கு அனுப்பப் பெற்றவர். ரகுநாத **பண்டிதர்,** வடமொழியிலும் மராட்டியிலும் புலமை பெற்றவர். இவர் இயற்றிய நூல் **நளசரித்திரம்** மராட்டி மொழியில் உள்ளது.

புகழ்பெற்ற பகவத் கீதையின் வியாக்கியான நூலான **ஞானேச்வரி** மராட்டி மொழியில் எழுதப்பெற்ற பழமையான நூல் இந்நூலகத்தில் உள்ள அரியதொரு படைப்பாகும்.

கி. பி. 15-ம் நூற்றுண்டில் வாழ்ந்தவரும், செஞ்சியில் இருந்தவருமான, மும்மதியத் துறவி **அம்பர்ஹுசைன்** என்பவர் ஸ்ரீ பகவத் கீதைக்கு மராட்டி மொழியில் வியாக்யானம் எழுதியுள்ளார். அந்நூலுக்கு **'அம்பர்ஹுசைனி'** என்று பெயர். அந்நூல் இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளது.

தஞ்சையில் ஏகோஜி மன்னர் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற சமயம், தஞ்சைப் பிராந்தியத்தில் முகலாயரால் ஒருபுறமும், டேனிஷ் பாதிரிகளின் ஆதிக்கத்தால் ஒருபுறமும், அமைதிக்குக் கேடு ஏற்படும் நிலையில் சூழ்நிலை நிலவியது என்பது, வரலாற்றுய்விலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

டேனிஷ்பாதிரிகளின் தலைமைக்கோட்டையான தரங்கம்பாடியில் உருவான திட்டங்கள்-தஞ்சையில் ஹிந்து மதத்திற்கு ஏற்பட்ட சோதனைகளாக இருந்ததை முறியடித்து, நாட்டில் அமைதி

ஏற்படுத்தி, மக்களின் நல்லாதரவைப் பெற்ற பெருமை ஏகோஜி மன்னரைச்சாரும். இது வரலாற்றில், சுட்டிக் காட்டப்படாத நிகழ்ச்சிகள் என்பது தெரிகின்றது; ஆனாலும் வரலாற்றில் மறைக்கமுடியாத நிகழ்ச்சிகளாக உள்ளன.

ஏகோஜி மன்னருக்கு, ரகுநாத பண்டிதரைப் போன்று **கங்காதரமகி** என்ற அந்தணச் சிரேஷ்டரும் அமைச்சராக விளங்கினர்.

ஏகோஜி மன்னருக்கு, ஷாஜி, சரபோஜி, துக்கோஜி என்ற துளஜாஜி ஆகிய மூவரும் புதல்வர்கள்.

**ஷாஜி** மன்னர் கி. பி. 1684 முதல் 1712 வரையில் தஞ்சையில் ஆட்சி புரிந்த மன்னர்; தஞ்சையின் பொற்காலம் இம்மன்னருடைய காலம் என்பது மிகமிக உண்மையாகும்.

ஷாஜி மன்னன் காலத்தில், சோழ நாட்டில் வேதநெறி தழைத்தோங்கியது தெளிவு. தஞ்சையை ஒரு பல்கலைக் கழகமாகக் கருதும் அளவுக்குக் கல்வி வளர்ச்சியில் ஈடுபட்ட மன்னன் ஷஹாஜி.

ஷாஜி, பன்மொழிகளைக் கற்ற பெரும் புலவர். தமிழ் மரபு அறிந்து, தமிழகத்துச் சைவ நாயன்மார்களின் நெறியைப் பின்பற்றியவர். அந்

நெறியிலே ஈடுபாடு கொண்டு. பெருமை பெற்ற புலவராக விளங்கினூர்.

இம்மன்னன் காலத்தில் சரஸ்வதி நூலகத்தில் அரிய படைப்புக்கள் தொகுக்கப்பெற்றன. சமர்த்த ராமதாஸரின் சம்பிரதாயத்தில் வந்த சிஷ்யர்களான மன்னூர்குடி மேரு சுவாமிகள், திருவழுந்தூர் மாதவ சுவாமிகள் இம்மன்னர் காலத்தில் விளங்கியவர்கள்.

**மேருசுவாமிகள்** ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்திப்பாடல்களை மராட்டிய மொழியில் இயற்றினூர்; மேருசுவாமிகள் இயற்றியவை இராமாயண வியாக்யானம், ஆனந்த வால்மீகி ராமாயணம், பீமோபதேசம் ஆகியவை. இவை அனைத்தும் சரஸ்வதி நூலகத்தில் உள்ளன.

'ராமராஜ்யம்' என்று வழிகாட்டிய பெருமை மேருசுவாமிகளையே சாரும். அதைத் தமது பக்தி பாடல்களில் பரிணமிக்க வைத்துள்ளார்.

**மாதவசுவாமிகள்** ஷாஜி காலத்திலும், இம் மன்னனின் சகோதரர் சரபோஜி மன்னரின் காலத்திலும் வாழ்ந்தவர். இப்பெரியார் மராட்டிய மொழியில் பாரதம், இராமாயணம், கணேசபுராணம் விஷ்ணு புராணம், பிரபோத சந்திரோதயம், மல்லாரி மகாத்மியம், யோக வாசிஷ்டம், கீதை வியாக்யானம் ஆகிய பல படைப்புக்களை ஆக்கியுள்ளார். இவை இந்நூலகத்தில் இடம்பெற்றுள்ளன

இம்மன்னர் **ராதாவம்சிதர் விலாஸம் விச்வாதீச விலாஸம்** என்ற நாடகங்களை ஹிந்தி மொழியில் இயற்றியுள்ளார்.

ஷாஜி மன்னர், தமிழ், தெலுங்கு, மராட்டி, வடமொழி ஹிந்துஸ்தானி மொழிகளில் புலமை கொண்டிருந்தவர். இம் மன்னர் தம் புலமைப் பெருக்கால் முப்பதுக்கு மேற்பட்ட நாடகங்களை இயற்றியுள்ளார்.

இம்மன்னர் இசைக்கலையில் தேர்ந்த அறிவு உள்ளவர். கவிஞராகவும் விளங்கினுர். இம் மன்னர் இயற்றிய இசைப்பாக்கள் ஐந்நூறுக்கு மேற்பட்டவை உள்ளன.

இம்மன்னருடைய இசைப் பாக்கள், சைவ நாயன்மார்களின் பக்திப் பாடல்களை ஒத்தவை. சிறப்பாக, மாணிக்கவாசகர், சுந்தரர், அப்பர், பாக்களைப் போன்றவை.

சைவ நாயன்மார்களைப் போன்றே, காவிரிக் கரைத் தலங்களுக்குச் சென்று, அங்கே கோயில் கொண்டுள்ள மூர்த்திகள் மீது இசைப்பாக்களைப் பாடியிருக்கிருர் என்பதை இவருடைய பாடல்களின் அமைப்பிலிருந்து அறியமுடிகிறது.

மராட்டி, தெலுங்கு இருமொழிகளிலும் இசைப் பாக்கள் உள்ளன. இவை இந்நூலகத்தில் உள்ளன.

தமிழிலக்கிய மரபில் உள்ள தூது, உலா என்ற அமைப்புக்களையும் எடுத்தாண்டுள்ளார்.

கர்நாடக இசைக்கலைக்கு, தமிழ் மரபைப்பின் பற்றி நூற்றுக்கணக்கிலான இசைப்பாக்களை, பல ஜன்யராகங்களில் பாடி, வழிகாட்டிய முதல்வர் இவர் என்று கருதமுடிகிறது.

தியாகராஜ சுவாமிகள், முத்துசாமி தீக்ஷிதர், சாமாசாஸ்திரிகள், சுவாதித் திருநாள் மன்னர் ஆகியோருக்கும் முன்னதாக வாழ்ந்தவர் ஷாஜி மன்னர். கர்நாடக வாக்கேய காரர்களின் முதல்வராகச் சுடர்விட்டு விளங்கினார் இவர்.

இம்மன்னருடைய, கிருதிகள்–நாடகங்கள் இந் நூலகத்தில் உள்ளன.

தஞ்சை மன்னன் முதலாம் இராசராசனைப் போல், சோழர்களின் இஷ்டதெய்வமான திருவாரூர் தியாகேசரிடம் இம் மன்னருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது தெரிகின்றது. இம்மன்னர் திருவாரூருக்குச் சென்று பாடிய பாடல்கள், நாயன்மார் தேவாரப் பாடல்களுடன் ஒப்பு நோக்குதற்குரியன. திருவாரூர், சுந்தரமூர்த்தி நாயனாரிடமும் இம்மன்னருக்கு ஈடுபாடு மிக்கிருந்தது, இவருடைய பாடல்களில் புலனாகின்றது.

திருவாரூர்க் கோயிலில் நீலோத்பலாம்பா சந்நிதியில், உள்ள சுவரில் சுந்தரமூர்த்தியும்

த. 16

ஷாஜியும் ஒவியத்தில் வரையப்பட்டு இன்றும் காட்சி தருகின்ற சிறப்பை அறியும்போது, இம் மன்னரின் பெருமை புலனுகின்றது.

இம்மன்னருக்கு, 'அபிநவ போஜன்' என்ற பட்டத்தை, புலவர்கள் அளித்தனர். இம்மன்னர் அவையில் வேத, சாஸ்திர, காவிய நாடக இசைப் பேரறிஞர்கள் விளங்கினுர்கள். இம்மன்னர் அவையில், சங்கீத சாகித்தியங்கள் தனிச்சிறப்புடன் வளர்ச்சிபெற்றன.

இம்மன்னர் இயற்றிய நூல்களில் புகழ்பெற்ற படைப்பு, **சங்கர பல்லகி சேவா பிரபந்தம்** என்ற இசை நாடகம். இந்நாடகம் திருவாரூர்க்கோயிலில் நடிக்கப்பெற்ற புகழுடையது. இது போன்றே மன்னுர்குடி கோயிலில் நடிக்கப்பெற்ற நாடகம், **விஷ்ணு பல்லகி சேவா பிரபந்தம்** என்னும் இசை நாடகம்.

இம்மன்னர் இயற்றியவை என்று அறியப் பெறுகின்ற நாடகநூல்களாவன: ரதிகல்யாணம், கங்கா காவேரி சம்வாதம், கங்காபார்வதி சம்வாதம் போன்ற நாடகங்கள்.

இம்மன்னர் அத்வைத வழியைப் பின்பற்றியவர். இம் மன்னர் காலத்து இயற்றப் பெற்ற இசைக் கீர்த்தனங்களில், 'அத்வைத கீர்த்தனை' என்ற தொகுப்பு உள்ளதாக அறியமுடிகிறது. இத்தொகுப் பைப்பற்றி, திரு. K. R. சுப்ரமண்யம் அவர்கள்,

தாம் எழுதியுள்ள மராட்டியர் வரலாறு நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சரஸ்வதி நூலகத்தில் உள்ள பழமையான, புராண, இதிகாசச் சுவடிகளை, எழுத்தர்களைக் கொண்டு, எழுதுவித்து புதுப்பித்த பணியையும் புரிந்துள்ளார்.

தமிழ் மொழியில் எழுதப்பட்ட படைப்புக்களைத் தெலுங்கு லிபியிலும் எழுதச் செய்திருக்கிறார் என்ற உண்மை தெரிகிறது. தமிழ் வடிவம் மாருமல், தெலுங்குலிபியில் எழுதப்பெற்றுள்ள நூல்கள் இந் நூலகத்தில் உள்ளன.

ஷாஜி மன்னர், தம் வாழ்க்கையில் ஒரு வேதாந்தியாகத் திகழ்ந்தவர். நாமசங்கீர்த்தனம், இசை, நாட்டியம், நாடகம், ஸங்கீத சாகித்யம் இவற்றை வளர்த்து வேதநெறி, சைவநெறி, சன்மார்க்கம் வளர்த்த பெருமைக்குரியவர்.

ஷஹாஜி மன்னர் அவையில், கங்காதரமகியும் அமைச்சராகவும், ராஜகுருவாகவும் விளங்கினர்; இவர் சிறந்த வடமொழிப்புலவர். ராஜ்யநீதி சம்பந்தமாகத் தேர்ந்த மதிநுட்பம் உள்ளவர்.

அப்பைய தீக்ஷிதரால் இயற்றப்பெற்ற குவலயானந்தம், என்ற நூலுக்கு 'ரஸிகரஞ்சனி' என்ற பெயரில் வியாக்யானம் எழுதியவர், கங்காதரமகியாவார்.

இவர் இயற்றிய மற்ருெருநூல் வரலாற்றுச் சிறப்புடையது; **போஸலவம்சாவளி** என்ற நூலாகும் [நீ 4232] இந்நூல்கள் சரஸ்வதி நூலகத்தில் உள்ளன;

தேவி உபாஸகரான புகழ்பெற்ற பாஸ்கர ராயரின் குரு கங்காதரககி எனின் இவர் பெருமை பற்றிக் கூறவேண்டியதில்லை; கங்காதர மகியை யன்றி, **நிருசிம்மராயமகி** என்பவரும் ஷாஜியின் அவையில் அமைச்சர் பொறுப்பிலும் பண்டிதராகவும் விளங்கினுர்.

இப்பெரியார், '**திரிபுரவிஜயசம்பு**' என்ற காவியத்தை (நெ. 4036) ஷாஜியின் அவையில் இயற்றிப் புகழ்பெற்ருர். (Indian Antiqaury 1904 Page 184)

ஷாஜியின் அவையில் விளங்கியவர்கள் பெரும்புகழும் அறிவாற்றலும் படைத்த புலவர்கள். கங்காதரமகியின் புதல்வரான **திரியம்பகராயமகி** என்பவரும் அவையில் விளங்கியவர். இவர், பெரிய யாகங்களைச்செய்த பெரியார் ஆவர்.

இப்பெரியார் இயற்றிய நூல் '**தர்மாகூதம்**' என்னும் நூல் ராமாயணச் சிறப்புக்களை விரித் துரைக்கும் நூல். இந்நூலில் ஷாஜியைப் பற்றிச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

கங்காதரமகியின் மற்ருெரு புதல்வரான **பகவந்த ராயமகியும்** ஷாஜியின் அவைப்புலவர். இவர் இயற்றிய நூல்கள் **முகுந்த விலாஸம்**

(நெ. 3719) **உத்தர ராமாயண சம்பு** (4028) **ராகவாப்யுதயம்** (4492) என்பனவாகும்.

கங்காதரமகியின் மூன்ருவது புதல்வரான **ஆனந்தராய மகியும்** ஷாஜியின் அவைப்புலவர். இவர் இயற்றியவை, **அற்புத ராமாயணம், சுகசந்தேசம்** என்ற இரு நூல்களாகும்.

இந்நூல்கள் யாவும் சரஸ்வதி நூலகத்தில் உள்ளன. ஷாஜி மன்னரைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடக் கூடியது, வேதசாஸ்திரகாவ்ய வளர்ச்சிக்காகச் செய்த பெரும்பணியாகும். இந்தப் பணியைச் சரஸ்வதி நூலகத்தின் தொடர்பு கொண்டே நன்கு அறியமுடிகிறது.

சோழ மரபில் வந்த முதற் பராந்தகன், ராசேந்திரசோழனைப் போன்று, தொண்டு புரிந்த சிறப்புப் பாரட்டப்படவேண்டிய தொன்ருகும். காவிரியாற்றின் கரையில் உள்ள திருவிசநல்லூர் கிராமத்தில் 45க்கு மேற்பட்ட வடமொழிப்புலவர்களை ஒரு சங்கமாகக் கூட்டுவித்து, அவர்களைக்கொண்டு அரிய பல படைப்புக்களை உருவாக்கச் செய்து, அந்தக் கிராமத்தை, கல்வித் துறையில் இறும் கிராமமாக அளித்த செயலாகும். அக்கிராமத்திற்கு, 'ஷாஜிராஜபுரம்' என்ற பெயரும் சூட்டினன்; திருவிசநல்லூர் பண்டிதர்களால் நால்வேதம் ஆறங்கம் வளர்ந்த சிறப்பை இந்நூலகத்தில் காணலாம்.

பெரும் புலவர்களையல்லாமல், முற்றத்துறந்த முனிவர்களும் ஷாஜியின் ஆதரவு பெற்றவர்கள்; இம்மன்னரால் போற்றிப் பாதுகாக்கப்பெற்றவர்கள், இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள், ஜீவன்முக்தரான சதாசிவப்பிரம்மம், பரமசிவேந்திரர், போதேந்திரர் ஆகியோர். இப்பெரியார்களின் படைப்புக்களும் இந்நூலகத்தில் உள்ளன.

தேவி உபாஸகரான பாஸ்கரராயர் போன்றவர்களும் ஷாஜி மன்னரால் ஆதரிக்கப்பெற்றவர்கள்.

சரஸ்வதி நூலகத்தில் ஷாஜி மன்னர் காலத்துப் படைப்புக்களை ஆராய்ந்தால், அத்வைத வளர்ச்சி, நாமசங்கீர்த்தனம், பஜனபத்ததி, இசை, நாடக, நாட்டிய வளர்ச்சி பற்றின பல நூறு படைப்புக்களைக் காணலாம்.

குறிப்பாகச் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன். திருவிச நல்லூரில் வாழ்ந்த பெரியார் ஸ்ரீதர வேங்கடேசர் ஷாஜியின் அவையில் புகழுடன் விளங்கியவர்.

இப்பெரியார், ஷாஜியைப் பற்றிச்சிறப்பித்து இயற்றிய நூல் '**சாஹேந்திரவிலாஸம்.**' இந்நூல் வரலாற்றுச் சிறப்புடையது, நூலகத்தில் உள்ளது.

பாஸ்கர ராயரும், கங்காதர வாஜபேயரும் சேர்ந்து இயற்றிய நூல் **வைதிக தர்சன சங்கிரகம்** (No. 8244)

சதாசிவப் பிரம்மம் இயற்றிய **ஆத்மவித்யா விலாஸம்** என்னும் வேதாந்தநூல், ஷாஜியின் சகோதரர் சரபோஜிக்கு அறிவுரையாக இயற்றி அளிக்கப்பெற்ற நூல் (No. 7295)

அப்பாத்வரி என்ற ஆனந்தராயமகி என்னும் பெரும்புலவர் இயற்றியது **ஆசாரநவநீதம்** என்னும் நூல்.

**துண்டிராஜகவி** என்பவர், ஷாஜியைப் பாராட்டி, இம்மன்னரின் புலமையை விரித்துரைத்து 'ராஜ புராணிகன்' என்று பட்டம் சூட்டி, இயற்றிய நூல் '**ஷாஹராஜவிலாஸம்**'.

ஸ்ரீதரர், வெங்கடேச சாஸ்திரி, நல்லாசாஸ்திரி ஆகிய மூவரும் இயற்றிய நூல் '**பதமணி மஞ்சரி**' (No. 5011)

ராமபத்திர தீக்ஷிதர் முதலிய ஏழுபுலவர்கள் சேர்ந்து இயற்றிய நூல் '**ஸத்தர்சன சிந்தாந்த சங்கிரகம்**' இந்நூல் ஆறுநிலை வேதாந்த விளக்கம் தருவது.

ராமபத்திர தீக்ஷிதர், நாராயணகவி, வேங்கட கிருஷ்ணகவி ஆகிய மூவரும் சேர்ந்து இயற்றிய நூல் '**சப்தபேத நிரூபணம்.**' இவ்வரிய நூல் இந்நூலகத்தில் பலபிரதிகள் உள்ளன. 5301, 5302, 5303, 5324, 5325)

சதாசிவதீக்ஷிதர் எழுதியது கீதசுந்தரம் என்னும் நூல். ஆனந்தராயமகி என்ற பெரியார் இயற்றியவை, **வித்யா** பரிணயம் (4511) **ஆசுவலாயன கிருஹ்ய சூத்திர விருத்தி** (11763) **ஜீவானந்த நாடகம்** என்ற வைத்திய நூல் ஆகியவை.

ஷாஜி மன்னரின் வேண்டுகோளின்படி, போதேந்திர ஸ்வாமிகள் எழுதிய அரியநூல் **ஹரிஹர பேததிக்காரம்.**

இக்காலத்தில்தான், ஸ்ரீ பாஸ்கரராயர், **வரிவஸ்யாரகஸ்யம், லலிதா சகஸ்ரநாமபாஷ்யம்** எழுதினாவர்.

கிருஷ்ணானந்த சரஸ்வதி என்ற துறவி '**சித்தாந்த சித்தாஞ்சன**' என்ற வேதாந்த நூலே இயற்றினர். ஷஹாஜி மன்னர் காலத்துப் புலவர்களைப்பற்றி இந்நூல் விளக்குகிறது.

சதாசிவப்பிரும்மத்தின் குருவான பரம சிவேந்திர சரஸ்வதி எழுதிய நூல்கள், ஷாஜி காலத்தில் எழுதப்பெற்றவை. அவையாவன **ஸ்வரூபானுஸந்தானம்** (7592) சிவகீதை (7593) **தகரவித்யா பிரகாசிகா** (7594) என்பவை.

பெரியப்பகவி என்பவர் இயற்றியவை, **சிருங்கார ரசமஞ்சரிஷாஹ ராஜீயம்** என்பது. இந் நாடகநூல் ஷஹாஜி மன்னரின் அவையில் நடிக்கப் பெற்றசிறப்புடையது. (11001) வடமொழியில் இயற்றப்பெற்ற நூல்.

திருவிசநல்லூர் பண்டிதரான வீரராகவ கவி எழுதிய நாடகங்கள் **'ராமராஜ்யாபிஷேகம் வள்ளி பரிணயம், பார்வதி ஸ்தோத்திரம்'** என்பவை. இவையும் ஷாஜி மன்னர் அவையில் நடிக்கப் பெற்றவை. (ஓரியண்டல் கைப்பிரதி நூலகம்; பகுதி 21 சென்னை.)

கண்டரமாணிக்கம் என்னும் ஊரில் வாழ்ந்த நல்லா கவி என்பவர், **'சுபத்ராபரிணயம்'** என்னும் நாடகத்தை எழுதி, மன்னரவையில் நடிக்கச் செய்தார். (ஓரியண்டல் நூலகம்; பகுதி 1 சென்னை,)

லக்ஷ்மண கவி என்பவர் எழுதியவை ஷஹாராஜீயம் (5304) ஷஹாராஜ சபா சரோவர்ணனீ (5305) என்பன.

நாராயண பண்டிதரால் இயற்றப் பெற்றது ஷஹாராஜநக்ஷத்ரமாலா (4235)

ஷாஜி மன்னர் அவையில் பாராட்டப்பெற்றவர், துவைதத் துறவியான **சுமதீந்திரர்.** இப்பெரியார் **'ஜயகோஷணை'** என்ற நூலை (4236) எழுதி ஷாஜிக்கு அங்கிதம் செய்தார்.

துண்டிராஜவியாசர் என்ற புகழ் பெற்ற கவிஞர் **'ஷஹாராஜகீதா'** என்ற நூலை (10957) எழுதினர்.

சீனிவாச கவி என்பவர் **'ஷஹாராஜஸ்துதி'** என்ற நூலை (10959) எழுதினர்.

வேங்கடகிருஷ்ண கவி எழுதியவை, வட மொழியில் **நடேசவிஜயம், இராமசந்திரோதயம்** தெலுங்கு மொழியில் **குசலவவிஜயமு** என்ற நூல்களாகும். (ஸம்ஸ்கிருத அட்டவணைப் பட்டியல் பகுதி 20)

அப்பா கவி என்ற பூர்ணனந்தயோகி என்பவர் எழுதியவை, **பிராயச்சித்த தீபிகை, உபகிரந்ததீபம்** என்பன. (திருவனந்தபுரம் நூலக எண் 47, 48) இத்துறவி ஷாஜியின் அவையில் விளங்கியர்.

ஷாஜிமன்னனின் அவையில் விளங்கிய புலவர்களே மேற்கூறப்பெற்றவர்கள். இவர்களையல்லாமல், **சேஷாசலபதி** என்ற புலவர் குறிப்பிடத்தக்கவர். **ஆந்திரவாக்பாணினி** என்ற பட்டம் பெற்றவர்; மராட்டிய மன்னர்களின் வம்ச வரலாற்றை '**போஸல கோஸலீயம்**' என்ற பெயரில் எழுதி ஷாஜியின் அவையில் அரங்கேற்றினர். மகிழ்வுற்ற ஷாஜிமன்னர், இப்புலவருக்கு, **தங்கப்பல்லக்கு** ஒன்று அளித்துச் சிறப்பித்தார்; இப்பண்டிதர் இயற்றிய நூலைத் தெலுங்கு லிபியிலும் மன்னர் எழுதச்செய்தார். (4239)

பூமிநாத கவி என்று போற்றப்பட்ட நல்லா தீக்ஷிதர் இயற்றியது, **தர்மவிஜயசம்பு** என்னும் நூல், (4231) இந்நூல், ஷாஜி மன்னர் காலத்து வரலாற்றுச் சிறப்பை விரித்துரைப்பது. இந்நூலில், பூமிநாதகவி, ஷாஜி மன்னரை, 'அபிநவபோஜன்'

என்ற பட்டம்சூட்டி, **கவிஞர் பெருமான் என்று** பாராட்டியுள்ளார்.

பாலகவி சுப்பண்ணு என்பவர், **'லீலாவதி கல்யாணம்'; லீலாவதி ஷஹாராஜீயம்** என்ற இரண்டு நூல்களையும் இயற்றியவர்.

வாசுதேவ கவி என்பவர், **பார்வதிபரிணயம்** என்ற நூலைத் தெலுங்கு மொழியில் இயற்றினுர்.

அஷ்டாவதானகவி என்பவர், **சந்திரசேகர விலாஸம்,** என்னும் நாடக நூலைத் தெலுங்கு மொழியில் எழுதியவர்.

ராம கவி என்பவர், **ஷாஹராஜவிலாஸம், வாதஜயக்குறவஞ்சி** இருநூல்களை இயற்றியவர்.

முன்னர் குறிப்பிடப்பெற்ற சேஷாசலபதி கவி **'சேஷசுமதி'** என்ற வடமொழி இலக்கண நூலை எழுதினுர். இவருடைய மற்ருெரு படைப்பு, **சரஸ்வதி கல்யாணம்.**

மற்றும் ஷாஜி மன்னர் அவையை அலங்கரித்த காசிநாத கவி, நாராயண கவி, சோம கவி ஆகியோரின் தனிக்கவிதைகள் வடமொழியிலும் தெலுங்கிலும் உள்ளன.

வேங்கடாசலபதி கவி என்பவர் ஷாஜி மன்னரால் கனகாபிஷேகம் செய்யப்பெற்ற பெருமையுடையவர்.

நெல்லூரி சிவராம கவி என்பவர், தஞ்சை மராட்டிய முதல் மன்னரும், ஷாஜியின் தந்தையுமான ஏகோஜியைப் பற்றி வரலாற்றுச் சார்புடையதாக, **'காமகலாநிதி'** (R 320) என்ற நூலை எழுதினார்; ஷாஜியின் சகோதரரான சரபோஜியின் புதல்வன் **'ஜயசிம்மன்'** என்பவனுக்கு அளித்தார்; **சிவராம கவியின் தந்தை வீரராகவ கவி** இவருடைய குரு சேஷாசலபதியாவார் என்று அறியமுடிகிறது.

ஷாஜி, சரபோஜி, துளஜா மூவர் காலத்திலும் விளங்கிய பெரியார் **கிரிராஜ கவி** என்பவர். புகழ் பெற்ற தியாகப் பிரும்மத்தின் பாட்டனார் இவர்; இப்பெரியார் இயற்றியவை, **சாகேந்திர சரித்திர நாடகம், ராஜ மோகனக் குறவஞ்சி, ராஜகன்யா பரிணயம், வாதஜயமு, ஸர்வாங்க சுந்தரி நாடகம்** என்பன. வடமொழியிலும் தெலுங்கிலும் புலமை பெற்றவர் இப்பெரியார். கிரிராஜ கவி, சிறந்த இசைமேதையுமாவார். இருநூறுக்கும் மேற்பட்ட பதம், பத்ய ஸாஹித்யங்கள் தெலுங்கு மொழியில் இயற்றியுள்ளார்.

ஷாஜி மன்னர் நாடகங்கள் பல இயற்றியுள்ளார் என்பது முன்பே குறிப்பிடப்பெற்றுள்ளது. இம்மன்னர் இயற்றியதான மற்ற நூல்கள்: **சப்தரத்ன சமன்வய கோசம்,** (5056) **சப்தார்த்த சங்கிரகம்** (5057) **சந்திரசேகர விலாஸம்** (43519) **சிருங்கார**

**மஞ்சரி** என்பவை எனத்தெரிகிறது. (டாக்டர் V. ராகவன் அவர்கள் கருத்து இது.)

திருவையாறு, குடந்தை, திருவிசநல்லூர், அம்பாபுரம், கண்டரமாணிக்கம் ஆகிய ஊர்களி லிருந்து பண்டிதர்களையும், ஆந்திரநாட்டுப் பண்டிதர்களையும் ஆதரித்து, புதிய படைப்புக்கள் பலவற்றை இயற்றச்செய்து, அவற்றை, சரஸ்வதி நூலகத்தில் தொகுத்துவைத்துள்ள பெருமை, ஷாஜி மன்னருக்குரிய தனிப்புகழாகும்.

ஆந்திரநாட்டில் இயற்றப்பெற்ற **நன்னசோழ குமாரசம்பவத்தை** ஷாஜி மன்னர் தெலுங்கு மொழியில் எழுதச்செய்து இந்நூலகத்தில் தொகுத் துள்ளது குறிப்பிடத்தக்கது.

மராட்டிய மன்னரான ஷாஜியின் காலத்தில், வடமொழி, தெலுங்கு, மராட்டிமொழி வளம்பெற்றது போல், தமிழ் மொழியும் ஆதரிக்கப்பெற்று வளம் பெற்றுள்ளது.

ஷாஜி மன்னர் காலத்தில் இயற்றப்பெற்றது தான், தமிழ் மொழி இலக்கியமான **தியாகேசர் குறவஞ்சி** (280), மற்றும் செண்டலங்காரன் விறலிவிடுதூது, தஞ்சை நாயகவண்ணம், வீர ராகவ முதலிவண்ணம், கும்பகோணப் புராணம் முதலியன.

இம்மன்னர் காலத்துத் தமிழ்ப் புலவர்களில் இம் மன்னர் அவையை அலங்கரித்தவர்கள், வாசுதேவக்

கவிராயர், முத்துக் கவிராயர், ராம கவிராயர், திருச் சிற்றம்பலக் கவிராயர், சொக்கப்புலவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஷாஜி மன்னர் கேட்டுக்கொண்டபடி, சொக்கப் புலவர் இயற்றியதுதான் கும்பகோணப் புராணம்.

சோழ மன்னர் அவையைப்போன்றே தமிழ்ப் புலவர்களும் ஷாஜியின் அவையில் வீற்றிருந்து சிறப்புப்பெற்றிருக்கிருர்கள்.

ஷாஜி மன்னனைத் தலைவனுகக்கொண்டு, 'ஷாஜிகுறவஞ்சி' என்ற இசைநாடகநூலை முத்துக் கவிராயர் இயற்றினுர் என்று அறியமுடிகிறது. இந்நூல் தெலுங்கு லிபியில், தமிழ்ப் படைப்பாக எழுதப்பெற்று நூலகத்தில் உள்ளது. இக்குறவஞ்சி நூல் பாமர ரஞ்சகமாக இருப்பினும், காலத்தால், திருக்குற்ருலக் குறவஞ்சிக்கு முற்பட்டதாகலாம் எனக்கருத முடிகிறது.

மற்றும், தமிழ்ப்படைப்புக்களாகக் குறிப்பிடத் தக்கவை, தெரிபவை, காவேரி கல்யாணம், விஷ்ணுசாராஜ விலாஸம், சந்திரிகா ஹாஸ விலாஸம், பூலோகதேவேந்த்ர விலாஸம், அதிரூ பவதிகல்யாணம், சங்கர நாராயண விலாஸம், என்ற இசை நாட்டிய நாடக நூல்களாகும்.

மேலும் ஷாஜி மன்னர் காலத்தில் முகலாய ஔரங்கசீபின் படைத்தலைவன் ஜுல்பிர்கான்,

தஞ்சை மீது படையெடுத்தபோது, ஷாஜி அப்படையை வீரத்துடன் முறியடித்தார். அவ் வெற்றிச் சிறப்பைப்புகழ்ந்து, 'பரணி' பிரபந்தம் போல், தாழிசை, வண்ணம், சிந்து பாக்கள் வடிவில் நூற்றுக் கணக்கிலான பாடல்களை, திருச் சிற்றம்பல கவிராயரும் ராம கவிராயரும், மற்றும் டல கவிஞர்களும் பாடியுள்ள தொகுப்பு இந்நூல கத்தில் இடம் பெற்றுள்ளது

புகழ் பெற்ற தாயுமானவ சுவாமிகள், ஷாஜி மன்னர் காலத்தில்தான் விளங்கியவர். சீர்காழி அருணசலக் கவிராயர், இளைஞராக இருந்தபோது ஷாஜியின் அவைக்கு வந்து சிறப்பிக்கப் பெற்றவர். திருவாரூர் வைத்யநாத தேசிகர், ஷாஜி மன்னருடன் தொடர்பு கொண்டவர்; திருவா வடுதுறை ஆதீன தேசிகரும் இம்மன்னர் அவைக்கு வருகை தந்தவர் என்று தெரிகிறது.

ஷாஜி மன்னர், கல்விக்கு கேந்திரபீடமான தஞ்சையைப் புகழ்பெறச் செய்து தம் வாழ்நாளின் இறுதியில் ஜீவன் முக்தராக முடிவெய்தினர்.

ஷாஜியின் ஆட்சிக் காலத்தில், அவர் சகோதரர் சரபோஜி, துளஜா என்ற துக்கோஜி இருவரும் உடனிருந்தே, அவையில் பங்கு கொண்டவர்கள். சமகாலத்தவர்கள்.

கி.பி. 1712ல் ஷாஜி மன்னர் காலமான பின்னர் 1712 முதல் 1728 வரை தஞ்சையில் மன்னராக விளங்கியவர் **முதல் சரபோஜி** மன்னர் ஆவார்.

இம்மன்னர் காலத்தில்தான், திருக்கடையூர் தலத்தில் விளங்கிய அபிராமிபட்டர், **அபிராமி அந்தாதி** என்ற அரிய நூலை இயற்றினராவர். சரபோஜி மன்னரால், நன்கு மதிக்கப்பெற்ற பெரியார் அபிராமிபட்டர் என்பது குறிப்பிடத் தக்கது

கி பி. 1728 முதல் 1735 வரையில் தஞ்சையில் ஆட்சி புரிந்தவர் ஷாஜியின் மற்ருெரு சகோதரரான துளஜாமன்னர். இம்மன்னர் காலத்திலும் சரஸ்வதி நூலகம் புகழ்பெற்றது. பல நூல்கள் சேகரித்துத் தொகுக்கப்பெற்றன.

இம்மன்னர் ஹிந்துஸ்தானி இசையில் 'க்யால்' சங்கீத முறையில் ஈடுபாடு கொண்டவர். தஞ்சையில் ஹிந்துஸ்தானி இசையமைப்பை வளர்ச்சியுறச் செய்தவர் இம்மன்னர், முதல் துளஜா மன்னராகிய இவர், இயற்றிய இசைநூல், '**ஸங்கீத சாராம்ருதம்**' என்பது.

இம்மன்னர் அவையில் இசைமேதையும் ஆந்திர காளிதாஸர் என்று சிறப்பிக்கப் பெற்ற வருமான ஆலூரிகுப்பண்ணு என்பவர், தெலுங்கில் '**ஆசார்ய விஜயமு**' என்னும் நூலை எழுதினர்.

துளஜா, புலமைச்சிறப்புடையவர். இம்மன்னர் இயற்றியவையாகத் தெரிபவை சிவகாமசுந்தரி பரிணயம், (தெலுங்கு) ராஜ ரஞ்சன வித்யா விலாஸம், (வேதாந்தம்) என்ற நூல்களும், பதஸாஹித்யங்கள் பலவுமுள்ளன என்று தெரிகிறது.

வைத்யசாஸ்திர சம்பந்தமான நூல்களைத் தொகுத்து நூலகத்தில் சேர்த்தவர் என்றும் தெரிகிறது.

இம்மன்னரை அடுத்து, இவர் புதல்வர் 'பாவா சாகிப்' என்ற **இரண்டாம் ஏகோஜி** மன்னர் தஞ்சையில் கி. பி. 1736ல் ஆட்சி புரிந்தவர்.

இம்மன்னர் இயற்றியவையாகத் தெரிபவை, தெலுங்கு மொழியில் **ராமாயணகாவ்யமும், விக்னேசுவர கல்யாணமும்** எழுதினர். '**கணபதி தோத்திரம்**' என்ற நூல் ஏகோஜி இயற்றியதாகத் தெரிகிறது. இந்நூலை இயற்றியவர் முதலாம் ஏகோஜியாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

இம்மன்னர் இயற்றிய படைப்பே, **கமலாம்பாள் தியாகேச குறவஞ்சி**-மராட்டி மொழியில் எழுதப் பட்டது. இம்மன்னர் மராட்டியிலும் தெலுங்கிலும் வடமொழியிலும் கர்நாடக இசைப்பத சாகித்யங்கள் இயற்றினர்.

கி. பி. 1737-க்குப் பின்-பாவாசாகிப்பின் ஓராண்டுக்கால ஆட்சிக்குப்பின், அவர் மறைவுக்குப் பின்-தஞ்சை ஐந்தாண்டுக்காலம் அல்லலுற்றது.

கி. பி. 1741ல் பிரதாபசிம்மன் ஆட்சி துவக்கும் வரையில் தஞ்சையில் அமைதியில்லை.

பாவாசாகிப் மறைவுக்குப்பின் ஆறு மாதகாலம், அம்மன்னரின் மனைவி சுஜனபாய் ஆட்சி புரிந்தாள்.

ஆனால், சையத் என்ற முகலாய வீரனாலும். சர்ஹாஜி என்கிற காட்டு ராஜாவாலும் நாடு அல்லலுற்ற உண்மை வரலாற்றில் பலவாறு கூறப்படுகிறது. விரித்துரைப்பின் பெருகும் நிகழ்ச்சிகள் அவை.

பிரதாப சிம்மரின் ஆட்சி, கி. பி. 1741ல் ஏற்பட்டது; இம்மன்னர், தேர்ந்த புலமை பெற்றவர். இம்மன்னர் காலத்திலும் சரஸ்வதி நூலகம் நன்கு வளர்ச்சியுற்றதெனலாம். இம்மன்னர் பதினைந்து நாடக இலக்கியங்கள் இயற்றியுள்ளார். குறிப்பிடத் தக்கவை, **முத்ரா ராக்ஷஸம், உமா சம்ஹிதை** என்பவை. மற்றவை மராட்டி மொழியில் எழுதப் பெற்றவை.

மராட்டியமன்னர் அவையை அலங்கரித்த பெரும் புலவர்களில் ரமாபண்டிதர் ஒருவர். இப்புலவர், முதல் துளஜாமன்னர், இரண்டாம் ஏகோஜி, பிரதாபசிம்மன் ஆகிய மூவர் காலத்திலும் விளங்கியவர் எனத்தெரிகிறது.

ரமாபண்டிதர் இயற்றியவை, **ராமாமிருத தரங்கம், ஆத்மவித்யா விலாஸம் டீகா, ஹரிவம்சம், தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம், ஹரிபக்தி சுதோ தயம், பாரதம், பாகவதம், விநாயகமகாத்மியம், தியாக ராஜமகாத்மியம், பர்த்ருஹரி நீதி ஸ்தோத்ர டீகா,** பிரஹ்லாத சரித்திரம், ருக்மாங்கத சரித்திரம் உஷா பரிணயம், ஹரிசந்திர கதை, சிவராத்திரி நாடகம், சீதாகல்யாணம் ஆகியவை.

பிரதாபசிம்மர் கி பி. 1741-முதல் 1768 வரை ஆட்சி புரிந்தவர். இம்மன்னர் அவையில் **முத்துப்பழனி** என்ற நாட்டிய மங்கை பங்கு கொண்டிருந்தாள், இவள் ஒரு கவிஞராகவும் விளங்கினாள்; இம்மன்னன் விருப்பத்துக்கு இணங்க, இப் பெண்கவிஞர் 'ராதிகா ஸ்வாந்தனமு' என்ற நூலை எழுதி, பிரதாபசிம்மருக்கு உரிமையாக்கினாள்; இந் நூல், இந்நூலகத்தில் இல்லை; பிரதாபசிம்மர் அவையில் இயற்றப் பெற்ற நூல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதாபசிம்மருக்குப்பின் ஆட்சி புரிந்தவர் இரண்டாவது துளஜா மன்னர்; பிரதாபசிம்மரின் புதல்வர்; இம்மன்னரின் மற்றொரு புதல்வர் அமரசிம்மர்.

கி. பி. 1765-முதல் கி. பி. 1787 வரையில் ஆட்சி புரிந்தவர் துளஜா மன்னர்.

இவ்விரு மன்னர் ஆட்சியிலும் தஞ்சை அவையில் இருந்த புலவர் **கங்காதர கவி**; இப்புலவர் இயற்றியவை **ஹரிபக்தி சுதோதயம், நரசிம்ஹ புராணம், ஹரிவம்சபாரதம், காசி மகாத்மியம், பாகவதம்**, என்பனவாகும்.

மற்றொருவர் சேஷகவி என்பவர், சிறந்த புலவர். மராட்டியமொழியில், **தஞ்சபுரி மகாத்மியம், மதுராபுரி மகாத்மியம், ராமாயணவியாக்யானம்,**

**அசுவசாஸ்திரம்,** ஆகிய நூல்களை எழுதியவர். மேலும் பல புராண நூல்களையும் எழுதியுள்ளார்.

**தஞ்சபுரி மகாத்மியம்,** சிறப்பான வரலாற்றுச் செய்திகளைத் தெரிவிக்கின்றது.

துளஜா மன்னர், கி. பி. 1773-முதல் 1776 வரை, (9—1—1773 to 14—4—1776) தஞ்சை ஆட்சிபீடத்திலிருந்து அகற்றப்பட்டு, ஆர்க்காட்டு நவாபும், கிழக்கிந்தியக் கம்பெனியும் அரசு நிர்வாகத்தை மேற்கொண்டிருந்தன; 1776 இறுதியில் மீண்டும் துளஜா மன்னர் அரசுரிமை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

கி. பி. 1778-முதல் 1798 வரையில் தஞ்சை மன்னராக விளங்கியவர் அமரசிம்மர். இவர் சிறந்த புலமை பெற்றவர். இசைக்கவிஞர்.

இம்மன்னர் காலத்துப் புகழ்பெற்ற கவி, **மாத்ரு பூதகவி** என்பவர். இவர் இயற்றியவை, **பாரிஜாதா பஹரணம், 'திரிசிராகரிமுத்ரா'** என்னும் நூல்கள். ஸங்கீத பத அமைப்பு சம்பந்தமான இரண்டாவது நூல். பாரிஜாதாபஹரணம் நூலில் அமரசிம்ம மன்னரின் அமைச்சர் சிவராயர் என்பவரைப் பற்றிக் குறிப்புக்கள் உள்ளன.

அமரசிம்மர் சுதந்தரமான மன்னராக விளங்கியதாகத் தெரிகிறது. இம்மன்னரின் ஆட்சிக் கால இறுதியில்தான், கிழக்கிந்தியக்கம்பெனி, நாடு

முழுவதும், சிற்றரசுகளேயும், முடிமன்னர்களேயும் வீழ்ச்சியுறச் செய்து ஆங்கிலேய ஆதிக்கத்தை விரிவுபடுத்தத் துணிந்தது என்பது சரித்திரச் [சான்றுகளால் தெரிகின்றது.]

பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டியக் கட்ட பொம்மன், திப்புசுல்தான், மறவர்தலேவர்கள், சுதந்தரப் போராட்டம் நடத்தியகாலம் அது.

தஞ்சை அமரசிம்மர் மீது, கிழக்கிந்தியக் கம்பெனியின் கண்ணேட்டம் விழுந்தது. வரிபாக்கி அதிகம் இருப்பதாகவும், அதற்கு ஈடாகக் கும்ப கோணம், மன்னார்குடி, மாயூரம், திருவையாறு ஆகிய இடங்களேக் கம்பெனியின் ஆதிக்கத்துக்கு கொடுக்கும்படி, தஞ்சை ரெஸிடெண்ட் அலெக்சாண்டர் மாக்லாட் நிர்ப்பந்தித்தார். அமரசிம்மர் மறுத்துவிட்டார். (20—1—1796) அமரசிம்மன் கடிதம்: சென்னே கௌன்ஸிலுக்கு எழுதியது. M. C. (Vol. 47; pp. 30) (History of Madurai— K. Rajayyan; Page 339)

ரெஸிடெண்ட் மீண்டும், ஆங்கிலேயப் படையை, தஞ்சை அரண்மனேயைச் சுற்றிலும் வளேத்துக் கொள்ளச் செய்து அமரசிம்மரைப் பட்டத்திலிருந்து விலக்கவும், விருப்பம்போல் முன் குறிப்பிட்ட ஊர்களே வசப்படுத்தவும் அமரசிம்மரிடம் ரிகார்டில் கையெழுத்து வாங்கினன். சென்னே கவர்னர் லார்டு ஹாபர்ட், உத்தரவின்படி, அக்டோபர்

மாதம் 1798ல் அமரசிங்கைப் பதவி விலக்கினார்கள்.
[M. C. Vol. 208. pp. 2870-2873 pp. 5087-5091 M. C. Vol. 208; pp. 2870-2873, pp. 5087-5091; Political Despatch to England, Vol. 4, pp. 200-208, History of Madurai, K. Rajayyan, Page 340)

கி. பி. 1798ல் அக்டோபர் மாதத்தில், அமரசிம்மர் விலக்கப்பட்டபின், டேனிஷ் பாதிரியான ஸ்வார்ட்ஸ் பாதுகாப்பில் இருந்தவரும், இரண்டாம் துளஜா மன்னரின் சுவீகார புதல்வருமான இரண்டாம் சரபோஜி, தஞ்சை மன்னராக நியமிக்கப்பட்டார்.

அமரசிம்மருக்கும் சரபோஜி மன்னருக்கும், நல்லுறவில்லாமல் இருந்ததை, கிழக்கிந்தியக் கம்பெனி நிர்வாகம் நன்கு பயன் படுத்திக் கொண்டது.

சரபோஜி மன்னர் புகழ்பெற்ற தஞ்சை மராட்டிய மன்னர்களில் ஒருவர்; ஆங்கிலேய கிழக்கு இந்தியக் கம்பெனி, சரபோஜி மன்னருக்கு முடிசூட்டியது அக்டோபர் 1798ல். ஆனால், லார்டு கிளைவ் போன்ற ஆங்கிலேய வெறியர்கள் சரபோஜி மன்னரை ஆட்சியில் நீடிக்க விடவில்லை.

தஞ்சையில் சரபோஜி மன்னர் ஆட்சி துவக்கப் பட்ட பின்பு, ரெஸிடெண்டாக இருந்தவர் பெஞ்சமின் டோரின் என்பவர். திட்டமிட்டபடி 25—10—1799ல், தஞ்சையாட்சியை ஆங்கிலேயக்

கம்பெனி எடுத்துக்கொண்டதாக ஒப்பந்த நகல் எழுதி, சரபோஜி மன்னருக்கு பென்ஷன் அளித்திருப்பதாகவும் அறிவித்தது — கம்பெனி நிர்வாகம், 'சரபோஜி மன்னர் தனிப்பட்ட முறையில் நல்லவர், நிர்வாக ஆற்றல் உள்ளவர்' என்று வாழ்த்துக் கூறிவிட்டு, சரபோஜி மன்னரின் முடியாட்சி உரிமையைப் பறித்துக் கொண்டது கிழக்கிந்தியக் கம்பெனி. [B. S. Baliga. Tanjore District Hand Book pp. 82. 83] (History of Madurai, K. Rajayyan Page 341)

ஓய்வு பெற்ற மன்னர் சரபோஜி கி. பி. 1832 வரையில் அரண்மனையில் வாழ்ந்தவாறே, சரஸ்வதி நூலக வளர்ச்சியில் முழு நேரமும் ஈடுபாடுகொண்டு பெரும்பணி புரிந்தார்.

இம்மன்னர், தமிழ், ஆங்கிலம், மராட்டி மொழிகளில் நன்கு தேர்ச்சி பெற்றுவிளங்கினர்.

இம்மன்னர் காலத்தில் நூலகம், புகழ்பெற்று விளங்கியதில் ஐயமில்லை.

இம்மன்னர் காலத்துப் புலவர் **கோவிந்தகவி** என்பவர், **பஞ்சநதமகாத்மியம்**, மற்றும் ஸ்தல புராணங்களை எழுதினராவார்.

**விருபாக்ஷகவி** என்பவர் இம்மன்னர் காலத்தவர். இக்கவிஞர் இயற்றியவை **சிவபக்தி விலாஸம்**,

**மத்ஸ்ய புராணம், சோழசம்பு, ஆதிகைலாஸ மகாத்மியம்** என்பன.

**ரங்கநாதகவி** என்பவர், இம்மன்னர் கேட்டுக் கொண்டவாறு பல தலபுராணங்களையும், புராண வரலாற்று நாடகங்களையும் எழுதியவராவார்.

சரஸ்வதி நூலகத்தில் மேற்கண்ட படைப்புக்கள் அனைத்தும் உள்ளன. இம்மன்னர் காலத்தில் இயற்றப்பெற்று, தெலுங்கு லிபியிலும் மராட்டி மொழியிலும் உள்ளவை பல படைப்புக்கள் இந்நூலகத்தில் உள்ளன.

இம்மன்னர் காலத்து மற்றொரு பெரியார் முகுந்த சுவாமிகளாவர். இப்பெரியார் இயற்றிய நூல் **இராமகிருபா விலாஸம்** என்பது.

இம்மன்னர் காலத்தில்தான், கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், இம்மன்னர் விருப்பத்துக்கு இணங்க '**சரபேந்திர பூபால குறவஞ்சி**' என்னும் நாட்டிய நாடகத்தை எழுதினார். இக்குறவஞ்சி நாடகம், தஞ்சைப் பெரிய கோயிலில் இம்மன்னர் முன்னிலையில் நடிக்கப் பெற்று வந்தது குறிப்பிடத் தக்கது. '**தஞ்சைப் பெருவுடையார் உலா**' என்ற நூலும் இப்புலவர் இயற்றியது.

மற்றொருவர் **ராஜகோபாலகவி** என்பவர் இம் மன்னர் காலத்தவர். சங்கீத வாக்கேயகாரர்களில் ஒருவர் இவர். இப்புலவர் இயற்றிய நூல், 'பக்த ஜன பாரிஜாதமு' என்னும் இசை நூலாகும்.

இசை நாட்டிய அறிஞரான மெரட்டூர் வெங்கட்ராமசாஸ்திரி என்பவர் இம்மன்னரால் ஆதரிக்கப்பெற்றவர்.

இம்மன்னர் காலத்தில் விளங்கியவரே, புகழ் பெற்ற தியாகப் பிரும்மம் என்ற பெரியார்; தியாகப் பிரும்மம் இயற்றிய நௌகாசரிதம் கிரந்தலிபியில் தெலுங்கு மொழியில் இந்நூலகத்தில் உள்ளது.

இம்மன்னர் விருப்பத்தின்படி தஞ்சை மராட்டிய வம்ச வரலாற்றை 'போஸல வம்சாவளி' என்ற பெயரில் **வெங்கடேச பட்டர்** என்ற கவிஞர் எழுதினார். இந்த வரலாற்று நூலை, சரபோஜி மன்னர் தஞ்சை பெரிய கோயில் சுவரில் கல் வெட்டாகப் பொறிக்கச் செய்தார்; இக்கல் வெட்டு பொறிக்கப்பெற்ற காலம் கி. பி. 1825 என்று தெரிகிறது.

சரபோஜி மன்னர், மருத்துவக்கலை சம்பந்த மான ஆராய்ச்சியில் பெரிதும் ஈடுபட்டவர், இக்காரணத்தினால், வைத்திய 'சாஸ்திரம் சம்பந்த மான, சித்தமருத்துவம், ஆயுர் வேதம் ஆகிய துறை களில் நூற்றுக் கணக்கிலான நூல்களை இம்மன்னர் இந்த நூலகத்தில் தொகுத்து வைத்துள்ளார். இம் மன்னரே, மருத்துவக்கலை தொடர்பான நூல்களையும் இயற்றச்செய்துள்ளார்.

இம்மன்னர் இயற்றிய நூல்கள், திருநீல கண்டர் சரித்திரம், கண்ணப்பர் சரித்திரம், சங்கீத

நாட்டிய சாகித்தியங்கள், வைத்ய சாஸ்திரங்களில் சில நூல்கள் மராட்டியில் எழுதியவையாகும்.

இம்மன்னர், 23-9-1820ல் காசிக்கு யாத்திரை சென்று 24-4-1822ல் தஞ்சை திரும்பினர்.

இவர், காசியில் பல இதிகாச புராண நூல்களை பெரும் பொருள் கொடுத்துச் சேகரித்தார். அவை, காகிதத்தில் எழுதப்பெற்றவை; அவற்றை சரஸ்வதி நூலகத்தில் தொகுத்து வைத்த பெருமை, இம்மன்னருக்கே உரிய சிறப்பாகும். இவ்விவரத்தை திரு P. P. S. சாஸ்திரி அட்டவணைத் தொகுப்பு 19-வது பகுதியிலும் செல்வங்கர் மோடி ரிகார்ட் 13,14-வது பிரிவுகளும் தெரிவிக்கின்றன.

சரபோஜி மன்னர், தம் அரண்மனை இருப்பிடத்தில், 'நவ வித்யா கலாநிதிசாலை' என்ற பெயரில் ஒரு நூலகம் ஏற்படுத்தியிருந்தார் என்றும், பின்னர் அந்நூலகத் தொகுப்பு மன்னராலேயே சரஸ்வதி நூலகத்தில் சேர்க்கப் பெற்றதென்றும் மோடி ரிகார்டுகளிலிருந்து அறியமுடிகிறது. (செல்வங்கர் மோடி ரிகார்டு புத்தகம். 23-வது குறிப்பு. 3 to 25)

'நவ வித்யா கலாநிதிசாலை, நூலகத்தில், ஆங்கிலம், இலட்டீன், கிரீக், பிரான்ஸ், உருது, ஆகிய மொழிகளில் அச்சிடப்பெற்ற பழமையான நூல்கள் ஆயிரக்கணக்கில், நான்காயிரதுக்கும் மேற்பட்டவை, இம்மன்னரால் சேகரித்து வைக்கப்

பெற்றிருந்தன என்று தெரிகிறது. அந்நூல்களில் வரலாறு, கல்வெட்டு, விஞ்ஞானம், வைத்தியம், தாவர சாஸ்திரம், உடற்கூறு பற்றியது, ரேகை சாஸ்திரம், ஜோதிஷம், சிற்பக்கலை, முதலிய பல துறைகளிலும் அச்சிடப்பெற்ற நூல்களாகும். அவற்றையே சரஸ்வதி நூலகத்தில் சரபோஜி மன்னரவர்கள் சேர்த்து வைத்தார் என்பது தெளிவாகிறது.

இன்றும் நூலகத்தில், அவை **சரபோஜி மன்னரின் தொகுப்பு** என்ற பெயரில் தனியே உள்ளன, அவற்றுக்கு, தனியே அட்டவணைப் பட்டியல் புத்தகமும் உள்ளதைக் காணலாம்; சரபோஜி மன்னரால் தருவிக்கப்பெற்ற 'கல் எழுத்து அச்சகம்' ஒன்றும் சரஸ்வதி நூலகத்தில் சேர்க்கப் பெற்றது

சரபோஜி மன்னர், இளமையிலேயே ஸ்வார்ட்ஸ் என்ற கிறிஸ்தவப் பாதிரியாரின் பொறுப்பில் இருந்த காரணத்தாலும், இம் மன்னரிடம் ஸ்வார்ட்ஸ் பாதிரியார் கொண்டிருந்த பேரபிமானத்தாலும், இம்மன்னருக்கு, மேலைநாட்டு மொழிப்பயிற்சி பெறவாய்ப்பு ஏற்பட்டது. சரபோஜி மன்னருக்கு, தஞ்சை அரசுரிமை கிடைக்க, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு பெருமுயற்சி செய்தவர் ஸ்வார்ட்ஸ் பாதிரியார்; இத்தகைய வாய்ப்பினால் இம்மன்னர், ஆங்கிலம், இலட்டீன், கிரீக், பிரான்ஸ்

ஆகிய மொழிகளில் அச்சிடப்பட்ட நூல்களைத் தருவிக்கும் செவ்வி ஏற்பட்டது.

சரபோஜி மன்னர், தமது 55-ம் வயதில் கி. பி. 1832-ல் காலமானூர்.

இம்மன்னரை அடுத்து இவர் புதல்வர் **சிவாஜி** மன்னர் காலத்தில் சரஸ்வதி நூலகம் நன்கு பாதுகாக்கப் பெற்றது. சிவாஜி மன்னரும், புலமை கொண்டவர்.

இம்மன்னர் கி. பி. 1832 முதல் கி. பி. 1855 வரையில் புகழுடன் விளங்கியவர்.

இம்மன்னரால் ஆதரிக்கப் பெற்ற புலவர்கள் அமிருதகவி துளசிராணி, வெங்கடகிருஷ்ணகவி ஆகியோர்.

இம்மன்னர் காலத்துத் தெலுங்கு மொழிப் படைப்புக்கள் **'அன்ன பூர்ணுபரிணயம்' கிராதார்ச்சுனீயம்** என்பவை.

இம்மன்னர் காலத்துத் தமிழ்ப் படைப்புக்களும் இந்நூலகத்தில் உள்ளன. அவை **புரூரவ சக்ரவர்த்தி நாடகம், மதன சுந்தர விலாஸ நாடகம், பாண்டிய கேளிவிலாஸ நாடகம்** என்பவை. இம்மன்னர் காலத்தில் வடமொழி நூல்கள் பல இந்நூலகத்தில் சேகரிக்கப்பெற்றன.

வெங்கடகிருஷ்ணகவி என்பவர் எழுதியது **சிவபாரிஜாதமு** என்னும் நூலாகும்.

பாமர ரஞ்சகமான தமிழ் நாடகங்கள் சில இம்மன்னர் காலத்தில் எழுதப் பெற்றனவாகத் தெரிகிறது. [நூலக அட்டவணைப்பட்டியல் 1–2 பகுதிகளில் விவரம் உள்ளது.]

இம்மன்னர், சிறப்பாக, பொம்மலாட்டக்கலைக்கு ஆதரவுதந்து வளர்த்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

கி. பி. 1855ல் இம்மன்னர் காலமானார். இவருக்கு வாரிசு இல்லை. இவருக்குப் பதினைந்து மனைவியர் இருந்தனர். இரண்டு பெண்கள் இரண்டு சகோதரிகள் இருந்தனர். எனவே கிழக்கிந்தியக் கம்பெனியின் ரெஸிடெண்டின் நிர்வாகத்துக்கு அரண்மனை உட்பட்டது. (வில்லியம் ஹிக்கி — வால். 2 ; பக். XXXIX)

சிவாஜி மன்னரின் மனைவியருக்கும், குடும்பத்தவருக்கும் ஆங்கில நிர்வாகம் பென்ஷன் உதவியளித்தது. (Madras Presidency Administration Vol. I ; Page 50, 51; 541)

1855-முதல் ரெஸிடெண்ட் நிர்வாகத்திற்கு அரண்மனை உட்பட்டபோது, சரஸ்வதி நூலகமும் அந்நிலைக்கு உள்ளாகியது.

## 1855-க்குப்பின் சரஸ்வதி நூலகம்

கி. பி. 1256-ல் மூன்றும் இராசராச சோழன் ஆட்சியில், பாண்டியனால் தஞ்சை தாக்கப்பட்ட

போது, சரஸ்வதி நூலகத்தின் நிலை என்ன என்பது கேள்விக்குரியது.

கி. பி. 1535-ல் வீரசேகர சோழனிடமிருந்து, விஜயநகர நாயக்கர் ஆட்சி கைப்பற்றிய போது, நூலகத்தின் நிலை என்ன என்பதும் கேள்விக் குரியது.

கி. பி. 1673-ல் மதுரை நாயக்கரால் தஞ்சை தாக்கப்பட்டு, தஞ்சை நாயக்க அரசு வீழ்ச்சியுற்ற போது நூலகத்தின் நிலை என்ன என்பதும் கேள்விக்குரியது.

கி. பி 1674-75ல் அழகிரி நாயக்கனிடமிருந்து, ஏகோஜி தஞ்சையைக் கைப்பற்றிய போது, நூலகத்தின் நிலை என்ன என்பதும் கேள்விக்கு உரியது

கி. பி. 1736-ல் பாவாஜி என்ற இரண்டாம் ஏகோஜி மன்னர் காலமான பின்பு, சுஜனபாய் ஆட்சியை முறியடித்த சையத் ஆட்சியின் போது, நூலகத்தின் நிலை என்ன என்பது கேள்விக்குரியது.

கி. பி. 1773–1776-ல் இரண்டாம் துளஜா மன்னர் ஆர்க்காட்டு நவாபாலும் ஆங்கில நிர்வாகத்தாலும் சிறைப்பட்டிருந்த போது, நூலகத்தின் நிலை என்ன என்பது கேள்விக்குரியது.

கி. பி. 1798ல் அக்டோபரில் ஆட்சியுரிமை பெற்று 1799 அக்டோபரில் சரபோஜி மன்னர்

ஓய்வுபெற்று 1832 வரையில் சரஸ்வதி நூலகத்தை நன்கு வளர்ச்சி பெறச் செய்தார். அவர் புதல்வர் சிவாஜியவர்கள் கி. பி. 1833 முதல் 1855 வரை நூலகத்தைப் பாதுகாத்தார்.

1855க்குப் பின்னர், சிவாஜி மன்னருக்கு வாரிசு இல்லாத நிலையில் அப்போது வைச்ராயாக இருந்த லார்டு டெல்ஹௌஸி தஞ்சை அரண்மனையையும், நூலகத்தையும் மற்ற உரிமைகளையும், ஆங்கிலக் கம்பெனி நிர்வாகத்தின்கீழ் கொணர்ந்து ரெஸிடெண்ட் நியமிக்க பிரீவி கௌன்ஸிலில் முடிவு எடுத்துச் செயல் படுத்தினர். [வில்லியம்ஹிக்கி, வால். 2 பக்கம் IXXIII ரிகார்டு 5, 7, 14 17—10—1856 ரிகார்டு 15 No. 13; 27—7—1859 பக் XCIII ரிகார்டு 17; 21—8—62 பக்கம் XCV ரிகார்டு 18, 19; 26—9—62; 23—10—62]

1855க்குப்பின் கிழக்கிந்தியக்கம்பெனி நிர்வாகத்தில் ரெஸிடெண்ட் ஆதிக்கத்தில் நூலகம் எந்நிலையில் இருந்தது என்பதும் கேள்விக்குரியது.

இக்கால எல்லையில் சரஸ்வதி நூலகத்திலிருந்து அரிய பல நூல்கள், குறிப்பாக இசை நூல்களும், நுட்பமான பலகலை நூல்களும், பிறரால் திருவனந்த புரத்துக்கும் மைசூருக்கும் கொண்டு செல்லப் பட்டன என்பதும், புலவர்கள், அறிஞர்கள் பலர் தஞ்சையிலிருந்து அவ்விடங்களுக்குச் சென்றனர்

என்பதும், திரு. M. G. ரானடே அவர்கள், தம் மராட்டியர் எழுச்சி வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார்

## ஆங்கில ஆதிக்கத்தில் சரஸ்வதி நூலகம்

தஞ்சை ரெஸிடெண்ட் கோரிக்கையின்படி, அப்போதைய இந்திய அரசாங்கம் (சிம்லா) உள் நாட்டிலாகா பிரிவு No. 4338/48; 3-11-1868ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கு இணங்க, சென்னை பிரஸிடென்ஸி கல்லூரி ஸம்ஸ்கிருதப் பேராசிரியர் 'பிக்வேர்டு' என்பவர், தஞ்சைக்கு வந்து இந்நூலகத்தின் நூல்களுக்கு—சுவடிகளுக்கு அட்டவணைப் பட்டியல் தயாரித்தார். அவர் நோய் வாய்ப் பட்டதன் காரணமாக 1870-ல் ஐரோப்பாவுக்குத் திரும்பி விட்டார். அவர் தயாரித்த அட்டவணைப் பட்டியல் இப்போது கிடைக்கவில்லை.

இதைப்பற்றின விவரம், சென்னை அரசு தலைமைக் காரியதரிசிக்கும், பிரஸிடென்ஸி கல்லூரி நிர்வாகத்துக்கும் இடையே, ஏற்பட்ட கடிதங்களிலிருந்து அறியமுடிகிறது. [G. O. Letter No. 1560/ 22—5—1876, 7—6—1876]

கி. பி. 1870க்குப் பின்னர், தஞ்சையில் ஜில்லா நீதிபதியாக இருந்த டாக்டர் பர்னல் எம். ஏ. பி. எச். டி. அவர்கள், இந்திய அரசு ஆணையின்படி (G. O. No. 71, 16-3-1871) நூலக அட்டவணைப் பட்டியல் தயாரிக்கலானார்.

கி. பி. 1878—1880க்கு இடையே திரு பர்னல் அவர்கள், வடமொழிச் சுவடிகளின் அட்டவணைப் பட்டியலை 3. தொகுப்புக்களாக வெளியிட்டார். இம்மூன்று தொகுப்புக்களும், லண்டன் நகரில் அச்சிடப்பெற்றன.

திரு பர்னலின் தொகுப்பிலும், ஏறக்குறைய 4000 சுவடிகள் பற்றின விவரம் விடுபட்டன என்று திரு P. P. S. சாஸ்திரியவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், அரண்மனையில் மன்னரின் சொந்த சொத்துக்கள் சம்பந்தமான, விவகாரம் ஏற்பட்டு தஞ்சை சப்கோர்ட்டில் வழக்கு நடைபெற்றது.

இக்கால எல்லையில், கம்பெனியாரும், பிறரும், அரண்மனைச் சொத்துக்களையும் நூலகத்தையும் விலை மதிப்பிட்டுப் பெறுவதற்கும், நூலகக் கருவூலங்களை வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லவும் திட்டமிட்டதாகத் தெரிகிறது. இச்சூழ்நிலையில் தஞ்சைப் பெருமக்கள் பலர் நூலகத்தைப் பாதுகாக்கப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டனர். இதனால் நூலகத்தையும் பிறர் கைப்பற்றும் முயற்சி தடைப்பட்டது. இவ்விவரங்களை திரு. P. P. S. சாஸ்திரியவர்கள், நூல் அட்டவணைப்பட்டியல் தொகுப்பு 19-வது பகுதியில் முன்னுரை பக்கம் 4-6ல் குறிப்பிட்டுள்ளார்.

மன்னர் அரண்மனை குடும்பவழக்கு (OS. 26 of 1912) தஞ்சையில் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

அது முடிவுறவில்லை. பொதுமக்களும், அபிமானிகளும், நூலகம் பாதுகாக்கப்பட முயற்சி மேற்கொண்டனர். அதன் பின்னர், தஞ்சை நீதிபதி அவர்கள், சரஸ்வதி நூலகத்தை—அரண்மனை நூலகத்தைப் பொது நூலகமாகவும் அதன் பாதுகாப்புக்கு உரியமுறையில் ஒரு லக்ஷம் ரூபாய் அறக்கட்டளையாக வைக்கப்படுவதற்கும் நூலகத்தை நிர்வாகம் செய்யவும், அறக்கட்டளையின் சார்பில் நிர்வாகக்குழு நியமனம் செய்வதற்கும் அரசுக்குப் பரிந்துரைத்து எழுதினர்.

நீதிபதியின் பரிந்துரையின் மீது, 5-10-1918ல் அரசு G. O. No. 1306 (உள்நாட்டிலாகா) உத்தரவின்படி அரண்மனை நூலகமான சரஸ்வதி நூலகத்தைப் பொது நூலகமாக அரசு அறக்கட்டளை நிறுவனமாக அறிவித்தது.

நிர்வாகக்குழுவும் அரசால் நியமிக்கப்பட்டது. நிர்வாகக்குழுவில் மாவட்டநீதிபதி, மாவட்ட கலெக்டர், மன்னர் குடும்பப்பிரதிநிதி ஷெயாரின் நியமன உறுப்பினர், கௌரவ காரியதரிசி-ஆகிய ஐவரைக்கொண்ட நிர்வாகக்குழு ஏற்பட்டது.

ஷெ நிர்வாகக்குழு, நூலகத்தை மேற்கொண்டவுடன், சரபோஜி மன்னர், தம் வாழ்நாளில் சரஸ்வதி நூலகத்துக்குப் பெரும் பணிபுரிந்தவர் என்ற முறையில், அவர் பெயரை, நூலகத்துக்கு இணைத்துவைக்க முடிவுசெய்து, 'தஞ்சை

**மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகம்'** என்று பெயர் சூட்டியது

## சரஸ்வதி நூலகமும் நிர்வாகக்குழுவும்

திரு. பர்னல் தயாரித்த நூலக அட்டவணைப் பட்டியல் தொகுப்பு, பரிசீலனை செய்யப்பட்டதில் 1878 to 1918 வரையில் இடையே நாற்பது ஆண்டு காலத்தில் நூலகத்திலிருந்து பல அரிய நூல்கள் காணப்படவில்லை என்று திரு P. P. S. சாஸ்திரி அவர்கள், அட்டவணைத்தொகுப்பு 19ல் முன்னுரை பக். 6ல் குறிப்பிடுகின்றார்.

சரஸ்வதி நூலகத்தின், தொகுப்புக்களின் பழமை பற்றி வடமொழிப் பேராசிரியர் **மாக்டொனல்டு** என்பவர், 'இந்நூலகத்தில் கி பி. 1000க்கு முற்பட்ட காலத்து படைப்புக்கள் உள்ளன' என்றும், மற்றொரு பேராசிரியர் '**கெய்த்**' என்பவர், 'கி. பி. 1200-க்கு முற்பட்டகாலத்துப் படைப்புக்கள் உள்ளன' என்றும் மதிப்பீடு செய்துள்ளார்கள். என்ற உண்மையை, திரு. P.P.S. சாஸ்திரியவர்கள் அட்டவணைத்தொகுப்பு 19-ம் பகுதியில் கூறியுள்ளார்.

இத்தகைய பெருமைக்குரிய நூலகத்தை, நிர்வாகக்குழு 1918-க்குப்பின் நன்கு பாதுகாக்க வாய்ப்பு ஏற்பட்டது.

1919-ல் நூலகக்குழு—நிர்வாகக்குழு நூலகத்திற்கு விரிவான அட்டவணைப் பட்டியல் தொகுப்

புகளை வெளியிடத் திட்டமிட்டது. அரசிடம் உதவியும் கோரப்பட்டது.

1920-ல் நூலகத்தில் உள்ள அச்சிடப்பெற்ற நூல்களுக்கான அட்டவணைப்பட்டியல் 3-தொகுப்புக்களை நிர்வாகக் குழு அச்சிட்டு வெளியிட்டது. இத்தொகுப்புக்களில் ஆங்கிலம், இலட்டீன் இத்தாலி, கிரீக், பிரெஞ்சு மொழி நூல்கள் அடங்கியவை.

வடமொழிப் பேரறிஞர் திரு **P. P. S.** சாஸ்திரி அவர்கள், சரஸ்வதி நூலகம் பற்றி பெருமுயற்சி எடுத்துக்கொண்டு, 1923ல் இந்தியன் ரெவியூ பத்திரிகையில் நூலகத்து வடமொழிச் சுவடிகளின் அரிய செய்திகளை விளக்கி ஒரு கட்டுரை வரைந்தார்.

1—12—1924ல் இந்தியா ஓரியண்டல் மகாநாட்டில் தஞ்சை நூலகச் சிறப்புப்பற்றி, விரிவான சொற்பொழிவாற்றினர்.

இந்த விவரங்களைப் பரிசீலனை செய்த, அரசு பொதுத்துறை டைரக்டர் லிட்டில் ஹெயில்ஸ் என்பவர் இந்நூலக வளர்ச்சிக்கு முயற்சி மேற்கொண்டார்

1924ல், நூலகத்தின் சார்பில் முதன் முதலாக மராட்டிமொழி நூல்களுக்குரிய அட்டவணைப் பட்டியல் புத்தகம் வெளிவந்தது.

1926ல், தமிழ்மொழிச் சுவடிகளுக்கான 3- அட்டவணைத் தொகுப்புகள், தமிழ்ப் பேராசிரியர் பண்டித உலகநாதப்பிள்ளையவர்களால் பரிசீலனை செய்து வெளியிடப்பெற்றன.

திரு P. P. S. சாஸ்திரியவர்கள், வடமொழிச் சுவடிகளுக்குரிய, அட்டவணைத்தொகுப்பு வெளியிட முற்பட்டார். ஆய்வு செய்தார்; அவர் திட்டத்துக்கு ஆதரவு தந்து, இந்திய அரசு 9—4—1927ல் G. O. Mis. 563 ஆணையின்படி ரூ 21, 345—90 அளித்து நூலக வடமொழி நூல்களின் அட்டவணைப்பட்டியல் வெளியிட உதவியது.

1929-30ம் ஆண்டில், திரு P. P. S. சாஸ்திரி அவர்களால், 5,000 பக்கங்கள் கொண்ட, 9 அட்டணைப் பட்டியல் தொகுப்புக்கள் வடமொழிக்காக நூலகத்தின் சார்பில் வெளியிடப் பெற்றன.

11—12—1929ல் இந்திய வைசிராய் லார்டு இர்வின் அவர்கள், தஞ்சை நூலகத்திற்கு வருகை தந்தார். அப்போது நூலகத்தைப்பற்றின உண்மைகளை நிர்வாகக்குழு வைசிராயிடம் தெரிவித்தது. லார்டு இர்வின் பழமையான சுவடிகளைக் கண்ணுற்று வியப்புற்ருர்.

ஆங்கில வாசகங்களை—ஆங்கில லிபியில் பனை ஓலையில் எழுதிப் பார்க்க இர்வின் விரும்பினர். நூலகப் பண்டிதர் இர்வினின் ஆசையை நிறைவேற்றினர். 500 ஆண்டுகட்கு முற்பட்ட, எழுதப்

படாத பணி ஓலையில் இர்வினைப் பாராட்டிய முறையிலும், நூலக வளர்ச்சிக்கு அரசு உதவி கோரியும் எழுதி இர்வினிடம் காட்டினார்.

அதைக்கண்ட இர்வின் மகிழ்ச்சியுற்றார். லேடி இர்வினும் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

அதன் தொடர்பாக, 1930-ல் மீண்டும் இந்திய அரசு, தஞ்சை நூலக வளர்ச்சிக்கு ரூ 21,960 ரூபாய் அளித்தது; அத்துடன் நூலக நிர்வாகக் குழுவின் நன்கொடை ரூ 1,600/-ம் சேர்த்துக் கொள்ளப்பெற்றது. மேலும், வடமொழி அட்டவணைப் பட்டியல் தொகுப்புப்பணி தொடர்ந்து நடந்தது.

திரு. P. P. S. சாஸ்திரியவர்களால், 10 முதல் 20 தொகுப்புக்கள் தொடர்ந்து வெளியிடப் பெற்றன.

1933-ல் தெலுங்கு மொழி நூல்களுக்கான தொகுப்பும் வெளியிடப்பெற்றது. ஒரு தொகுப்பு ஆந்திர பல்கலைக் கழகத்தின் ஆதரவாலும் மற்றொன்று இந்நூலகத்தாலும் வெளியிடப்பெற்றன.

மராட்டி மொழிக்குரிய அட்டவணைப் பட்டியல்கள் மீண்டும் இரண்டு தொகுப்புக்கள் வெளியிடப்பெற்றன.

மேலும் இரண்டு தொகுப்புக்கள் வடமொழிக்காக வெளியிடப்பெற்றன.

## சரஸ்வதி நூலகத்திற்குச் சேர்க்கப்பெற்ற மற்ற தொகுப்புகள்.

சோழர் காலம், நாயக்க மன்னர் காலம், மராட்டிய மன்னர்காலம் ஆகிய மூன்று பாரம்பர்யத்திலும் படைக்கப்பெற்று, தொகுக்கப்பெற்ற நூல்களையன்றி, 1921-ல் **ஜம்புநாத லாண்டகே** என்ற மராட்டிய அந்தணர் சேகரித்த சுவடிகளின் தொகுப்பு இந்நூலகத்தில் சேர்க்கப் பெற்றுள்ளது; மற்றும் **காகல்கர்**, என்பவர் சுவடிகள் தொகுப்பும், பதங்க அவதூதர் என்பவருடைய தொகுப்பும் இந்நூலகத்தில் சேர்க்கப் பெற்றுள்ளன.

ஜம்புநாதபட் என்பவர் மகாராஷ்டிரப் பிராம்மணர். புகழ்பெற்ற புலவரும் தஞ்சையில் இருந்தவருமான மானம்பட்டரின் புதல்வர். ருக்வேதி. இவருக்குக் கண்ணிழந்த பெண் ஒருத்தி வடமொழியில் புலமை மிக்கவள் இருந்தனள். இவ்விவரத்தை Hultch. 1905ல் No. III-A Reportல் குறிப்பிட்டுள்ளார்.

மானம்பட்டர், தஞ்சை அரண்மனையின் ஒரு புறத்தில் தனியே '**விவேகவிலாஸம்**' என்று பெயர் கொண்ட தொகுப்பு வைத்திருந்தார். 1898-99ல் இந்தத் தொகுப்பை திரு. T. S. குப்புசாமி சாஸ்திரிகள் 'சர்வே' செய்தார். டாக்டர் ஹல்ட்ச்சும் உடனிருந்தார்; இத்தொகுப்பு இருந்த இடம் பட்கோஸ்வாமி வட்டாரம் என்றும், பழையமுன்சீப் கோர்ட் இருந்த இடமென்றும் அறியப்படுகிறது.

மானம்பட்டரின் தொகுப்பில் 650 சுவடிகள்—(100-கட்டுக்கள்) இருந்தன; நாகரி எழுத்தில் காகிதத்தில் எழுதப்பட்டவை மிகுதி. துணி மூட்டையில் கட்டப் பெற்றிருந்தவை.

இத்தொகுப்பில், 11ம் நூற்றுண்டு நூல்களும், ஜைனமத சம்பந்தமான அரியநூல்களும் இருந்தன. இவற்றையும், ஜம்புநாத லாண்டகே, தம் தொகுப்பில் சேர்த்து சரஸ்வதி நூலகத்திற்கு அளித்துவிட்டார் என்பது தெளிவாகிறது. இவ்வுண்மைகளை (Madras Presidency Administration Vol. II 922–923 of 19-8-1899) குறிப்பிலிருந்து அறியமுடிகிறது.

ஜம்புநாதபட்டரின் தொகுப்பை திரு. V. வெங்கையா என்ற அறிஞர், சரஸ்வதி நூலகப் புத்தகப் பட்டியலில் தொகுத்தார்.

ராமபத்திர தீக்ஷிதரின் நூல்களைத் தொகுத்து திரு T. S. குப்புசாமி சாஸ்திரிகள் விளக்கம் கொடுத்துள்ளார்.

**காகல்கர்**, 200 ஆண்டுகட்கு முந்தியவர் என்றும் இவர் தொகுப்பில் வியாகரணம் பற்றின நூல்களே உள்ளவை என்றும் அறியப்படுகிறது.

**பதங்கஅவதூர்** திருவிடைமருதூரில் வாழ்ந்தவர்; வேதாந்தம், பக்தி, வைராக்கியம், ஆகியவை பற்றின நூல்களையே இந்நூலகத்துக்கு அளித்தவர்

என்று அறியப்படுகிறது. இவர் 150 ஆண்டுகட்கு முன்னிருந்தவர்.

ஜம்புநாதர், காகல்கர், பதங்கர் ஆகிய மூவருடைய தொகுப்புக்களிலும் 2181 நூல்கள் இருந்தன என்று திரு. P. P. S. சாஸ்திரிகள் விளக்கியுள்ளார்.

இதற்குப் பின்னர் தியாகராஜ சுவாமிகள் என்பவருடைய வடமொழிச் சுவடிகள் 1,000– நூல்கள் சரஸ்வதி நூலகத்தில் சேர்க்கப் பெற்றன.

இவற்றையன்றி, திரு சுப்ரமண்ய சாஸ்திரிகள், தேவசங்கர தேவ்கர், கோபாலகிருஷ்ண டவளேகர், கிருஷ்ணஜி மேதா ஆகியோரின் தொகுப்புக்களும் இந்நூலகத்தில் சேர்க்கப்பெற்றன.

பிற்காலத்தில் இந்நூலகத்தில் சேர்க்கப்பெற்ற தொகுப்புக்களில் கையால் செய்யப்பெற்றதும், 150, ஆண்டுகட்கு முன்னையதுமான காகிதத்தில் எழுதப் பெற்றவையும் உள்ளன.

தமிழ்ச்சுவடிகளும் நூல்களும் பிற்காலத்தில் சேர்க்கப்பெற்றவையும் உள்ளன.

இப்போது, சரஸ்வதி நூலகத்தில் உள்ள வடமொழி நூல்களின் எண்ணிக்கை 35,000க்கு மேற்பட்டவை உள்ளன. மராத்திமொழி நூல்கள் 2,000க்குமேல் உள்ளன. தெலுங்கு

மொழி நூல்கள் 1,000க்குமேல் உள்ளன. தமிழ் மொழி நூல்கள் 2,000க்குமேல் உள்ளன.

இவற்றில் ஒரு நூலுக்கு ஒரு பிரதி உள்ளதும், பல பிரதிகள் உள்ளவையும் உள்ளன.

## சரஸ்வதி நூலகத்தின் ஆயிரம் ஆண்டுக் காலச்சிறப்பு

வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டு, தஞ்சைச் சோழ மன்னர் காலம் முதல் கி. பி. 9ம் நூற்றாண்டிலிருந்து ஓராயிரம் ஆண்டுக் காலம் சோழர் நாயக்கர், மராட்டியர் ஆகிய மூன்று பாரம்பர்யத்திலும் தஞ்சை சரஸ்வதி நூலகம் கல்விக்கு நிலைக்களனாகக் கலங்கரைத்தீபமாக விளங்குகின்றது.

சோழர் காலத்தை அடுத்து கி. பி. 1535 முதல் கி. பி. 1800 வரையில் உள்ள 335 ஆண்டுகளில் நாயக்கர், மராட்டியர் காலங்களில் தஞ்சையில் நூற்றைம்பதுக்கு மேற்பட்ட பெரும் புலவர்கள், அவைப் புலவர்களாக விளங்கியவர்கள் என்பது தெளிவாகிறது. ஐநூற்றுக்கு மேற்பட்ட புதிய படைப்பு நூல்களை இயற்றியிருக்கின்றார்கள் என்பதும் தெரிகிறது. இந்நூல்கள் யாவும இந் நூலகத்தில் இடம் பெற்றுள்ளமையும் தெரிகிறது.

மேற்கண்ட, சோழர் காலம், நாயக்க மன்னர் காலம், மராட்டிய மன்னர் காலம் அனைத்திலும்,

தஞ்சை மன்னரவையில் இலக்கியம், வேத சாஸ்திரங்கள், கலைகள், நாட்டிய நாடகங்கள், இதிஹாஸபுராணங்கள் ஆகிய பல துறைகளும் மற்றெங்கும் இல்லாத தனிச்சிறப்புடன் வளர்ச்சி பெற்றன என்பதும், தஞ்சை கல்விக்குக் கேந்திர பீடமாக விளங்கியது என்பதும் பெருமைக்குரிய தாகும்.

தஞ்சையில் ஆட்சி புரிந்த மன்னர்களே, பெரும் புலவர்களாக விளங்கியும், மன்னர் அவையில் பெரும் புலவர்கள் ஆதரிக்கப்பெற்றும், அவர்கள் ஆதரவில் படைக்கப்பெற்ற படைப்புக்கள் தஞ்சையில் பாதுகாக்கப்பெற்றும் இன்றும் விளங்குவதையும் தனிப்பெருமைக்குரிய தொன்ருகக் கருதவேண்டுமன்ரோ!

கி. பி. 7ம் நூற்ருண்டுமுதல் கி. பி. 1535 வரையில் 9 நூற்ருண்டுக்கால எல்லையில் முத்தமிழ் வளர்த்த முத்தரையர், சோழர் ஆட்சியில், தமிழ் வளர்த்த பெருமை தஞ்சைக்கு உரியதே.

சிறப்பாக மேற்கண்ட கால எல்லையில் ஆசாரியர் அநிருத்தர், இளம்பெருமாளுர், வேள் நம்பன், நம்பியாண்டார் நம்பி, மெய்கண்டதேவர் நாரணபட்டாதித்தன், கம்பர், ஒட்டக்கூத்தர், சயங்கொண்டார், சேந்தனுர், பிங்கலர், அமுத சாகரனுர், புத்தமித்திரனுர், சேக்கிழார், பொய்யா மொழி, புகழேந்தி, தண்டி, குணவீரபண்டிதர்,

புத்தமித்திரனூர், விசாகன், பவணந்தி, வீராந்தப் பல்லவரையர், கவிகுமுதசந்திர நாரண பட்டாதித்தன், களப்பாளராயர், வீரைப்பரசமய கோளரி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கூத்தர், சேக்கிழார் போன்றவர்கள் அரசியல் துறையிலும் தலைமைபெற்று நாட்டுப்பணி புரிந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நாயக்க மன்னர் காலத்து அமைச்சர், கோவிந்த தீக்ஷிதரும், மராட்டிய மன்னர் காலத்து அமைச்சர்கள், கங்காதரமகி, திரியம்பகராயமகி, ஆனந்தராயமகி ஆகியோரும் பெரும் புலமையும் ஆற்றலும் படைத்தவர்கள். இவர்கள் காலத்தில் நூலகம் பொற்காலமாக விளங்கியது மட்டுமின்றி நன்கு பாதுகாக்கப் பெற்றுள்ளது.

## பாரதநாட்டுக் கலாசாரத்துக்கு வழிகாட்டி

சோழநாட்டில், தமிழ் வழங்கும் தஞ்சையில் வடமொழி, தெலுங்கு, மராட்டிமொழி நூல்கள் படைக்கப்பெற்று தமிழுடன் இணைந்து வளம்பெற்று ஒருங்கே உருவான கலாசாரப் பெருமை வேறு எந்த நாட்டுக்கும் இல்லை எனலாம்.

பாரத கலாசார ஒற்றுமைக்கு-திராவிட கலாசார ஒற்றுமைக்கு, இந்திய ஒருமைப்பாட்டுக்கு-தஞ்சை மாநகரம் ஒரு வழிகாட்டி. தஞ்சை சரஸ்வதி

நூலகம் அதற்கு ஒரு தீபமாகச் சான்று பகர் கின்றதை நாம் இன்றும் காண்கின்றோம்.

பாரத நாட்டுக்கே, கல்விக்கு ஒரு கேந்திர வித்யாபீடமாகச் சரஸ்வதி நூலகம் விளங்குவதை மறுக்கமுடியுமா ?

தமிழக அரசும், மத்திய அரசும் இந்நூலகத்தின் வளர்ச்சிக்கு, உரிய முறையில் செயல் பட்டாலன்றி இந்நூலகத்தின் பயனை அனைவரும் பெறமுடியாது, இந்நூலகப் பெருமையையும உணரமுடியாது.

என்னுடைய இந்தச் சிறிய நூல், சரஸ்வதி நூலகத்தைப் பற்றி முற்றும் ஆராய்ந்து முடிவுகண்டு எழுதப்பட்டதாக நான் கூறவில்லை. எனினும், இந்நூலகம் பற்றி அறிய — இந்நூலகமாகிய பெட்டகத்திற்கு ஒரு திறவு கோலாகக் கருதவேண்டு கிறேன்.

பெட்டகத்தைத் திறந்து பார்த்தால் - ஆய்வு செய்தால் அரிய பல மணிகளைக் காணலாம். கங்கையும் காவிரியும் இணைந்த சங்கமம் போல் தஞ்சை — சரஸ்வதி நூலகம் விளங்குவதைக் காணலாம்.

சோழர், நாயக்கர், மராட்டியர் — மூவரும் மொழியைக்கொண்டு ஒருமைப் பாட்டை ஏற்படுத்திய உண்மையை, இந்நூலகத்தின் சான்று களால் நாம் அறியலாம். இவ்வரலாற்றுப் பெருமை

சோழ நாட்டில் உள்ள தஞ்சைக்கே உரியது என் பதில் நாம் பெருமையடைய வேண்டாமா?

## அரசுக்கு வேண்டுகோள்

சரஸ்வதி நூலகத்தில் பல ஆயிரக்கணக்கிலான நூல்கள் இருக்கின்றன; மாநில அரசும், மத்திய அரசும் அண்மையில் பல லக்ஷம் ரூபாய் மானியம் அளித்து நூலக வளர்ச்சிக்கு ஆதரவு தந்துள்ளது பாராட்டத்தக்கது.

ஆய்வு செய்யவேண்டிய துறைகளைத் தக்கார்களைக் கொண்டு ஆய்வு செய்யவேண்டும்; அப்போதுதான் பழமையில் எவ்வளவு புதுமைகள் பொதிந்து கிடப்பதை உலகம் அறியமுடியும்.

வேதம் சாஸ்திரங்கள் ஒருபகுதி, காவியம், அலங்காரம் ஒருபகுதி, இசை ஒருபகுதி, நாடகம், நாட்டியம் ஒருபகுதி. ஜோதிஷம் ஒருபகுதி, வைத்தியம் ஒருபகுதி, மந்திரசாஸ்திரம் ஒருபகுதி— என்ற வகைகளிலே தனித்தனியே ஆய்வாளர்கள், இந்நூலகத்தில் அமர்ந்து ஆய்வு செய்தால் — இந்நாட்டுக்கு — இந்நாட்டுக் கலாசார ஒற்றுமைக்கு— வளர்ச்சிக்குப் பெரும் பணியாகும்.

## மற்றுமொரு வேண்டுகோள்

முன்னோர்கள் தேடிவைத்த, படைத்து வைத்த பாதுகாத்து வைத்த சுவடிகள்-நூல்கள் யாவும் தேச உடைமை என்பதை மறுக்க முடியாது.

உலகுக்குப் பயன்படாமல், தம்மிடமே வைத்துக் கொண்டு உரிமை கொண்டாடுவது அநீதியாகும்.

இந்நூலகத்தின் சுவடிகள், உலகெங்கும் கொண்டு போகப்பட்டுள்ளன. நம் நாட்டின் பல பகுதிகளிலும் இருக்கின்றன என்பது அறியமுடிகிறது.

இது மட்டுமன்று, எந்த இடத்தில், எந்தப் பெரியவர்களிடம், யார்வசத்திலோ எந்த மொழியிலும் எத்தனைச் சுவடிகள் இருந்தாலும் அவற்றை யெல்லாம் இந்நூலகத்திற்கு அவர்களாவே தர வேண்டும். அல்லது பிரதி எடுத்துத் தரவேண்டும். அல்லது பிரதி எடுத்துக்கொள்ளத் தெரிவிக்க வேண்டும். சுவடிகள் வைத்திருப்பவர்கள் கடமை இதுவாகும்.

அரசு இதற்குரிய முயற்சியைச் செய்தால் பெரும் பயன் உண்டு. புராதனக் கருவூலங்களைக் காப்பாற்றுவது அரசுக்குரிய கடமையாகும்.

சரஸ்வதி நூலகத்தில் தகுந்த பாதுகாப்பு அளித்து காப்பாற்ற முடியும்—இப்பணிக்கு இதை விடச்சிறந்த இடம் வேறு இல்லை என்றே கூறலாம்.

ஓரியண்டல் கைப்பிரதி நூலகம் சென்னையில் பிற்காலத்தில் துவக்கப்பட்டதொன்றாகும். ஆயிரம் ஆண்டுக் காலச் சரஸ்வதி நூலகத்தின் பெருமை தனிச்சிறப்புடையது என்பதில் ஐயமில்லை.

## இராமாயண-மகாபாரத நூல்கள்.

கி. பி. 7-ம் நூற்றாண்டிலேயே, தஞ்சைத் தரணியில் முத்தரையர் ஆட்சியில் '**மகாபாரதம்**' படிப்பதற்கும் அதற்குரிய அரங்கமும் அதைப் படிப்பவர்களுக்காக அறக்கட்டளையும் ஏற்படுத்தப்பட்டிருந்த உண்மையைச் செந்தலைக் கல்வெட்டால் அறிய முடிகிறது.

சோழர் காலத்தில் மகாபாரதமும் இராமாயணமும் தமிழிலும் வட மொழியில் புதிய படைப்புக்களும், தெலுங்கு மொழியில் புதியபடைப்புக்களும் உருவாயின என்று தெரிகிறது.

நாயக்க மன்னகாலத்தில் இராமாயண மகா பாரதப் புதிய படைப்புக்கள் படைக்கப் பெற்றமையும் தெரிகிறது.

மராட்டிய மன்னர்காலத்தில், நூற்றுக் கணக்கிலான இராமாயண மகாபாரதப் புதிய படைப்புக்கள் உருவாயின என்று தெரிகிறது.

இந்தப் பின்னணியைப் பற்றிக் கருதும்போது, சோழ நாட்டில் தஞ்சையில் இராமாயண - மகா பாரதப் பேரிலக்கியங்களில் இருந்த ஈடுபாடும், அவ்விலக்கியங்களின் பண்பாடு வளரவும் - மக்கள் மனத்தில் பாரதப்பண்பாடு வேரூன்றவும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அவை என்பதை அறியலாம்.

பாமர ரஞ்சகமாக, நூற்றுக்கணக்கிலான புதிய படைப்புக்கள் வெளிவருமானால் எவ்வளவு பெருமை உண்டு என்பதை ஆய்வாளர் சிந்திக்க வேண்டும்.

## சரஸ்வதி நூலகத்தில் புராணங்கள்

புராணங்களைப் புறக்கணிக்கத் துணிந்தால் அது அறிவுடைமையாகாது. புராணங்களிலே உள்ள சிறப்புக்களை-கருத்துக்களை-வரலாற்றுக்குறிப்புக்களை நாம் இழந்துவிடுவோம். எனவே, புனிதமானது என்பது மட்டுமல்ல, மக்கள் போற்ற வேண்டிய அரிய செய்திகளும் அவற்றில்தான் உள்ளன.

சோழ மன்னர்களால் காவேரிக் கரைகளில் நிருமிக்கப்பெற்ற கோயில்கள் கணக்கில் அடங்காதவை.

சைவ நெறி வளர்த்த நாயன்மார்களும், வைணவ நெறி வளர்த்த ஆழ்வார்களும் தமிழகத்துக் கோயில்களைக் கண்டு பாடிய பாடல்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. இவைபோன்ற ஒவ்வொரு தலங்களுக்கும் புராணங்கள் உள்ளன.

தலப்பெருமைகளையும், அரிய பல உண்மைகளையும் விரித்துக்கூறும் புராணங்கள் நூலகத்தில் மலிந்து காணப்படுகின்றன.

பாரத கலாசாரத்தின் பழமையான—நுட்பமான — பயனுள்ள கருத்துக்களையெல்லாம் நூலகத்திலுள்ள மகாபுராணங்கள் கூறுகின்றன.

பல உப புராணங்கள் உள்ளன. இச்சிறப்பைக் காணும்போது, இந்நூலகத்தின் பெருமை புலனுகின்றது. மேல் நாட்டு அறிஞர்கள், புராணத்தில் உள்ள கருத்துக்களை ஆய்வுக்கு எடுத்து கொண்டு உள்ளனர் என்பது சிந்திக்கத்தக்கது. எனவே, இந்நூலகத்தில் புராணங்கள் ஆய்வுக்குரிய சிறந்த சான்றுகளாகவும் காணப்பெறுகின்றன என்று அறியலாம்.

## சோழர் காலத்து ஒருமைப்பாடு

திராவிட கலாசாரம் புகழ்பெற்றது. 'திராவிட கலாசார ஒற்றுமைக்குச்' சோழ மன்னர்கள் எடுத்துக்காட்டாக விளங்குகிருர்கள். வீரத் தமிழ் மன்னர்களான சோழர்கள் திராவிட கலாசார ஒற்றுமைக்கு வித்திட்டவர்கள் என்றே கூறலாம்.

கடைச்சங்ககாலம்—ஏறக்குறைய அதற்கு முன்பே, கி. பி. முதல் நூற்ருண்டிலேயே, தமிழகத்தில் வேளிர் என்பார் சிற்றரசராக விளங்கினர். சோழர்களுடன் மணவினை உறவும் கொண்டவர்கள். இவ்வேளிர், ஆந்திர நிலத்திலிருந்தும் மகாராஷ்டிர பூமியிலிருந்தும் தமிழகம் வந்தவர்கள்.

கி. பி. 9ம் நூற்ருண்டுக்குப்பின் தஞ்சையில் அரசு நிறுவிய சோழர்களும், ராஷ்டிரகூடர், சாளுக்கியர், ஒய்சாளர் என்ற போசள கர்நாடகத்தவர் ஆகியோருடன் மணவுறவும் அரசியலுறவும் கொண்டு கலாசார ஒற்றுமைக்குக் காப்பாக ஆட்சி

புரிந்துள்ளனர் என்பதை முன்னரே விளக்கியுள்ளேன்.

சங்ககாலத்திலிருந்தே சேரமன்னர் உறவும் சோழ மன்னருக்கு இருந்து வந்துள்ளது.

முதலாம் இராசேந்திர சோழன், தன்னை 'பஞ்சத் திரயிடாதிபதி' என்று கூறிக்கொள்வதில் பெருமிதம் அடைந்துள்ளதைக் கல்வெட்டு உணர்த்துகின்றது. (S II. Vol. I Page 111-112 VI-82)

எனவே, சோழருக்குப்பின் நாயக்கரும், பின்னர் மராட்டியரும் ஆட்சி புரிந்த தஞ்சையில், தொடர்ந்து மன்னர் பாரம்பர்யம் கலாசார ஒற்றுமையுடன் விளங்கியதைக் காணமுடிகின்றது.

நம் நாட்டு பாரம்பர்யத்தை, நாம் அறிந்து கொள்ள, சரஸ்வதி நூலகம் துணை நிற்கின்றது.

நூற்றைம்பது ஆண்டுகட்கு மேலாக, ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு உட்பட்ட கால எல்லையில்-நாம் அடிமைப்பட்டிருந்த நிலையில் நம் நாட்டு வரலாறு, மாற்றப்பட்டது, திரித்துக் கூறப்பட்டது, வேறுபடுத்தி எழுதிவைக்கப்பட்டது என்பதைத் துணிந்து கூறமுடியும்.

சரஸ்வதி நூலகத்தின் பெருமையை உண்மையாக அறிந்துகொள்ள, நம் நாட்டு வரலாற்றை நாமே ஆய்வு செய்து எழுத ஆய்வாளர் முன்வர வேண்டும்.

## இந்நாள் நூலக நிர்வாகக்குழு

தஞ்சை அரண்மனை நூலகமான சரஸ்வதி பண்டாரகம் எனப்படும் நூலகத்தை 'சரபோஜி மன்னர் சரஸ்வதிமகால் நூலகம்' என்ற பெயரில் அழைத்து 1919லிருந்து நூலக நிர்வாகக்குழு செயல்பட்டு வருகின்றது.

முதன் முதலாக நிர்வாகக்குழு ஏற்பட்டபோது முதல் கௌரவ காரியதரிசியாகப் பணிபுரிந்தவர் உயர்திரு, T. ஸாம்பமூர்த்திராவ் அவர்கள். அதன் பின் தொடர்ந்து, திரு S. கோபாலன் அவர்கள், திரு O. A. நாராயணஸ்வாமி ஐயர் அவர்கள், திரு நீ. கந்தசாமிப்பிள்ளையவர்கள், ஆகியோர் கௌரவச் செயலாளராகப் பணிபுரிந்தவர்கள் பாராட்டுக் குரியவர்களாவார்கள்.

சென்ற 5 ஆண்டு காலமாகப் பணிபுரிகின்றவர் உயர்திரு. S. வடிவேல் சோழகர் அவர்கள், தமிழ்ப் புலமையும், நூலக நிர்வாகத்தில் பேரார்வமும் ஆற்றலும் கொண்டவர்கள்.

நிர்வாகக் குழுவில், தஞ்சை மாவட்ட கலெக்டர் அவர்கள், மாவட்ட நீதிபதி அவர்கள், மராட்டிய மன்னர் குடும்பப்பிரதிநிதி துளஜா மன்னரவர்கள், மன்னரின் நியமன உறுப்பினர் உயர்திரு. R. ஜயராமன் அவர்கள் ஆகியோர் பணிபுரிந்து நூலகத்திற்குப் பெருந்தொண்டு செய்து வருகின்றார்கள்.

இந்நாளைய நிர்வாகக் குழுவின் பெருமுயற்சியால் அரசு, இந்நூலகத்திற்கு மானியம் அளித்துப் பல நன்மைகள் புரிந்துள்ளது. சுவடிகளை, பாதுகாக்கவும், உடனுக்குடன் பிரதி செய்யவும் போட்டோ முறையிலான மைக்ரோ பிலிம் மெஷினை வாங்குவதற்கு ஒரு லக்ஷம் ரூபாய்க்குமேல் உதவி புரிந்துள்ளது பாராட்டத்தக்கது. மெஷினும் தருவிக்கப்பட்டு செயல்படும் நிலையில் உள்ளது. மற்றும் இந்நூலகத்திற்கு சொந்தமாக அச்சகம் ஒன்றை நிறுவுவதற்கும் உதவியளித்து அச்சகக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன.

நூலகத்தில் நூல்கள் ஆய்வுக்காக மத்திய அரசு பல லக்ஷரூபாய்களை மானியம் அளித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

சென்றகாலம் சென்றதுபோக — வருங்காலம் இந்நூலகம் வான்புகழ் எய்தும் என்பதில் ஐயமில்லை.

நூலக நிர்வாகக்குழுவுக்கும் மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் உரிய கடமைப் பணியாகக்கருதி இந்நூலகத்தில் இல்லாதது எங்கும் இல்லை என்ற அளவுக்கு, பல்துறையும் பல்கலையும் நிறைந்து காணப்படும் தனிச்சிறப்பை உலகெங்கும் உணரச் செய்யவேண்டும்.

வடமொழிச் சுவடிகள் மட்டுமே ஏறக்குறைய 35,000-நூல்களுக்கு மேற்பட்டவை உள்ளன.

பல்கலைப்புலமை சான்ற வடமொழிப்பேரறிஞர்களைக் கொண்ட குழுவை நியமித்து இந்நூல்களை ஆய்வு செய்ய வழிவகுக்கவேண்டும்.

தமிழ், தெலுங்கு, மராட்டி மொழிகளில் நூல்கள் குறைவாக இருப்பினும் அவை அரிய படைப்புக் களாகும்.

தமிழகத்தில்—சோழ நாட்டில் உள்ள இந் நூலகத்தில் தமிழ் மொழியில் இவ்வளவு குறைவாகச் சுவடிகள் இருக்கக் காரணம் என்ன என்று கேட் பவர்கள் சிந்திக்க வேண்டும்; இங்கிருந்த பெரும் பான்மையான தமிழ்ச்சுவடிகள் தமிழகமெங்கும் பலரும் வாங்கிச்சென்று, திரும்பக்கொடுக்கவில்லை என்று அறியமுடிகின்றது.

இந்நூலகத்திலிருந்து, நூற்றுக்கணக்கிலான சுவடிகளை, வெளியிடுவதற்குப் பெற்றுச்சென்று, வெளியிட்ட பிறர், இந்நூலகத்தின் மாண்பை விரித்துரைக்கத் தவறிவிட்டார்கள். அதுமட்டுமன்று வெளியிட்ட நூல்களைக்கூட இந்நூலகத்திற்கு அனுப்ப மறந்து விட்டனர் எனத் தெரிகிறது. இது போன்ற நிலை இனி ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

இந்நூலக நிர்வாகக்குழுவினர், பற்பல சூழ் நிலைகளுக்கிடையே இருநூறுக்கு மேற்பட்ட நூல்களை-நூலகச் சார்பில் வெளியிட்டுள்ளனர்.

“ இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல் ”

என்ற முறையைப் பின்பற்றி, தக்காரைக்கொண்டு, தகுதிக்கேற்ப, வெளிவரவேண்டிய நூல்களை முறைப்படி வெளியிடச் செய்யவேண்டும்.

இந்நூலகத்தை இந்நாட்டுக்குரிய ‘ **கேந்திர வித்தியாபீடம்** ’ என்ற முறையில் மதிப்பிட்டு நிலையான ஒரு கல்வி ஆராய்ச்சி நிறுவனமாக்க வேண்டும்.

ஆந்திர பூமியில் எழுதப்பெற்ற ஸ்ரீகிருஷ்ண சரித்திரம், தஞ்சை சரஸ்வதி நூலகத்தில் பாது காக்கப் பெற்றதனால் தான், டோரெண்டோ பல்கலைக் கழகத்தினர் அந்நூலைப் பெற்று வெளியிட முடிந்தது.

எனவே இந்நூலகத்துக்குள்ள தனிப் பெருமையை அரசுக்கு வலியுறுத்தும் கடமை - பணி இந்நூலக நிர்வாகக் குழுவுக்குரியது என்பதைப் பணிவுடன் குறிப்பிடுகின்றேன்.

தமிழ்த்தாத்தா காலம் சென்ற டாக்டர் உ. வே சாமிநாதையரவர்களிடம், மாணவனாக இருந்து தமிழ்ப்பயிற்சி பெற்ற எனக்கு, சுவடிகளின் மீதுள்ள பெருமதிப்பும் ஈடுபாடும் காரணமாக, இந்நூலகத்தைக் கண்டபின்பு ஏற்பட்ட ஆர்வத்தால், என் சிற்றறிவுக்கு எட்டியவரையில் ஆய்வுசெய்து இந்தச் சிறிய நூலை அளிக்கின்றேன்.

## சமர்ப்பணம்

திரிசிரபுரம் மகாவித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் தமிழ் பயின்று 19-20 இரு நூற்ருண்டுகளிலும் வாழ்ந்து, வாழ்நாள் முழுவதும் தமிழ்ப்பணியே தம் மூச்சாகச் செயல்புரிந்து பண்டைத் தமிழ் ஏடுகளைத்தேடி, நாடெங்கும் நடந்து அவற்றைப்பெற்று அரியமுறையில் ஆன்ருேர் வியக்கும் வண்ணம் நூற்றுக்கணக்கிலான பழந்தமிழ்க் கருவூலங்களை வெளியிட்டு, முத்தமிழால் அணிசெய்து தமிழன்னையின் மங்காப்புகழை மாண்புற உலகில் நிலைநிறுத்திய தமிழ்மாமுனிவர் அமரர் ஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்களின் நினைவு மலராக இந்நூலை வெளியிட்டு அப்பெரியாரின் திருத்தாள்களை வழுத்தி வணங்குகின்றேன்.

வாழிய வற்ருத காவிரி
வாழி சோழவரராசராசனே
கூடமெடுத்த குளத்தொடு கோபுரம்
மாடம் எடுத்த பிரான்மகன் வாழியவே
ஆக்கம் பெருக்கும் மடந்தை வாழியே
ஆற்றங்கரைச் சொற்கிழத்தி வாழியவே
வாழி தமிழ்ச்சொல் தெரிந்த நூல்துறை
வாழி தமிழ்க்கொத் தனைத்துமார்க்கமும்

# பிழை — திருத்தம்

முன்னுரை

| பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 15 | மறுமதிப்பென்று | மறுபதிப்பென்று |
| 16 | இராஷ்ட்ரக்கூடர் | இராஷ்டிரகூடர் |
| 17 | புல்லசூத்திரம் | புல்லுசூத்திரம் |
| | கரனம் | கரணம் |
| 18 | Region | Reign |
| | throught | throughout |
| 26 | Dr. Hulte | Dr. Hultz |
| 27 | நவவித்யா காலநிதிசாலையும் | நவவித்யா கலாநிதிசாலையும் |
| 29 | Mannual | Manual |
| | செண்டு வெளி வாயிலில் உள்ள | செண்டு வெளிவாயில் தெற்கில் உள்ள |
| | கீரிக் | கிரீக் |
| 37 | No. of objections | No objcction |
| 38 | propased | proposed |
| 39 | விலைக்குவிட | விலைக்கு விற்றுவிட |

நூல்

| பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 17 | ஓலைச் சுவடி | ஓலைச் சுவடி |
| 34 | நிருத்திய ரத்நுவளி | நிருத்தரத்நுவளி |
| 71 | ஆசிரியர் நிகண்டு | சூடாமணி நிகண்டு |
| 159 | Hultch | Hultz |

குறிப்பு :— இந்நூல் அட்டைப் படம் முகப்பு ஓவியம் வரைந்தவர் திரு. உமாபதி—உமா ஆர்ட்ஸ், தஞ்சை.

## இந்த நூல்

கி. பி. ஏழாம் நூற்றாண்டு முதல் தஞ்சைக்குச் சிறந்த வரலாறு உண்டு. கி. பி. 1800 வரையில், 1300 ஆண்டுகள் மன்னர் பரம்பரை தொடர்ந்து ஆட்சிபுரிந்த சோழநாட்டின் தலைநகர் தஞ்சை. தமிழ் வளர்த்த முத்தரையர், சோழர், ஆந்திர நாயக்கர், போஸலமராட்டியர் ஆகிய நான்கு அரச பரம்பரை அடுத்தடுத்து ஆட்சிபுரிந்த அரண்மனை தஞ்சையில் இன்றும் காட்சி தருகின்றது.

தமிழ், வடமொழி, தெலுங்கு, மராட்டி–நான்கு மொழிகள் வளர்ச்சி பெற்ற உண்மையை உலகுக்கு எடுத்துக்காட்டும் தஞ்சை சரஸ்வதி பாண்டாரகம் என்ற 'சுவடி காப்பு நூலகம்' 1000 ஆண்டுக்காலப் பழமை கொண்டது.

பாரத கலாசார–தேசீய ஒற்றுமையை, சோழ நாட்டிலே நிலைநிறுத்திய சோழர் பெருமையை உணர்த்தும் நூலகம். இவ்வுண்மையை எடுத்துக் கூறுவதே இந்நூல்.

★ ★ ★



## ஆசிரியரைப்பற்றி ...

இந்த நூலை எழுதிய ஆசிரியர் :

**வ. வேணுகோபாலன்,**

முப்பத்தைந்து ஆண்டு களாகத் தமிழ்ப்பணி புரிபவர். அமரர் தமிழ்த்தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களின் மாணவர். தமிழ் இலக்கிய - வரலாற்று நெடுங் கதைகள், நாடகம், ஆராய்ச் சித் துறையில் பல நூல்கள் எழுதியவர். 'மயில்' என்ற பெயரில் மாதம் இருமுறை வெளிவந்த தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியரும், பதிப்பாளரும் ஆவர். ஆயிரம் ஆண்டுக்கால, தஞ்சை வரலாறுபற்றி ஆராய்ச்சி செய்து, அரிய - புதிய செய்திகளைக்கொண்ட நூல்களை வெளியிட முற்பட்டுள்ளார். தமிழ் இலக்கிய மரபில் பழமை மரபுக்குரிய ஐந்து இசை நாட்டிய நாடக நூல்களுக்கு (16-17-ம் நூற்றுண்டுப் படைப்புக்களுக்கு) தஞ்சை சரஸ்வதி நூலக வெளியீடாக, வெளியிடப்பெறுகின்றவற்றிற்கு பதிப்பு ஆசிரியராகப் பொறுப்பேற்று, அந்நூல் அணிமையில் வெளிவர இருக்கின்றது. இவர் தஞ்சை மாவட்டம், வரகூர் கிராமத்தில் 15—1—1921-ல் பிறந்தவர்.

**இவர் எழுதிய மற்ற நூல்களில் சில :**

1. **சீவகசிந்தாமணி** - கதை
2. **நாக கன்னிகை**
3. **குண்டலகேசி.**
4. **மருதியின் காதல்**
5. **இராச சிம்மன்.**
6. **தொண்டைமான் வேந்தர்** - ஆராய்ச்சி.
7. **புலித்தேவன்** - நாடகம்.
8. **வேங்கடம்காத்த தொண்டைமான் வேந்தர்.**